நாட்டுப்புறக் கதைப்பாடல்

கோவலன் கர்ண்ணகை
கதை

பதிப்பாசிரியர் :
டாக்டர் தி. நடராசன்

நாட்டுப்புறக் கதைப்பாடல்

கோவலன் கர்ண்ணகை கதை

பதிப்பாசிரியர்:

டாக்டர் தி. நடராசன்,

தமிழியல்துறை,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

விற்பனை உரிமை

சர்வோதய இலக்கியப் பண்ணை

மதுரை—625 001

முதற்பதிப்பு: 1979

ஈஸ்வரி வெளியீடு,
ராயல் ஹவுஸ்,
வைத்தியநாதபுரம்,
கோட்டாறு,
நாகர்கோவில்—2

விலை: ரூ. 8—00

அச்சிட்டோர்:
வீரா பிரிண்டர்ஸ்,
276, வடக்குமாசி வீதி,
மதுரை—1.

என் தந்தை

இ. திருமாலைப்பெருமாள்

நினைவுக்கு

குறுக்க குறியீட்டு விளக்கம்

( ) : இக்குறியீட்டின் உள்ளிருக்கும் எழுத்து பதிப்பாசிரியரால் வேண்டப்படுவது.

[ ] : இக்குறியீட்டின் உள்ளிருக்கும் எழுத்து பதிப்பாசிரியரால் வேண்டப்படாதது.

(பே.வ. மா) : பேச்சு வழக்கில் மாற்றம்

> : மாற்றம்

நன்றியுரை

'கோவலன் கர்ண்ணகை கதைப் பாடல்' ஏட்டுச் சுவடியினைக் கொடுத்துதவிய திரு. இராஜரத்தினம் அவர்களுக்கு முதற்கண் என் நன்றி. சுவடியினைப் பெறுவதற்குத் துணை நின்ற நண்பர் திரு. A. ஜஸ்டின் வில்சன், அவர் தந்தையார் Y. அம்புரோஸ் ஆகியோர்க்கும் என் நன்றி. நோட்டுப் புத்தகத்தினைத் தக்க தருணத்தில் தேடிக்கொண்டுவந்து கொடுத்த நண்பர் திரு. தங்கமணி அவர்களுக்கும் என் நன்றி

சுவடியினைப் பெயர்த்தெழுதும்பொழுது துணை நின்ற என் மாணவ நண்பர் திரு. பொன். கோவிந்தசாமி அவர்களுக்கு என் நன்றி.

குறிப்புரை எழுதும்பொழுது துணைநின்ற என் நண்பர் ஜெ. அலசியர்க்கும், நூல் அச்சாகின்றபொழுது பல நிலைகளில் உதவிய என் மாணவ நண்பர்கள் திரு. ச. சுபாசந்திர போஸ், திரு. ப. அ. மணிமாறன், செல்வி. அஞ்சலி அன்னபாய், செல்வி. மகாலெட்சுமி, செல்வி. மல்லிகா ஆகியோர்க்கும் என் நன்றி.

நூலை நன்முறையில் அச்சிட்ட மீரா அச்சகத்தாருக்கும், மீரா அச்சக மேற்பார்வையாளரும், என்மாணவ நண்பருமான திரு. வெ. பூமிநாதன் அவர்களுக்கும் என் நன்றி.

மதுரை — இவை

25—4—'79 — தி. ந

சுவடியின் வரலாறு

'கோவலன் கர்ண்ணகை கதை' எழுதப்பட்ட ஓலைச்சுவடி குமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுகாவில் உள்ள 'குழிவட்டம்' என்னும் ஊரிலிருந்து கிடைக்கப்பெற்றது. குழிவட்டம் என்னும் ஊர் மார்த்தாண்டத்திலிருந்து தெற்காக ஒன்றரை கல் தொலைவில் அமைந்திருக்கும் 'முளங்குழி' என்னும் ஊரிலிருந்து ஏறத்தாழ ஒருகல் தொலைவில் மேற்காக அமைந்துள்ளது. குழிவட்டம் என்னும் ஊர்வாழ் நண்பர் திரு. இராஜரத்தினம் என்பவரிடமிருந்தே சுவடி பெறப்பட்டது. சுவ்டியினை நான் பெறுவதற்குத் துணை நின்றவர்கள் முளங்குழி ஊரினைச் சார்ந்தவரும் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி வரலாற்றுத்துறை விரிவுரையாளருமான திரு. A. ஜஸ்டின் வில்சனும் அவர் தந்தை திரு. Y அம்புரோஸ் அவர்களும் ஆவர்.

கோவலன் கர்ண்ணகை கதை விளவங்கோடு தாலுகாவில் இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் விற்பாட்டாக வழங்கி வந்துள்ளது. ஆனல், இன்று அவ்வாறு வழங்கி வருவதாகத் தெரியவில்லை. நான் நாட்டுப்புறக் கதைப்பாடல் ஏடுகளைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்ட காலத்து இவ்வாறு கோவலன் கர்ண்ணகை கதை என்ற ஒரு கதைப்பாடல் வழங்கி வருவதனை நண்பர் திரு. A. ஜஸ்டின் வில்சன் மூலம் அறிந்து பின்னர் அவர் மூலமே ஓலைச்சுவடியினையும் பெற்றேன்.

இக்கதைப்பாடல் எழுதப்பட்ட சுவடி இரண்டு பாகங்களாக இருந்தது. கதை தொடங்கி கோவலன் வெட்டுண்டு மாள்வது வரையிலும் முதற்பாகமாகவும், எஞ்சிய பகுதி இரண்டாம் பாகமாகவும் அமைந்திருந்தன. முதல் பாகத்தில் முதல் ஒன்றிரண்டு ஓலைகள் காணப்படவில்லை. கிடைக்கப்பெற்ற ஓலைச்சுவடியில் முதல் பாகத்தில் அச்சிட்ட நூலில் காணப்படும் ஐம்பத்தொன்பதாவது வரியிலிருந்து தான் செய்தி இருந்தது. எனவே தொடக்கம் கிடைக்கவில்லையே என்று மன நிம்மதியிழந்தேன். பின்னர் மீண்டும் கதைத் தொடக்கத்தினை எப்படியும் தெரிந்து கொள்ள வேண்டும் என விடாமுயற்சி கொண்டு தேடும்பொழுது விளவங்கோடு தாலுகாவில், கள்ளித்தட்டு என்னும் ஊரைச் சார்ந்தவரும், மதுரை சட்டக் கல்லூரி மாணவரும் எனது நண்பருமான திரு. தங்கமணி அவர்கள் மூலமாக கோவலன் கர்ண்ணகை கதை எழுதப்பட்ட நோட்டுப் புத்தகம் ஒன்று கிடைக்கப் பெற்றேன். நோட்டுப்புத்தகத்திலும் கதை முழுமையும் எழுதப்பட

வில்லை. யார் செய்த நற்பயனோ முதல்பாகம் முழுமையும் எழுதப்பட்டிருந்தது. அதிலும் கதைத் தொடக்கத்தில் வழக்கப்படி காணப்படும் 'காப்புச்செய்யுள்' காணப்படவில்லை. எவ்வாறுயினும், நூலின் தொடக்கத்தில் உள்ள ஓலைச்சுவடியில் கிடைக்காத முதல் ஐம்பத்தெட்டு வரிகளையும் நோட்டுப்புத்தகத்தினைப் பார்த்தே எழுதிச் சேர்த்தேன். பின்னர் வரி எண் ஐம்பத்தொன்பதிலிருந்து நோட்டுப்புத்தகத்தில் உள்ள வரிகளும் ஓலைச்சுவடியில் உள்ள வரிகளும் ஒன்றிச்சென்றன.

நோட்டுப்புத்தகத்தின் இன்னொரு குறிப்பிடத் தகுந்த செய்தி என்னவெனில், கதை எழுதப்பயன்படுத்திய எழுத்துக்கள் (Script) மலையாள எழுத்துக்கள். எனவே அதனைப் படிப்பதற்கு உதவியவர் விளவங்கோடு தாலுகாவைச் சார்ந்தவரும், மலையாளம் தெரிந்தவரும் எனது நண்பரும், மதுரை காமராஜ் பல்கலைக்கழக வரலாற்றியல் துறை ஆய்வாளருமான திரு. ஜெ. அலெசியர் ஆவார். மேலும் அவர் நூலுள் பயின்று வந்துள்ள மலையாளச் சொற்கள் பலவற்றிற்குக் குறிப்புரை எழுதவுந் துணை நின்றார். அவர் உதவி இல்லையானால் நூலில் சில இடங்கள் தெளிவுற உணர முடிந்திருக்காது.

ஏட்டினைப் பெயர்த்தெழுதி நூலாக்கும் பொழுது எவ்வித மாற்றமும் பதிப்பாசிரியரால் செய்யப்படவில்லை. ஆனால் நூலுள்ளே காணப்படுகின்ற உட்தலைப்புக்கள் பதிப்பாசிரியரின் ஆக்கங்களே. அவை வாசகர்களின் வசதிக்காக அமைக்கப்பட்டன.

அடுத்து நூலைப் பெயர்த்தெழுதுகின்றபொழுது என்னுடன் ஒத்துழைத்தவர் எனது மாணவ நண்பர் திரு. பொன். கோவிந்தசாமி. குறிப்பாக இரண்டாவது பாகம் பெயர்த்தெழுதும்பொழுது அவர் புரிந்த உதவியினை மறக்கமுடியாது.

இவ்வாறு பலருடைய உதவியினால் பிரதி செய்யப்பட்ட கதைப் பாடலினை உடனடியாக என்னால் அச்சுக்கு கொண்டுவர முடியவில்லை. உடனடியாக வெளியிடாமைக்குக் காரணம் ஓலையில் ஆங்காங்கே ஒருசில பொடிவுகளும், தெளிவற்ற சில சொற்களும் காணப்பட்டன. இவைகளை நிவர்த்தி செய்ய வேறு பிரதிகள் கிடைக்குமா என்று முயற்சி செய்தேன். என் முயற்சி பலனளிக்கவில்லை. எனவே எவ்வாறோ என்னை நானே சமாதானம் செய்துகொண்டு வெளியிடுவோம். பின்னர் ஏதேனும் பிரதிகள் கிடைத்தால் குறைகளை நிவர்த்தி செய்வோம் என்று ஒரு முடிவுக்கு வந்தபின்னரே நூல் அச்சுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

மதுரை | இவை
25—4—79 | தி. ந

நூன்முகம்

'கோவலன் கர்ண்ணகை கதைப் பாடல்' குமரிமாவட்டத்தின் மேற்குப் பகுதியில் வழங்கி வருகிற நாட்டுப்புறக் கதைப்பாடலாகும். இக்கதைப்பாடல் கோவலன் கர்ண்ணகை என்ற சர்தாரண மாந்தர் களை மையமாகக் கொண்டு எழுந்தமையால் இதனைச் சமூகக் கதைப் பாடல் (Social Ballad) எனலாம்.

நூற்பெயர்

இக்கதைப்பாடல் எழுதப்பட்ட ஓலைச்சுவடியில் முதல் பாகத்தில் முதலில் சில ஓலைகள் கிடைக்கவில்லை. எனவே முதல்பாக ஓலையிலி ருந்து கதைத் தலைப்பினை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஓலைச்சுவடியின் இரண்டாம் பாகத்தில் 'கோவலன் கதை' என்ற குறிப்பு இருந்தது. மேலும் இக்கதையினை வழக்கில் 'கோவலன் கதை' என்றும், 'கண்ணகி கதை' என்றும் கூறுகின்றனர். இரண்டாம் பாகத்தில் 'கோவலன் கதை' என்ற குறிப்பு காணப்பட்டாலும், இந் நூலுக்கு அப்பெயர் சூட்டப்படவில்லை. ஏனெனில், தமிழ்நாட்டில் முன்னரே 'கோவிலன் கதை' என்ற தலைப்பில் நாட்டுப்புறக் கதைப் பாடலொன்று அச்சிடப்பட்டு உலாவி வருகிறது. அந்த 'கோவிலன் கதை' என்ற நாட்டுப்புறக்கதைப் பாடலினின்றும் இக்கதைப்பாடல் வடி வாலும் உள்ளடக்கத்தாலும் மாறுபட்டிருப்பதாலும் முன்னையதினின் றும் பின்னையது வேறுபட்டது என்பதனைக் காட்ட வேண்டி, கதையில் அமைந்துவரும் இன்றியமையாத இருபாத்திரங்களின் பெயரால் இந் நூலுக்கு 'கோவலன் கர்ண்ணகை கதை' என்று பெயரிடப்பட்டுள்ளது.

நூலாசிரியர்

ஓலைச்சுவடியிலிருந்து இக்கதைப்பாடல் ஆசிரியர் பெயரினை அறியுமாறில்லை. மேலும் பொதுவாக நாட்டுப்புறக் கதைப்பாடல் ஆசிரியர் பெயரினை ஓலைச்சுவடிகளில் இருந்து அறிந்து கொள்வது சிர மமான ஒன்று; அம்முறைக்கு இந்நூலும் விதிவிலக்கல்ல.

நூலின் காலம்

கண்ணகி கதை நெடு நாட்களுக்கு முன்னராகவே தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. சங்க இலக்கியமாகிய நற்றிணையிலும் ஒரு குறிப்பு உள்ளது.

"ஒருமுலை யறுத்த திருமா வுண்ணி"

(நற், 216)

பின்னர் அக்கதை சிலப்பதிகாரமாக உருவெடுத்துள்ளமையும் நாமறிவோம். 'கோவலன் கர்ண்ணகை கதை' என்ற இந்நாட்டுப்புறக் கதைப்பாடல் சில ஆண்டுகளுக்கு முன்னர்க் குமரி மாவட்டத்தில் வில்லுப்பாட்டாக வழங்கி வந்துள்ளது என்ற செய்தியும் முன்னரே கூறப்பட்டுள்ளது. வில்லுப்பாட்டாக வழங்கிவந்தாலும் இக்கதைப்பாடல் எக்காலத்தில் இவ்வடிவம் பெற்றது என்பதற்குக் கதை எழுதப்பட்ட ஓலைச்சுவடியில் இருந்து எழுதப்பட்ட நாள், ஆண்டு ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் நூலுள் வேளாளர் சமுதாயத்தினைப் பற்றிக் கர்ண்ணகை குறிப்பிடும்பொழுது அவர்களிடத்தில் பழக்கத்திலிருந்த ஒரு பண்பாட்டுச் செய்தியினைக் கூறுகின்றாள். அப்பண்பாட்டுச் செய்தி குறிப்பாக நாஞ்சில் நாட்டு வேளாளர் இடையே நிலவி வந்த 'மருமக்கள் தாயம்' (Matrilineal system) என்பதாகும்.

சேரநாட்டில் மருமக்கள் தாயத்தின் தோற்றத்தினை வரலாற்றாசிரியர்கள் பலர் ஆராய்ந்துள்ளனர். சேரநாட்டில் கி. பி. 13ம் நூற்றாண்டில் மருமக்கள் தாயமுறை தோன்றியுள்ளது என்றும் கூறியுள்ளனர். நாஞ்சில் நாடும் முன்னர் சேரஅரசுக்கு உட்பட்டிருந்தமையால் சேர நாட்டுப் பழக்கமாகிய மருமக்கள் தாயமுறை நாஞ்சில் நாட்டில் வாழ்ந்த வேளாளரிடையேயும் புகுந்தது. இத்தாய முறையின் அமைப்பினால் சமுதாயத்தில் பல பாதிப்புக்களும் ஏற்பட்டன. எனவே மக்கள் காலப்போக்கில் மருமக்கள் தாயமுறையினை எதிர்க்கலாயினர். இவ்வெதிர்ப்புணர்வு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் தோன்றியதாகக் கருத இடமுள்ளது ''எதிர்ப்பின் விளைவால் அதனை நீக்கவேண்டி அரசு கி. பி. 1912ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணை மக்களுக்குச் சரிவர திருப்தியினைத் தராமையினால் மேலும் அரசு கி. பி. 1925ல் மீண்டும் சில திருத்தங்களுடன் ஒரு ஆணை பிறப்பித்துள்ளது. மேலே கூறப்பட்ட இரு ஆணைகளும் நாயர் சமுதாயத்தினருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. பின்னர் நாஞ்சில் நாட்டு வேளாளருக்கு கி. பி. 1926ல் மருமக்கள் தாய முறையினை நீக்க வேண்டி அரசு ஆணையிட்டுள்ளது''[1] மேலைச் செய்திகளை ஆதாரமாகக்கொண்டு மருமக்கள் தாயமுறையின்மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்வு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திற்குள் நிகழ்ந்திருக்கும் என நிறுவ வாய்ப்புள்ளது.

கோவலன் கர்ண்ணகை கதைப்பாடலும் மருமக்கள் தாயமுறை மீது மக்களுக்கு வெறுப்புணர்வு ஏற்பட்ட காலத்தில் தோன்றியதாகக்

1. A Sreedhara Menon, A Survey of Kerala History, pp.388-389

கொள்ள இடமுள்ளது. கர்ண்ணகை கோவலனிடத்தில் வேளாளர் சமுதாயம் பற்றிக் குறிப்பிடுகையில், அவர்களிடத்தில் பழக்கத்திலிருந்த மருமக்கள் தாயமுறையினைச் சாடுவதாக ஒரு குறிப்பு உள்ளது.

''வெள்ளாளர் நீதி முறை
கேட்டெ போம் யெனிங் கணவா
... ...
பெற்ற மக்கள் பார்த்திருக்க
மருமக்கள்மார் சேமமெடுப்பார்
அந்த மனே ஆகாது காண்''
(1150 – 1168)

இச்செய்தியினைத் துணையாகக்கொண்டு இக்கதைப்பாடல்தோன்றிய காலத்தினை மருமக்கள் தாயமுறை, மக்களால் புறக்கணிக்கப்பட்ட காலமெனக் கொள்ளலாம். அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இக்கதைப்பாடல் வடிவம் பெற்றிருக்கலாம்.

கதைச் சுருக்கம்

வைகையாறு தவழ்ந்து செல்லுகின்ற பாண்டிய நாட்டு மன்னனை அழிக்க மாயவனூர் திட்டமிட்டுக் கேந்திரக்காலனைக் கோவலனாகவும் துர்க்கையைக் கர்ண்ணகையாகவும் பிறவி செய்தார். பிறந்து வந்த கர்ண்ணகைக்கு அவள் தந்தை மானுகென் சிலம்பு செய்ய எண்ணினான். எனவே அதன் பொருட்டுக்கடல் கடந்து சென்றுநாக முத்தினைப் பெற்றுச் சிலம்பினை செய்து கர்ண்ணகைக்கு அணிவித்தான். பின்னர் கர்ண்ணகைக்குத் திருமண ஏற்பாடு செய்யப் பட்டது. கோவலர்க்கும் கர்ண்ணகைக்கும் திருமணம் நிகழ்ந்தது.

கோவலன் கர்ண்ணகைக்குத் திருமணம் முடிந்து ஓரிரு நாட்களுக்குள் சோழநாட்டில் உறையூர்ப் பட்டணத்தில் வயந்தமாலை பெற்ற மகளான மாதேவி என்பாளின் நடன அரங்கேற்றம் காணக் கோவலன் புறப்பட்டான். கோவலனின் தாய் தடுத்தாள். கோவலன் கேட்ட பாடில்லை. கோவலன் வந்து மாதேவியின் அரங்கேற்றத்தினைக் கண்டு களித்தான். அரங்கேற்றத்தின் பொழுது மாதேவி ஒரு மாலையினை அரங்கத்திலிருந்து சுழற்றி விட்டாள். அது கோவலனின் கழுத்தில் வந்து விழுந்தது. உடனே மாதேவி இவனே என்கணவன் என்று கூறிக் கோவலனை அழைத்துச்சென்று விட்டாள். கோவலனும் மதிமயங்கி மாதேவியுடன் உறைந்து வாழலுற்றான், கர்ண்ணகையை

மறந்துவிட்டான். பின்னர் மதேவியும் ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

ஒருநாள் கோவலனும் மாதேவியும் பொன்னியாற்றுக்கு நீராடச் சென்றனர். சென்றவிடத்தில் வயந்தமாலையின் சூழ்ச்சியால் இருவரிடையே கலகம் மூண்டது. கலகத்தின் விளைவால் மாதேவி பலவிதமான கணக்குகளை எடுத்துக்கூறிக் கோவலனைக் குற்றவாளியாக்கினாள். கோவலனுக்குப் பல தண்டனைகளைக் கொடுத்தாள். பட்டப் பகலில் வெட்ட வெளியில் கோவலனை வெயிலில் நிறுத்தினாள்.

அப்பொழுது அச்சுதனார் ஆண்டி வேடம் பூண்டுக் கோவலனை வந்து கண்டார்; என்ன செய்தி என வினவினார். கோவலன் நடந்த செய்திகளை எடுத்துக் கூறினான். தன் மனைவி கர்ண்ணகை யிடத்தில் இச்செய்தியினைக் கூறிட வேண்டும் என அச்சுதனாரிடம கோவலன் வேண்டினான். அதன்படி அச்சுதனாரும் செய்தியினைக் கர்ண்ணகை யிடத்தில் வந்து அறிவித்தார். கர்ண்ணகை கோவலனை மீட்டி வர அச்சுதனார் மூலம் பொன் கொடுத்து அனுப்பினாள். அச்சுதனாரும் கோவலனிடத்தில் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்தார். மாதேவியின் கடன்களைத் தீர்த்து விட்டுக் கோவலனும் மீண்டு வந்தான்.

கோவலன் மீண்டு வந்து கர்ண்ணகையைக் கண்டான் கர்ண்ணகை கோவலனின் தவறுகளை எடுத்துரைத்தாள். கோவலனை தன் இல்லத்தில் தனியாகச் சமைந்து, உண்டு வாழ உத்தரவிட்டாள். கோவலனும் அதன்படி வாழ்ந்து வந்தான்.

கோவலன் மாதேவியினைப் பிரிந்து சென்ற பின்னர் மாதேவிக்குப் பிரிவுத் துயர் தாங்க முடியவில்லை. எனவே செய்தியினை மாதேவி தாய்க்கு எடுத்துரைத்தாள். மாதேவியின் தாய் அவளைத் தேற்றினாள். பின்னர் வயந்தமாலை சோழமன்னனிடம் பிரிந்து சென்றுகோவலன் சென்ற செய்தியினை எடுத்துக் கூறினாள். செய்தி கேட்ட சோழ மன்னரும் கோவலரை மீண்டுவர ஏற்பாடு செய்தார். அதன் பொருட்டு ஒரு தூதுவனைக் கோவலனிடத்தில் அனுப்பினார். தூதுவன் கோவலனை வந்து கண்டான். தூதுவனிடம் கோவலன் மீண்டும் தான் மாதேவியை பார்ப்பதில்லை என்று கூறிவிட்டான். தூதுவனும் செய்தி கேட்டு, வந்து நடந்தவற்றை மன்னனிடம் எடுத்துரைத்தான். செய்தி கேட்ட மன்னனும் சினமுற்றுக்கோவலனைத் தண்டிக்க எண்ணினான். எனவே செட்டி வரி. நகரிவரி என்ற இரண்டு வரிகளைக் கோவலனுக்குச் சுமத்தினான். வரி சுமத்தப்பட்ட செய்தியினைத் தூதுவர்கள் வந்து கோவலனிடம் அறிவித்தனர்.

கோவலன் கர்ண்ணகையிடம் மன்னன் வரிசுமத்திய செய்தியை எடுத்துரைத்தான். வரியினை இறுக்கும் பொருட்டு பொருள்தேட பிற தேசம் செல்வேன் என்றான். அதற்குக் கர்ண்ணகை பிறதேசம்போக வேண்டாம், என் கால் சிலம்பினை விற்று வரியினைக் கட்டிவிடலாம் என்றாள். பின்னர் இருவரும் சிலம்பினை விற்கும் பொருட்டு ஊர்விட்டுப் புறப்பட்டனர். நீண்ட தூரம் நடந்துவந்தனர். பின்னர்க் கர்ண்ணகை கோவலனிடத்தில் என்னை ஓரிடத்தில் அடைக்கலமாக இருத்திவிட்டு, நீர், சிலம்பு விற்கச் செல்லுமென்று கூறினாள். அடைக்கலமாக யார் மனையில் உன்னை இருத்தலாம் என்று கோவலன் கேட்க கர்ண்ணகை செட்டியார், வெள்ளாளர், தட்டார், மறவர் ஆகியோர் மனை வேண்டாமென்று கூறி ஆயனில்லாத ஆய்ச்சி மனையில் என்னை அடைக்கலமாக இருத்திச் செல்லும் என்று கூறினாள். அதன்படி கோவலனும் ஆயனில்லாத ஆய்ச்சிமனையைத் தேடிக் கண்டுபிடித்து, பின் இருவரும் அங்கு வந்து தங்கினர். ஆய்ச்சி இருவரையும் நன்கு உபசரித்து விருந்தும் இட்டாள். மூன்றாம் நாள் ஆய்ச்சி இருவரையும் வீட்டிலிருந்து போகச்சொன்னாள். உடனே கோவலன் தான் எதன்பொருட்டு இங்கு வந்தேன் என்று எடுத்துக் கூறினான். மீண்டும் ஆய்ச்சி அவர்களை அவள் மனையில் தங்கி வாழச் சொன்னாள். அப்பொழுது கர்ண்ணகை தன் பெருமையெல்லாம் ஆய்ச்சியிடத்தில் எடுத்துச் சொன்னாள்.

அடுத்த நாள் காலையில் கோவலன் சிலம்பை விற்று வருகிறேன் என்று கர்ண்ணகையிடத்தில் சொன்னான். உடனே கர்ண்ணகை சிலம்பு விற்கச் செல்லுமுன்னர் வாய்ச்சோதனை (விருச்சி) கேட்டு வாரும் என்றாள். அதன்படியே கோவலனும் வாய்ச்சோதனை கேட்கவேண்டிச் செம்மான் மனை அடைந்தான். செம்மான் வீட்டில் இல்லை. அங்கிருந்த செம்மாத்தியிடம், கோவலன் தண்ணீர் தா என்று கேட்டான். செம்மாத்தி குழந்தை கையில் இருந்தமையால் நீயேநீரை ஊற்றிக்குடி என்று சொன்னாள். கோவலன் கோபமுற்றான்; எனவே தண்ணீர் குடத்தையே உடைத்துவிட்டான். அதனைக் கண்ட செம்மாத்தி சீற்றமுற்றுச் சாபமிட்டாள் சாபத்தினை வாங்கிக்கொண்டு கோவலன் திரும்பி வந்தான். கர்ண்ணகையிடம், வாய்ச்சோதனை கேட்டுவந்தேன் தீங்கு ஒன்றும் வாராது; நீ இப்பொழுது சிலம்பினைக் கொடு. மதுரையில் நான் சென்று விற்று வருகிறேன் என்றான். உடனே கர்ண்ணகை நீர் சிலம்பு விற்கச் செல்கின்றபொழுது ஏதேனும் தீங்கு வந்தால் நான் அறியும் பொருட்டு உம்முடைய உயிரைவிட்டு வாடாதபூமாலை சமைத்துத் தாருமென்றாள். கோவலனும் அதன்படி செய்துகொடுத்தான். கோவலனும் மணிச்சிலம்பைக் கையில் வாங்கினான். அப்பொழுது

கர்ண்ணகை கோவலனைச் சகுனம் பார்த்துப் போகச் சொன்னாள். அடுத்து மதுரையிலுள்ள பல பெண்களைப் பற்றியும் எடுத்துக்கூறிக் கவனமாகச் சென்றுவரச் சொன்னாள். பின்னர்க் கோவலன் சிலம்பு விற்க புறப்பட்டு வந்தான் மதுரையில் பல தெருக்களிலும் சென்று சிலம்பு விலை கூறினான். பெண்கள் பலர் சிலம்பினைப் பார்த்துவிட்டு இது பத்தினி அணியும் சிலம்பு, சாதாரண பெண்களுக்குப் பொருந்தாது என்று வாங்க மறுத்துவிட்டனர். கோவலன் அலைந்து சோர்ந்து ஓர் அத்தி மரத்தின் கீழ்வந்து உட்கார்ந்தான். அப்பொழுது பாண்டிய மன்னனின் தட்டான் அவ்வழியாகப் பவனி வந்தான். அவன் கோவலனைக் கண்டு விசாரிக்கலுற்றான். கோவலனும் செய்தியினைச் சொன்னான். தட்டான் கோவலனிடத்துச் சிலம்பைப் பார்ப்பதற்குக் கொடு என்றான். கோவலனும் கொடுத்தான். சிலம்பினைப் பார்த்துவிட்டு தட்டான் கள்ள மனதுடன் இது நீ திருடிச் சென்ற சிலம்பு என்றான். இவனைப்பிடித்துக் கட்டுங்கள் என்று பக்கத்திருந்தவரிடையே கூறினான். அதை அறிந்த கோவலன் உள்ளமுருகி, சிலம்பின் விவரத்தை தெளிவாகத் தட்டானிடம் எடுத்துச் சொன்னான்; மேலும் தட்டானிடத்தில் தன்னை விட்டுவிடச் சொன்னான். தட்டான் செவிசாய்க்கவில்லை கோவலனைப் பாண்டிய மன்னனிடத்தில் தட்டான் கொண்டுவந்து நிறுத்தினான். சிலம்பினைத் திருடிச் சென்றவன் இவன்தான் என்று பழிசுமத்தி நின்றான். பாண்டியனும் கோவலனை விசாரணை செய்தான். கோவலன் பாண்டியனிடத்தில் உம் மனைவியிடத்தில் சிலம்பைப் பார்க்கச் சொல்லும் என்றான். அவ்வாறே பாண்டியனும் தன் மனைவியை வரவழைத்துச் சிலம்பினைப் பார்க்கச் சொன்னான். பாண்டியன் மனைவியும் சிலம்பினைப் பார்த்துவிட்டு தன் சிலம்பு இல்லையெனக் கூறிவிட்டாள்; அதோடு தட்டானையும் எச்சரித்தாள். தட்டான் மன்னனிடம் உன் மனைவி கோவலனிடம் மயங்கிவிட்டாள்; எனவே கோவலனைப் பிடித்துக்கட்டி தண்டனை கொடும் என்று சொன்னான். தட்டான் சொல்படி மயக்கமுற்ற பாண்டியனும் கோவலனைப் பல சோதனைக்கு உள்ளாக்கினான். சோதனைகள் பலனளிக்கவில்லை. எனவே பாண்டியன் மழுவரசனை அழைத்து கோவலனை வெட்டிவிடச் சொன்னான். மழுவரசனும் கோவலனை வெட்டுவதற்குக் கொண்டு சென்றான். மழுவரசன் கோவலனின் வடிவினைக் கண்டு உன்னை எனக்கு வெட்ட மனமில்லை. கோவலனே நீ தப்பித்துவிடு என்றான் கோவலன் ஒத்துக்கொள்ளவில்லை. பின்னர் கோவலன் விலங்கினத்தையும், பறவையினத்தையும் பார்த்து நான் இறந்த பின்னர் என் கர்ண்ணகை வரும் வரையும் என்னைத் தீண்டாதீர்கள் என்று வேண்டிக் கொண்டான். அப்பொழுது மழுவரசன்

கோவலனை இரண்டு துண்டாக வெட்டிவிட்டான். கோவலனும் இறந்துவிட்டான்.

கோவலன் இறந்தவுடன் கர்ண்ணகையும் கனவு கண்டாள். கண்ட கனவினை ஆய்ச்சியிடத்து எடுத்துச் சொன்னாள். ஆய்ச்சி கர்ண்ணகையைத் தேற்றினாள். அப்பொழுது குறிசொல்லுகின்ற குறத்தி ஒருத்தி அங்கு வந்தாள். அவளிடம் குறிகேட்டனர். அவள் கர்ண்ணகையின் கையைப் பார்த்துக் குறி சொன்னாள். நடந்த, நடக்கவிருக்கின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் எடுத்துச் சொன்னாள். குறிகேட்ட கர்ண்ணகையும அழுது சோர்ந்தாள். மீண்டும் கர்ண்ணகையை ஆய்ச்சித் தேற்றினாள். பின்னர்க் கர்ண்ணகை ஆய்ச்சியிடத்தில் கொண்ட கணவனைத் தேடிச்செல்லப் போகிறேன் என்றாள் ஆய்ச்சித் தடுத்துப் பார்த்தாள். கர்ண்ணகை கேட்கவில்லை. கர்ண்ணகை புறப்பட்டுக் கோவலனைத் தேடி வந்தாள். பல இடங்களையும் கடந்து வந்தாள். நடந்து வரும் பொழுது வழியிடையே ஓர் இடைச்சி வந்து கர்ண்ணகையைச் சந்தித்தாள். கர்ண்ணகையின் துயரத்திற்குக் காரணம் என்ன என்று கேட்டாள். கர்ண்ணகையும் செய்திகளை எடுத்துச் சொன்னாள். இடைச்சியும் இரக்கப்பட்டுக் கர்ண்ணகையுடன் துணை வந்தாள். பின்னர்க் கர்ண்ணகை மதுரையில் கோவலனைத் தேடி அலைந்தாள். பல தெருக்களிலும் விசாரித்தாள். ஒருவரும் கோவலனைக் கண்டதாகச் சொல்லவில்லை. பின்னர்க் கர்ண்ணகை மாடு மேய்க்கும் சிறுவர்களிடத்தில் சென்று விசாரித்தாள். அவர்கள் பதிலாக கர்ண்ணகையைக் கேலி செய்தனர். கர்ண்ணகை கோபமுற்று அவர்களுக்குச் சாபமிட்டாள். கர்ண்ணகை அயர்ந்து நடந்து அடுத்த தெருவிற்கு வந்தாள். அங்கு நின்ற பள்ளிச் சிறுவர்களிடத்தில் விசாரித்தாள். பள்ளிச் சிறுவர்கள் கோவலனைத் தாம் கண்டதாகவும் சொல்லி, அவனுக்கு உற்ற தீங்கினையும் எடுத்துச் சொல்லி கோவலனைக் கொன்ற இடத்தினையும் கர்ண்ணகையை அழைத்து வந்து காண்பித்தனர். அங்கே கர்ண்ணகை, கோவலனைச் சுற்றி விலங்கினமும், பறவையினமும் சூழ்ந்திருக்கக் கண்டாள். கோவலனைக் கண்டவுடன் கர்ண்ணகை பள்ளிச் சிறுவர்களுக்கு வாழ்த்துரை கூறிப் பரிசுகளையும் கொடுத்து அனுப்பினாள் பள்ளிச் சிறுவர்கள் சென்ற பின்னர்க் கர்ண்ணகை கோவலனைச் சூழ்ந்திருந்த பறவையினத்தையும், விலங்கினத்தையும் அகன்றிருக்க வேண்டினாள். அவைகளும் அதன்படி செய்தன. கர்ண்ணகை வெட்டுண்ட கோவலனைக் கண்டு அழுது புலம்பினாள் அரற்றிக் கொண்டே கர்ண்ணகை சிவன் உமையிடம் கோவலனை மீண்டும் எழுப்புவிக்க வரம் வேண்டினாள். உமையும் சிவனிடத்தில் கர்ண்ணகைக்காகப் பரிந்துரைத்தாள். சிவனாரும் இரங்கி அருள்

புரிந்தார் கோவலனும் உயிர்பெற்று எழுந்தான். பக்கத்தில் நின்ற கர்ண்ணகையைக் கண்டான். பின்னர்க் கர்ண்ணகை கோவலனிடத்தில் உமக்கு ஏற்பட்ட தீங்கினை எல்லாம் எடுத்துச் சொல்லும் என்றாள்.

கோவலன் கர்ண்ணகையிடம் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றும் விடாமல் எடுத்துச் சொன்னான். இருவரும் நடந்தவைகளை நினைந்து வருந்தினர். கோவலன் கர்ண்ணகையை நீ இன்னமும் வாழ்ந்திருக்க வேண்டும் என வேண்டினான். கர்ண்ணகை மறுத்துரைத்தாள். கொடுமை செய்த பாண்டியனையும் அவன் நாடாகிய மதுரையினையும் அழிக்க வேண்டும் என்றாள். பின்னர்க் கர்ண்ணகை கோவலனை இறைவனடி சேர்வதற்கு எழுந்திருக்கச் சொன்னாள்; மேலும் கர்ண்ணகை தன் கடமைகளை முடித்து விட்டு வந்து உம்முடன் சேர்ந்து கொள்வேன் என்றும் சொன்னாள். அப்பொழுது கோவலனின் உயிர் மீண்டும் பிரிந்து சென்றது விலங்கினங்களும் பறவையினங்களும் கோவலனின் உடலைச் சுவைத்தன. கர்ண்ணகை அழுது அரற்றிக் கொண்டு பாண்டியன் அரண்மனை நோக்கி நடந்தாள். கர்ண்ணகை மதுரைச் சொக்கரையும் அங்கையற்கண்ணியையும் நினைத்து வருந்தினாள். மதுரையின் பல தெருக்களையும் கடந்து வந்தாள். பாண்டியனின் அரண்மனை வாயிலை வந்தடைந்தாள். காவலாளனிடத்தில் வாயிலை திறக்கச் சொன்னாள். காவலன் பாண்டியனிடத்தில் ஓடிச் சென்று கர்ண்ணகையின் வரவினைக் கூறினான் பாண்டியனும் காவலனிடத்தில் கர்ண்ணகையை வரச் சொல் என்றான். காவலனும் கர்ண்ணகை யிடத்தில் சென்று செய்தியினைச் சொல்லி, வாயிலையும் திறந்து விட்டான்.

அப்பொழுது பாண்டியனின் மனைவி தான் இரவு கண்ட கனவினைப் பாண்டியனிடத்தில் எடுத்துரைத்தாள். மதுரை அழியப் போகிறது. நமக்கு துன்பம் வரப்போகிறது என்றெல்லாம் எடுத்துச்சொன்னாள். அதற்குப் பாண்டியன் நீ கண்ட கனவு பலிக்காது. மதுரை அழியாது என்று சொல்லித் தன் மனைவியைத் தேற்றினான்.

கர்ண்ணகை கடுஞ் சீற்றத்துடன் அரண்மனை உள்ளே வந்து பாண்டியனைக் கண்டாள். பாண்டியனும் கர்ண்ணகையிடத்தில் உன் குறையும் வந்த காரணத்தினையும் சொல் என்றான். கர்ண்ணகை ஒற்றைச் சிலம்பு கொண்டு உங்களுடைய நாட்டில் விற்க வந்தவரைத் தேடி வந்தேன்; நான் ஒரு செட்டியப்பெண்; அச்சிலம்பு கொண்டு விற்கவந்த வணிகன் இங்கே வந்தாரோ? என்று மந்திரிகளிடத்தில் வினவினாள். அவர்கள் பதிலாகக் கர்ண்ணகையைக் கேலி செய்தனர்.

கர்ண்ணகை அவர்கள் மீது கோபமுற்றாள். அப்பொழுது வாயிற்காவலன் கடுமொழிகளை உதிர்க்காதே என்று கர்ண்ணகையை எச்சரித்தான். மேலும் கர்ண்ணகை பலவிதமான குற்றங்களைப் பாண்டியன மீது சுமத்தினள். ஒருவன் தவறு செய்துவிட்டால் அவன் தவறினை முடிந்தமுடிவாக அறியும வரையிலும் சற்றுக் காலம் பொறுத்திருந்து பார்க்கவேண்டாமோ? குற்றவாளியை உடனே கொலவது நியாயமோ? என்னுடைய காற்சிலப்பை அல்லவா விற்கவந்தான கோவலன். திருட்டுத்தனமாகத் தட்டான் அவனைக் கள்ளனென்று பிடித்துக கட்டினன். நீர் உண்மையை ஆராய்ந்துபாராமல் கொல்வித்து விட்டீர் என்றாள். கர்ண்ணகையின் கடுமொழியினைக் கேட்ட பாண்டியன் சீற்றமுற்று உன்னையும் கொல்வேன் என்றான். கர்ண்ணகை மறுமொழியாக அவர் கொண்டுவந்த சிலம்பின் இணைச்சிலம்பினை, நான் கொண்டுவந்துள்ளேன்; இச்சிலம்பினைப் பாருமென்றாள். சிலப்பினைக் கண்ட பாண்டியன் தன் தவறினை உணர்ந்து வருந்தினன். கர்ண்ணகையிடத்தில் தான்செய்த பிழையைப் பொறுத்தருள்வாயாக என்றான். மேலும் கர்ண்ணகையிடத்தில் நீ கோபப்படுவதில் என்னபயன் என்றும் சொன்னன். கர்ண்ணகை பாண்டியனுக்கு மேலும் பல பதிலுரைகளைச் சொன்னள். பாண்டியன் கர்ண்ணகையிடத்தில் உன் கணவன் இறுதிவரை உண்மை சொன்னனில்லை; அதனல்தான் வெட்டுண்டு மாண்டான் என்று எடுத்துச் சொன்னன். இவ்வாறு பாண்டியனுக்கும் கர்ண்ணகைக்குமிடையே பலமான விவாதங்கள் நடந்தன. அப்பொழுது கர்ண்ணகையின் அழகினைக் கண்டு பாண்டியன் மையல் கொண்டான். கர்ண்ணகையும் அதனைத் தெரிந்துகொண்டாள். உடனே கர்ண்ணகை பெண்ணல் அழிந்துபட்ட பல பெரியோர்களின் வரலாறுகளை எல்லாம் பாண்டியனுக்கு எடுத்துரைத்தாள். அந்நேரம் பாண்டியன் கர்ண்ணகையிடம் உன்னுடைய ஊர் குலமெல்லாம் எடுத்துச் சொல் என்றான். கர்ண்ணகையும் தன் ஊராகிய காவிரிப்பூம்பட்டணத்தின் சிறப்பினையும், அங்கு வாழும் கற்புடைப் பெண்டிர் பற்றியும், அந்நாட்டினை அரசாண்ட மன்னர் பற்றியும் எடுத்துச் சொன்னள். மீண்டும் கர்ண்ணகைக்கும் பாண்டியனுக்கும் விவாதம் தொடங்கியது. கர்ண்ணகை, பாண்டிய மன்ன உனக்கு அழிவு வருமென்றும் அறிவுறுத்தினள். அப்பொழுது பாண்டியன் உனக்கு பெரும் அளவு பணம் பொன் எல்லாம் தருகிறேன், உன் சினத்தை அடக்கு, களவு செய்த கோவலனைக் கணவனக நினைக்காதே, என்னைக் கணவனக நினைத்து ஏற்றுக்கொள் என்றான். கர்ண்ணகையும் ஒரு ஏளனச் சிரிப்பினை சிரித்துவிட்டு பாண்டியனிடம் உனக்கு மனைவியாக இருப்பேன்

எனச் சம்மதித்தாள். பாண்டியனும் மனமகிழ்ந்தான். கர்ண்ணகை பாண்டியனிடம் தனக்குப் பல்வகை ஆபரணங்கள் செய்ய தட்டானை அழையும் என்றாள். கர்ண்ணகையின் சம்மதத்தினைத் தெரிந்து கொண்ட பாண்டியன் மனமகிழ்ந்து உடனடியாகத் தட்டானை அழைத்துவர தூதுவரை அனுப்பினான். தூதுவர் வந்து தட்டானை அழைத்தனர். தட்டானும் புறப்பட்டான். அப்பொழுது தட்டானின் மனைவி, தான் இரவு கண்ட கனவு பொல்லாதது, தீங்கு வருமுமக்கு, செல்லாதேயும் என்று தடுத்தாள். தட்டான் தன் மனைவியிடம் பாண்டியன் உள்ளமட்டும் தனக்கு எந்தத் தீங்கும் நிகழாது என்று கூறிவிட்டுப் புறப்பட்டு வந்தான். பாண்டியன் வந்து கண்டான். அப்பொழுது பாண்டியன் தட்டானிடம் முன் நடந்த செய்திகளின் உண்மை விபரத்தினைக் கூறு என்றான். தட்டான் நகைத்துவிட்டு கர்ண்ணகையை நோக்கித் திருடி, இவள் சிலம்பு திருடிய திருடனின் மனைவி என்று கூறி பாண்டினிடம் இவளையும் தண்டனைக்குள்ளாக்கும் என்றான். உடனே கர்ண்ணகை சீற்றமுற்றுப் பல கடுமொழிகளைக் கூறினாள். மேலும் கர்ண்ணகை தட்டானிடம் இணைச் சிலம்பினைக் கொண்டு வந்துள்ளேன்; நீ செய்த சிலம்பு என்றால் சிலம்பின் உள்ளிருக்கும் மணி என்னவென்று நீ அறிவாய். அதனை நீ உரைத்திடு என்றாள். உடனே தட்டான் நான பாண்டியன் தேவிக்குச் செய்த சிலம்பின் உள்ளே முத்து உள்ளது என்றான். கர்ண்ணகை சிலம்பினை எடுத்துவரச் சொல்லும் என்று பாண்டியனிடம் வேண்டினாள். பாண்டியனும் சிலம்பினைக் கொண்டுவர ஏவினான். ஏவலன் கோவலன் கொண்டுவராத வேறொரு சிலம்பினை எடுத்துவந்து மன்னனிடம் கொடுத்தான். கர்ண்ணகை சிலம்பினைப் பார்த்துவிட்டு இது கோவலன் கொண்டுவந்த சிலம்பல்ல என்று மறுத்து, உண்மைச் சிலம்பினை எடுத்துவரச் சொன்னாள். ஏவலன் மீண்டும்சென்று கோவலன் கொண்டுவந்த சிலம்பினைத் தேடி எடுத்து வந்தான். பாண்டியன் மனைவியின் சிலம்பும் கொண்டு வரப்பட்டது. பின்னர் பாண்டியன் மனைவியின் சிலம்பினையும், கர்ண்ணகையின் சிலம்பினையும் சோதித்துப் பார்த்தான். கர்ண்ணகையின் சிலம்பினை தரையில் அடித்து உடைத்தனர். உள்ளிருந்த நாகமணி நாலுதிக்கும் சிதறியது. தட்டான் நாகமணி கண்டு நடுநடுங்கினான். உடனே தட்டான் பாண்டியனிடம் இவள் வித்தை தெரிந்தவள், நான் போட்டு வைத்திருந்த முத்தினை மணியாக்கி விட்டாள் என்று குற்றம் சுமத்தினான். கர்ண்ணகையின் கண்கள் சிவந்தன. பாண்டியனை நோக்கிப் பல கடுமொழிகளைச் சொன்னாள். அப்பொழுது தட்டான், பாண்டியனிடம் கர்ண்ணகை

பற்றிப் பல குறைகளைக் கூறினன். கர்ண்ணகையின் கையிலிருக்கும் சிலம்பினைக் கொடுக்கும்படி கர்ண்ணகையிடம் கேட்டான்; ஓட வழிய றியாமல் ஒடுங்கி நின்றான். கர்ண்ணகை தன் கோபங்களையெல்லாம் கொட்டித் தீர்த்துவிட்டுத் தன் சிலம்பினைத் தரையில் அடித்து உடைத் தாள். உள்ளிருந்த நாகமணிகள் எல்லாம் சிதறின. சிதறிய நாக மணிகளெல்லாம் சென்றோடி மறைந்தன. கர்ண்ணகை துர்க்கை உரு வெடுத்தாள். சிவனை வேண்டி நின்றாள். கர்ண்ணகை உடனே வாள் ஒன்று வரப்பெற்றாள். வாளினை எடுத்து, பாண்டியனே! நீ விரும் பிய மார்பினை உனக்குத் தருகிறேன். பெற்றுக்கொள் என்று சொல்லி தன் இடது மார்பினை அறுத்து பாண்டியனை நோக்கி எறிந்தாள். தீயி னையும் எரிக்கும்படி ஏவி விட்டாள். அதோடு சில சாபங்களையும் இட்டாள்.

அடுத்து கர்ண்ணகை தட்டானிடத்தில் நகர்ந்து சென்று அவன் செய்த பழிகளை எடுத்துக்கூறி அவனைக் கண்ட துண்டமாக வெட்டி எறிந்தாள். மதுரையெங்கும் புகைமண்டலம் நிறைந்தது. எல்லா இடமும் தீப்பற்றி எரிந்தது. கர்ண்ணகை தனக்கு உதவியவர்களை விட்டு விட்டு ஏனையோரை தீயிடம் எரிக்கச் சொன்னாள். அந்நேரத்தில் பாண் டியன் மறைந்தோட முயன்றான். அவன் முயற்சி பலனளிக்கவில்லை. பாண்டியனும் தீக்கிரையாகி இறந்துபட்டான்; பாண்டியனும் அழிந்து படவே கர்ண்ணகை மஞ்சாடி மணிக்கயத்தில் குதித்தாள். பின்னர் பதினாறு மணிச் சூலத்தோடு தோன்றி சிவனார் வாழும் கயிலாயபுரத்தில் வந்து நின்று வரம் வேண்டினாள். கர்ண்ணகை தெய்வமாக மாறி விட் டாள் என்பதுடன் கதை முடிவடைகிறது.

பிற செய்திகள்

யாப்பு

நாட்டுப் புறக்கதைப் பாடல்களின் யாப்பினைக் காண்பது சற்றுக் கடினமானது. நாட்டுப்புறக் கதைப்பாடல்களைப் பாடிய புலவர்கள் யாப்பறி புலவர்களும் அல்லர். கதைப்பாடல்கள் மக்கள் மத்தியில் பாடப்பட்டு வந்தமையால் கதைப்போக்கிற்கேற்ப ஓசையினைக் கூட்டி யும், குறைத்தும் பாடுவர். அப்பொழுது சந்தங்களும் மாறுபடும். எனவே நெறிமுறைக்கு உட்பட்ட நிலையில் பாடலின் வடிவங்கள் அமைந்திரா. இது பொதுவாக நாட்டுப்புறப் பாடல்களின் இயல்பு எனலாம்.

கோவலன் கர்ண்ணகை கதைப்பாடலில் பெரிதும், அடிகளில் பொழிப்பு மோனையும், ஈரடி மோனையும், காணப்படுகின்றன. அடி

தோறும் சீர், நெறிமுறையாக அமையவில்லை. சிற்சில இடங்களில் ஓர் அடியின் இறுதிச் சீர் அடுத்த அடியின் முதற்சீராக அமையும் பாங்கும் உள்ளது.

பொதுவாக நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் உயர்ந்த செய்யுள் நடையில் அமைவதில்லை. அம்முறையில் இக்கதைப்பாடல் உரை யிடையிட்ட பாட்டாகவே உள்ளது. குறிப்பாகப் பாத்திரங்களின் கூற்றாக அமையும் இடங்கள் இம்முறையில் சிறந்திலங்குகின்றன.

கதைப்பாடல்களில் பொழிப்பு மோனையும் ஈரடி மோனையும் அமைந்து வருவது பாடகருக்குப் பாட்டினை எளிதில் நினைவுபடுத்திக் கொள்வதற்குத் துணைபுரியும். அதோடு கேட்பவருக்கும் ஓசை நய ஈடுபாட்டினை உண்டு பண்ணும்.

மறுபடி மறுபடி வரல் (repetition)

நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் ஒருவரியோ, சிலவரிகளோ மறுபடி மறுபடி வருவதனையும் காணலாம். இவ்வாறு மறுபடிமறுபடி வரும் அமைப்பில், சிலபொழுது சொல்லோ வரியோ சிற்சில மாற்றம் பெற்றும் வருவதுண்டு.

கோவலன் கர்ண்ணகை கதைப்பாடலிலும் மறுபடிமறுபடி வரல் அமைப்பு இடை இடையே காணப்படுகிறது.

அரங்கேற்றத்தின் பொருட்டு மாதேவி இசைக்கருவியினை முழக்குகின்றாள். அவ்வோசை கோவலனின் காதுகளில் விழுகிறது. அப்பொழுது கோவலன் அந்தவோசை என்னவோசை என்று தன் தாயிடம் கேட்கிறன். தாய் தன் மகனின் மன நிலையினை உணர்ந்து மறைத்துக் கூறுகின்றாள். கோவலனும் தாய் கூற்றினை ஏற்றுக் கொண்டானில்லை. இச்செய்தி இக்கதைப்பாடலில் மறுபடி மறுபடி வரல் அமைப்பில் வந்துள்ளது.

''அந்நா யிந்நா கேள்க்கும் சத்தம்
ஏது சத்தம் மாதாவே
ஏழூரில் கொல்லர் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி இரும்படிக்கும்
சத்தமிட்டயென் மகனெ
பின்னெயுந்தான் மாதேவி
பெருந்தவிலெ முளக்கு வாளாம்
இப்பொழுதே கேள்க்கும் சத்தம்
என்ன சத்தம் மாதாவே
ஏழு ஊரில் கன்னர் கூடி

ஒருதலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி கலம் சமைக்கும்
சத்தமிட கோவலரெ
பின்னெயுந்தான் மாதேவி
பெருந்தவிலெ முளக்குவாளாம்
இப்பொழுதெ கேள்க்கும் சத்தம்
என்ன சத்தம் மாதாவெ
ஏழுரில் தட்டார் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி பொன் சமைக்கும்
சத்தமிட கோவலரெ''

(146-167)

இங்கே காட்டப்பட்ட மறுபடி மறுபடி வரல் அமைப்பு கோவலனும் அவன் தாயும் வினவி விடையிறுக்கும் நிலையில் அமைந்துள்ளது.

மேலும் இக்கதைப்பாடலில் கோவலன் சிலம்பு விற்கப் புறப் படுகையில் கர்ண்ணகை தன்னை ஏதேனும் ஒரு மனையில் அடைக்கல மாக இருத்திச் செல்லும் என்று வேண்டுகின்றாள். அப்பொழுது கோவலன் வரிசையாக ஒவ்வொரு சாதியர்களின் மனையாமோ என்று கேட்க கர்ண்ணகை ஒவ்வொரு சாதியாரின் சமுதாயப்பாங்கினைச் சுட்டிக் காட்டும்பொழுது மறுபடி மறுபடி வரல் அமைப்புக் காணப்படுகின்றது. அடுத்து கர்ண்ணகை கோவலனிடத்தில் மதுரையின் பெண்கள் நிலை பற்றிக் கூறுகையில்,

தெக்கெ தெருவதிலெ
தேன்மொழியாள் ஒருதியுண்டும்
அவள் தெருவில் சொல்லாதெயும்
சொல்லாதெயும் நில்லாதெயும்
சிலம்பு விலை கூருதெயும்
அவள் வழக்கம் கேளாதெயும்
அவளெ உறவாடாதெயும்
அகப்பட்டும் நீர் கொள்ளாதெயும்
மேக்கெ தெருவதிலெ
மெயிக்கண்ணி ஒருத்தியுண்டும்
அவள் தெருவில் சொல்லாதெயும்
சொல்லாதெயும் நில்லாதெயும்
சிலம்பு விலை கூருதெயும்
அவள் வழக்கம் கேளாதெயும்

அவளை உறவாடாதெயும்
அகப்பட்டும் நீர் கொள்ளாதெயும்'' (1501-1515)

என்று மறுபடி மறுபடி வரல் அமைப்புக் காணப்படுகிறது.

இவைகளைப் போன்று மேலும் சில இடங்களில் மறுபடி மறுபடி வரல் அமைப்பு நூலுள் அமைந்துள்ளது. கதைப் பாடல்கள் மக்கள் மத்தியில் இசைக் கருவிகளோடு பாடப்படும் பொழுது இம்மாதிரி யான மறுபடி மறுபடி வரல் என்னுமிடங்கள் பாடுவோருக்கு உற்சாகத் தினையும், கேட்போருக்கு மகிழ்வினையும் ஊட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இம்மாதிரியான அமைப்புகள் கதையோட்டத்திற் கும் விறுவிறுப்பினை ஏற்படுத்த துணை நிற்கும்.

மொழி

இக்கதைப் பாடல் தமிழும், மலையாளமும் கலந்த மொழியினைக் கொண்டுள்ளது இம்மொழியினை இருமொழிய மொழி (Bilingual language) என்பர். இக்கதைப் பாடல் இருமொழி கலந்து பேசும் (தமிழும் மலையாளமும்) பகுதியாகிய குமரிமாவட்டத்தின் மேற்குப் பகுதியில் தோன்றியமையால் அப்பகுதியில் வழங்கி வரும் மொழியாலேயே ஆக்கப் பெற்றுள்ளது. மொழியினை வைத்துக் கொண்டு இக்கதைப் பாடல் குமரிமாவட்டத்தின் மேற்குப் பகுதியில் தோன்றியது என்பதனையும் உறுதி செய்யலாம். பொதுவாக நாட்டுப்புறக் கதைப் பாடல் களில் வட்டார வழக்குகள் பல காணப்படும். அம்முறையில் இக்கதைப் பாடலுள்ளும் வட்டார வழக்குச் சொற்கள் பல உள.

பழமொழிகள்

நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் பழமொழிகள் அமைந்து வருவதும் இயல்பே. கோவலன் கர்ணகை கதைப் பாடலிலும் ஆங்காங்கே சில பழமொழிகள் பயின்று வந்துள்ளன. அவை கதைப்பாத்திரங்களின் பண்பு நலன்களை விளக்கும் பொருட்டு அமைவனவாய் உள்ளன.

''காற்றுள்ள வேளயிலே
தூற்றிக் கோடி நீ மகளே'' (461-62)

என்ற வரிகள் வயந்தமாலை கோவலனை மயக்கும் பொருட்டு மாதேவியிடம் கூறுவதாகும். இவ்வரிகள் ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' என்னும் பழமொழியினின்றும் உருவானதே! இதனைப்போன்று

''தாயி பொன்னிலும் மகள் பொன்னிலும்
சற்றெ பொன் திரடால் விட்டால்
தலை வீங்கி சாவான் தட்டான்'' (1177–1179)

''குளிர்ப் போனால் குப்பாயம் கொண்டென்ன காரியமேன்'' (3588)

என்ற பழமொழிகள் அமைந்து நூலைச் சிறக்கச் செய்கின்றன.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்

காவியங்களில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் அமைந்து வருவது போல நாட்டுப் புறக்கதைப்பாடல்களிலும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. கதையினை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லுகின்றபொழுது கதையின் தலைமைமாந்தர்களைச் சிறப்பிக்கும் பொருட்டும், கதைகேட்போரின் ஆர்வ எண்ணத்தினைத் தூண்டும் பொருட்டும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் கதைப் பாடல்களில் இடம் பெறுகின்றன.

கோவலன் கர்ண்ணகை கதையிலும் பற்பல இடங்களில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் உள்ளன. கதை தொடங்கும் பொழுதே மாயவனார் கோவலன், கர்ண்ணகையை முறையே பத்து மாற்றுத் தங்கத்திலும், பத்தரை மாற்றுத் தங்கத்திலும் பிறவி செய்ததாகக் கூறப்படுவது சாதாரண மனிதன் செயலுக்கு அப்பாற்பட்ட செயலே. அடுத்து கர்ண்ணகைக்குச் சிலம்பு செய்ய வேண்டி மாறுகென் பல கடல்களைக் கடந்து சென்று நாகத்தினிடம் நாகமுத்துப் பெற்று வருவது கர்ண்ணகையின் பெருமையினைக் காட்டத் துணை செய்கிறது.

மேலும் அச்சுதனார் ஆண்டிவேடம் பூண்டு வந்து கோவலனுக்கு உதவி செய்தலும், காவிரியாறு கர்ண்ணகை கடந்து செல்ல இடம் விட்டுக் கொடுத்தலும் கோவலன் சிலப்பு விற்கச் செல்லு முன்னர் தன்னுடைய உயிரினை இட்டு வாடாப் பூ மாலையாகச் சமைத்து கர்ண்ணகையிடத்துக் கொடுத்தலும், பின்னர்க் கோவலன் வெட்டுண்டு பொழுது அவ்வாடாப் பூ மாலை வாடப் பெறுதலும் வெட்டுண்ட மாய்ந்த கோவலனை பறவைகள் விலங்கினங்கள் உண்ணுதிருத்தலும் வெட்டுண்டு கோவலன் கர்ண்ணகையின் வரவின் பின்னர் மீண்டும் உயிர்த்தெழுந்து பேசுதலும், கர்ண்ணகை இறையை வேண்டி வாள் பெறுதலும், மதுரையைத் தீக்கிரையாக்கலும், இறுதியாக கர்ண்ணகை மஞ்சாடி மணிக்கயத்தில் சாடி மறுவடிவு பெற்று வருவதும் இக்கதைப்பாடலில் அமைந்து விளங்கும் குறிப்பிடத்தக்க இயற்கை இறந்த நிகழ்ச்சிகளாம்.

உவமைகள்

கோவலன் கர்ண்ணகை கதைப்பாடலில் பல உவமைகள் பயின்று வந்துள்ளன. நாட்டுப்புறக்கதைப் பாடலில் பயின்று வரும் உவமைகள் எளிய இனிய தன்மையனவாய் உள்ளன. அதோடு நாட்டுப்புற மக்களிடையே அடிக்கடி வழக்கில் வழங்கி வருவனவாயும் உள்ளன.

இக்கதைப்பாடலில் உவமைகள் கதை நிகழ்ச்சியினையோ, கதாபாத்திரத்தின் செயலினையோ அல்லது பண்பினையோ விளக்கும் பொருட்டு அமைந்து வந்துள்ளன. வேசையின் தன்மையினைச் சுட்டுகின்றபொழுது

'கோட்டானெ போல கூப்பிடுவாள்' (245) என்றும், கர்ண்ணகை கோவலனிடத்தில் தன்னையும் மாதேவியையும் ஒப்பிட்டுக் கூறும்பொழுது,

''நல்க்கருப்பு மிங்கிருக்க
பேயிக கரும்பெ தொட்டீரொ
தாவிப்பிள்ளை யிங்கிருக்க
மரநாயெ சென்றும் தொட்டீரொ
சோலை கிளிமகள் நானிருக்க
சொறிநாயெ சென்றும் தொட்டீரொ'' (899-904)

என்று உவமைகளை அடுக்கிக் கூறுவதனையும் காணலாம்.

இக்கதைப்பாடலில் புராண நிகழ்ச்சிகளை உவமையாக எடுத்துக் கூறும் பாங்கும் உள்ளது. குறிப்பாக மகாபாரதம் இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் இடை இடையே உவமைகளாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதிலிருந்து மகாபாரதம், இராமாயணம் ஆகியவைகளின் செல்வாக்கு நாட்டுப்புற மக்களிடத்தில் பெருமளவுக்கு ஏற்பட்டிருந்தது என்பதை உணரலாம்.

மேலும் இக்கதைப்பாடலில் ''உறங்கினவர் முளித்தாப்போல்'' ''ஆவிளந்த கன்னது போல்'' ''தாயிளந்த பிள்ளெயெப் போல்'' ''ஆட்டெ கண்ட வேங்கெயெ போல்'', 'ஆடுகட்டா கள்ளெனெ போல்' என்று பல எளிய உவமைகள் அமைந்து நூலைச் சிறக்கச் செய்கின்றன.

பழக்க வழக்கங்கள்

கோவலன் கண்ணகி கதை தொன்றுதொட்டே தமிழகத்தில் நிலவி வந்த கதை என்பது முன்னரே கூறப்பட்டது. அம்முறையில் இக்கதை குமரி மாவட்டத்திலும் வழிவழியாக வழங்கி வந்துள்ளது. பின்னர் அக்கதை உருவம் பெறுகின்ற பொழுது கதை நிகழ்ச்சிகள் உறையூரிலும், மதுரையிலும் நடந்தனவாக இருந்தாலும் கதையோடு பின்னிப் பிணைந்து வெளிப்படுத்தப்படும் சமுதாய பழக்க வழக்கங்கள் குமரிமாவட்டத்து மக்களின் பழக்க வழக்கங்களையே எடுத்துணர்த்துகின்றது. இவ்வாறு நாட்டுப்புறக்கதைப் பாடல் நிகழ்ச்சிகள் எந்தப் பகுதியில் நடந்ததாக இருந்தாலும் சில பொழுது அவை எந்தப் பகுதியிலிருந்து (region) வடிவம் பெற்று வெளிப்படுகின்றதோ அப்பகுதியின் பண்பாட்டுக் கூறுகளையே கொண்டிலங்கும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

கோவலன் கர்ண்ணகை கதைப் பாடலில் பல்வேறு வகையான சமுதாயப் பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன. இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கைப் பிரதிபலிப்பு என்பதுபோல, நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிகின்றன

கோவலன் கர்ண்ணகை திருமணச் செய்திகள் குமரிமாவட்டத்தில் நாட்டுப்புறங்களில் நடைபெறும் திருமண நிகழ்ச்சியினை விளக்குவதாய் உள்ளது. மேலும் செட்டியார் சமுதாயத்துப் பழக்கவழக்கங்களை இந்நூலிலிருந்து நிரம்ப அறிந்து கொள்ளலாம். அதோடு வெள்ளாளர், தட்டார், ஆயர், மறவர் போன்ற சமுதாய மக்களின் பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன.

மேலும் குமரி மாவட்டத்தில் இன்றும் நின்று நிலவி வருகின்ற ஆணையிடுதல் பழக்கமானது நூலுள் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளது பெற்றோர் இறந்த பின்னர் இறுதிச் சடங்கில் மகன் கொள்ளி வைக்கும் பழக்கம், கணவன் இறந்த பின்னர் மனைவிக்குத் தாலியினை நீக்கிவிடும் பழக்கம் என்பனவும் உணர்த்தப்பட்டுள்ளன.

குமரிமாவட்டம் மலையாள மாநிலத்தினை அடுத்திருக்கின்றமையால் மலையாள மாநிலத்தில் சிறந்திலங்கும் மந்திரவாதம், இயற்கை மருத்துவம் போன்றன குமரிமாவட்டத்திலும் நாட்டுப்புறங்களில் நிலவி வருகின்றன. கோவலன் கர்ண்ணகை கதையில் கோவலன் யானை, அரவம் என்பவைகளின் வாயைக் கட்டி விட்டான் என்று தட்டான் பாண்டியனிடம் எடுத்துரைப்பது, மந்திரவாதத்தினை நினைவுறுத்துகின்றது. அதனைப்போன்று மாதேவி கோவலன் தன்னை மறக்காமலிருக்கும் வண்ணம் மருந்துஇட்டுவிட்டாள் என்ற செய்தி, குமரிமாவட்டத்தில் நாட்டுப்புறங்களில் மக்கள் மத்தியில் குறிப்பாகபெண்கள் மத்தியில் வழங்கிவரும் 'வசிய மருந்தினை' நினைவுபடுத்துகிறது. இவ்வாறு இக்கதைப்பாடலில் மக்களோடு பின்னிப்பிணைந்திருக்கும் பழக்க வழக்கங்கள் பல காணப்படுகின்றன.

நம்பிக்கைகள்

இக்கதைப்பாடலில் கோவலன் சிலம்பு விற்க புறப்படுகின்ற பொழுது கர்ண்ணகை கோவலனிடத்தில் பல நன்னிமித்தங்களையும் தீய நிமித்தங்களையும் வரிசைப்படுத்தி எடுத்துக் கூறுகின்றாள். அவை அனைத்தும் மக்களின் நம்பிக்கைகளே! நிமித்தங்களை நூலுள் கண்டு கொள்க. மேலும் கோவலன் சிலம்பு விற்கச் செல்லுமுன்னர் வாய்ச் சோதனை (விரிச்சி) கேட்டு வரலும் ஒரு நம்பிக்கையே.

கோவலன் கர்ண்ணகை கதைப்பாடலை ஒரு சிறந்த நாட்டுப்புறக் கதைப்பாடல் எனக் கொள்ளலாம். நாட்டுப்புறக் கதைப்பாடல் அம்சம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற இக்கதைப் பாடலைக் கற்று மகிழ்வீர்களாக!

மதுரை
25-4-79

இவை
தி. ந

நூல்

குருவே சரணம்

கோவலன் கர்ண்ணகை தோற்றம்

நந்தியுடன் தெய்வ பாண்டி மன்னரு
நாடி வைக நாடாண்ட காலம்
பாண்டியனெ பலதளிக்க
ஆரே யினி நாமள் பிறவி செய்வோம்
என்று நினத்தல்லொ மாயவரும்
கேந்திரக்காலெனெயு கமழித்து
கோவலெரெ பிறவி செய்தாரு
துகெயெரே யுகமழித்து
கர்ண்ணெகைய்யெ பிறவி செய்தாரு
பத்து மாற்றில் கோவலரும்
பத்தரெ மாற்றில் கர்ண்ணகைய்யும்
இரு பேரும் தான் பிறந்து
இருக்கும் அந்த நாளதிலே

கர்ண்ணகைக்கு சிலம்பு செய்தல்

கர்ண்ணகய்யெ கோவலர்க்கு
கல்யாணம் முகிப்பதற்க்கெ
கர்ண்ணகய்யாள் பிறந்த நாள் முதலாயி
அவள் தகப்பன் மானுகென்
அவன் ஏழு கடல் ஒரு கோடி
ஒரு கோடி கடல் கடந்து
நாக முத்தர் கோட்டையிலெ
நல் வணிகன் சென்றனேரெ
நாக முத்தே நாக முத்தே

---

2 வைகை > வைக (பே. வ. மா) — ஆறு
3 பலதளிக்க — சக்தியினை அழிக்க, புகழினை அழிக்க
4 ஆரே — யாரை, நாமள் — தன்மைப்பன்மைப் பெயர்
5 மாயவர் — திருமால்
7 கோவலரை > கோவலெரெ (பே. வ. மா)
8 துகெயெரெ — துர்க்கையை
9 கண்ணகி என்னும் பெயர் இந்நூலில் கர்ண்ணகை என்று குறிக்கப் பட்டுள்ளது.
17 மாநாய்கன் என்னும் பெயர் மானுகென் என்று குறிக்கப்பட்டுள்ளது.

என்று ஒந்நுரண்டு விளி விளித்து
விளித்த சத்தம் கேட்ட போதெ
விரவில் இளகியெ வெளியில் வர
ஆரிவ்விடெ விளித்ததென்று
அறிவுரெத்தாள் நாகமுத்தும்
ஞானல்லயோ நாகமுத்தே
நலம் படவே உன்னெ விளித்தேன்
அறிந்தில்லயோ நாகமுத்தே
அரியதொரு நல்ல செயிதியெல்லாம்
காவெரிப்பூம் பட்டணத்தில்
கர்ண்ணகய்யாள் இருப்பதுண்டெ
கர்ண்ணகய்யாள் தன் தனக்கே
கால்க்கிணங்க இப்பணி சமெக்க
நாகமணி சிலம்பொருக்க
நாக முத்து தர வேணும்
அந்த மொழி கேட்ட நாகமுத்தாள்
அம்பிடன் வாற்த்தெ யேதோ சொல்வார்
இந்த நல்ல நாகமுத்து
எல்லோர்க்கும் ஆகாது
தொக்கல்லவெ நாகமணி
தொட்டவர்கள் எரிந்திடுவார்
இட்டிரிந்தால் முடி தெறிக்கும்
இருந்த தலம் தீப்பிடிக்கும்
பத்தினிமார்க் கல்லாமல்
பல பைந்தொடிமார்க் காகாது
கர்ண்ணகெய்யாள்க் கல்லாமல்

---

23 ஒந்நுரண்டு (மலையாள வழக்கு) — ஒன்று இரண்டு
25 விரைவு > விரவு (பே. வ. மா), இளகி — பெயர்ந்து
26 இவ்விட (மலையாள வழக்கு) — இங்கு, விளித்தது - அழைத்தது
28 ஞான் (மலையாள வழக்கு) — நான்
35 இணங்க — பொருந்த, சமைக்க > சமெக்க (பே. வ. மா)
36 சிலம்பொருக்க — சிலம்பு செய்ய
39 அன்புடன் என்பது அம்பிடன் என்று எழுதப்பட்டுள்ளது
42 தொக்கு — அற்பம்
45 இட்டிருந்தால் > இட்டிரிந்தால்(பே. வ. மா) — அணிந்திருந்தால்
46 தலம் — இடம்

வேறொருவர் பூணொண்ணாது
வேறொருவர் பூண வில்லை
என்றாணை யிட்டால் நாகமணி தருவேன்
என்று சொன்ன வேளையிலெ
இரு கண்ணில் தொட்டு ஆணையிட்டார்
ஆணை யிட்ட வேளயிலெ
அஞ்சு தலையுள்ள அரகம்
அதிசயமாய் வெளியில் வந்து
அரக மணி கக்கிடுமாம்
நாகமணி கையி லெடுத்து
நல் வணிகன் கயிக் கொடுத்தார்
வாங்கி யெல்லோ மாணாகென்
வழி நடந்தான் சடுதிலே
ஒரு வோடி கடல் கடந்து
உடன் வாற வேளயிலே
காவேரிப் பும்பட்டணத்தில்
கர்ண்ணகய்யாள் மனையில் சென்று
செட்டி தட்டாரெ வரவழைத்து
சிறந்த கருவலவா புர துறந்து
கருவலா புரதுறந்து
தங்கப் பொன் நெறுத்தெடுத்தர்
நெறுத்த பொன்னெ உலையில் வயித்து

---

51 ஆணை — உறுதி
53 இருகண்ணில் கையை ஒற்றி ஆணையிடுதல் (கண்ணாணை) குமரி மாவட்ட மக்கள் பழக்க வழக்கமாகும்.
55 ஐந்து > அஞ்சு (பே. வ. மா)
57 அரகம் — பாம்பு, நாகம்
57 கக்கிடுமாம் — வெளிப்படுத்திடுமாம்
59 கை> கயி (பே. வ. மா)
61 சடுதிலே — விரைவிலே
62 ஒருகோடி > ஒருவோடி (பே. வ. மா)
63 வாற — வருகிற
66 தட்டார் — பொற்கொல்லர்
67 கருவலவாபுர — உயர் பொருள் சேமிப்பு அறை
67 திறந்து > துறந்து (பே. வ. மா)
69 நிறுத்து > நெறுத்து (பே. வ. மா)
71 நெருப்பு > நெரிப்பு (பே. வ. மா)

நெரிப்புமிட்டு ஊதுவாராம்
உப்பாலே உருகிடவே
உலைக்குள் நின்றுடனே யெடுத்து
அடித்துடத்து தகடு தட்டி
அரிய வளை கோட்டுவாராம்
கோட்டினதோர் வளை தனெக்கே
கூன்றடத்தார் நாகமணி
நாகமணி சிலம்பொருக்கி
நாகமுத்தெ தரியடைத்தார்
நாகமணி சிலம்பு தன்னெ
நந்நுதெலாள் கால்க்கணிந்தார்
கொண்டு பிறந்ததோர் சிலம்புக்கிணெ
கொண்டணிந்தாரே மணி சிலம்பே
சிலம்புப் பணி முகிந்தா பொதெ

கோவலன் கர்ண்ணகை திருமணம்

தேன் மொழிக்கெ கல்லியாணம்
கல்லியாண மென்று சொல்லி
காசினியோர் தானறிய
செட்டி கப்பலேறி பாக்கு வைத்தான்
கன துறக்கெ சீட்டு விட்டான்
ஊருக்கு ஒலை விட்டு
உடன் முறக்கெ பாக்கு வைத்தார்
நாட்டுக்கு சீட்டெ விட்டான்
நல் முறக்கெ பாக்கு வைத்தான்
ஆற்றைத்தான் குறுக்கடைத்தார்
ஆயிரங்கால் பந்தலிட்டார்
பச்செப் பனெ பிளந்து

---

74 உடைத்து என்பது உடத்து என்று எழுதப்பட்டுள்ளது.
75 கோட்டுவாரம் — வளைப்பாராம்
77 கூன்று — கூட்டி, அடைத்தார் என்பது அடத்தார் என்று எழுதப் பட்டுள்ளது.
80 தரியடைத்தார் — அழகுறச் செய்தார்
84 முகிந்தா — முடிந்த
88 பாக்கு வைத்தழைத்தல் ஒரு பழக்க வழக்கம்.
89 சீட்டு — காகிதம்
97 பனை > பனெ (பே. வ. மா)

ஒழ்ன்பது கால் பந்தலிட்டார்
எரு காலில் புரமனெ யிட்டார்
பந்தலிட்ட தூண்ங்ளெல்லாம்
பகழ முத்தால் அலங்கரித்தார்
சாந்தால் தறை மொழுகி
சந்நணத்தால் கோலமிட்டார்
கோலமான பந்தலிலே
கொண்டு வைத்தார் பொன் பலகெ
பணத்தாலெ நிற நாழி
முத்தாலெ நிற நாழீ வயித்து
முழுதும் பட்டால் அலங்கரித்தார்
அலங்கரித்து பூச்சூடி
ஆயிழயெ கொண்டு வந்து
நல் முகூர்த்தம் வேளயிலெ
சூண்டு விரல் கயிப்பிடித்து
சுற்றி வந்து மாலையிட்டார்
மாலையிட்டு பூச்சூட்டி
மணவறக்கெ உள் புகிந்தார்
மாலையிட்ட மூன்ரு நாள்
வணிவர் குல பெருமாளும்
நீராடி கோவலரும்
நிக்கு மந்த வேளயிலே

மரதேவி அரங்கேற்றம்

வயந்தமாலை பெற்ற மகள்
வாணுதெலாள் மாதேவி
உறையுருவர பட்டணத்தில்

---

97 ஒன்பது என்பது ஒழ்ன்பது என்று எழுதப்பட்டுள்ளது.
98 பிரமன் > புரமன் (பே. வ. மா)
100 பகழம் — பவளம்
101 மெழுகி > மொழுகி (பே. வ. மா)
102 சந்நணம் — சந்தனம்
111 சூண்டு விரல் — ஆள் காட்டி விரல்
118 நிற்கும் > நிக்கும் (பே. வ. மா)
119 இந்நூலில் வயந்தமாலை என்பவள் மாதேவியின் தாய் என்று குறிக்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.
120 மாதவி என்னும் பெயர் மாதேவி என்று குறிக்கப்பட்டுள்ளது.
121 உறையூர் என்பது உறையுரு என்று எழுதப்பட்டுள்ளது.

ஒன்ருடியாள் தான் பிறந்தாள்
பிறந்தவள் தான் வளர
மூந்நான வயசதிலே
முடருக்கண்ணி போட்டாட
நாலான வயசதிலே
நாடகங்கள் மிகப் படித்தாள்
அஞ்சான வயசதிலே
அதிக வித்தை தான் படித்தாள்
பன்னிரண்டாம் திரு வயசில்
பைந்தொடியாள் அரங்கேற்றம்
திரு வெண்ணயாள் அரங்கேற்றம்
சேரன் சோழன் பட்டணத்தில்
ஊந்நி விட்டாள் பொன்னும் கம்பம்
உலகிலுள்ளோர் கொண்டாட
நாட்டி விட்டாள் பொன்னும் கம்பம்
நாட்டிலுள்ளோர் நடு நடுங்க
இட்டாளெ திமிலெ சத்தம்
எல்லோரும் செவி குளிர
அங்கடிக்கு மதகிலோசெ
அருள் வணிகன் தான் கேட்டான்

கோவலன் மாதேவி அரங்கேற்றம் காண விரும்பல்

மத்தளங்கள் கேட்டா போதே
மயங்கி விட்டான் வணிகேசன்
மயங்கி உடல் நடுங்கி யல்லொ
வணிவர் குல பெருமான் சொல்வார்
அந்நா யிந்நா கேள்க்கும் சத்தம்
ஏது சத்தம் மாதாவெ
ஏழூரில் கொல்லர் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி

---

122 ஒண்டொடி என்பது ஒன்ருடி என்று எழுதப்பட்டுள்ளது.
124 மூந்நு (மலையாள வழக்கு) — மூன்று
124 வயது > வயசு (பே.வ.மா)
134 ஊந்நி — ஊன்றி
138 திமில் — இசைக்கருவி
142 மத்தளம் — இசைக்கருவி
146 அந்நாயிந்நா (குமரி மாவட்ட வழக்கு) — அந்தாயிந்தா

தட்டி கொட்டி இரும்படிக்கும்
சத்தமிட யென் மகனெ
பின்னேயுந்தான் மாதேவி
பெருந்தவிலெ மூளக்குவாளாம்
இப்பொழுதெ கேள்க்கும் சத்தம்
என்ன சத்தம் மாதாவே
ஏழு ஊரில் கன்னர் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி கலம் சமைக்கும்
சத்தமிட கோவலரெ
பின்னெயுந்தான் மாதெவி
பெருந் தவிலெ மூளக்குவாளாம்
இப்பொழுதெ கேள்க்கும் சத்தம்
என்ன சத்தம் மாதாவெ
ஏழூரில் தட்டார் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி பொன் சமைக்கும்
சத்தமிட கோவலரெ
பின்னெயுந்தான் மாதேவி
பெருந்தவிலெ மூளக்குவாளாம்
இப்பொழுதெ கேள்க்கும் சத்தம்
என்ன சத்தம் மாதாவெ
ஏழூரில் வண்ணார் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
அழுக்கிடிக்கும் சத்தமிட
என் மகனெ வணிகேச
அல்லெ யம்ம மாதாவெ
ஆயிழையிய சொல்லக் கேளு
அரிய சோளன் திரு முன்பிலெ
நாடகங்கள் ஆடு சத்தம்
நந்நுதலாள் மாதேவி அரங்கேற்றம்
மாதேவியுட ஆடல் காணு

---

151 சத்தமிட — சப்தம் அடா
153 தவில் — இசைக்கருவி
158 கலம் — பாத்திரம், அணி
181 காணு — காண

நான் போறேனம்ம மாதாவெ
அந்த வார்த்தை கேட்டா போதெ
அவன் தாயாரும் யேதொ சொல்வாள்

கோவலனின் தாய் தடுத்தல்

அட கெ(டு) வாயி பாதகனே
அருள் வணிக பெருமாளெ
நீ கர்ண்ணகய்யெ மாலையிட்டு
கல்லியாணம் முகிந்த தில்லெ
மூந்நு கழிக்க வில்லெ
மூந்நாம் நீர் ஆடவில்லெ
மூந்து கழிக்கும் முன்னெ
முற்றம் விட்டு பிரிவர்களே
நாலு கழிக்க வில்லெ
நாலாம் நீர் ஆட வில்லெ
நாலு கழிக்கும் முன்னெ
நல் மனையை விட்டும் பிரிவார்களொ
ஏழு கழிக்க வில்லை
ஏழு கழிக்கும் முன்னெ
ஏந்திழயெ பிரிவார்களொ
பிரிவார்களொ பத்தினியெ
பேப் புத்தி தான் நினையாதெ
கர்ண்ணகய்யெ பத்தினியெ
கலகமென்ன உங்களிலெ
கயிக்கு வயித்த தண்ணீரிலெ
கலகமுண்டொ கர்ண்ணகய்யெ
இட்டு வயித்த சோறதிலெ

---

185 கெடுவாயி — கெட்டவனே
189—200. இவ்வரிகளில் திருமணத்தின் பின்னர் நிகழும் மூன்றாம், நான்காம், ஏழாம் நாட்களில் நடைபெறும் சடங்குகளைக் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது. இன்றும் குமரிமாவட்டத்தில் திருமணத்தின் பின்னர் ஏழாம் நாள் சடங்கு சிறப்பாகச் செய்யப்படும் மரபுள்ளது.
199-200 இவ்வரிகளில் ஏழுநாள் கழிவது வரையிலும் மனைவியினைப் பிரிதல் கூடாது என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது.
201 பேய்ப்புத்தி > பேப்புத்தி (பே.வ.மா)
203 உங்களிலெ – உங்களுக்குள்

கண்ணும் மண்ணும் கலந்த துண்டொ
கொண்டு வயித்த சோறதிலெ
குற்ற முண்டொ கர்ண்ணகய்யெ
அல்லெ யம்மா மாதாவெ
ஆயிழயெ சொல்லக் கேளும்
ஏரணியுங் கூடலிலே
எந்து கொங்கை மாதேவி
அவள் மாரழகெ காணவெல்லொ
உன் மணவாளன் போருங்காண்
அப்பொழுதெ கர்ண்ணகய்யும்
ஆயிழயும் யேதொ சொல்வாள்
போருரானால் போயி வரட்டெ
போறவெரெ விலக்க வேண்டாம்
வேசையிலெ நடந்த பேர்கள்
வீடடங்கி யிருப்பர்களெ
வாது மணம் உண்ணு மென்றால்
முகிள்ந்த பூவை தேடாரொ
போருரானால் கோவலரே
போகவிடை அனுப்புமென்றாள்
அந்த வார்த்தை கேட்ட போதெ
அவன் தாயாரும் யேதொ சொல்வாள்
அன்பான இலங்க நகரவும்
அழிந்தது பெண்ணாலெ யெல்லொ
அம்பலவாணர் த(ர)ன் ஆண்டியானதும் பெண்ணாலெ யெல்லொ
பாண்டவரும் நூறுபேரும் பழி முடிந்ததும் பெண்ணாலெ யல்லொ
கும்பகர்ணனும் இந்திரசித்தும் அழிந்ததும் பெண்ணாலெ யல்லொ
பூண்டிருந்த பணிகளன்று போனது பெண்ணாலெ யல்லொ
சூர்ப்பெணகெயும் துரோவதேயின் துயிலாலும்

---

207 கல்லும் என்னும் வடிவம் கண்ணும் என்று எழுதப்பட்டுள்ளது.
218 போயி வரட்டெ (மலையாள வழக்கு) — போய்விட்டு வரட்டுமே
219 விலக்க — தடுக்க
220 வேசை - விபசாரம்
221 இருப்பர்களெ - இருப்பார்களோ
228 — 237, இவ்வரிகளில் பெண்ணால் அழிவுண்டவர்களின் வரலாறு கூறும் புராணக் கதைகள் குறிப்பிடப் பட்டுள்ளன.

பத்தினி பெண் சிலம்பாலும் பாரப்பெண் மூக்காலும்
இந்த வகையால் அழிந்த பேர்கள்
பெரியோர்கள் மெத்தெ யுண்டு
கயிலெ ஒரு காசு மில்லெ
கடந் தருவார் ஆருமில்லெ
மடியிலொரு பாக்கு மில்லெ
மணவும்மில்லெ குணவுமில்லெ யென்றுக்கால்
அவள் மெய்யதிலும் தீண்டொண்ணுது
வீடு வாசலிலும் தீண்டொண்ணுது
கொள்ளி முன்னி சோறிடுவாள்
கோட்டானெ போல கூப்பிடுவாள்
தள்ளி யடைப்பாள் கதவை
தாப்பாளெ உள்ளிடுவாள்
பெய்யு மழ காலத்திலே
பின்னும் பிடித்தும் தள்ளிடுவாள்
கள்ளியென காடு வழிக்கெ
காலத்திலெ சோறுண்டு கெட்டி
வெள்ளி யுதிக்கும் மூன்னெ
உங்கள் வீடதிலெ போக சொல்வாள்
கண்டாக்கால் ஒன்று சொல்வாள்
காணு விட்டா சுண்டளிப்பாள்

---

235 'பத்தினி பெண் சிலம்பாலும்' என்னும் தொடர் இந்நூல் தோன்றுவதற்கு முன்னரே 'கண்ணகி கதை' வழங்கி வந்தது என்பதை அறிவுறுத்துகிறது. இவ்வாறு நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் தாம் கூறுகின்ற கதையினை மறந்து கதைப் பாட லாசிரியர்கள் அக்கதையினையே உவமையாகப் பயன்படுத்துவர் என்பதற்கு இது நல்ல சான்றாகும்.

237 மெத்தெ — நிரம்ப

241 மணமும் > மணவும் (பே. வ. மா)

244 கொள்ளி மூன்னி - தீக்கொள்ளி மினுங்கும் ஒளியில்

245 கோட்டான் — ஒரு பறவை

247 தாழ்ப்பாள் > தாப்பாள் (பே. வ. மா)

252 வெள்ளி - நட்சத்திரம், விடிவெள்ளி

255 சுண்டளிப்பான் — உதட்டினைக் கோணலாக வைப்பாள்

256 குண்டணி - கோள், வெள்ளாட்டி - வேலைக்காரி

குண்டணி வெள்ளாட்டி மகள்
கூத்தாட்டம் கோவலரெ
புத்தி கெட்டா கோவலரெ
போகாதெ அவளிடத்தில்
தாயார் தான் சொல்ல கேட்டு
குல வணிகன் யேதோ சொல்வான்

கோவலன் மறுத்துரைத்தல்

பிச்சென் செட்டி மகன் போருன்
பிழ பொறுத்தான் செட்டி மகன் போருன்
சொக்கன் செட்டி மகன் போருன்
செ(ா)றியன் செட்டி மகன் போருன்
சீக்கன் செட்டி மகன் போருன்
சிரங்கன் செட்டி மகன் போருன்
தக்கன் செட்டி மகன் போருன்
தலவாளன் செட்டி மகன் போருன்
கழஞ்சி கொட்டை மாறி விக்கும்
கறுப்பன் செட்டி மகன் போருன்
இலந்த கொட்டை மாறி விக்கும்
இரப்பன் செட்டி மகன் போருன்
பருத்தி கொட்டை பரவி விக்கும்
பரப்பன் செட்டி மகன் போருன்
பட்டணத்தில் செட்டி யோர்கள்
பல பேரும் போகயிலெ
என்ந் தரத்து செட்டியோர்கள்
எல்லோரும் போகயிலெ
பொன் மணிக செட்டி மகன்
நான் போகாம லிருப்பேனே
ஆரணியும் செஞ்சடையும்
அருளாளெ மாதேவியும்
அவளுடய நாடகங்கள்

262—275 இவ்வரிகளில் பல பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இவைகளைப் 'பட்டப் பெயர்கள்' எனக் கொள்ளலாம்.

263 பிழை > பிழ (பே. வ. மா)

270 கொட்டை — விதை

273 இரப்பன் — பிச்சை எடுப்பவன்

280 வணிக என்பது மணிக என்று எழுதப்பட்டுள்ளது.

அருங் கூத்து பார்க்க போறேன் என்ருர்

கோவலன் தாய் கர்ண்ணகையிடத்தில் சேதி கேட்டல்

அப்பொழுதெ அவன் தாயும்
ஆயிழெயும் யேதொ சொல்வாள்
கர்ண்ணகய்யெ பத்தினியெ
கலக மென்ன உங்களிலெ
இட்டு வயித்த சோறதிலெ
கல்லும் மண்ணும் கலந்ததுண்டெ
கொண்டு வயித்த சோறதிலெ
குற்ற முண்டெ கர்ண்ணகய்யெ
அல்லெ யம்ம மாதாவெ
ஆயிழயெ சொல்ல கேளு
ஏரணியும் கூடலிலெ
ஏந்து கொங்கை மாதேவி
அவள் மாரழகை காணவென்று
உந்தன் மணவாளன் போருனெடி
அந்த வார்த்தை கேட்டா போதெ
அவள் ஆயிழெயும் யோதொ சொல்வாள்

கர்ண்ணகை பதிலுரைத்தல்

போருராளுல் போகா சொல்லும்
போறவெரெ விலக்க வேண்டாம்
போக விடை அனுப்பு மென்ருள்
அனுப்புமென்ற மொழி கேட்டு
அவன் தாயும் யேதோ சொல்வாள்

கோவலன் தாய் மீண்டும் அறிவுரை கூறி கோவலவனைத் தடுத்தல்

அனுப்பு மென்றும் சொன்னீரெ
அரசர் மனம் பொல்லாது
அது நமக்கு பெருமையோடா மகனெ
அது நமக்கு பெருமெ யோடா மகனெ
உருமெயுடன் கொள்ளி வயிக்க
உதகாமல் நீ போனுல்

---

290 இட்டு — கலத்தில் இட்டு
311 உரிமை > உருமெ (பே. வ. மா)
311 கொள்ளி - இறந்தபின் செய்யப்படும் சடங்கு முறைகளுள் ஒன்று

உன்னோடு வளக்கேதிட மகனெ
உன்னோடு வளக்கேதிட மகனெ
திருவெண்ணயான பெண்ணிருக்க
தேசமெங்கும் பெண் தேட
செட்டியோர்க்கிதழகல்லோடமகனெ
செட்டியோர்க்கிதழகல்லோடமகனெ
தனஞ் சரிந்த குழல் மடவாள்
தன் கண்ணிக்குள் அகடுகில்
உன்னை தகெ யறியாமல் மாலையிடுவாள் மகனெ
உன்னை தகெ யறியாமல் மாலையிடுவாளிட மகனெ
தினந்தோறும் வழக்கிடுவாள்
கின்னி நாகம் பூண்டிடுவாள்
தேறுதில்லெ யென் மனசு மகனெ
தேறுதில்லெ யென் மனசு மகனெ
பாடிடுவாள் ஆடிடுவாள்
பகட்டிடுவாள் சிமிட்டிடுவாள்
பறித்திடுவாள் கயிலுடமெ மகனெ
கொள்ளி முன்னி சோறிடுவாள்
கோட்டானை போல் கூப்பிடுவாள்
உன்னை குலங்கெடுத்தும் விடுவாளிட மகனெ
உன்னை குலங் கெடுத்தும் விடுவாளிடமகனெ
தள்ளி யடைப்பாள் கதவை
தாப்பாளை உள்ளிடுவாள்
உன்னை தரங் கெடுத்தும் விடுவாயிட மகனெ
உன்னை தரங் கெடுத்தும் விடுவயிட மகனெ
அவள் கண்ணிலிடு மய்யழகும்
கனக சந்நன குறியும் கண்டால்
கண்ணாசை கொள்வாயிட மகனெ
கண்ணாசை கொள்வாயிட மகனெ
அவள் மாருவிலிடும் வரிக்குறியும்

---

320 கண்ணி—வலை, அகடுகில் — அகப்பட்டால்
321 தகை > தகெ (பே. வ. மா) - பெருமை, மேம்பாடு
328 பகட்டிடுவாள் - மயக்கிடுவாள்
339 மை > மய் (பே. வ. மா)
340 குறி - கோலம்
343 மாருவில் - மார்பில்

வட்ட பொட்டும் திலர்தம் கண்டால்
வருவாயோட கால் வாங்கி மகனெ
வருவாயோட கால் வாங்கி மகனெ
போகாதெ போகாதெ யெனதுட பொன்னு நாகமணியெ
புத்தி சலிக்குது பெற்ற வயர் கொதிக்கிது புத்திரனெ கேளாயி
ஆகாது ஆகாதிட மகனெ
உனக் காரிந்த புத்தி சொன்ஞர்
ஆறியிருப்போஞே நானுமினி
அய்யனருளாலெ பெற்று வளத்திந்த ஆக முருகுதெடா
ஊனம் தான் வந்திடிலும் மகனெ
உன்னுயிர் வேற தாஞயிடிலும்
உன்னே நினேந்து புலம்பி புலம்பி
உலகில் மழுவானெ
அவள் யேடார் பூங்குழலாள்
மகனெ நீயும் யிளந்தாரி
எப்படியும் அவள் சொல்ப்படி
கேள்க்க யிருக்குமெட மகனெ
சொல்ப்படி கேள்ப்பெ னென்றும்
நீரும் சொன்னீரெ மாதாவெ
அவள் தேரகெயர் வல்லியர் ஆடின்ற
நாடகம் சூதுகள் கண்டல்லொ நான் வருவேண்
வருவனென்று சொன்ஞலும் மகனெ
வரவுந்தான் கூடாதிடா
அவள் மையிட்ட கண்ணெ மாட்டி முளித்து
மயக்கிடுவாள் மகனெ
உன்னே பிறப்பெட்ட பாடிந்த வய்யகத்திலாரறிவார்
வஞ்சென கொஞ்சியெ மாதேவிக்காக

---

344 திலர்தம் - திலகம்
345 வாங்கி - பெயர்ந்து, நீங்கி
348 வயிறு என்பது வயர் என்று எழுதப்பட்டுள்ளது.
352 ஆகம் - உடல்
353 ஊனம் - உறுப்புக்குறை
358 இளந்தாரி - இளவட்டம், இளேயோன்
363 ஆடின்ற (மலேயாள வழக்கு) - ஆடுகின்ற
370 பெறப்பட்ட என்பது பிறப்பெட்ட என்று எழுதப்பட்டுள்ளது.

மாதேவிக்காக உன்னை வளற்த்தும் கொடுத்தேனே
ஆரணியும் செஞ்சடையோன் மகனெ
உன் அப்பச்சி தம்மாணெ
என்னுணெ பொன்னுணெ கண்ணுணெ
அவ்வழி போகாதெ

கோவலன் கூத்துப் பார்க்கப்போக பொருள் கேட்டல்

ஆரணியும் செஞ்சிலம்பும்
அருளாலெ மாதேவியும்
அவளுடைய நாடகங்கள்
அருங்கூத்து பாற்க்க போறே னென்றார்
குல வணிக பெருமாளும்
அவரெதொ வார்த்தையி சொல்வார்
அம்மா யெட்டானெ பட்டு வேணும்
ஒரு குட்டி யானை பணவும் வேணும்

கோவலனின் தாய் மூதாதையர் பொருள் திரட்டிய விதம் கூறல்

அந்த வார்த்தை கேட்டா போதெ
அவன் தாயும் யேதொ சொல்வாள்
அட கெடுவாயி பாதகனெ
அருள் வணிக பெருமாளெ
உன்னுடையா அப்பச்சீரும்
முதலுண்டு பண்ணும் வகெகேளாய்
சுடு சோறு மிஞ்கிடுகில்
தூர தேசம் போறேனென்பார்
பழஞ் சோறு மிஞ்சிடுகில்
பகலெ உலையேற்ற யோட்டார்
ஈக்காலெ யெண்ணை வார்ப்பார்
எண்ணி யெண்ணி முளகிடுவார்
கறிக்கரைக்கும் மஞ்சள் தந்தால்

---

374 அப்பச்சி - தந்தை
374 - 375 இவ்வரிகளில் இன்றியமையாத தபர்களையோ, பொருட்களையோ சொல்லி ஆணையிடுகின்ற மரபு சுட்டப்பட்டுள்ளது.
383 எட்டு யானை > யெட்டானெ (பே. வ. மா)
384 பணம் - மன்னர் ஆட்சி காலத்தில் வழங்கி வந்த நாணயம்
389 அப்பச்சீர் - தந்தையார்
390 முதல் - பொருள்
394 உலையேற்ற - சோறு சமைக்க, யோட்டார் - விடமாட்டார்
395 ஈர்க்கு > ஈக்கு (பே. வ. மா)

கணக்கதிலெ யெழுதி கொள்வார்
கப்ப லோடும் வேளையிலெ
காணி முளகானதெல்லாம்
கடலதிலெ விழுந்திடிலும்
கடலு வற்ற இறத்திடுவார்
காவேரி யாறு நீந்திடு வார்
இப்படியெ சம்பாதித்த முதல்
பந்திராயிரம் கப்பல் பணம்
கப்பலோடி கடல் கடந்து
கனக முதல் சம்பாதித்தார்
இத்தெனையும் அழிப்ப தெர்க்கோ
ஒருபாள் மகனுயி நீ பிறந்தாயி
ஒரு நாடகங்கள் பார்(ப்)பதுக்கொ
நீ ஒரானை பணம் கேட்டாயி
நாலு நாடகங்கள் நீ பார்த்தால்
நமக்கு மினி முதலேதொ
கோளறியா பெரு வாழ்வூர்
குவலயத்தில் நிக்கு மோட

கோவலனின் தாய் அறிவுரை கூறி அனுப்புதல்

கூத்து பார்க்க போறை யானல்
குல வணிக சொல்லெக் கேளாயி
மூன்ங்கழனி போ(கா)தெ
உந்தன் முகத்தழகெ காட்டாதெ
ஏழு கழனிக்கும் பிறங்கழனி
பிறங் கழனியில் சென்றிரிந்து
பிறங்கண்ணல் கூத்து பார்த்து வாடா
பிறங்கழனி சென்றிருப்பே னென்றும்
பிறங்கண்ணல் கூத்து பார்ப்பேனென்றும்
தாயி தலையில் சத்தியங்கள்

---

396 மிளகு > முளகு (பே. வ, மா)
400 காணி - அளவைப் பெயர்
402 இறைத்திடுவார் > இறத்திடுவார் (பே. வ. மா)
405 பந்திராயிரம் - பன்னிரண்டாயிரம்
414 கோள் — புத்தி
418 களரி > கழனி (பே. வ. மா) — நாடகக் கொட்டகை
425 தலையில் சத்தியங்கள் — தலையைத் தொட்டு சத்தியங்கள் கூறுதல்

தவருமல் ஆணையிட்டெ பேசம்
அப்படியெ சத்தி யெங்கள்
தவருமெல் ஆணையிட்டான்

கோவலன் கூத்து காணச் செல்லுதல்

ஏழெருதும் பொன் பணவும்
லெக்ஷமற்ற சேலைகெளும்
ஏழெரு(து) மேல் சுமடும் கெட்டி
குல வணிகென் யின நடந்தான்
இட்டிரிந்தா யிடு செருப்பும்
எண்ணுயிரம் பொன் விலை பெறுமே
ஏறி வாற யிண குதிரை
லெக்ஷம் பொன் விலை பெறுமெ
குதிரையின் மேன் கூடெ குடி
குல வணிகன் யின நடந்தான்
வில்க்காறெர் யெயிது வர
வெடிக்கறெர் சுட்டு வர
பாராளும் சோளருடா
பட்டணத்தில் சொல்லுவாராம்
ஏழு கழனிக்கு பிறங்கழனி
சென்றங் கருந்தாரே கோவலரும்

கோவலன் கூத்து காணல்

பத்து பந்தம் வெளிச்சத்திலெ
பந்தாடி வாருள் மாதேவி
எட்டு பந்தம் வெளிச்சத்திலெ
இளங்குதாரெ கோவலரும்
ஒற்ற பந்தம் வெளிச்சத்திலெ
ஒளிவு கண்டால் வேசெயவள்
கண்டா பொழுதிலெ வேசெயவள்
கருதி மொழிந்தாளெ ஒரு வார்த்தை
கேள் மகெளெ மாதேவி

---

435 யிண குதிரை — ஜோடிக்குதிரை
444 சென்றங்கிருந்தாரே என்பது சென்றங்கருந்தாரே என்று எழுதப் பட்டுள்ளது.
445 பந்தம் — தீத்திரள்
448 இளங்குதாரே — இளகுகிருர்

கேவலமாயி ஒரு வார்த்தை
உனக்கேற்ற மணவாளன்
இந்தக் களரியிலெ வந்ததுண்டும்
பட்டணத்தில் செட்டி மகன்
பணம் பெருது கொண்டு வந்தான்
செட்டி கயில் பொருள் பறிக்க
தேன் மொழியெ வாசமெதொ
காற்றுள்ள வேளெயிலெ
தூற்றிக்கோடி நீமகளெ
காலங் கடந்தாலொ கள்ள் செட்டி மகண்
கண்ங் கொண்டும் பாராளெடி
இட்டிருந்த பணிகெளல்லாம்
ஏந்திழயாள் தான்களத்தி
பொன்னுருவி நாடகவும்
பூவுருவி நாடகவும்
பூங்கூந்தலது வண்டலயா
பூதலத்தோர் பார்த்திருக்க
பொறக் கொடியாள் தான் சமந்தாள்
மங்கயெர் தங்கள் சிந்தக் கிணங்கும்
மதிமுகத்தில் திலர்த மிட்டார்
வன்ன வரிக்குறி பொன்னிட்ட சுட்டியும்
வட்ட பொட்டிட்டழகா
பொட்டிட்டாளே செம்பன் குடத்தில்
ஏறிட்ட பட்டரஞ்ஞாண்
பட்டரஞ்ஞாண் சுட்டரஞ்ஞாணவும்
பாவெ நல்லாள் தானணிந்தாள்
தச்சன் கடந்(த) தன்ன செப்புக் கொத்ததனம்
தனம் தாங்கி நிக்க பணியாம்

---

454 கேவலமாயி — அற்பமாக
458 பெரிது என்பது பெருது என்று எழுதப்பட்டுள்ளது,
460 வாசம் – யோசனே
467 - 468 இவ்வரிகளில் பொன்னுருவி, பூவுருவி என்னும் நாடகங்கள் மாதேவி நடத்தியதாகக் கூறப்பட்டுள்ளது,
471 சமைந்தாள் > சமந்தாள் (பே. வ. மா) — ஆடினுள்
474 சுட்டி - ஓராபரணம்
480 கடைந்த > கடந்த (பே. வ. மா)
841 பணி - ஆபரணம்

சஞ்சுகமாகவே பஞ்சவற்ணதுயில்
தங்கெ யெடுத்தணிந்தாள்
பாடவெ ஆட பதினெட்டு நாடகம்
பயிந்தொடியாள் சமெந்தாள்
நடுக்கத்துடன் கூடி நடப்பாள்
நத்தின மிட்டாடிடுவாள்
மூக்கத்தான் சுளித்துடன் முன்ன நிந்நாடினாள்
முடுக்கெடி கோவலரெ
தாக்கெத்தான் சுளித்துடன்
நளினமிட்டாடி நடுக்கெடி கோவலரெ
பாக்கெத்தான் தின்றுடன் பச்ச மஞ்சள் குளித்துடன்
பகட்டெடி கோவலெரெ
மூக்கத்த ன் சுளித்துடன் முன்ன நிந்நா[ட்]டி
முடுக்கெடி கோவலெரெ
நாக்கெத்தான் சுளித்துடன் நளின மிட்டாடினாள்
நடுக்கினாள் கோவலரெ
பாக்கெத்தான் தின்றுடன் பச்சமஞ்சள் குளித்துடன்
பகட்டினாள் கோவலரெ
எத்தி வயித்தாள் ஒரு காலை
ஏலோமென்றாள் மணிக் குரலெ
தித்தி யென்ற வட்டத்திலெ
திமில மென்ற மேளத்தோடெ
திமில மென்ற மேளத்தோடெ
சிலம்பு கொஞ்சிஆடிடவெ
ஆடி வத்தாள் மாதேவி
அன்ன நல்ல மயில் போலெ
ஆடியொரு வளயம் வர
அணிச் சிலப்பு கொஞ்சிடவே
பாடியொரு வளயம் வர
பாடகக் கால் சிலம்பு கொஞ்ச
அகம் கழனி யிருந்தவரெ

---

482 சஞ்சுகம் — சாயல், மென்மை
488 சுளித்து — வளைத்து, சினத்து
489 முடுக்கு — நெருங்கு, அவசரப்படுத்து
500 எத்தி - தாண்டி, எட்டி
508 வளையம் > வளயம் (பே. வ. மா) - வட்டம்

பிறங் கழனி ஆக்கி வயித்தாள்
பிறங் கழனி இருந்த பேரெ
அகங் கழனி ஆக்கி வயித்தாள்
கோவலனார் முன்பதிலெ
கொடியிடெயாள் ஆடி வந்தாள்
அப்பொழுதெ மாதேவி
ஆயிழயாள் யே[ா]தோ சொல்வாள்

மாதேவி மாலையினைச் சுளற்றி விடல்

கேளு மெந்தன் மன்னவெரெ
கேவல மாயி ஒரு வார்த்தை
நான் பணத்துக்காடி வந்தனில்லெ
சேலக்காடி வந்தனில்லெ
சேகுவனுக்காக ஆடி வந்தேன்
கேளுமெந்தன் ஊராரெ
கேவலமாயி ஒரு வார்த்தை
மாலை தன்னை கயிலெடுத்து
மாயோவெரெ சாக்ஷி யென்றாள்
ஓலை தன்னை கயிலெடுத்து
ஊராரெ சாக்ஷி யென்றாள்
சூரியனெ தெண்டலிட்டு
பயிந்தொடியாள் யேதோ சொல்வாள்
நான் சுளத்து மாலை தன்னை
நாட்டாரெ கேளு மென்ன
மண்ணிலெ போயி தரித்துதானால்
மண்ணினக்கும் மணவாளன்
மரத்திலெ போயி தரித்துதானால்
மரமினக்கும் மணவாளன்
வானம் பனையிலெ போயி தரித்துதானால்
வானம் பனையினக்கும் மணவாளன்
மற்றொருவேர் கழுத்திலெ போயி தரித்துதானால்
அவரினக்கும் மணவாளன்

---

523 சேலை > சேல (பே. வ. மா)
524 சேகுவன் - ஆற்றலுடையவன்
531 தெண்டலிட்டு — வணங்கி
536 மண்ணெனக்கும் மண்ணினக்கும் (பே. வ. மா)
541 மற்றொருவேர் - மற்றொருத்தர்

என்று சொல்லி மாதேவி
மாயவெரெ சாக்ஷி யென்றாள்
மாலை தன்னை கயிலெடுத்து
மாதேவி சுளித்தி விட்டாள்
மாதேவி சுளத்தும் மாலை
கோவலனார் கழுத்தில் விழா
ஓலை தன்னை சுளத்தி விட்டாள்
கோவலெனார் மடியில் விழ
மாலை தரித்தவெர்தான் வாயித்த
மணவாளனென்றார்
ஓலை தரித்தவெர்தான்
உற்ற மணவாள னென்றார்

மாதேவி கோவலனை அழைத்துச் செல்லல்

மாலையிட்டு மதி கெடுத்து
மறக்கவொண்ணா மருந்து விட்டாள்
கோவலரெ கயி பிடித்து
கொடி யிடையாள் கொடு போனாள்
உறையுருவர பட்டணத்தில்
ஒன்(ெ)றுடியாள் குடிலிடத்தில்
கோவலரும் மாதேவியும்
குறயறகெ வாள்ந்திருந்தார்
வாள்ந்திருக்கும் நாளதிலெ
வாணுதலாள் மாதேவியும்
ஒந்நிரண்டு மணி பாலகெனெ
ஒன்றொடியாள் ஈன்றெடுத்தாள்
ஈன்றெடுத்து இனை வளர்த்தி
இனதிருக்கும் நாளதிலெ
ஏழெருதின் பொன் பணவும்
லெக்ஷி மற்ற சேலைகளும்

---

546 சுளத்தி என்பது சுளித்து என்று எழுதப்பட்டுள்ளது.
552 மணவாளன் - கணவன்
558 கொடு — கொண்டு
560 குடில் — குடிசை
562 குறயறகெ - குறையவே
568 இனிது என்பது இனது என்று எழுதப்பட்டுள்ளது.

இசல் வணிகென் கோவலரும்
ஏந்திழெக்கெ சிலவு செய்தார்
தேப்பதுக்கும் குளிப்பதுக்கும்
திவசம் ஏழு மஞ்சாடி பொன் வேணும்
வாணுதெலாள் மாதேவி
மஞ்செ தேப்பும் மய்யெழுத்தும்
ஏழெருதின் பொன் பணவும்
ஏழுநூறு சேலை தோற்று
இசல் வாணிகென் கோவலரும்
இளெந்திருக்கும் நாளதிலெ
வயந்த மாலை பெற்ற மகள்
வாணுதெலாள் மாதேவி
வணிகனோடெ யோதோ சொல்வாள்

கோவலனும் மாதேவியும் பொன்னியாற்றுக்கு நீரடாச்செல்லல்

கேளுமெந்தன் யென்ங் கணவா
கேவலமாயி ஒரு வார்த்தை
பொன்னி யாறு காவேரிக்கெ
நீர் மொழுக போக வேணும்
ஆ(ெ)மனவெ சம்மதித்தார்
அருள் வணிக பெருமாளும்
தலைக் கெண்ணெயும் தனெ சார்த்தி
தாளி பொடி கயிலெடுத்தாள்
ஈஞ்ச புண்ணுக்கும் அரப்பெடுத்து
அவர் இருபேருமாயி பிறப்படவெ
பொன்னியாறு காவேரிக்கெ
புகள் பெறவ சொல்லுவாராம்

---

571 இசல் - புகழ்
573 தேய்ப்பது > தேப்பது (பே. வ. மா)
574 திவசம் (மலையாள வழக்கு) - தினம்
574. மஞ்சாடி - குன்றிமணி போன்ற ஒன்று. சிவப்பு நிறமுடையதாக இருக்கும். பொன் நிறுக்க பயன்படுத்தப் பட்டுப் பின்னர் நிறுத்தலளவைப் பெயராக மாறிவிட்டது.
580 இழந்து > இளெந்து (பே. வ. மா)
591 தாளி — அரிதாரம்
592 ஈஞ்ச புண்ணுக்கு - தலைக்கு (அழுக்கு நீக்க) தேய்க்கும் பொருள்
598 கலைப்பதற்கு > கலப்பதெற்கு (பே. வ. மா) - பிரிப்பதற்கு

கோவலரும் மாதேவியும்
நீர் மொழுகி நிக்கும் நேரம்

வயந்த மாலை சூழ்ச்சி

இரு பேரெயும் கலப்பெதற்க்கு
மதி நினைந்தாள் வயந்தமாலை
மேலெக் கடவில் நின்று
பூப் பொருத்தம் யேகி விட்டாள்
ஏகினதோர் பூவதெல்லாம்
இதர்த்த காவேரிக்கெ மிதெந்து வர
அப்பொழுதெ வயந்தமாலை
வயந்தமாலை பெற்ற மகள்
வாணுதலாள் மாதேவி
கண்டு நின்று மாதேவி
கருதி மொழிந்தாளெ ஒரு வார்த்தை
பரந்து பாயும் காவேரிக்கெ
மிதெந்து போற பூவெப் பாரும்
அந்த வார்த்தை கேட்டா போதெ
ஆயிழெயாள் யேதொ சொல்வாள்
மிதெந்து போற பூவெப் பற்றி
துடற்ந்து போற வண்டெப் பாரு
அந்த வார்த்தை கேட்டா போதெ
ஆயிழயாள் யேதொ சொல்வாள்
என்னை யொரு பூவை யென்றீர்
உம்மை யொரு வண்டெட்தென்றீர்
பூவை யென்ற மாதேவியொடெ
பொருந்துவீரோ யென்ங்கணவ
வண்ட தென்ற கணவனோடெ
வாழ மாட்டேடன் நானொருநாள்
அடி பிடித்து முடி பிடித்து
அன்பிலாத சண்டை செயிதார்
சிந்தி தான்தலை குலைத்து
சினத்து முகம் வேர் படுமாம்

---

600 கடவு - பக்கம்
614 தொடர்ந்து > துடற்ந்து (பே. வ. மா)
626 வேறு என்பது வேர் என்று எழுதப்பட்டது.

கோவ(ல)ரும் மாதேவியும்
குடிலிடத்தில் சொல்லும் நேரம்
கண்டிருந்து வயந்தமாலை
கருதி மொழிந்தாளே ஒரு வார்த்தை
கேள் மகளே மாதேவி
கேவலமாயி ஒரு வார்த்தை
நீர் மொழுக போன யிடத்தில்
கணவனோடே கத்து முண்டோ
களந்தாயொ பொன் பணங்கள்
அல்லை யம்மெ மாதாவே
ஆயிழயெ சொல்லக் கேளும்
என்னையொரு பூவெ யென்றார்
அவரெ ஒரு வண்டெ தென்றார்
பூவை(ய)தென்ற மாதேவிக்கெ
பொருந்து வீரொ கோவலரெ
வண்டெ தென்ற கணவனோடெ
வாழ்வதில்லை நானொரு நாள்
அந்த வார்த்தை கேட்டா போதெ
அவள் தாயாரும் யேதொ சொல்வாள்
செட்டி மெத்த மூதல்க் காறென்
தேவியர்க்கும் யென்ன பலம்
அரக் காசு மில்லாத
ஆண்ம் பிள்ளயோடு யிருப்பதென்ன
தினந் [தி]தினந் தினவும் அலக்கொடுப்பும்
சினத்து முகம் வேறானால்
புத்தி கெட்டா கோவலரெ
போக சொல்லும் நீ மகளெ
கை கெட்ட கோவலரெ
கடத்திவிடு நீ மகளெ
உண்ட விசம் கணக்கெ பார்த்து

---

628 சொல்லும் - செல்லும்
634 கத்து - தகராறு, மனவேறுபாடு
635 களைந்தாயோ > களந்தாயோ (பே.வ.மா) - இழந்தாயோ
638 பூவை - மலர்
648 அரைக்காசு > அரக்காசு (பே.வ.மா) - ஒரு நாணயம்

ஊர் மனைக்கெ போக சொல்லும்
அப்பொழுதெ மாதேவி
ஆயிழயும் கணக்கு பார்த்து கண்டாள்
உண்டவிசம் உடுத்தவிசம்
உடினு கணக்கு பார்த்து கண்டாள்
உண்ட விசமானுதிலெ
ஒரு மஞ்சாடி பொன் குறைந்துதென்று

மாதேவி கோவலனைத் தண்டித்தல்

வேனு வெயிலதிலெ
வெந்தெரியும் கானலிலெ
பட்டணத்தில் செட்டியோர்கள்
பல பேரும் போற வழிதனிலெ
ஓடெடுத்து வரை வரத்து
உள்ளெ வரக்கெ மறுப்பி(ல்)வயித்தாள்
உச்சியிலே கல்லே வயித்து
உடயவரெ பார்க்க வயித்தாள்
நெற்றியிலெ கய்யெ வயித்து
நேர் முதுகில் கல்லெ வயித்தாள்
தோள் புசத்தில் கய்யெ வயித்து
சூரியனெ பார்க்க வயித்தாள்
ஒரு மஞ்சாடி பொன்னுக்காக
மறுப்பில் வ(யி)த்தாள் மூதேவி
யெரி பறக்கும் கானலில்லெ
யெரிய விட்டாள் கோவலரெ
கோவலனர் மறுப்பிருக்க
குல வணிகன் தன்னிலுள்ளோர்
பட்டணத்தில் செட்டியோர்கள்
பல வியாயாரிமார் போனாலும்
கப்பலோடும் செட்டியோர்களும்
கன திரவி(ய)ங்கள் உள்ள பேரும்

---

664 வேனுவெயில் - கடுமையான வெயில்
668 ஒடு - ஓட்டுச்சில். ஓட்டுத்துண்டு, வரை - கோடு
வரைத்து > வரத்து (பே. வ. மா) -கீறி
669 மறுப்பில் - அடையாளத்துக்குள்
685 கன — நிரம்ப

எத்தனைபேர் பேசனாலும்
ஏனென்றுமெ கேள்ப்பரில்லெ
மலங்கி மெத்த கோவலரும்
மன மகிழ்ந்து யேதோ சொல்வார்
மஞ்சள் விக்கும் செட்டியண்ணெ
ஒரு மஞ்சாடி பொன் கடந்தாரும்
மஞ்செ விக்க நேரமிட
உன்னோடு மண்டாட நேரமில்லெ
உள்ளி விக்கும் செட்டியண்யெண
மஞ்சாடி பொன் கடந்தாரும்
உள்ளி விக்க நேரமிட
உனனோடு உறவாட நேரமில்லெ
மலங்கி மெத்த கோவலரும்
மறுப்பிருக்கும் வேளயிலெ
கோவலனர் மறுப்பிருக்கும்
மறுப்பிருக்கும் செய்தி யெல்லாம்
கொற்ற முடிவேந்தர் தாமறிந்தார்

அச்சுதர் வந்து கோவலனை வினைதல்

அறிந்த பொழுதிலெ அச்சுதரும்
ஆண்டி பண்டார வேழம் கொண்டார்
கொண்ட கோலத்தினி வடிவு தன்னை
மெய்யெங்கும் நீர் பூசி
ஆண்டி வெண்ம் புலிதோலுடுத்தார்
பொக்கணவும் புலித்தோலும்
பொன் பிரம்பும் கய்யுமாக
பண்டார வேஷம் கொண்டு

---

687 கேள்ப்பர் - கேட்பவர்கள்
688 மலங்கி - கலங்கி
692 மஞ்சள் > மஞ்செ (பே. வ. மா)
693 மன்ருட என்பது மண்டாட என்று எழுதப்பட்டுள்ளது
694 உள்ளி (மலையாள வழக்கு) — வெங்காயம்
703 அச்சுதர் - திருமால்
704 வேழம் - வேடம்
708 பொக்கணவும் - சோளியப் பையும்

பரமசிவனாரும் யெழுந்தருள
அந்நு கயிலாசபுரங் கடந்து
காடகத்தி யெல்க விட்டார்
ஏடார புரங்கடந்து
இறுஷிவன சோலை விட்டார்
பாதாள திரிகடந்து
பழுக்க வனசோலை விட்டார்
ஒற்றக் காலன் சீர்மை விட்டு
ஓரடி உள்ள பாதெவிட்டார்
கொற்ற முடி வேந்தர் அச்சுதெரும்
கோவலனார் மறுப்பிருக்கும்
மறுப்பிருக்கும் தலத்தில் வந்தார்
கண்ட பொழுதிலெ அச்சுதரும்
அவரெதோ வார்த்தை சொல்வார்
கண்டாக்கால் நல்லபிள்ளை
கருத்துகமுண்டு விடயமுண்டு
இந்த கடுங்கானலிலே இருப்பதென்ன

கோவலன் அச்சுதரிடம் நடந்த செய்தி கூறல்

அறிந்தில்லயொ பண்டாரமெ
அரியதொரு நல்ல செய்தியெல்லாம்
காவெரிப்பும் பட்டணத்தில்
கர்ண்ணகய்யெ மாலையிட்டேன்
மாலையிட்ட மூன்றுநாள்
மாதேவி ஆடல் போட்டாள்
ஆடல காண வந்தயிடத்தில்
ஆயிழயாள் மாதேவி
என்னை மாலையிட்டு மதிகெடுத்து
மறக்க வொண்ணா மருந்துமிட்டாள்

---

711 முன்னர் அச்சுதர் என்று குறிப்பிட்டுவிட்டு இவ்வரியில் பரமசிவனாரும் என்று குறிக்கப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கது.
712 அந்நு (மலையாள வழக்கு) — அன்று
713 எல்கை > யெல்க (பே. வ. மா)
715 இருஷி என்பது இறுஷி என்று எழுதப்பட்டுள்து.
726 கருத்துகம் — எண்ணம், கவனம்
726 விடயம் — அறிஞானம்

இருபேரும் குடிலதிலெ இணயும் நல்ல பிருவதுபோல
இசல் பெறவே வாழ்ந்திருந்தோம்
வாள்ந்திருக்கின்ற நாளதிலெ
வாணுதலாள் மாதேவி மாயனுட திருவருளால்
ஒந்நிரண்டு மணி பாலகனெ
ஒன்றெடியாள் ஈன்றெடுத்தாள்
ஈன்றெடுத்து இன வளர்த்தி
இருக்கு மந்தா வேளயிலெ
ஏழெருதும் பொன் பணவும்
எழுநூறு சேலைகளும்
ஏது ஒன்றும் அறியாமல்
ஏந்திழக்கெ சிலவு செய்தார்
தேப்பதுக்கும் குளிப்பதுக்கும்
திவசமேழு மஞ்சாடி பொன் வேணும்
வாணுதெலாள் மாதேவி
மஞ்செ தேப்பும் மய்யெழுத்தும்
ஏழெருதின் பொன் பணவும்
லெக்ஷமற்ற சேலைகளும்
உண்டான முதலும் தோன்று
ஓவியம் போல இருக்கயிலெ
அந்த நல்ல வேளயிலெ
ஆயிழயாள் மாதேவி
உண்ட விசமானதிலெ
ஒரு மஞ்சாடி பொன் குறந்துதென்று
வேனெ வெயிலதிலெ
வெந்தெரியுங் கானலிலெ
ஓடெடுத்து வரை வரத்து
ஒள் வரக்கெ மறுப்பில் வயித்தாள்
குன்னி முத்து பொன்னுக் கல்லொ
குனியவிட்டாள் மாதேவி

---

738 இணே > இண (பே. வ. மா) — ஜோடி
738 புரு > பிரு (பே. வ. மா)
739 இசல் — புகழ்
756 தோன்று - தோற்று
761 குறைந்து > குறந்து (பே. வ. மா)
766 குன்னி முத்து - குன்றி மணி

மஞ்சாடி பொன்னுக்கல்லோ
மறுப்பில் வயித்தாள் மூதேவி
மறுப்பிருந்து கோவலரும்
அவரேதோ வார்த்தை சொல்வார்
காவெரிப்பும் பட்டணத்தில்
என் கர்ணகய்யாள் யிருப்பதுண்டே
என் கர்ண்ணகய்யாள் அறிந்திடுகில்
கள மறுப்பேந்தி விகொடு பேசவாள்
என் கர்ண்ணகய்யாள் அறிவதிக்கும்
ஒரு வாசமில்லை பண்டாரமெ
அந்த வார்த்தை கேட்ட அச்சுதெரும்
அவரேதோ திருவிள்ளமாம்
உன் கர்ண்ணகய்யாள் அறிவதிக்கெ
ஒரு திருநீட்டெ யெழுதுமென்றார்
நான் படிவாங்க போற போது
கொண்டு கொடுப்பேனெ வன்ன திருநீட்டெ
அந்த வார்த்தை கேட்ட கோவலரும்
அரிய திருநீட்டு யெழுதுவாராம்
வன்ன திருநீட்டும் தனெயெழுதி
மன்னர் திருக்கய்யால் ஒப்புமிட்டார்
வன்ன திருநீட்டும் தனெயெழுதி
ஆண்டி பண்டாரத்தின் கயிக் கொடுத்தார்
வன்ன திருநீட்டும் தனை வாங்கி
வகெயால் நடந்தாரெ பண்டாரவும்
காவெரிப்பும் பட்டணத்தில்
கர்ண்ணகய்யாள் மனையில் சென்றார்

அச்சுதனார் கோவலனுக்குற்ற தீங்கினைக் கர்ண்ணகைக்கு அறிவித்தல்

கர்ண்ணகய்யாள் மனையில் சென்று

---

776 அறிவதுக்கும் என்பது அறிவதிக்கும் என்று எழுதப்பட்டுள்ளது.
777 வாசம் - வழிவகை
779 திருவுள்ளம் > திருவிள்ளம் (பே. வ. மா) — இரக்கம்
781 திருநீட்டு - அறிவிப்பு ஓலை
782 படி — பிச்சை
783 வன்ன - அழகான
787 ஒப்பு - கையொப்பம்

கர்ண்ணகய்யெ கர்ண்ணகய்யெ
என்ருெந்நிரண்டு விளி விளித்தார்
விளித்த சத்தம் கேட்டா போதெ
மெல்லி நல்லாளம்மெ யேதொ சொல்வான்
அறைதனிலெ நானிருக்க
ஆரென்னெ வந்து விளித்ததாரோ
கடுஞ்சிறையாயி நானிருக்க
கர்ண்ணகய்யென்று விளித்ததாரோ
நானல்லவொ கர்ண்ணகய்யெ
தலம்படவெ உன்னெ விளித்தேன்
அறிந்தில்லயொ பண்டாரமெ
அரியாதொரு நல்ல செய்தியெல்லாம்
தன்ங்கணவன் மறுப்பிருக்க
தனித்திருந்தும் வாள்வதுண்டொ
உன்ங்கணவன் மறுப்பிருக்க
உயிரிருந்தும் வாள்வதுண்டொ
என்று சொல்லி பண்டாரவும்
கொண்டு சென்ற திரு நீட்டெ
கொடி யிடயாளம்மெ கயிக் கொடுத்தார்

கர்ண்ணகை செய்தியறிந்து பொன் கொடுத்தனுப்பல்

வன்ன திரு நீட்டும் கயில் வாங்கி
வாசித்தறிந்தாளெ கர்ண்ணகய்யும்
வாசகத்தயி கண்டா போதெ
கண்ணீ ரொற்றி காற்ற ழுதாள்
அழுது கொண்டம்மெ பத்தினியும்
ஆயிழயும் யேதோ சொல்வாள்
ஆளறுவான் சீர்மெயிலெ
ஒரு ஆல நுணலும் கிடயாதெ
வேரறுவான் சீர்மெயிலெ
ஒரு வேலி நுணலும் கிடயாதொ

---

801 சிறை> சிற (பே.வ.மா)—துன்பம்
816 வாசகம்—ஓலையில் எழுதப்பட்ட செய்தி
817 காற்றழுதாள் - சத்தமிட்டழுதாள்
820 ஆளறுவான் - ஆள் அற்றுப்போன, ஆள் இல்லாத
820 சீர்மெ - சீமை
821 நிழல்> நிணல்> நுணல் (பே.வ.மா)

பாளறுவான் சீர்மயிலெ
ஒரு பனெ நுணலும் தோந்நாதெ
என்று சொல்லி யம்மெ பத்தினியும்
ஆயிளயாளும் சாபமிட்டாள்
கொடியிடயாளம்மெ சொன்னபோதெ
கோவலனுர் முன்பதிலெ
ஒரு குளந்த நிணல் தோந்நிடுமாம்
அப்பொழுதெ கர்ண்ணகய்யும்
ஆயிழயும் யேதொ சொல்வாள்
அறெ துறெந்து பொன்னெடுக்க
ஆருண்ட காலம் சொல்லும்
மூலெயில் வாழும் பொன்னெடுக்க
முவ்வாண்டக் காலம் சொல்லும்
முந்தியிலே முடிந்திருந்த பொன்னெடுக்க
முப்பது மாசம் சென்றிடுமெ
என்று சொல்லி யம்மெ பத்தினியும்
அருள்வணிகன் தரித்திருந்த
மணி ஆபரண பதக்கமாலெ
ஆயிழயாள் தான் களத்தி
ஆண்டி பண்டாரத்தின் கயிக் கொடுத்தார்
இந்த நல்ல பொன்னெதெல்லாம்
இப்பொழுதெ கொண்டு சென்று
செட்டி தட்டாரெ தான்வருத்தி
உருக்கி பொன்இடெ பார்த்து
மாதேவியெ த[ா]னெ வருத்தி
வய்யகத்தோர் த(ா)னறிய
ஒரு மஞ்சாடி பொன்னுக்காக
ரண்டு மஞ்சாடி பொன் கொடுத்து
மறுப்பிளகி கோவலரும்

---

825 தோந்நாதே(மலெயாள வழக்கு) - தோன்றுதே
833 அறை > அறெ (பே.வ.மா)
834 ஆருண்டு காலம் > ஆருண்டகாலம் (பே. வ. மா)
834 செல்லும் > சொல்லும் (பே. வ. மா)
836 முவ்வாண்ட - மூன்றுண்டு
837 முந்தி - முந்தானே
847 எடை > இடெ (பே. வ. மா)

மறுப்பிளகி வாற வேளையிலெ
சீழ்ட்டமுள்ள பொன்னெதெல்லாம்
விற்றுவிலைகள் செயிது
வாறவழி பாதெயிலெ
தனிலிருக்கும் ஆண்டி[பர]
ஆண்டி பரதேசியர்க்கும்
அன்னதானமிட்டு வரவெ சொல்லும்

அச்சுதனுர் பொன்னைக் கோவலனிடத்தில் கொடுத்தல்

பொன்வாங்கி பண்டாரவும்
புகள்பெறவெ வழிநடந்தார்
கொற்றமுடி வேந்தர் அச்சுதரும்
கோவலனுர் மும்பில் சென்ருர்
கொண்டு சென்ற பொன்னதெல்லாம்
கோவலனுர் கயிக் கொடுத்தார்
கொடியிடயாளம்மெ சென்ற வார்த்தை
கோவலர்க்கும் உரைக்கலுற்ருர்
செட்டி தட்டாரெதான் வருத்தி
உருக்கி பொன்யிடெ பார்த்து
மாதேவியெ தனெவருத்தி
வய்யகத்தோர் தானறிய
ஒரு மஞ்சாடி பொன்னுக்காக
ரண்டு மஞ்சாடி பொன்கொடுத்து
மறுப்பிளகி கோவலநும்
வாறவழி பாதெயிலெ
சீழ்ட்டமுள்ள பொன்னெதெல்லாம்
விற்று விலைகள் செய்து
வாறவழி பாதெயிலெ
தனிலிருக்கும் ஆண்டிபர
ஆண்டி பரதேசியர்க்கும்
அன்ன தானமிட்டு வழிநடந்தார்

---

854 சீழ்ட்டம் - மீதி
856 வாற - வருகிற
858 ஆண்டிபரதேசி - பிச்சைக்காரர்கள்
859 அன்னதானம் — உணவுதானம்
863 முன்பில் > மும்பில் (பே. வ. மா)
866 சொன்ன என்பது சென்ற என்று எழுதப்பட்டுள்ளது.

கோவலன் திரும்பி கர்ண்ணகை மனை சேருதல்

காவெரிப்பும் பட்டணத்தில்
கர்ண்ணகய்யாள் மனையில் சென்றார்
கர்ண்ணகய்யாள் மனையில் சென்று
கர்ண்ணகய்யெ கர்ண்ணகய்யெ
என்றெருந்திரண்டு விளி விளித்தார்
விளித்த சத்தம் கேட்டா போதெ
மெல்வி நல்லாளம்மெ யேதொசொல்வாள்
அறெதனிலெ நானிருக்க
ஆரென்னெ வந்து விளித்ததாரொ
சுடுஞ்சிறயாயி நானிருக்க
கர்ண்ணகய்யென்று விளித்ததாரொ
நானல்லவொ கர்ண்ணகய்யெ
நலம்படவெ உன்னெவிளித்தென்
மாதேவிக்கு பொன்கொடுக்க
பணி ஆபரணம் கொடுத்துவிட்டாயி
வந்தீரோ என்ங்கணவா
வரிசையுள்ள கோவலரெ
நல்க்கரும்பு மிங்கிருக்க
பேயிக்கரும்பெ தொட்டீரொ
நாவிப்பிள்ளை யிங்கிருக்க [யிங்கிருக்க]
மரநாயெ சென்றும் தொட்டீரொ
சோலைகிளிமகள் நானிருக்க
சொறிநாயெ சென்றும் தொட்டீரொ
மாடப்புற யிங்கிருக்க
மரநாயெ சென்றும் தொட்டீரொ
வாழவேண்டும் பிராயத்திலெ
வாழாமல் போனீரொ
வேசெயெரெ தொட்டபேர்கள்
என்வீடதிலும் வரவொண்ணாது
என்மெய்யதிலும் தீண்டொண்ணாது
அரிசிகறி நானந் தருவேன்

---

900 பேய் > பேயி (பே. வ. மர)
901 நாவிப்பிள்ளை — நாய்க்குட்டி
902 மரநாய் — மரங்களில் வாழும் நாய் போன்ற ஒரு விலங்கு
904 சொறி — ஒரு நோய்
905 புரு என்பது புற என்று எழுதப்பட்டுள்ளது.
912 கறி - காய்கறி போன்றவை

ஆக்கி யுண்ண கலந்தருவேன்
உருளியிலெ பொங்கி யுண்டு
இறயத்திலெ பாருமென்ன
ஆமெனவெ சம்மதித்தார்
அரிசிபடி தான்கொடுத்தாள்
ஆக்கியுண்ண கலங்கொடுத்தாள்
உருளியிலெ பொங்கி யுண்டு
இறயத்திலெ வாழ்ந்திருந்தார்
வாழ்ந்தங் கிருக்கின்ற நாளதிலெ

மாதேவி கோவலனின் பிரிவுத்துயரினைத் தாய்க்குரைத்தல்

வாணுதெலாள் மாதேவி
அவள் மாதாவோடெ யேதொ சொல்வாள்
மாதாவெ உன்வார்த்தையி கேட்டு
மலங்கி மெத்தெ அழுவதாச்செ
அழுதவளைக் கண்டிருந்து
அவளேதொ வார்த்தை சொல்வான்
ஏனோ நீ யென்மகளெ
இப்பொழுதெ அழுகிறது
மாதாவெ உன் வார்த்தைகேட்டு
மலங்கி மெத்தெ அழுவதாச்செ
மாலையிட்ட கோவலரெ [கோவலரெ] காணாமல்
காணகண்ங்கள் கொதிக்குதம்ம
கமல திருமுகம் வாடுதம்மா
இங்கவரெ காணாவிட்டால்
இறந்திடுவேன் யென் தாயெ

மாதேவியின் தாய் சோழ மன்னர் உதவி வேண்டல்

அந்த வார்த்தை கேட்டா போதெ
அவளேதொ வார்த்தை சொல்வாள்
மலங்க வேண்டாம் யென்மகளெ
வருத்தி வயிப்பென் உன்னிடத்தில்

---

913 ஆக்கி - சமைத்து, கலம் - பாத்திரம்
914 உருளி - ஒருவகை வெண்கல ஏனம்
915 இறயம் - வீட்டின் வெளிப்பக்கம்
923 மாதா - தாய்
940 வருத்தி—வரவழைத்து

மன்னவனார் உள்ள மட்டும்
வாட்டமுண்டெ இனி நமக்கும்
என்று சொல்லி வயந்தமாலை
அன்றுதங்கி விடியுமுன்னெ
ஆதிகாலம் வழிநடந்து
சோளராசர் மும்பில் சென்று
வார்த்தை சொல்லி நமஸ்கரித்தாள்
மன்னவரெ தென்னவரெ
மகிடமுடி பாண்டிமன்ன
என் மகள்தான் மாதேவி
ஈடழிந்து போனாள் மன்ன
மாலையிட்ட கோவலரெ
கோவலரெ காணாமல்
காண கண்ங்கள் கொதிக்குதென்றாள்
கமலதிருமுகம் வாடுதென்றாள்
இங்கவரெ காணால் விட்டாள்
இறந்திடுவாள் யென்றுரைத்தாள்
மாலையிட்ட கோவலரெ
வருத்தயினி வாசமுண்டெ

சோழ மன்னன் கோவலனை வரவழைக்க ஏற்பாடு செய்தல்

அந்த வார்த்தை கேட்டா போதெ
மன்னவெரும் யேதொ சொல்வான்
மலங்க வேண்டாம் வயந்தமாலை
வருத்தி வயிப்பேன் கோவலரெ
அந்நேரம் சோளராசர்
ஆளுவிட்டார் கோவலர்க்கெ
ஆளோடி சென்று கண்டு
ஓட்டனுமொ யேது சொல்வான்
நீ பன்னிரண்டாண்டுக் காலமட்டும்
வாள்ந்திருந்தாயி அவள் மனையில்

---

945 ஆதிகாலம் - அதிகாலை
947 நமஸ்கரித்தாள் - வணங்கினாள்
949 மகுட > மகிட (பே. வ. மா)
951 ஈடு - சிறப்பு
967 ஓட்டன் - தூதன்

நிதம் நிக்க போவல்லெயானாள்
ஒரு நாளானால் போயிவர வேணுமென்றார்

கோவலன் வர மறுத்தல்

அந்த வார்த்தை கேட்ட கோவலரும்
ஒட்டனோடெ யேதொ சொல்வார்
மறுப்பில் வயித்த மூதேவியோடெ
மறுத்து முகம் பார்ப்பதில்லெ
தின்றிட்டதோர் த(ா)ம்பலத்தெ
திரும்பக் கய்யால் யெடுப்பதி(ல்)லெ
சரிந்த தனம் யெழுந்திடிலும்
அவள் மனைக்கும் போவதில்லை
அவள் மெய்யதிலும் தொடுவதில்லை
என்று சொல்லி கோவலரும்
வருவதில்லெ யென்று சொல்லி
வந்த தூதனோடெ தானுரெத்தான்
அந்தவார்த்தை கேட்டுகொண்டு
ஒட்டனுமொ வழி நடந்தான்
திரும்பி சென்று சோளராசன்
திருமுன்பிலே அறிவித்தாராம்

சோழ மன்னன் கோவலனுக்கு வரியிடல்

அறிந்த பொழுதிலெ சோழராசர்
அவரேதொ வார்த்தை சொல்வார்
என் வார்த்தை தட்ட வயித்தால்
இருப்பானோ செட்டி பட்டணத்தில்
என்று சொல்லி பாண்டி மன்னன்

---

970 ஆனால் என்பது ஆனாள் என்று எழுதப்பட்டுள்ளது.
970 நிதம் – தினம்
970 நிற்க > நிக்க (பே.வ.மா) – தங்க
970 போக வல்லை > போவல்லெ (பே.வ.மா)
971 ஒரு நாளானால் - ஒரு நாளாவது
975 மறுத்து – மீண்டு
976 இட்ட–வெளியிலிட்ட, தாம்பூலம் > தாம்பலம் (பே.வ.மா)
992 சோழ மன்னன் என்பதற்குப் பதிலாகப் பாண்டி மன்னன் என்று எழுதப்பட்டுள்ளது

செட்டிவரி நகரிவ[க]ரி
சிறந்த வரிகள் ரண்டும் கெட்டிவயித்தார்
வரியிறுக்க வராமல்
இருப்பானே செட்டி பட்டணத்தில்
பலங்க வேண்டாம் வயந்தமாலே
வருத்தி வயிப்பேன் கோவலரெ
செட்டி வரி நகரிவ [க]ரி
சிறந்த வரிகள் ரண்(டு)ம் கெட்டி வயித்தார்
வரியிறுக்க வேணுமென்று
வந்தாரெ தூதுவெர்கள்
தூதுவெனர் வரவு கண்டு

வரியிறுக்கவேண்டி கோவலனும் கர்ண்ணகையும் சிலம்பு விற்க செலல்

யேதொசொல்வார் கோவலரும்
கேளுமெந்தன் கர்ண்ணகய்யெ
கேவலமாயி ஒரு வசர்த்தை
வரியிறுக்க முதலில்லாமல்
நான்ம் போறென் பரதேசம்
நீயிரு உன் பட்டணத்தில்
அந்தவார்த்தை கேட்டபோதெ
கர்ண்ணகய்யும் யேதொ சொல்வாள்
நீர் பரதேசம் போகவேண்டாம்
வார்த்தை தனெ யொன்று சொல்லக்கேளும்
ஒரு காலில் சிலப்பு விற்றால்
இந்த வரிகள் ரண்டும் நாமிறுத்து
சீழ்ட்டமுள்ள பொன்னெதல்லாம்
நம்முடய காலமுள்ள மட்டும்
நமக்குமினி வயறுதந்திக்கலாமெ
ஆ(ெ)மனவெ சம்மதித்து
கோவலரும் வாள்ந்திருந்தார்
மாதேவி யேதுவாலெ

---

993 நகரிவரி— பட்டினவரி
995 வரியிறுக்க - வரிகட்ட
1014 காலில் சிலம்பு - காலில் உள்ள சிலம்பு
1018 வயிறு>வயறு(பே.வ.மா)
1018 தந்திக்கலாம் - பிழைக்கலாம்
1021 ஏது - காரணம்

மன்னவெரெ வாழஒட்டாள்
வாழவொட்டாள் உண்ணவொட்டாள்
மங்கிலியம் தரித்த மன்னவரெ
அப்பொழுதெ கர்ண்ணகய்யும்
ஆயிழயும் யேதொ சொல்வாள்
வாழ்ந்தங்கிருக்கின்ற நாளதிலெ
வரிகள்ரண்டும் நெரிங்கிடவெ
களத்தெடியொ கால்ச்சிலம்பெ
கனமதிரயிலெ விற்று வாறென்
நீர் சிலம்பு விக்கபோறீரானல்
செய்தி ஒன்று சொல்லக்கேளும்
நானும் உம்முடெய பாரியல்லொ
நடந்தறிய மங்கெயல்லொ
இருந்து யிருந்து கூட்டியெபோம்
என்ங்கணவ கோவலரெ
ஆமெணவெ சம்மதித்து
அருள்வணிக பேருமாளும்
அவர் மயிக்குறியும் தனெபோட்டு
ப[ர]க்கறெயும் தோளிலிட்டு
பெடக்கணவும் கயில் தூக்கி
நடந்தாரெ யிருபேரும்
ஒரு நாழிகயிக்கு காதவழி
பட்டணவும் தனெவிட்டு
மடெ வீடும் தனெக் கடந்தார்
செட்டி தட்டார் தெருக்கடந்து
சோளராசர் மேடெ விட்டார்
அவர் கால்நடயாயி தனெநடந்து
பொன்னியாறு காவேரிக்கெ
புகள் (ெ)யறவே சொல்லுவாராம்

1024 மங்கிலியம் - தாலி
1030 மதுரை > மதிரெ (பே.வ. மா)
1033 பாரி - மனைவி
1040 பக்கறை > பக்கறெ (பே.வ.மா)—காசு வைக்கும் பை
1043 நாழிகை—கால அளவைப் பெயர் (2½ நாழிகை ஒரு மணி நேரம் என்பர்)
1043 காதம்—பத்து மைல் தொலை

ஆறு தன்னேக் கண்டாபோதெ
அம்ம பத்தினியும் யேதொசொல்வாள்
இந்த நல்ல ஆறெதெல்லாம்
ஏது யென்ங்கணவா
கேளுமெந்தன் கர்ண்ணகய்யெ
கேவலமாயி ஒரு வார்த்தை
நானுமெந்தன் மாதவியும்
நலம்படவெ குளிக்குமந்த
காவேரி ஆறிதென்ருர்
அப்பொழுதெ கண்ணகய்யும்
அம்மெ பத்தினியும் யேதொ சொல்வாள்
பலதாரி தொட்ட கெங்கை
பத்தினி நான் தொடுவெனெ
ஒட்டியப்பெண் தொட்ட கெங்கெ
இந்த செட்டியப்பெண் தொடுவேனே
வற்று வற்றுதெய்வ கெங்கெ
மங்கெ நல்லாளம்மெ சாபமிட்டாள்
கன்னி நல்லாளம்மெ சாபமிட
கடலுமொரு திரயொதிங்கி
காவேரி யாறுவற்ற
ஆறுதன்னே வற்றிடவெ
ஆறுதனில் தனெயிறங்கி
கால்நடயாய் தனெநடந்து
அக்கரக்கெ சொல்லுவாராம்
அக்கரயில் சென்றுநின்று
அம்மெ தயிதலெரும் யேதொ சொல்வாள்
நானுமொரு தெய்வக்கன்னி
நீயொரு தெய்வகெங்கெ
பண்டுபோலெ தெய்வுகெங்கெ
பரந்து பாய சாமமிட்டாள்
பத்தினியாள் சொல்லயிலெ

1062 பலதாரி—பலபேர், கங்கை > கெங்கெ (பே.வ.மா)--நீர்
1064 ஒட்டிய—பொருந்திய
1074 அக்கரை > அக்கர (பே.வ.மா)—மறுகரை
1076 தயிதல் - பெண்
1080 சாபம் என்பது சாமம் என்று எழுதப்பட்டுள்ளது.

பண்டுபோலெ தெய்வகெங்கெ
பரந்தாறு பெருகிடுமாம்
நடந்தாரெ யிருபேரும்
நளின மொத்த காட்டோட
காடு தன்னை கண்டா போதெ
அம்மெ தயிதலரும் யேதொ சொல்வாள்
இந்த நல்ல காடெதெல்லாம்
ஏதேது யென்ங் கணவா
கேளுமெந்தன் கர்ண்ணகய்யெ
கேவலமாயி ஒரு வார்த்தை
கள்ளருள்ள சீர்மயெல்லொ
. . . .
. . . றென் . . . .
அம்மெ பத்தினியும் யேதொ சொல்வாள்
நடந்த கால் தளருதென்று
இருப்பேனென்றாள் கர்ண்ணகய்யும்
யெடுப்பே னென்றார் கோவலரும்
அப்பொழுதெ கர்ண்ணகய்யும்
ஆயிழயும் யேதொ சொல்வாள்
அணுகாதெயும் அணுகாதெயும்
அறெயில் வயித்த சீர்மானெ
முடுகாதெயும் முடுகாதெயும்
மூதேவி யென்ங் கணவா
அத்தெனைக்கும் சினேகமானால்
என்ங் கணவா சொல்லெக் கேளும்
ஆலு நல்ல யிலையெடுத்து
அகலெ நின்று வீசியெ போம்
சுண்டே நல்ல இலையிறுத்து

1085 நளினம் - நயம்
1096 தளருதென்று - தளர்ச்சியடைகிறதென்று
1101 அணுகாதே - நெருங்காதே
1102 சீர்மான் - தலைவன்
1103 முடுகாதே - நெருங்காதே
1105 சினேகம் - நட்பு
1107 ஆலு - ஆலமரம்
1108 அகலெ - விலகி
1109 சுண்டெ - சுண்டைச்செடி

தூரெ நின்று வீசியெ போம்
அந்த மொழி கேட்டா போதெ
அருள் வணிக பெருமாளும்
ஆலு நல்லா இலையெடுத்து
அகலெ நின்று வீசுவாராம்
சுண்டெ நல்ல இலையிறுத்து
தூரெ நின்று வீசுவாராம்
தாகமேறி யம்மெ கர்ண்ணகய்யும்
தயிதலரும் யேதொ சொல்வாள்

கர்ண்ணகை தன்னை அடைக்கலமாக இருத்தீவிட்டு கோவலனைச் சிலம்புவிற்க போகச் சொல்லுதல்

தீர் சிலம்பு விக்க போறீராஞல்
செய்தி யொன்று சொல்லக் கேளும்
என்னையொரு மனதனிலெ
அடைக்கலங்கள் வயித்தெ போம்
அப்பொழுதெ கோவலரும்
அருள் வணிகன் யேதொ சொல்வார்
ஆருடயா மனைதனிலெ
அடக்கலங்கள் வயித்திடவோ
செட்டியார் மனையாமோ
மெல்லியரெ வயித்திடவோ
செட்டியார்கள் நீதி முறை
கேட்டேயெ போம் யென்ங்கணவா
வாற கப்பல் ஆயிரமாம்
போற கப்பல் ஆயிரமாம்
ஓடும் சாம்பான்மார் ஆயிரமாம்
உணங்கும் சாம்பான்மார் ஆயிரமாம்
சாம்பான்மார் நூருயிரமாம்
சல்லிகை நூருயிரமாம்
கப்பலோடும் வேளையிலெ
காணி முளகான தெல்லாம்
கடலதிலெ விழுந்திடிலும்

1109 சுண்டெ - சுண்டைச் செடி
1121 மனை > மன (பே. வ. மா) – வீடு
1122 அடைக்கலம் > அடக்கலம் (பே. வ. மா) - புகலிடம்
1133 சாம்பான் - ஒரு சாதிப் பெயர்
1134 உணங்கும் - செயலற்றிருக்கும்

கடலு வற்ற இறைத்திடுவார்
காவேரி யாறு நீந்தும் செட்டி
அவர் ஈக்காலெ யெண்ணெ வார்ப்பார்
எண்ணி யெண்ணி முளகிடுவாள்
கறிக்கரெக்கும் மஞ்சள் தந்தாள்
கண்ணதிலெ யெழுதிக் கொ(ள்)ளுவார்
அந்த மன ஆகாது
அடுத்த மனை சோதிரியும்
வெள்ளாளர் மனையாமொ
மெல்லியரெ வயித்திடவெ
வெள்ளாளர் நீதிமுறெ
கேட்டெபோம் யென்ங்கணவா
கருதுழக்கு விளந்தாலும்
கருஞ்சாவி பட்டுதென்பார்
ஊருசேர விளந்தாலும்
உள்ச்சாவி பட்டுதென்பார்
நாடுசேர விளந்(த)ாலும்
நடுச்சாவி பட்டுதென்பார்
வண்டாள மரத்தெ வெட்டி
மரக்காலெ சமெத்து வயிப்பாண்
நிற நாழி உள்ளிருக்க
குறெ நாழி கொற்[ெ]றளப்பார்
கொற்றக் குறத்தளப்பார்
அவன் கொட்டாரம் தீப்பிடிக்கும்
முந்நாழி விசம் கொடுப்பார்
மூன்று நேரம் சோறு கேள்ப்பார்
பெற்ற மக்கள் பார்த்திருக்க

1142 எண்ணெ > யெண்ணெ (பே. வ. மா)
1143 மிளகிடுவாள் என்பது முளகிடுவாள் என்று எழுதப்பட்டுள்ளது.
1144 தந்தால் என்பது தந்தாள் என்று எழுதப் பட்டுள்ளது
1147 சோதிரியும் - சோதித்துப் பாரும், தேடும்
1152 கதிருழக்கு > கருது ழக்கு (பே. வ. மா)
1154 விளைந்தாலும் > விளந்தாலும் (பே. வ. மா)
1159 மரக்கால் - அளவைப் பெயர்
1160 நாழி - அளவைப் பெயர், கொற்று - கூலி
குறை > குறெ (பே. வ. மா) - குறைவாக

மருமக்கள்மார் சேம மெடுப்பார்
அந்த மனை ஆகாது காண்
அடுத்த மனை சோதிரியும்
தட்டானர் மனையாமோ
தயிதலரெ வயித்திடவோ
தட்டானர் நீதி முறெ
கேட்டெ போம் யென்ங்கணவ
குன்னி முத்து பசயாலெ
குடம் போலெ பொன் சமைப்பார்
மஞ்சாடி பசயாலெ
மலைபோல பொன் சமைப்பார்
தாயி பொன்னிலும் மகள் பொன்னிலும்
சற்றெ பொன் திரடால் விட்டால்
தலைவீங்கி சாவான் தட்டான்
ஈசுவரனர் இருந்த ....
அந்தமனை ஆகாது
அடுத்தமனை சோதிரியும்
மறவருட மனையாமொ
மெல்லியரெ வயித்திடவெ
மறவருட நீதிமுறை
கேட்டெபோம் யென்ங்கணவா
நம்மளிரு பேரயும் கண்டாபோதெ
வாரும் யிரியுமென்று
வார்த்தை சொல்லி உபசரிப்பாள்
வழியிடகே தான் திரிப்பாள்
உண்டுறங்க ஒருசாமம்
உறக்கமுற்ற வேளையிலெ
உம்மெ கொண்டும் வெட்டி வயிப்பார்

1166-1167. இவ்வரிகளில் மன்னராட்சிக் காலத்தில் வேளாளர் குலத்தில் பழக்கத்திலிருந்த 'மருமக்கள் தாயமுறை' சுட்டப்பட்டுள்ளது.

1174 பசை > பச (பே. வ. மா) — பிசின்

1178-1179 இவ்வரிகள் உணர்த்தும் பொருளில் ஒரு பழமொழியும் உண்டு.

1189 இருவும் > யிரியும் (பே. வ. மா)

என்னை கொண்டு பலதழிப்பார்
அந்த மனை ஆகாது
அடுத்தமனை சோதிரியும்
இப்பெரிய பட்டணத்தில்
ஒரு ஆயனில்லாதாச்சி மனை
அறிய யுண்டால் பாருமென்றாள்
அப்பொழுதெ ஒரு நெயிடச்சி
மாயமாக வந்து தோந்நுவாளாம்
கோவலரும் ஆச்சி மனதனைதேடி
கோவலரும் போற நேரம்
தோநி நின்றதோர் யிடச்சியோடெ
கோவலரும் யேது சொல்வார்
கேளுமெந்தன் யிடச்சியெரெ
சேவலமாய் ஒரு வாற்த்தயி
நீ அறிய பட்டணத்தில்
ஒரு ஆயனில்லாத ஆச்சிமனை
நீ அறிய உண்டுமானால்
உண்டுமானால் சொல்லுமென்றார்
அப்பொழுதெ ஆச்சியம்மெ
நானறிய பட்டணத்தில்
ஆயனில்லா தாச்சிமனை
நானறிய உண்டுமென்றாள்
நீ அறிய உண்டுமானால்
ஆச்சிமனை தந்தனெக்கெ
அடயாளம் சொல்லுமென்றார்
அப்பொழுதெ ஆச்சி யம்மெ
அடையாளம் சொல்லலுற்றாள்
நாலு கதவிருக்கும்
நாதாங்கி பூட்டிருக்கும்
வடக்கு நடெ வாசலிலெ
வாழக்குலை சரிந்திருக்கும்

1199 ஆயன் — இடையன், ஆய்ச்சி > ஆச்சி (பே.வ.மா)-இடைச்சி
1201 நெயிடச்சி — நெய் விற்கும் இடைச்சி
1205 தோநி — தோன்றி
1225 வாழை > வாழெ (பே. வ. மா)

மேக்கு நடெ வாசலிலெ
ஒரு மெஞ்ஞான குளப்புரெயும்
தெக்கு நடெ வாசலிலெ
தேன் கரும்பு பூத்து நிக்கும்
கிழக்கு நடெ வாசலிலெ
கிணறு தான் அடயாளம்
அடயாளங் கேட்டுங் கொண்டு
கோவலரும் கண்ணகய்யும்
அவரிரு பேருமாக வழி நடந்தார்

கோவலனும் கர்ண்ணகையும் ஆய்ச்சி மனை சேர்தல்

ஆச்சி அம்மெயுட மனையில் சென்றூர்
இரு பேரயும் கண்ட யுடன்
இன நினந்து ஆச்சி அம்மெ
ஆயிமெயும் யேது செய்தாள்
இருபேர்க்கும் யிருப்பதுக்கெ
ஏந்ற கட்டில் ஒந்து கொண்(டே)ட யிட்டாள்
அப்பொழுதெ கோவலரும்
கோவலரும் யிருந்து கொண்டார்
கண்ணகய்யாள் யிரியாமல்
அவ்ள் கால் சடத்து நிந்து கொண்டாள்
அப்பொழுதெ ஆச்சியம்மெ
ஆயிமெயும் யேது சொல்வாள்
ஏனெ நீ நல் மகளெ
இரியாமல் நிப்ப தென்ன
அப்பொழுதெ கர்ண்ணகய்யும்
ஆயிமெயும் யேது சொல்வாள்
என் வலுமெ சொல்லுகிறென்
கேட்டெ போம் ஆச்சியம்மா
என்னெ மாலெயிட்ட யிதுகாலம்
இது காலம் யிது பிராயம்
இது பிர(ா)யம் ஆனதிலெ

1226 மேற்கு > மேக்கு (பே. வ. மா)
1228 தெற்கு > தெக்கு (பே. வ. மா)
1248 இரியாமல் - இருக்காமல்
1248 நிற்பது > நிப்பது (பே. வ. மா)
1251 வலிமை > வலுமெ (பே. வ. மா)
1255 பிராயம் - பருவம்

ஒரு தலத்தில் யிருந்தறியேன்
ஒரு படுக்கை சரிந்தறியேன்
ஒரு தட்டத்திலெ வெற்றிலெ தின்றறியேன்
அந்த வாற்த்தெ கேட்ட போதெ
ஆயிழெயும் யேது சொல்வாள்
இவள் தானை பத்தினியும்
பத்தினிக்தும் யென்று சொல்லி
இருபேர்க்கும் யிருப்பதுக்கெ
இணை கட்டிலொந்து கொண்டெ யிட்டான்
அப்பொழுதெ கர்ண்ணகய்யும்
கோவலனார் யிருந்ததிலும்
இல அழகு பதிந்திருந்தாள்
அப்பொழுதெ ஆச்சியம்மெ
பூப்போல சோறுபடைத்தாள்
பொன் போலெ கறி சமெத்தாள்
வட்டிலிலெ சோறெ யிட்டு
வாணுதலாள் கொண்டு வயித்தாள்
உண்டு தின்று பசியாறி
ஒந்நிரண்டு நாள் தங்கி
மூன்றாம் நாள் ஆதி காலம்
புலரு முன்னெ யெழுந்திருந்து
மொய் குழலாள் யேது சொல்வாள்
விருந்துகளும் மருந்துகளும்
மக்களை மூன்று நாள் உசிதமல்லொ
உச்சிப்பூ பூக்கு முன்னெ
ஊரடெத்து மூளிக்கு முன்னெ
உங்கள் ஊரதிலெ போயி யிருங்கொ
அந்த வாற்த்தெ கேட்ட போதெ

1258 தட்டம் - தாம்பாளம்

1264 இணை கட்டில் — இருவர் தூங்கும் படியான கட்டில்

1267 இலை இல (பே. வ. மா) பதிந்து-தாழ்ந்து

1271 வட்டில் — வட்டமான பாத்திரம்

1276 புலரு முன்னெ — சூரிய ஒளி தோன்று முன்னர்

1278 – 1279 ''விருந்தும் மருந்தும் மூன்றுநாள்'' என்பது ஒரு பழமொழி. உசிதம்-உகந்து

1281 அடைத்து > அடெத்து (பே. வ. மா) - எல்லாம்

கோவலன் ஆய்ச்சியிடத்தில் ஊர்விட்டுவந்த செய்திகூறல்

கோவலரும் யேது சொல்வார்
விருந்துக்காக வந்ததல்ல
மருந்துக்காக வந்ததல்ல
கேளுமெந்தன் ஆச்சியம்ம
கேவலமாய் ஒரு வாற்த்தை
மாதேவி யேதுவாலெ
செட்டி வரி நகரி வரி
சிறந்த வரிகள் ரண்டும் கெட்டி வயித்தார்
வரியிறுக்க முதலில்லாமல்
நான் போறேன் மதிரயிலெ
மணிச் சிலம்பெ மாறிவிக்க

ஆய்ச்சி கோவலன் கர்ண்ணகையை தனிக்குடும்பமாக வாழச்சொலல்

அந்த வாற்த்தெ கேட்ட ஆச்சி அம்ம
ஆயிழெயும் யேது சொல்வாள்
அரிசி கறி நான் தருவேன்
ஆக்கி உண்ண கலந்தருவேன்
உருளியிலெ பொங்கி யுண்டு
விடுதியாக பாருமென்ருள்
அப்பொழுதெ கர்ண்ணகய்யும்
காரிழெயும் யேது சொல்வாள்

கர்ண்ணகை தன் பெருமை கூறல்

கேளுமெந்தன் ஆச்சியம்மா
என் பெருமெ சொல்லுகிறேன்
சூடு பொறுத்தறியேன்
சுட்ட சட்டி பிடித்தறியேன்
பொருந்த நல்ல சுளவெடுத்து
திருந்த நான் கொழித்தறியேன்

1300 விடுதி—தங்குமிடம்
1305 பொறுத்து—தாங்கி
1306 சுட்ட சட்டி—சூடான மண் சட்டி
1306 பிடித்தறியேன்—தொட்டு இறக்கி அறியேன்
1307 சுளகு > சுளவு (பே.வ.மா)—முறம்
1308 திருந்த—செம்மையாக, கொழித்து—தெள்ளி, ஒதுக்கி

முற்றத்திலெ யெறிக்கும் வெயில்
எந்தன் மெய்யதிலுங் கொண்டறியேன்
இநல்லு காயிக்கும் மரம்மறியேன்
நீண்ட கா பொழி யறியேன்
அந்நக்கல்லொ கர்ண்ணகய்யும்
அழுதழுது சமெத்து வயித்தாள்

கோவலன் சிலம்பு விற்று வாறேனெனல்

பிற்றும் நாள் ஆதி காலம்
கோவலரும் யேது சொல்வார்
மணிச் சிலம்பெ தாரும் பிள்ள
மதிரயிலெ விற்று வாறெனென்றுர்
மணிச் சிலம்பெ கேட்டீரெ
வணிவர் குல பெருமாளே
நம்மனிலெ பல சோத்தியங்கள்
கேள்க்க உண்டும் யென்ங்கணவ

கோவலன் செம்மான் மனையில் சென்று

வாய்ச்சோதனை கேட்டல்

செம்ம(ா)னுர் மனையில் சென்று
வாயிச் சோதனெ கேட்டு வாரும்
வாயிச் சோதனெ கேள்க்க வென்று
வணிவர் குல பெருமாளும்
தன் மனயெ விட்டவரும்
செம்மானுர் மனயில் சென்றுர்

1309 யெறிக்கும்—வீசும், பரவும்
1310 மெய்—உடல், கொண்டறியேன்—பட்டறியேன்
1312 கா--சோலை, பொழில்> பொழி(பே. வ. மா)-சோலை
1313 அந்நக்கல்லொ(மலையாள வழக்கு—அன்றைக்கல்லோ
1315 பிற்றும் நாள்(குமரிமாவட்ட வழக்கு)—மறுநாள்
1317 குமரிமாவட்டத்தில் கணவன், மனைவியை 'பிள்ளா' என்று இன்றும் அழைப்பதுண்டு.
1321 சோத்தியம்—சோதிடம்
1323 செம்மானுர்—செருப்புதைப்பவர்
1324 வாயிச்சோதனெ-விரிச்சி

அம்மனெயில் செம்மானும்
அயல் மனக்கெ போயிருந்தான்
தன் மனயில் செம்மாத்தி யோடெ
சற்றெ தண்ணீர்ந் தாவென்று கேட்டார்
அந்த வாற்த்தெ கேட்ட போதெ
வாணுதலாளேது சொல்வாள்
பாலும் அடுப்பதிலெ
பாலகனும் கய்யதிலெ
பாலு பொங்கி போய்விடிலும்
எந்தன் பாலகனெ கயி விடேனுன்
சோறும் அடுப்பதிலெ
சோளகனும் கய்யதிலெ
சோறு பொங்கி போனாலும்
என் சோளகனெ கயி விடேனுன்
சாயலிலே யிருக்கும் தண்ணீர்
சரித்துக்குடி செம்மானெ
அப்பொழுதெ செம்மாத்தி
தார்குழலாளும் யேதுசொல்வாள்
சாயலிலெயிருக்கும் தண்ணீர்
சரித்துக்குடி செம்மானெ
செம்மானென்ற வாற்த்தெகேட்டு
தினவும் உற்றூர் கோவலரும்
அப்பொழுதெ கோவலரும்
அருகெ யிருந்த சிற்றுளியெ
சிற்றுளியெ தனெ யெடுத்து

1330 அயல்மனக்கெ — அடுத்த வீட்டுக்கு
1331 செம்மாத்தி — செம்மானின் மனைவி
1332 சற்றெ — சிறிது
1332 தண்ணீருந்தா என்பது தண்ணீர்ந்தா என்று எழுதப்பட்டுள்ளது
1336 பாலகன் — சிறுவன்
1338 கயி விடேனுன் — கையிலிருந்து கீழே விடமாட்டேன் நான்
1340 சோளகன் — சோழ ராஜா போன்றவன்
1343 சாயலிலே — நிழலிலே
1350 தினவு — கோபத்தால் ஏற்பட்ட சொறிவு
1352 சிற்றுளி - சின்ன உளி

செறுகுடத்தெ யெறிந்துடத்தார்
செறு குடவும் தனெ உடெத்து
செம்மாத்தியுட தனவு மற்று
தண்ணீரெங்கும் சேருடா

செம்மாத்தி சாபமிடல்

அப்பொழுதெ செம்மாத்தி
தயித நல்லாள் சாபமிட்டாள்
ஆணிலுமொ அடி அறுவான்
இந்த அனியாயம் செய்தாயெ
பெண்ணிலுமொ மூடியறுவான்
இந்த பெரும்பாவம் செய்தாயெ
உன்னெ வெட்டாரொ குத்தாரொ
வேங்கழுகில் போடாரொ
காகினவும் கழுகினவும்
கண்டிருந்து பொதியாதொ
ஈய்யினவும் யெறும்பினவும்
இணையிருந்து தின்னுதொ
தாயினவும் நரியினவும்
உன் நாக்கெ மெள்ள பிடுங்காதொ
கழுகிலுன்னெ போடுவதும்
நானும் கண்டிருந்தும் போறேனெ

கோவலன் வாய்ச்சோதனை கேட்டு திரும்பிவந்து சிலம்பு விற்க போறேனெனல்

வாயிச் சோதனெ கேட்டுங் கொண்டு
வணிவர்குல பெருமாளும்
செம்மானுர் மனெயும் விட்டு
ஆச்சியம்மை மனெயில் வந்தார்

1354 சிறு > செறு (பே. வ. மா) - சின்ன
1356 தனவும் - மார்பும்
1357 சேருடா - சகதியாக
1359 சாபம் - சபிப்பு
1365 கழுகில் - கழுக்கோலில்
1366 காகினவும் - காக்கையினமும், கழுகினவும் - கழுகினமும்
1367 பொதியாதொ - உள்ளடக்காதோ
1369 இணையிருந்து - சேர்ந்திருந்து

வாயிச் சோதனெ கேட்டு வந்தேன்
வாணுதலெ கர்ண்ணகய்யெ
தீட்டினக்கு வராது ஒரு
தீங்கு வினெ பலியாது
மணிச் சிலம்பெ தாரும் பெண்ணெ
மதிரயிலெ போயி வாறேன்
மாதேவிக்கு பொன் கொடுக்க
மணி ஆபரணம் விற்று வாறேன்
செட்டி வரி பூண்டதினால்
செஞ்சிலம்பெ விற்று வாறேன்

கர்ண்ணகைக்கு கோவலன் வாடாப்பூ மாலே சமைத்துக் கொடுத்தல்

சிலம்பு விக்க போறீரானல்
செயிதி சொல்லெக் கேளும் யென்கணவா
நீர் போறீர் மதிரயிலெ
நானிருப்பேன் பட்டணத்தில்
உமக்கொரு தீங்கு வினே வந்திடுகில்
நானறிய வகெ யேதொ
ஆடலவர் யென் தலயில்
அன்று வயித்த செங்கழனி
உம்முடெய உயிரெ யிட்டு
வாடாப்பு மாலே சமெத்து தாருமென்ருள்
அப்பொழுதெ கோவலரும்
அவருடைய உயிரெ யிட்டு
வாடாப்பு மாலே தன்னெ
மாலே தன்னெ தனெ யொருக்கி
மங்கெ நல்லாள் கயி கொடுத்தார்
மாலே தன்னெ கயிக் கொடுத்து
கோவலரும் யேது சொல்வார்
வாடாப்பூ மாழுங் காலம்

1380 தீட்டு - தீங்கு, துன்பம்
1381 பலியாது - நேராது
1397 வாடாப்பூ மாலே - வாடாத பூமாலே
1405 மாழும் – மடியும், மாயும்

வாடி நீ மதிரயிலெ
என்று சொல்லி கோவலரும்
மணிச்சிலம்பெ கயில்வாங்கி
வண்ணிகேசம் நிக்கும் நேரம்
கண்டிருந்து கர்ண்ணகையும்
கருதி மொழிந்தேது சொல்வாள்

கர்ண்ணகை கோவலனைச் சகுனம் பார்த்து போகச்சொல்லுதல்

சிலம்புவிக்க போறீரானு(ல்)
செய்தி ஒன்று சொல்லெக்கேளும்
மண்ணான்மார் யெதிர்வரிலும்
மணிப்புடவெ யெதிர்வரிலும்
அந்தவழி போகாதேயும்
அறிவு கெட்ட யென்ங்கணவ
சுண்ணாம்பு யெதிர்வரிலும்
சுடுபரவன் முன்வரிலும்
அந்தவழி போகாதெயும்
அறிவு கெட்ட யென்ங்கணவ
உருளியிலெ அரியுமாக
சவரியிலெ தீயுமாகா
மொட்டெ பிராமணத்தி
தானெருத்தி யெதிர்வரிலும்
அந்த வழி போகாதேயும்
அறிவு கெட்ட யென்ங்கணவ
பட்டமரம் தனிலிருந்து
பல்லி குறி சொல்லுகிலும்
அந்த வழி போகாதேயும்
அறிவு கெட்ட யென்கணவ
அந்த வழி போறவெற்க்கும்
அருள் வணிக பெருமாளே
தாலியில்லா மடவார்கள்

1414 மண்ணான் - வண்ணான்

1419 சுடுபரவன் - சுண்ணாம்பு சூளை வைத்து சுடுபவன்

1422 அரி - அரிசி

1423 சவரி - தேங்காய்ச் சவரி

1434 தாலியில்லா மடவார்கள் — கணவனை இழந்தவர்கள்

தார்குழல்மார் யெதிர்வரிலும்
சுட்ட சட்டி முன்வரிலும்
சுடுகு சவன் யெதிர்வரிலும்
அந்த வழி போறவெற்க்கும்
அறிவுமுறெ சொல்லுகிறேன்
கால் நடயாய் போறவெற்கள்
கட்டணமாய் வருவாரிங்கெ
அந்த வழி போகாதெயும்
அருள் வணிக பெருமாளெ
பூமி நிலம் தானுழுது
போர் கலப்பெ யெதிர்வரிலும்
காளெ மாடு யெதிர்வரிலும்
கருமறவர் யெதிர்வரிலும்
அந்த வழி போகாதெயும்
அருள் வணிக பெருமாளெ
மரம்.வெட்டும் ஆசாரிமார்
மழுவு கொண்டு யெதிர்வரிலும்
விறவு உருளி அரிசியுமாயி
வேதியர்கள் யெதிர்வரிலும்
அந்த வழி போகாதெயும்
அருள் வணிக பெருமாளே
வால் நெடிய கருஞ்சாரெ
வலமிருந்து யிடம்பாயுகில்
வால் நெடிய (க)ருங்குருவி
வலமிருந்து யிடம்பாயுகில்.

1436 சட்டி - மண்சட்டி
1437 சுடுகு சவன் - சுடுவதற்கானபிணம்
1445 கலப்பெ - ஏர்
1447 மறவர் - ஒரு சாதிப்பெயர்
1451 மழுவு - கோடாரி
1452 விறகு > விறவு (பே. வ. மா) - எரிபொருள்
1453 வேதியர் - மறையறிந்த பார்ப்பனர்
1456 கருஞ்சரரை > கருஞ்சாரெ (பே. வ. மா) - பாம்பு வகைகளுள் ஒன்று.
1457 வலம் - வலப்பக்கம், யிடம் - இடப்பக்கம்

அந்த வழி போறபேர்கள்
ஆரொருவெர் ஆனலும்
கால் நடயாயி போறவெர்கள்
கட்டணமாய் வருவாரிங்கெ
அந்த வழி போகாதெயும்
அருள் வணிக பெருமானெ
தின் நிமித்தம் நாளதாக
சுருக்கி நான் சொன்னேன் காண்
நன்னிமித்தம் சொல்லுகிறேன்
நல் வணிக கேட்டெபோம்
பால் மாடு யெதிர்வரிலும்
பால்க்குடங்கள் முன்வரிலும்
தலைப்பிள்ளையும் தாலியுமாகா
தண்ணீர் குடவும் கொண்டு
தானொருதி யெதிர்வரிலும்
சென்ற யிடத்திலெ சோறுமுண்டு
ஒரு தீங்கு வினை வராது
அந்த வழி போயிவாரும்
அருள் வணிக பெருமாளெ
ஒரு வழிக்கெ போம்பொழுதெ
ஒரொருவெர் ஆனலும்
எருமெமாடு யெதிர்வரிலும்
இளம் மாதர் யெதிர்வரிலும்
சம்பெ சுமடுங் கொண்டு
தானொருவர் யெதிர்வரிலும்
அந்த வழி போகாதெயும்
அருள் வணிக பெருமாளெ
அரும்பனயெ தனெயேறி

1466 தின் — தீங்கு
1470 பால்மாடு - பசு
1472 தலைப்பிள்ளை - மூத்தபிள்ளை
1481 எருமை > எருமெ (பே. வ. மா)
1482 இளம் மாதர் - கன்னிப் பெண்கள்
1483 சம்பை > சம்பெ (பே. வ. மா) - உலர்த்திய மீன், கருவாடு
1487 பனையை > பனயெ (பே. வ. மா)

அரும கள்ளு கொண்டு யெதிர்வரிலும்
தாலியுள்ள ஆச்சியெர்கள்
தயிரு கொண்டு யெதிர்வரிலும்
சென்ற யிடத்தில் சோறு முண்டு
சோறு முண்டு சுகவும் உண்டு
ஒரு தீங்கு வினை வராது
அந்த வழி போங்காணும்
அருள் வணிக பெருமாளெ
இன்னு முண்டு சொல்லுகிறேன்
என்ங் கணவா கேட்டெ போம்

கர்ண்ணகை கோவலனுக்கு மதுரையின் பெண்கள் பற்றிக்கூறல்

பாண்டியனூர் மதிரயிலெ
பல பெண்ங்களுள்ள பட்டணத்தில்
தெக்கெ தெருவதிலெ
தேன் மொழியாள் ஒருதியுண்டும்
அவள் தெருவில் சொல்லாதெயும்
சொல்லாதெயும் நில்லாதெயும்
சிலம்பு விலை கூறுதெயும்
அவள் வழக்கம் கேளாதெயும்
அவளெ உறவாடாதெயும்
அகப்பட்டும் நீர் கொள்ளாதெயும்
மேக்கெ தெருவதிலெ
மெயிக்கண்ணி ஒருத்தியுண்டும்
அவள் தெருவில் சொல்லாதெயும்
சொல்லாதெயும் நில்லாதயும்
சிலம்பு விலை கூறுதெயும்
அவள் வழக்கம் மேளாதெயும்
அவளெ உறவாடாதெயும்
அகப்பட்டும் நீர் கொள்ளாதெயும்
வடக்கெ தெருவதிலெ
மயிக் கண்ணி ஒருத்தி யுண்டும்

1488 கள்ளு - பனையிலிருந்து பெறப்படும் மது
1509 மைக்கண்ணி என்பது மயிக்கண்ணி என்று எழுதப்பட்டுள்ளது.

அவள் தெருவில் சொல்லாதெயும்
சொல்லாதெயும் நில்லாதெயும்
சிலம்பு விலை கூருதெயும்
அவள் வழக்கம் கெளாதெயும்
அவளெ உறவாடாதெயும்
அகப்பட்டும் நீர் கொள்ளாதெயும்
கிழக்கெ தெருவதிலெ
கிளி மொழியாள் ஒருத்தி யுண்டும்
அவள் தெருவில் சொல்லாதெயும்
சொல்லாதெயும் நில்லாதெயும்
அவள் வழக்கம் கேளாதெயும்
அவளெ உறவாடாதெயும்
அகப்பட்டும் நீர் கொள்ளாதெயும்
தென் மதிரெ கூடலிலெ
செஞ்சிலம்பெ விலைகூரு
சிலம்பெயுமொ மாறிவிற்று
திட் (ெ) டனவெ வாருமென்றாள்

கோவலன் மதுரைக்குச் சிலம்புவிற்க வரல்

மணிச் சிலம்பெ கயில்வாங்கி
வணிகேசன் த(ா)னெ நடந்தான்
தனியாக வழி நடந்து
தய்தலரெ நிந்நுவாடி
வணிகேசன் கோவலரும்
மாடேறும் பெருமாளெப்போல்
தனியார மணியடெத்த
தாள்ச் சிலம்பு கயிலேந்தி
பாண்டியனார் மதிரயிலெ
பல பெண்ங்களுள்ள பட்டணத்தில்
கூன்னுமொ பாண்டியனும்

1534 திட்டெனவே — திட்டமாகவே
1540 மாடேறும் பெருமாள் — சிவபெருமான்
1546 கூன்பாண்டியன் என்பது கூன்னுமொபாண்டியன் என்று எழுதப்பட்டுள்ளது.

கூன்றிரிக்கும் பட்டணத்தில்
தென் மதிரெ கூடலிலெ
சென்று சிலப்பெயும் விலெகூரு
சிலம்பு கொள்வீரொ பெண்ங்கள் சிலம்பு கொள்வீரொ
வாருங்காணும் செட்டிய பிள்ளெ
வாதபடி கிடந்து உள்ளெயும் வாரும்
வாற்த்தெயெ சொல்லி சிலம்பெயும் தாரும்
உம்மெயும் கொள்வோம் சிலம்பெயும் கொள்வோம்
உம்மெப்போல் நாலாறு பேரெயும் கொள்வோம்
ஓராயிரம் பணம் பெற்ற சிலம்புக்கும்
ஈராயிரம் பணம் நாங்கள் தருவோம்
சேழம் சிலம்புண்டானால் விற்றும் தருவோம்
சிலம்பு கொள்வீரொ பெண்ங்கள் சிலம்பு கொள்வீரொ
அந்த தெருவும் கடந்தல்லெ(ா) செட்டி
அடுத்த தெருவில் சிலம்பு விலெகூரு
பச்சிலெ கொண்டு முகத்தெ மினுக்கி
பாலகன் கயில் பணத்தெ பறித்து
நித்திரெ தன்னில் கழுத்தை அறுக்கின்ற
நீலிய பெண்ங்கள் சிலம்பு கொள்வீரொ
அந்த தெருவும் கடந்தல்லொ செட்டி
அடுத்த தெருவில் சிலம்பு விலெகூரு
வாருங்காணு மெந்தன் செட்டியபிள்ளெ
ஒரு வாற்த்தயும் சொல்லி சிலம்பெயும்தாரும்
உம்மெயும் கொள்வோம் சிலம்பெயும் கொள்வோம்
உம்மெப்போல் நாலாறு பேரெயும் கொள்வோம்
அய்யாயிரம் பணம்பெற்ற சிலம்பிக்கும்
ஆருயிரம் பணம் நாங்கள் தருவோம்
சேழம் சிலம்புண்டானால் விற்றும் தருவோம்
சிலம்பு கொள்வீரொ பெண்ங்கள் சிலம்பு கொள்வீரொ
அந்த தெருவும் கடந்தல்லெ(ா) செட்டி

1551 வாதபடி - வாசல்படி
1551 கடந்து என்பது கிடந்து என்று எழுதப்பட்டுள்ளது.
1557 சேழம் — அழகு, பெருமை
1561 பச்சிலெ — பசுமையான இலை
1563 நித்திரை > நித்திரெ (பே. வ. மா) — தூக்கம்
1564 நீலி — துட்டை, துர்க்கை

அடுத்த தெருவில் சிலம்பு விலை கூரு
தீட்ட உரலிலெ நெல்லெயும் போட்டு
சீராடி சீராடி நெல் (கு)த்தும் பெண்ங்கள்
சிலம்பு கொள்வீரொ பெண்ங்கள் சிலம்பு கொள்வீரொ
கள்ளி பாலுடன் காட்டெருமெ பாலும்
காளெயின் கரோசினெ தன்னெ சேற்த்து
பேச்சுரெக்காய விட்டு புழிந்து
பெட்டெ கருங்கோழி முட்டயும் கூட்டி
ஆக்கிருன் மதிக்கிருள் மருந்தெயும் சேற்த்து
அனியாய கன்னி அரும்பாவி நீலினி
சிலம்பு கொள்வீரொ பெண்ங்கள் சிலம்பு கொள்வீரொ
அந்த தெருவும் கடந்தல்லொ செட்டி
அடுத்த தெருவும் கடந்தல் லொ செட்டி
அடுத்த தெருவில் சிலம்பு விலை கூரு
வன்ன நாரெ வடமாயி முறுக்கி
வாத படி தோறும் ஊஞ்சோலும் போட்டு
வன்ன பலவித ராகங்கள் பாடியெ
மகிழ்ந்திருந்து ஊஞ்சோல் ஆடின்ற பெண்ங்கள்
சிலம்பு கொள்வீரொ பெண்ங்கள் சிலம்பு கொள்வீரொ
கரயாளர் தெருவோடெ
தான் நடந்து கோவலரும்
மணியாரம் தரியடைத்த
அழகு மணி செஞ்சிலம்பெ

1578 சீராடி சீராடி - கொண்டாடி மகிழ்ந்து, சிறுதின்பண்டங்களைத் தின்று

1580 கள்ளி - ஒரு மரம்

1581 கோரோசனை > கரோசினெ (பே. வ. மா) - காளையின் வயிற்றிலிருந்து எடுக்கப் பெறும் மஞ்சள் நிறமுள்ள ஒரு பொருள்.

1583 கருங்கோழி - கருமாமிசமுடைய கோழி

1584 ஆக்கிருள் மதிக்கிருள் - ஒரு மருந்துப் பெயர்.

1580-1584 இவ்வரிகளில் ஏதோ ஒரு வகையான மருந்து செய்யும் முறை கூறப்பட்டுள்ளது.

1589 நார் - பனை, தென்னை போன்றவைகளின் மட்டையின் மேல் பகுதியில் இருந்து எடுப்பது

1590 ஊஞ்சல் > ஊஞ்சோல் (பே. வ. மா). இன்றும் குமரிமாவட்டத்தில் ஆடி, ஆவணி போன்ற மாதங்களில் வீடுதோறும் ஊஞ்சல் போட்டு ஆடிப்பாடும் வழக்கம் உள்ளது.

தனியாமல் தனெ யெடுத்து
தானவரும் விலெ கூரு

பெண்கள் சிலம்பின் தன்மையைக் கூறி வாங்காமலிருத்தல்

விழியாரும் மொழி மடவெர்
வந்தெடுத்து கண்ட பேர்கள்
பணியார மணிச் சிலம்பெ
பாற்த்தவர்கள் யேது சொல்வார்
தொக்கல்லவெ யிச்சிலம்பும்
தொட்ட பேர்கள் யெரிந்திடுவார்
பத்தினிமார் கால்க்கணிந்தா
மணிச் சிலம்பு யென்ருர்கள்
இட்டிருந்தால் முடி தெறிக்கும்
இருந்த தலம் தீ பிடிக்கும்
கொள்ள வொண்ணுதிச் சிலம்பும்
கொடியிடெமார் மாறி விட்டார்
மயிலாரும் விழி மடவார்
வந்தெடுத்து கண்ட பேர்கள்
தெளிவான சிலம்பிது போல்
தேசத்திலும் கண்டதில்லெ
அளியாரும் குயில் மடவார்
ஆயிழெமார் மாறிவிட்டார்
உச்செ திரியும் மட்டும்
உள்ச் சிலம்பெ விலெ கூரு
அத்தியடி மூடதிலெ

தட்டான் பவனி வரல்

அமற்ந்திருந்தார் கோவலரும்
பாண்டி யெற்க்கு கண்ணுளன்
பாவி கள்ளன் கூனன் தட்டான்
பாண்டியனுர் முன்பில் வரவெ
மதிரயிலெ வந்தார்கள்
கூட்ட தட்டான் மாரும்

1594 கரயாளர் - ஒரு சாதிப் பெயர்
1618 உச்செ — நடுப்பகல். திரியும் — மாறும்
1620 அத்தி — ஒரு மரம்
1623தட்டான் — பொற்கொல்லன்

கொலுவில் வரும் தட்டாரும்
ஆயிரம் பேர் தோழரோடெ
அரசருட அமச்சரெப் போல்
முன்னாளில் சமெத்து வயித்த
மோதிரவும் கயிக்கணிந்து
தண்டிகயின் மீதேறி
தானவரும் பவனி வர
கோவலரெ யிருக்க கண்டான்

கோவலன் சிலம்பினைத் தட்டானிடம் கொடுத்தல்

கண்ட பொழுதிலெ தட்டானும்
கருதி மொழிந்தானெ ஒரு வாற்த்தை
எங்கிருந்து வாறீரொ
என்னுடய தம்பியரெ
பட்டணத்தில் நின்று வாறேன்
மணிச் சிலம்பெ மாறிவிக்க
கூறும்விலெ நானறியேன்
கொள்வார்க்கு நான் கொடுப்பேன்
கண்டு தந்தீர் தானாகில்
கரயாளனாயிருப்பீர்
மணிச் சிலம்பெ யெடுவும் தம்பி
மணித் திரங்கள் காணட்டென்றான்
களவதொன்றும் அறியாமல்
கயிக் கொடுத்தான் மணிச்சிலம்பெ
கொண்டு சென்று கயிக்கொடுக்க
கொற்றவரெ போலெவாங்கி
களவாகா கூன்ற தட்டான்
கண்ணிலொத்தி மடியில் வயித்தான்

1629 அமைச்சர் > அமச்சர் (பே. வ. மா)
1632 தண்டிகை > தண்டிக (பே. வ. மா) — பல்லக்கு
1637 வாறீரோ — வருகிறீரோ
1643 கண்டு — கொள்பவரைக் கண்டு
1646 திறங்கள் என்பது திரங்கள் என்று எழுதப்பட்டுள்ளது.
1646 காணட்டு — பார்க்கட்டும்
1650 கொற்றவர் — மன்னவர்
1651 களவாகா — திருட்டு எண்ணத்துடன்
1652 கண்ணிலொத்தி — அரிய பொருட்களைப் பெற்றால் கண்ணில் ஒற்றிக் கொள்ளுதலும் ஒரு வகையான பழக்க வழக்கமாம்

தட்டான் கோவலனைக் கள்வன் எனல்

முத்தழகு பாண்டியெர்க்கு
முதல் கொடுக்க நானிருந்தேன்
இத்தெருவெ கொண்டு வந்த
எங்கள் குல தெய்வமல்லொ
கய்யார சமெத்த பணி
கண்டறிய மாட்டார்களொ
எப்படியொ கொடுபோனுயி
இச்சிலம்பெ நீயொ தான்
மணிச் சிலம்பெ குறெதீர்த்து
மணியறக்குள் வயித்திருந்தேன்
நீயும் வந்து கொடுபோனுயி
இச்சிலம்பெ கால்க்கணியாள்
ஓடாமல் பிடியும் மென்ருன்
உன்கூட கட்டவெனர்
நீதானெ கட்டகள்ளன்
வேறு முண்டெர சொல்லுமென்ருன்

கோவலன் சிலம்பின் விபரம் கூறல்

ஒன்னுணெ தட்டானெ
உடலினக்த உருகுதுகாண்
எள்ளழகும் களவறியேன்
ராவு வழி நடந்தறியேன்
காவெரிப்பும் பட்டணத்தில்
கர்ண்ணகய்யெ மாலேயிட்டேன்
கர்ண்ணகய்யாள் தாயி தகப்பன்
கால்க்கணிந்த பரிபுரங்கள்

1662 அறைக்துள் > அறக்துள் (பே. வ. மா)
1663 கொடு — கொண்டு
1666 கட்டவெனர் — திருடியவர்கள்
1667 கட்ட — திருடிய
1671 எள்ளழகும் — எள் அளவு கூட
1672 இரவு > ராவு (பே. வ. மா)
1676 பரிபுரம் — சிலம்பு

சீதனமாயி தந்தமணி
சிலம்பிதுகாண் தட்டானெ
செட்டி வரி பூண்டதினுல்
சிலம்பு விக்க போந்தேன் நான்
கோளறிந்த மதுரயிலெ
கொண்டு வந்தேன் விலைகூரு
சிலம்புனக்கு வேணுமொதான்
சிலம்பெயுமொ நீயெடுத்து
தீவினைகள் செய்யாதெ
திட்(ெ)டனவெ விட்டுவிடு

தட்டான் கோவலனைப் பாண்டியனிடம் கொண்டுவந்து நிறுத்துதல்

சற்றும் சொல்லெ கேளாமல்
தயவில்லாமல் கூனன் தட்டான்
பாண்டியனுர் திருமுன்பிலெ
பரிசினுடன் கொண்டுவிட்டான்
யடிதனிலெ சிலம்பெ வயித்து
பாண்டியரெ நமஸ்க்கரித்தான்
மன்னவனெ தென்னவனெ
மகிடமுடி பாண்டியனெ
உம்முடெய தேவியர்கால்
சிலம்புமொ களவாண்டு
தின்று விட்டேன் யென்று சொல்லி
சினத்தீரெ பாண்டியோனெ
சிலம்பு கட்ட கள்ளனேயும்
கள்ளனேயும் தொண்டியேயும்
கய்யோட கொண்டு வந்தேன்
தமிள் மதிரெ பட்டணத்தில்
ஓடியோடி கொண்டு வத்தேன்
உம்மாணை கள்ளனெத்தான்

1677 சீதனம் — மணப்பரிசு
1681 கோள் — இடையூறு, கோள்சொல்
1692 நமஸ்க்கரித்தான் — வணங்கனுன்
1694 மகுட > மகிட (பே. வ. மா)
1698 சினத்திரெ — கோபமுற்றீரே
1700 தொண்டி — களவாடிச் சென்ற பொருள்

தேடி நடந்தலந்தேன்
தெளிந்த கள்ளன் யிவனெயுந்தான்

பாண்டியனின் விசாரித்தலும் கோவலன் மறுமொழியும்

வாற்த்தெ கேட்ட பாண்டியொனும்
மாறுத்தங்கொரு வாற்த்தெ யேதுசொல்வான்
நீ தானெ கட்டகள்ளன்
வேறுமுண்டொ சொல்லுமென்ருர்
உம்மாணெ பாண்டியனெ
உடலினக்கு உருகுதுகாண்
எள்ளழகும் களவறியேன்
ராவு வழி நடந்தறியேன்
காவெரிப்பும் பட்டணத்தில்
எச்சந்திகள் காளவாணு
இங்கடியென் போந்தேனெ
உருவுடெய மாதேவிக்கு
உலகறிய நான் கொடுத்த
ஒருநாள் பொன்னுக்குண்டோ
உம்மாணெ யிச்சிலம்பும்
இச்சிலம்பும் கட்டெனுகில்
இணைச் சிலம்பும் யில்லெயொதான்
சிலம்பணிந்த காலில்லயொ
தேவியெரும் நடுவில்லெயொ
தேவியெரெ வரவழைத்து
சிலம்புயிணெ பாருமென்ருன்
தேவியர் தான் நடுவு சொன்னல்
செயிவதெல்லாம் நான் பொறுப்பேன்

பாண்டியன் நடுவுசொல்ல தேவியரை வரவழைத்தல்

அன்னேரம் பாண்டியனும்

1705 அலைந்தேன் > அலந்தேன் (பே. வ. பர)
1717 போந்தேனெ – வந்தேனே
1718 உரு – அழகு
1723 இணச்சிலம்பு — இணைகளுள் ஒன்று
1725 தேவியெர் – பாண்டியனின் மனைவி
1728 நடுவு — நீதி, நியாயம்

ஆளு விட்டான் தேவியர்க்கு
ஆளோடி சென்றிடவெ
ஆயிழயாள் தானெருங்கி
கோவிக்கெயும் விட்டிறங்கி
கொற்றவனர் முன்ம்பில் வந்தாள்
ஏனெ யெந்தன் மன்னவெரெ
என்னே அழெத்ததோர் கருமமெல்லாம்
வாடி பிள்ளெ தேவியெரெ
வாற்த்தெ சொல்லெ கேளுமென்றார்
அஞ்சியிவன் கொஞ்சுகிறன்
கெவனித்து பாற்க்க வேணும்
கெஞ்சனெ கால்ச்சிலம்பு வாங்கி
கண்டது சொல் தேவியாரெ
உன் காலில் சிலம்பிதுவொ
உள்ளது சொல் தேவியாரெ

தேவியர் நடுவு சொலல்

சேலே முந்தி தனெ யொதுக்கி
சிலம்பு கய்யி வாங்குவாளாம்
சிலம்பெயுமொ கய்யில் வாங்கி
தரி நோட்டம் பாற்ப்பாளாம்
நாக மணி உள்ளீடும்
நாராயணு சிவன்று புலம்பிடுமாம்
நாராயண சிவனெ யென்று
நாகமணி தரி புரள
சிலம்பு தரியோட்டம் கண்டா போதெ
தேவியெரும் யேது சொல்வாள்
என் காலில் சிலம்புமல்லா

1731 ஆளும் - தூதன்
1734 கோவிக்கெ - அரண்மனே
1737 அழைத்த > அழெத்த (பே. வ. மா)
1740 அஞ்சி - பயந்து
1741 கவனித்து > கெவனித்து (பே. வ. மா)
1745 உள்ளது - உண்மை
1746 முந்தி — முந்தானே
1749 நோட்டம் — விலேமதிப்பு, நீரோட்டம்
1756 அல்லா — அல்லே

என் யிணேகாலில் சிலம்புமல்லா
இச்சிலம்பெ அணிவாற்க்கு
நான் அடியாளும் ஆக மாட்டேன்
இச்சிலம்பெ தொட்ட வெர்க்கு
இட்டிருந்தால் முடி தெறிக்கும்
பத்தினிமார் பூண்ட பணி
பல ஸ்திரிகள்க்கும் ஆகாது
செட்டிய பெண் பூண்ட பணி
தேவியெற்க்கும் ஆகாது
இட்டிருந்தால் முடி தெறிக்கும்
இருந்த தலம் தீப்பிடிக்கும்
தொக்கல்லவெ யிச்சிலம்பும்
தொட்ட பேர்கள் யெரிந்திடுவார்
இச்சிலம்பெ பணி முகிக்க
இவ்வூரில் தட்டாருண்டொ
தனி நாகமணி யடைத்த
தாள் புரத்தெ கண்டில்லயொ
நீ தானெ தட்டானெ
நிணேந்திருந்து பணி முகிக்காமல்
மாற்றும் உரயெ அறிவாயொ
நன்றல்லவெ தட்டானெ
நடுக்கேடு செய்யாதெ
கோவலரெ கொல்லாதெ
கொடுமெ யெல்லொ தட்டானெ
சிலம்பெயுமோ கயி கொடுத்து
தேசத்திலெ போக சொல்லும்

தட்டான் கோவலனுக்குத் தண்டணே
கொடுக்கச் சொலல்

தேவியர் தன் மொழி கேட்டு
திசை நடுங்கி தட்டானும்

1759 அடியாள்—வேலேக்காரி
1763 ஸ்திரி—பெண்
1773 தாள்புரம் - சிலம்பு
1775 முகிக்காமல் - முடிக்காமல்
1776 மாற்று - தரம், உரைய > உரெய (பே. வ. மி)
1779 கேடு-தீங்கு

தென்னவெரெ முகம் நோக்கி
பாண்டியோனெ சிரித்து விட்டான்
நன்றல்லவெ மன்னவெனெ
நாடாள போகாதெயும்
அழுத கண்ணீர்க்கஞ்சினவன்
இனி அரசர் முகம் பார்ப்பேனோ
கள்ளனுட வடிவைக்கண்டு
தேவி கண்ணுசை கொண்டாள் மன்ன
வெட்க்கி அவள் பதுங்க கண்டேன்
விழியாரும் சிரிக்க கண்டேன்
வித்தெயுள்ள கள்ளனிவன்
விட்டுவிட நினையாதெயும்
சற்று நோக்கி சொல்லும்போது
உந்தன் தேவியாரெ கோடுவான்
கட்டவெனெ தான் பிடித்து
கய்யோடெ கொண்டு வந்தேன்
கட்டி அடிப்பதுக்கும்
கை பிறகே ஊன்றிடவும்
தென்னவெரெ பாண்டி மன்னு
தேசத்தின் முறமையல்லொ

பாண்டியன் பல சோதனைகள் செய்தல்

குண்டணியெ தான் கேட்டு
கோபமுற்று பாண்டியனும்
பழி முடிந்த பட்டணத்தில்
பார மதுரை முடிப்பதுக்கெ
கோவலரெ கொல்வதற்கு
குண்டணியான் பாண்டியனும்
தமிழ் மதுரெ பட்டணத்தில்
பலச் சோத்தியங்கள் செய்வோமென்றார்
மதகரிக்கும் மது கொடுத்து

1786 தென்னவெர் - பாண்டியர்
1796 வித்தை > வித்தெ (பே. வ. மா) — தந்திரத்தொழில்
1799 கோடுவான் – கொள்ளுவான்
1813 சோத்தியம் - சோதனை
1814 மதகரி - மதம்பிடித்த யானை

மதப்பெடுத்தி விடுவாராம்
சீறி வந்த மதவானை
சிங்களவத் தெருவோடெ
கண்டவரைத் தான் விரட்டி
கால் விலங்கு தான்முறித்து
கண்டவெரெ தான் விரட்டி
நடுத்தெருவே தான் ஓடி
கோவலனார் மும்பில் வரா
கொல்ல வந்த மதவானை
கொம்பொதுக்கி கும்பிடுமாம்
கொல்லவென்றும் அல்லவென்றும்
கொடியழகு இல்ல என்றும்
மஸ்த்தகத்திலெ எடுத்திருத்தி
பாண்டியனார் திரு மும்பிலெ
பரிசினுடன் கொண்டு விட்டிடுமாம்
கண்டிருந்த கூனன் தட்டான்
மன்னவெரெ கைதொழுது
சொல்லுகிறேன் நானுமினி
இவன் தொழிலெ கண்டீரோ மன்னவெரெ
வானமொக்கெ மறத்திடுவான்
ராவு பகல் ஆக்கிடுவான்
அந்த வார்த்தை கேட்டபோதெ
கோவலரும் யேதொ சொல்வார்
மன்னவரெ உம்முடையா
சிலம்பு கட்டேன் என்று சொல்லி
அந்த வார்த்தை கேட்ட பாண்டியனும்
சிறந்த தூதுவரெ தான் வருத்தி
அஞ்சு தலயுள்ள அரகத்தெயும்
செப்புக் குடத்திலெ பிடித்தடத்து
சிலம்பெயும் உள்ளிலிட்டு

1815 மதப்பெடுத்தி - மதத்தினை ஏற்படுத்தி
1827 மஸ்த்தகம் - யானையின் தலை
1829 பரிசினுடன் - பெருமையுடன்
1834 வானமொக்கெ - வானம் முழுவதும்
1842 அரகம் - பாம்பு

குறிப்பு:-வரி எண் 1839க்கும் 1840க்கும் இடையே ஏதேனும் ஒன்றிரண்டு வரிகள் இருந்திருக்கலாம். ஏனெனில் செய்தி தொடர்ச்சிவிடுபடுகிறது. ஆனால் ஏட்டில் அதற்கான இடவிடுபாடோ, பொடிவோ இல்லை.

சீக்கிரமாயி கொடு வாருங்கள்
வாற்த்தை கேட்ட தூதுவரும்
அரகத்தையும் பிடித்தடத்து
அரசர் மும்பிலெ கொண்டு வந்தார்
செப்புக் குடத்திலெ சிலம்புயிட்டு
கோவலரொடெ யேதொ சொல்வார்
சிலம்பு கட்டனில்ல ஞனல்
செப்புக் குடத்திலெ கையிட்டு
சிலப்பெயெயும் நீ யெடுமென்றார்
அந்த மொழி கேட்ட கோவலரும்
செப்புக் குடத்திலெ கையை யிட்டு
சிலம்பெயும் கையிலெடுத்தார்
கண்டிருந்த கூனன் தட்டான்
கருதி மொழிந்தானெ ஒரு வார்த்தெ
கண்டீரொ மன்னவெரெ
இவன் செய்த தொழிலெயெல்லாம்
ஆனெ வாயெக் கெட்டினவன்
அரகம் வாயெக் கெட்டானே
பூனெ வாயெக் கெட்டினவன்
புலியது வாயெ கெட்டானே

பாண்டியன் மழுவரசனிடம் கோவலனை வெட்டிவிடச் சொலல்

அப்பொழுதே மன்னவரும்
மழுவராசனெ தன்னெ வருத்தி
மழுவு தன்னெ காச்சிடவெ
மன்னவரும் யேதொ சொல்வார்
கோவலரெ தனெ வருத்தி
சிறந்த மழு தன்னெ எடுவுமென்றார்
வார்த்தெ தன்னெ கேட்டபோதெ
மாயவரெ தனெ நினைத்து
மழு தன்னெ யெடுத்திடவெ
கண்டிருந்த கூனன் தட்டான்
கருதி மொழிந்தாரெ ஒரு வாற்த்தெ

1861 'வாயைக் கட்டுதல்' என்பது மந்திரவாதத்தால் செய்யப்படும் ஒரு தந்திரத்தொழில் என்பர்.

1866 மழுவராசன் - கோடரி போன்ற கருவியினை உடையவன்

கண்டிரொ மன்னவெரெ
இவன் செய்த தொழிலெ யெல்லாம்
வித்தயுள்ள கள்ளனெயும்
விட்டு விட நினயாதேயும்
இவனெ விறுதாலெ விட்டு விட்டால்
ராஜ்ஜியத்தை முடிப்பானிவன்
அந்த வாற்த்தெ கேட்ட பாண்டியனும்
பாண்டியனும்மேதொ சொல்வார்
உச்சிமலே பொற்றையிலெ
உயர்ந்த வேங்கைமர மூடதிலெ
சிலம்பு கட்ட கள்ளனெத்தான்
வெட்டி வயித்து வாரும் என்றூர்
ஆமெனவே சம்மதித்து
கோவலரெ கயி பிடித்து
கொடுபோனூர் மழுவாரசன்
கொண்டு சென்று மழுவராசன்
குலகளெ செய்யவென்று
போகுமந்த வேளேயிலெ
கோவலனூர் வடிவு கண்டு
வெட்டவும் கயி ஆடாமல்
வெட்டவும் கயி ஆடாமல்
மழுவரசன் யேது சொல்வான்
மலே வழிக்கெ யேறி நீயும்
போயிப் பிழெயும் கொவலரெ
மானெவெட்டி ரெத்தம்
மன்னவெர்க்கு ஒப்பிடுவேன்
கெட்டும் பட்டேன் அடியும் பட்டேன்
கள்ளனென்று பேருங் கேட்டேன்
வெட்டி விடும் மழுவரசா
வேந்தருமெ நகெயாமல்
பல வெட்டாக வெட்டாதெ
பத்து நூறுகண்டம் ஆக்காதே

1880 விறுதால் (குமரிமாவட்ட வழக்கு) - வெறுமனே, சும்மா
1892 கொலே > குல (பே. வ. மா)
1900 மானே > மானெ (பே. வ. மா)
1901 ஒப்பிடுவேன் — ஒப்பாகக் காட்டுவேன்
1907 கண்டம் — பகுதி

ஒரு வெட்டாக வெட்டிவிடு
மோக்ஷமுள்ள மழுவராசா
கொண்டு செ[ா]ன்றும் மழுவராசன்
குலக்களத்தில் சென்று நின்று
ஒற்றமலை பொற்றயிலெ
உயர்ந்த வேங்கெ மரம் மூடதிலெ
கொண்டு சென்று மழுவராசன்
கோவலரெ யிருத்தி யிடவே

கோவலனின் வேண்டுதல்

அப்பொழுதெ கோவலரும்
அவரேது வாற்த்தெ சொல்வார்
என் கர்ண்ணகய்யாள் வருந்தனெயும்
நாயினமெ தீண்டாதெ
நரியினமெ தீண்டாதெ
ஈய்யினமே தீண்டாதே
எறும்பினமெ தீண்டாதெ
காகினமெ தீண்டாதெ
கழுவினமே தீண்டாதெ
எறும்பினமெ தீண்டாதெ
என்னெ வந்து தீண்டாதெ யென்று
ஈசுவரன் மேல் ஆணெயிட்டார்

கோவலனே மழுவரசன் வெட்டுதல்

அப்பொழுதெ கொண்டு சென்று மழுவராசன்
குலக்களத்தில் சென்று நின்று
கோவலனர் வடிவெக் கண்டு
கொல்லவும் கயி ஆடாமல்
மழுவராசன் யேது சொல்வான்
கேளுமெந்தன் கோவலரெ
உன்னுடய வடிவு கண்டு
வெட்டவும் கயி யெளும்புதில்லெ
கேளுமெந்தன் கோவலரெ
கேவலமாயி ஒரு வாற்த்தெ
தூங்கு முந்தி தனெ பிடித்து
முகமது துடயும் யென்று சொன்னார்

1918 வருந்தனெயும் - வருமட்டும், வருவரையும்

அப்பொழுதெ கோவலரும்
முன்முந்தி தெனவலித்து
முகம் துடைத்தார் கோவலரும்
சீதேவி தான் மாறிடவே
மூதேவி குடி கொள்ளுமாம்
சாடி வந்து மழுவராசன்
ரண்டு துண்டாக வெட்டி விட்டான்
சங்கெ யுள்ள கோவலரும்
ரண்டு துண்டாக விழுந்தாராம்

கர்ண்ணகை கனவு காணல்

கோவலனார் யிறந்த போதெ
கொடியிடயாள் கினவு கண்டான்
வாடாப்பு மாண்டிடவும்
மன்னர் மூகம் கூன்றிடவும்
தாணுவரும் கோவலனார்
தாழ் மதிரெ பட்டணத்தில்
இனிமில்லா மணிச் சிலம்பெ
எடுத்து விலெ கூறினதும்
கண்டு வந்து தட்டானும்
கள்ளனென்று பிடித்ததும்
வெட்டி விட்டு மழுவராசன்
வேந்தர் முன்பெ சென்றதும்
அரெக் கினவு கண்டேனெ
ஒந்நாணெ ஆச்சியம்மா
எடுத்துரெப்பென் ஒரு வாற்த்தெ
ஏனோ நீ நல்மகளெ
இந்த மொழி பேசுகிறாய்
சொன்ன வாக்கியங்கள் ஒன்றுமில்லெ

1941 வலித்து - இழுத்து
1943 சீதேவி - அருள்
1944 மூதேவி - அருளின்மை
1947 சங்கெ - சிறப்பு, புகழ்
1950 கனவு > கினவு (பே. வ. மா)
1950 இணையில்லா என்பது இனிமில்லா என்று எழுதப்பட்டுள்ளது.
1961 அரை > அரெ (பே. வ. மா)
1962 உன் > ஒன் (பே. வ. மா)

பொன்னே நீ மலங்காதெ
மன்னன் திருவெழுதி வாழ்மதிரெ கூடலிலெ
பொன்னும் சிலப்புவிக்க போனதொரு கோவலனுர்
என்னை பிரிந்தாக்கால் இருப்பாரொ உயிரிரிக்கில்
அன்னெ நான் யென்னசெயிவேன் ஆச்சிஅம்மா யென்ருழுதாள்
மசறிவிக்க மதியறியார் வாயிபகிட்டு கோளாறும்
கூறி விக்கும்படி யறியார்
என் குலவணிக பெருமாளும்
சீறியெந்தன் கோவலரெ
சிறயில் வைத்தாரொ சிவனெ
ஆறுவெனெ நானுமினி
ஆச்சி அம்மெ யென்றழுதாள்
ஆடலர்காண எந்தலயில்
அன்று வைத்த செங்களனீர்
ஊடுருக வாடினுக்கால்
உயிருமுண்டொ கோவலர்க்கு
நாடறிய போந்தொம்ங்காண்
நாங்களிரு போருமாக
கொடுமையிது போலுமுண்டாமெ
கேட்டருள்வாயி ஆச்சியம்மா
வரிசெயுள்ள கோவலனுர்
வாள் மதிரெ கூடலிலெ
அரிய பொன்னும் சிலல்பு விக்க
அவரங்கு சென்ற விடந்தெனிலெ
பரியழித்தேன் கோவலரெ
பாண்டியனுர் கொல்லுவித்தார்
தெரிசனமாயி கண்டதுவும்
தெற்றல்லக்காண் ஆச்சியம்மா

1971 அன்ன - தாயே
1971 யென்றழுதாள் என்பது யென்ருழுதாள் என்று எழுதப்பட்டுள்ளது.
1972 மதி—புத்தி, பகட்டு > பகிட்டு (பே.வ.மா)
1975 சீறி—கோபமுற்று
1984 பேருமாக என்பது போருமாக என்று எழுதப்பட்டுள்ளது
1986 வரிசெ—சிறப்பு
1994 தெற்று - தவறு
1998 நாயகன் > நாசகன் (பே.வ.மா)

வாக்கனயாள் விழிமடவான்
வணிவர்குல பத்தினியும்
நாளெ வர போனதொரு
நாசகனெ காணுமெல்
[illegible]விட்டு தேடவென்ருல்
அறிந்தமுகம் ஒரு பேரில்லெ
தேடி நான் மதுரயிலெ
தேன் மொழியெ நான் போறென்
காவெரிப்பு(ம்) பட்டணத்தில்
கள்ளர் வந்து கொள்ளெ கொண்டு
நாமிருந்தா தலமழிந்து
நன்ருக கட்டுவதும
காமனெ போல் வடிவுடெயா
கட்டிவைத்த பொன் தாலி
பெரிய குல மாமறயோன்
ஒரு பெண்ப்பறித்துயெறிந்திடவும்
போயி இருந்து நானழவும்
பொல்லாமல் கண்டெனெ
வாடாப்பு மாண்டிடவும்
மன்னர் முகம்கூன்றிடவும்
மங்கிலியம் இளெபெருகி
மடிமேலெ தரித்திடவும்
அங்கெ அவர்கள் கொடுபோக
அடிச்சிலம்பு முறிந்திடவும்
கொங்கெயின்மேல் வாள் விழுந்து
குறப்பட்டு நானழவும்
பங்கஞ்சாயெதிர் வாயில்
பல் விழவும் கண்டெனெ
கண்ட கினவத்தெனெயு
பொல்லாது ஆச்சியம்மா
என்கணவன் உயிரிளக்க

1998 நாயகன் > நாசகன் (பே.வ.மா.)
2007 காமன் - மன்மதன்
2015 இழை > இளெ (பே. வ. மா) —நூல்
2019 கொங்கெயின் -மார்பின்
2024 பொல்லாது - துன்பமானது

இப்படியும் கண்டெனெ
என்னெ யென் கால்சிலம்பால்
என் கணவன் உயிரினக்க
அன்னெ நான் கண்டகினா
அறக்குலக்காண் ஆச்சியம்மா
சொன்னென் நான் உங்களுக்கு
தூரமுண்டெ காண்மதிரெ
சென்று சென்று விலைகூறி
செழு நெதியும் வாங்காமல்
துடிக்கிதுகாண் வயறினக்கு
தன்னெ மறந்தென்னுடலும்
தள்ளாடி வருகுது காண்
உன்னாணெ ஆச்சிஅம்மா
உயிரில்லெக்காண் கோவலர்க்கு

ஆய்ச்சி கர்ண்ணகையைத் தேற்றுதல்

என்னெயென் மகளெ நீ
இந்தமொழி சொன்னாயெ
பொன்னெ நீ அழவேண்டாம்
போனபேர்க்கு அங்கெ ஒன்றுமில்லெ
சொன்னேன் நான் உங்களுக்கு
தூரமுண்டெ காண் மதிரெசென்று விலைகூறி
செழுந்நெதியும் வாங்காமல் அன்று அவரும் வருவாரொ
அறவிலைக்கும் விப்பாரொ நன்றுநீ ஒன்றறியாயி
அவர் நாளெ வருவாரினவெ நன்று நெடுமூச் செறிந்து
நீ வாடாதெ மகளெ அம்மெ யெத்தின தான் சொன்னாலும்
யென்மனசும் தேறுவதில்லெ மானெ ஒரு கலைபிரிந்து
வழிபோன விடம்ந்தனிலெ கானவர்தான்கண்ணியிலெ
அகப்படவும் கண்டெனெ போனபேர்க்கு உயிருமுண்டொ
பொறுத்திரிப்பாரொ பிறிந்தால் என்னெயென் ஆச்சிஅம்மா
யேனெயென் ஆச்சியம்மா

2030 அறக்கொலை > அறக்குல (பே. வ. மா)
2034 நெதியும் - செல்வமும்
2035 வயிறு > வயறு (பே. வ. மா)
2049 எத்தனை > யெத்தினெ (பே. வ. மா)
2050 கலை – ஆண்மான்
2051 கண்ணி - விலங்கு படுக்கும் கயிறு

என்தாயெ சொல்லுமென்ருள் வரிசெயுள்ள மதிரயிலெ
வரிசெயுள்ள மதிரயிலெ
மணிச்சிலம்பு மாறிவிற்று தரியாமல் வருவாரிங்கெ
தாமதிப்பாரோ அவர்தான் பெரிய குலபத்தினியெ
நீ பேயிக்கிஞவல்லொவொ கண்டாயி. வருவாரிங்கெ கோவலஞர்
மானெ மலங்காதெ பெரியபுகள் மதிரயிலெ
கனபெண்ங்களுள்ள பட்டணங்காண் அரியபுகள் சிலம்பு விக்க
ஆமென்றும் அல்லவென்றும் வரிசெயுடன் விலெகூறி
மாறிவிற்று வருவாரிங்கெ தரியார் தான் ஒருவிடத்தும்
தாள்வில்லெக்காண் கோவலெற்க்கு நானுனக்கு துணெயிருப்பேன்
நன்றல்லக் காண் நீயழுதால்
போனவற்க்கு ஒன்றுமில்லெ பொன்னெநீ மலங்காதெ
தேனிரிக்கும் மொழியாரெ உன்தேசியஞர் வருவாரிங்கெ
இப்படியொ யுங்கள்குலம் அறியாமல் நீ அழுதாயி
ஏனிருந்து நீயழுதாயி அஞ்சாதெ கண்ணகய்யெ
குறிபாற்த்தேன் கோவலற்க்கு குற்றமில்லெ என்மகளெ
சீறினசிலம்பு விற்று செழுகெநெதியும் கொடுவருவார்
மறுமாயம் அல்லகண்டீர் மயிலெநீ மலங்காதெ
கொங்கு மலதனில் பிறந்தா கொறமகளும் தானினவெ
சங்கணிந்து குழல் கெட்டி தலெவிரித்து முலெமூடி
எங்கு யெங்கும் குறிபாற்த்து இடத்தெருவில் வந்தாளெ
அங்கவளெ தான் காண ஆச்சியம்மா யென்ன சொல்வாள்

குறமகள் கூறி சொல்லுதல்

வாராயி நீ குறமகளெ வந்துகுறி சொல்லுமென்ன
காராரும் குழலாற்க்கு கையிபாற்த்து மெயி சொல்லுகில்
ஓராமெல் நெல்லரிசி உன்னுணெ நான்தருவேன்
நேராக கையி பாற்த்து நிஞேந்ததெல்லாம் சொல்லுமென்ருள்
காராரும் குழ(லி)னியாள் அவள் கையிபாற்த்து மெயிசொல்லவே

2057 தரியாமல் - தங்காமல்
2060 மலங்காதே - கலங்காதே
2061 கன - நிரம்ப
2073 குறமகள் > கொற மகள் (பே. வ. மா)
2075 இடத்தெரு - இடையர்தெரு
2078 கார்—கரிய, மேகம் போன்ற
2078 மெயி — உண்மை
2079 ஓராமெல் — அளவில்லாமல்

அருமெ பெண்ங்கொடி மயிலெ
அரிய கிளெ தனில்ப்பிறந்தாயி
பெருக நெதி வைத்திருந்தே(ர)ன்
பேசியுன்னெ கயிப்பிடித்து
உருமெயுள்ள கணவனோடெ
ஊரெவிட்டு நீபோந்தாயி
வருகுதொரு கொள்ளெயினி
வந்துதென்றுளெ குறத்தி
அணிந்திருக்கும் திருத்தாலி
அறுத்திருக்கவிதி உனக்கு
மானிரிக்கும் மொழியாரெ
வாணுதலெ ஒன்றுகேளு
மணம் செய்வாருண்டு கண்டீர்
மாண்ட உடல் உயிரெ விட்டு
மண(ங்)கமிளும் குழலாரெ
மாண்டவர்தான் யெழுந்திருந்து
இணங்க இன்னும் வாற்த்தெ சொல்லி
இறந்திடுவார் உன்னுணெ
பெண்ணெ நீ அஞ்சாதெ
பிழெத்திடுவார் உன்கணவன்
எண்ணவாயிப் பிள்ளத்தலெ
எனக்கு உனக்கு யென்றுரெத்தான்
யெண்ணரிய கன்னியாரெ
இன்னு மொன்று சொல்லுது காண்
வண்ண மூலெ ஒன்று யிளப்பாயி
மகளெ யென்றுளெ குறத்தியி
பரிசெயுடன் ஒரு புதுமை
வருகுது காண் இனியுனக்கு

2083 கிளே > கிளெ(பே. வ. மா.)
2086 உரிமை > உருமெ (பே. வ. மா.)
2088 கொள்ளெ -- துன்பம்
2090-2091 கணவன் இறந்த பின்னர் மனைவியின் தாலியினை அறுத்து விடுதல் ஒரு பழக்க வழக்கமாகும்.
2095 மாண்ட— இறந்த
2098 இணங்க—இதமாக

பெரியமுடி மன்னர் முன்னே
பெண்ணே நீ சென்று யெதிர்படுவாயி
பரிகலத்தோர் தாமறிய
பழிகொள்ளுவாயி சிவனாணெ
கரிய குழல் காரிழெயெ
கஞ்சமலர்க் கறியுடயிர்
பெரியமலக் குறத்தி சொல்லவெ
பெண்ணமுற்(த)த்தாள் கண்ணகய்யும்
பெரிய தீயில் விழும் தாமெரெ போலெ
யேலங்கு திருமுகம் வாடி
அழகுநீர் கரெ புரளா
அழுதுடலும் தள்ளாடி
தரியேன் நான் ஆச்சியம்ம
ஏன்தாயெ என்றழுதாள்

ஆய்ச்சி மீண்டும்கர்ண்ணகையைத்தேற்றுதலும் கர்ண்ணகையின் பதிலுரையும்

தற்கமலம் மாதுடெயாள்
நந்நுதலெ அஞ்சாதெ
பண்டும் ஒக்கும் குறத்திகள் சொல்
பாரறிந்தா பொயியெல்லவெ
நெறுத்து பொன் மாறி விற்று
உன் கணவன் வருவாரிங்கே
வெறுத்துப்போ குறத்தியென்று
மெல்லியரும் சினத்து விட்டாள்
கண்டுவந்தொ சொல்லுகிறாள்
கன்னருந்தும் மங்காளி
ஆயிழெயாள் ஆச்சியம்மெ
அழுதவளெத் தானணைத்து
அண்டெயிலெ தானிருத்தி அழுத கண்ணீரும் தான்துடெத்து

2112 பரிகலத்தோர் - படை பரிவாரங்கள்
2118 தாமரை > தாமரெ (பே. வ. மா)
2119 இலங்கு > யேலங்கு (பே. வ. மா) - ஒளியுடைய
2124 கமலம் - தாமரை
2126 பண்டும் - முன்னர்
2136 அண்டை - அருகு, பக்கம்

வண்டிருக்கும் பூங்கூந்தால் வாரிமுடிந்தாள் ஆச்சியம்மையி
தேன் மொழியாள் கண்ணகய்யும் கேட்டருள்வாயி ஆச்சியம்ம
கொண்டவனேடுயுரிளக்கும் குலத்தெ உண்ணும்வகெ நாங்கள்
யெத்திசையும் நான்தேடி யென்னுடெயா வஞ்சியரெ
கண்டொழிய நானுமினி
கண்டாக்கால் வருவேனிங்கெ
அன்னெயெல்லொ நானுனக்கு
ஆச்சியம்மா கேட்டருள்வாயி
மன்ன மணிச்சிலம்பூவிக்க
மதிரெயிலெ போனவெரெ
தேடினன் கண்டாக்கால்
பின்னிருபேரும் வருவோம்
பெண்ணரசே நான் வருவேன்
பெற்றதாயி நீயெல்லவொ
முல்ல யோகம் முழுந்நீலா
சூதகப்பூ அல்லி மலரீ
அல்லி மலர் யெங்னெயும்
ஆண்டதிருக் கண்ணரெ
பெல்லா மொழி சொன்னயெ
போக வழிநீயறியாயி
சொல்லறியேன் உங்களுக்கு
துலங்காதொ பொன்னடிகள்
உன்னெ பிறிந்தாலும்
உசிர் வாளேன் யென்மகளெ
பொன்னெ நீ போனக்கால்
பொறுத்திரிக்கும்படிமாட்டேன்
அன்ன வன்னம்மாக உன்னெ
அடைக்கலமாயி வையித்த பேர்க்கு
என்னமதி நான்சொல்லுவேன் இனிஉனக்குத்துணெவருவேன்
துணே வேண்டாங் காணினக்கு தூரமில்லெ நானறிவேன்
என்கணவெனெ நான் கண்டக்கால் கயிமேலெ வருவேனிங்கெ

2139 கொண்டவன் - கணவன்
2140 வஞ்சியர் - வஞ்சித்தவர்
2153 யெங்னெயும் — எங்கும்
2160 உயிர் > உசிர் (பே.வ.மா)
2163 அன்னவன்னம்மாக—நம்பிக்கையாக
2167 கயிமேல — உடனடி

அணைத்தவளை தானே தழுகி அணிதறள மணி கொடுத்தாள்
சங்கணிந்த முலையழ்க்கு சொல்லிடு வாளாச்சியம்மெயி
சூணகமணிந்தமுலயாள்க்கு
சொல்லிடுவாள் ஆச்சி அம்மெ
அன்புரத்தி லெழுப்புண்டா
ஆலவாய் சொக்கனாரெ
அந்த முறயெ தான் தழுகி
அடியளகு தான் முகந்து
என்ந் தனிமை தீற்த்தவளெ
இனியவரெ கண்டாக்கால்
வந்தொழிய போகாதெ
மறத்தியுன்னைப் போலுமுண்டொ
சிந்தெ கலங்கும் படியெ
தெய்வமெ இனயழுதாள்
பணியார மணியடெத்தா
பரிபுரவும் ஒன்றேந்தி
அணிமணி சேர் பொன்னாரம்
அழகி லெங்கும்படி படுத்தி
தனியாதே கண்ணெ நீ தாயே
தாயெ உனெப் பிரிந்தால்
வணிகனேயும் நான் கண்டாக்கால்
வருவேனின் நாடந்தாள்
மயிலிடிந்த மொழியாரெ
மரகதமா விழியாரெ
குயிலடந்த மொழியாரெ
காவலரெக் கண்டாக்கால்

2168 தழுகி — தழுவி
2170 சூணகம் — ஒரு ஆபரணம்
2173 ஆலவாய் — மதுரை
2175 அடி - பாதம்
2174-2175 குமரி மாவட்டத்தில் பெண்கள் பிரிந்து செல்லுகின்ற பொழுது ஒருவரையொருவர் ஆரத்தழுவி முகர்ந்து கொள்ளும் பழக்கம் இன்றும் சில நாட்டுப்புறங்களில் காணப்படுகிறது. அம்முறையில் கர்ண்ணகை ஆய்ச்சியினைத் தழுவி பாதம் வரை முகர்ந்து கொண்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது
2191 மரகதம் > மரதகம் (பே.வ.மா)

கவிலடந்த கண்ணுரெ
காணவாயென் னெயென்ருள்

கர்ண்ணகை கோவலனைத் தேடிவரல்

அயலிருந்தாள் முறெயிடெவெ அன்னவன்னபடி நலந்தாள்
போனவளெபாற்த்திருந்து பொருமியழுதாளாச்சியம்மா
நான்னிருக்கில் யேன் யழுதாயி நல்லுயிரும் அவளேசவிடெ
மானிருக்கு கண்ணுரெ வைத்திருக்க விதித்தில்லெ்னெ
வானவர் இந்திரன் மகளொ மாயமோயினயழுதாள்
வாச்செழுந்த பூங்குழலாள்
வணிவர் குல பத்தினியாள்
கால்ச் சிலம்பெ கொடுபோனு
கணவனெங்கெ இனத்தேடி
ஆச்சியம்மா மனெயும் விட்டு
அய்யொ யென்பாவமென்று
தேனிரிக்கும் மொழி மயிலாள்
பதறி நடெகொண்டனளெ
அன்புராசிவேஷம் கொண்டார்
அலவாய் சொக்கனுரெ
தம்புரானெ என்கணவன்
தாமதித்தாரெப்படியெ(ர)தான்
அன்புருக வாற்த்தெ சொல்லி
அயல்பதியில் போனதொரு
நம்பியரெ காணமல்
நந்நுதெலாள் நடந்தனெளே
கட்டழிய கற்ப்புடையாள்
காதலியாள் கண்ணகய்யும்
முட்டாங்கும் தனெச் சாற்த்தி
முல்லமலர் நகர் கடந்தாள்
இன்றுமுதல் தனித்தறியேன்
மட்டிருக்கும் கூடல்விட்டு மறவர் கொற்ற காடும் விட்டாள்
அட்டதிக்கும்புகள் படைத்த அய்யனர் குளம் கடந்தாள்

2197 பொருமி - விம்மி
2201 வாய்த்தெழுந்த > வாச்செழுந்த (பே. வ. மா)
2219 முட்டாங்கு - முக்காடு

ஒன்றும் அறியேன் சிவனெ ஊரெவிட்டுநடந்தறியேன்
என்தலெயில் யெழுத்திதுவெ வென்றிபுகள் மதிரெயெங்கெ
மேக்கொ தெக்கொ வடக்கொ நின்றவளும் அழுதிடுவெ

கர்ண்ணகைக்கு வழியிடை ஓர் இடைச்சி துணைவரல்

அப்பொழுதெ ஒரு நேரிடைச்சி வந்திடுவாள்
யெனமுதாயி நீ மகளெ
எந்த ஊர் யேது குலம்
நான் உனக்கு துணெவருவேன்
என்நந்நுதலெ அஞ்சாதெ
கான்நிற பூங்குழலெ
கணவன் உன்னெயேன் பிரிந்தான்
தேனிரிக்கும் மொழியாரெ
செய்தியெல்லாம் சொல்லுமென்ருள்
மெய்யாக சொல்லுகிறேன்
மேல்முருகர்சீர்பாதம்
வையகத்தோர் தாமறிய
வந்திருந்தோம் பட்டணத்தில்
செப்புகள் மதிரயிலே
சிலம்புவிக்க போனவெரெ
அய்யோ நான் தேடிவந்தேன்
அறியேன் நான் மதிரெயென்ருள்
வரிசெயுள்ள பெண்கொடியெ
மானெ நீமலங்காதெ
பெரியபுகள் மதிரெமட்டும்
பெண்ணெ நான் துணெவருவேன்
அரியகலியுகமிதுவெர்
அய்யொ நீ தனிய வந்தாயி தரியார்காண் ஒருவிடத்தும்
தட்டுமாற்று உண்டௌ வென்ருள் சிறந்தவடீ யிளமயிலெ
செழியன் தமிள் கூடலிலெ போந்தவரெ தேடிவந்தாயி
பொல்லாதென்ருளின்னிமித்தம் வேந்தன் கடும் கோபமாகி
மெய்யறியா மந்திரிமார்

2248 கலியுகம் - கடைசியுகம் (துன்பம் மிக்கது)
2249 அய்யொ - இரக்கக் குறிப்புச் சொல், தனிய - தனியாக
2250 தட்டுமாற்று - ஏமாற்று
2251 செழியன் - பாண்டியன்

மாந்தயரும் சதிக்காறன்
மறுமாயம் மெத்தெ யென்ன
இடத்தோள் துடித்திடவும்
யேங்கி கொட்டாவி யிட்டாள்
கடைக்கண்ணு துடித்திடவும்
கண்ணில் நீர் சிந்திடவும்
அடித்துடயும் மனம் பதறி
அங்கெ சென்ருல் தெரியுமென்ருள்
அம்மெ நான் ஒன்றறியேன்
அவர் வாயம் காண்ங்கில்லெனெ
இன்ம்மயிலெ யென்தலயில்
எழுதிவைத்தாரொ யிதுவும்
ஒன்மெ நான் சொல்லுகிறேன்
உன்னெப்போலெ ஒரு தாயார்
நன்மெயுடன் வைத்திரிந்தாள்
நாளிரண்டு சென்றதுகாண்
பண்டு செய்த நன்மெயென்ரு
பாருதங்களும் பறெந்து கொண்டு
யெத்திகெயும் தேடுமினி
இதுகாண் மதிரெ யென்ருள்
வண்டரசை வாருமென்று
வழிகாட்டி கொடுபோனுள்
பெற்றவளெ போலணைத்து
பேணியென்னெ கூட்டி வந்தாள்

கர்ண்ணகை மதுரை நகரில் கோவலனைத் தேடல்

வென்றி புகழ் மதிரயிலெ
நான் தனியெ தேடுவெனெ கெ(ர)ண்டெயக் கண் நீர் சொரிய
கிஞ்சுகம் போல் நடந்தனளெ அணியாரம்ங் குழலாரும்

2256 பெண்டிர்க்கு இடத்தோள் துடித்தல் தீச்சகுனம்
2260 ~~தொடை> துட (பே. வ. மா)~~
2263 உபாயம்> வாயம் (பே. வ. மா) - வழிவகை
2266 உண்மை என்பது ஒன்மெ என்று எழுதப்பட்டுள்ளது.
2272 யெத்திகெயும் - எத்திசையும்
2276 பெற்றவளைப்போல் — பெற்ற தாயைப்போல்
2280 கிஞ்சுகம்—கிளி

ஆவிளந்த கன்னதுபோல் தனியாளச் தெருவோடெ
தயிதநல்ல ள் கேட்டறிவாள் தெளிவான சிலம்புவிக்கா
செட்டியிங்கெ வந்ததுண்டொ கிளியாரும் மொழியாரெ
கிளுவிலும் இங்கில்லெயென்ருர்
பரியாவர் தெருவோடெ
பதறிமெள்ளவெ நடந்து
தரிநாகம் மணியடைத்தா
கால்ச்சிலம்பு கொண்டொருவனி
திரிவானிங்கெ ஒருவணிகன்
சேய்யிழெயீர் கண்டதுண் டோ
இருள்ாரும் குழலாரெ
இங்கு வந்தாரில்லெயென்ருர்
மன்னன் பரியேறும்
மான்ம் மதிரெ சொக்கருடா
சன்னதி வ(ா)செல் தெருவோடெ
தயித நல்லாள் கேட்டறிவாள்
வன்னமணிச் சிலம்பு விக்க
வணிகனிங்கெ வந்ததுண்டொ
தென்னவன் தன் வாசலிலெ
சொல்லு மிங்கெ யில்லெ யென்ருர்
தாவலர்கள் வித்திரிக்கும்
நல்ல மதிரெப் பதிக்கெ கோவாலர் தெருவோடெ
கொடியிடெயும் கேட்டறிவாள் கோவலரும் சிலம்புமதால்
கூறியிங்கெ வந்ததுண்டொ காவலர்கள் யில்லெயென்ருச்
கடத்தெருவெ நடந்தளெ வடிவுடெய கோவலஞர்
வந்ததுண்டொ சொல்லுமென்ருர் அடியமுகு பார்த்திருந்து
அவனுக்கு ஆர் பெண் கொடியெ கெடுதி சொல்ல வேண்டாம்க(ா)ண்
கேட்டுப்பார் ஊரெ யென்ருர்
மயிக்குவளெ மொழியாரெ
மணிச் சிலம்பு மாற வந்தான்
கோயிக்கல்க் கண்ணாளன்

2281 கன்றது போல் > கன்னது போல் (பே.வ.மா)
2300 சொல்லும்—செல்லும்
2301 கோவாலர் —ஆயர்
2310 மாற—விற்க
2311 கோயிக்கல் —அரண்மனே. கண்ணாளன் —கம்மாளன்

கோவலரெ கண்டெடுத்தான்
சிக்கெனவெ தான் பறித்தான்
தேவியரர் கால்ச் சிலம்பினவெ
தற்க்கமுடன் கொடு போனுன்
தட்ட(ா)னுர் அன்றழகு[ல]ம்
திகைத்தனெளெ கண்ணகய்யும்
தேன் மொழிக்கு வெசற்த்தொழுக
சிக்கனவெ தானழுதாள்
செங்கமலர் முகம் வாடி
மயிக்குவளெ விழியாரும்
மனம் பதறியெ நடந்தாள்
நடந்து சென்று பாண்டியன் தன்
நல்மதிரெ கூடலிலே
மடந்த நல்லாள் மன்று தன்னில்
வந்து நின்றங் கழுதனெளெ
கண்ணகய்யாள்தனெ நடந்து கலங்கி நின்று அழுதனென்
கொண்டுவந்தெனென்று கோவலரெ கண்டாக்கால்
வெண்டறள நகெயாரும் வேறுபட்டு நடந்தனுளெ
அருள்வேந்தன் நெறிமன்னவன் ஆகமெல்லாம்ச் சென்று
கூறிவிக்கும் படியாலெ
அருள் வணிகன் வந்ததுண்டோ
அந்தணரெ சொல்லுமென்ருள்
இருளொத்த குழலாரெ
அவரிங்கு வந்தாரில்லெயென்ருர்
மாட்டாரும் பூங்குழலாள்
வணிவர்குல பத்தினியும்
செட்டியர்கள் தெருவோடெ
சென்றுமெள்ள கேட்டறிவாள்
பட்டணத்தில் நின்றொருவர்
மணிச்சிலம்பு விக்க செட்டியிங்கெ வந்ததுண்டோ
திருவெழுதும் நாடாள் நல்த்தமிள் சேர் மதிரயிலெ

2312 கண்டெடுத்தான் —பார்த்து கடத்திச் சென்றுன்
2318 வியர்த்து > வெசந்து (பே.வ.மா)
2339 மெல்ல > மெள்ள (பே.வ.மா)

நல்வணிகர் தங்களுட வெற்றிகெயும், வந்ததுண்டோ
யென்னுடய கோவலனர் மற்றொன்றும் சொல்லறியோம்
மாந்தயர் வாசல் சொல்லுமென்றுர் நஞ்சனயார் கண்ணு நம்
தாவுலந்து தான்வாடி வஞ்சனயாள் குழலாரும்
மாந்தய்யர்கள் தெருவே(ர)டெ அஞ்சி அஞ்சியெ நடந்து
அவரவர்கள் முகம் பார்த்து கொஞ்சும் பரிபுரமாம்
கோவலனர் வந்(த)துண்டோ கோவலரெ நாமறிவோம்
கொஞ்சும் பரிபுரமறியோம்
பாவெயரெ யிங்கில்லெக்காண்
அவர் பட்டணமே போனார்காண்
பாவினெயும் முட்டாங்கும்
பத்தினியெ போலிருப்பாள்
ஆவலுடன் பட்டணமெ
ஆங்கிகபோயி தேடுமென்றுள்
பந்துதட்டும் தெருவதிலெ
பைந்தொடியாள் சென்றிடவெ
இந்த நல்ல தலம் தனிலெ
பந்து தட்டும் பிள்ளாகளெ
பக்கம் பளுத்திருப்பார்
பால்பாண்டியெனெப் போலிருப்பாரி
சுத்தச் சிகப்பிருப்பார்
சூரியனெப் பேரலிருப்பார்
ஒற்றெ சிலம்பு கொண்டு
ஒருவர் வரவு கண்டீரோ
யெனமொத்த குழலாரெ
இங்கு வந்தாரில்லெயென்ன
கயிக்(கோ)காளர் தெருவோடெ
காரிமெழமாருள்ளவிடம் பொற்க்காலில் சிலம்பு விக்க
போனவரெ தேடிவந்தாயி மயிக்கோல விழியாரெ
மணிச்சிலம்பு மாறவந்தான் நிறக்கோல விழியாரெ

2346 உலர்ந்து> உலந்து(பே.வ.மா)
2357 பந்துதட்டும்தெரு —பந்துவிளையாடும்தெரு
2360 பிள்ளாகளே —சிறுவர்களே
2362 பால்பாண்டியன் என்றபெயர் இன்றும் குமரிமாவட்டத்தில் பலருக்கு உள்ளது.
2363 சுத்தச்சிகப்பு—நல்லசிவப்புநிறம்
2369 கயிக்கோளர் — ஒரு சாதிப்பெயர்

இங்கு வந்தாரில்லையென்றார் பூண்டரிய மாதினவே
பூவையரே பொற்சிலம்பு கொண்டொருவன் வந்ததில்லை
கோர்குலமே உன்றனை
கண்டாள் நகையாரே
தனித்தெருவே தேடுமென்றார்
அருகிரிக்கும் வணிகேசன்
ஆண்டவனார் கல்ப்பனையால்
குருவிரிக்கும் மாதேவிக்கு
கோவலனார் தான் தோற்று
இரிளிருக்கும் பூங்குழலே
யேந்திழையே கால்ச்சிலம்பு
திரிடிருக்கும் தட்டானும்
செட்டிதன்னை கொன்றனே
ஆலமுண்டோன் அருளாலே
ஆயிழையாள் கால்சிலம்புவிக்க
கோபமுற்ற மதிரையிலே
கொண்டுசென்ற விடந்தனிலே
காலனைபோல் முகம்சீறி
கண்டுதட்டான் கொன்றபின்பு
மாலையொத்த குழலாரும்
வந்துகண்ட கதைகளும்
இருளாரும் மணிச்சிலம்பால்
இசல்வணிகன் இறந்தபின்பு மாசலாதி பாண்டியனை
வதைசெய்குவனின நினைந்து கயிலாரும் விளிம்டவார்
கண்ணகய்யாள் நினைந்தபடி குயலாரும் பூவையரும்
வாயலைந்து நின்றனரே திருவெழுதும் வளநாட்டில்
தென்கூடல் மதிரைதன்னில் மனமுருகி கண்ணீர் சொரிய

2379 கல்ப்பனை — கட்டளை
2380 குரு — நிறம்
2382 இருள் > இரிள் (பே.வ.மா)
2386 ஆலமுண்டோன் — சிவன்
2390 காலன் — எமன்
2395 மாசலாதி என்பது பாண்டியனின் பெயராக இருக்கலாம்
2396 கயல் என்பது கயில் என்று எழுதப்பட்டுள்ளது
2397 குயில் என்பது குயல் என்று எழுதப்பட்டுள்ளது

வந்துநின்றங் கழுதனளே

கர்ண்ணகை மாடு மேய்க்கும்
பிள்ளைகளுக்குச் சாபமிடல்

வரிசையுடன் மாடுமேயித்து
மறித்திரிக்கும் செறுபிள்ளகரெ
தெரியாமல் ஓடிவந்து
தயிதல்தன்னெ கண்டெனெரெ
கண்டபொழுதிலம்மெ கண்ணகய்யும்
காரிழெயும் யேதொ சொல்வாள்
மாடுமேய்க்கும் நம்பியரெ
மாட்டாம் செறுபிள்ளாகளெ
எந்தன் பற்த்தாவெ கண்டீரோ
அந்தமொழி கேட்டபோதெ
செறுபிள்ளொகள் யேதோ சொல்வார்
கணவனொடெ கத்துமுண்டொ
களைந்தாயொ பொன்பணங்கள்
உணறழிந்தாயி பெண்கொடியே
உள்ளது சொல் யெங்களுக்கு
இணெபொருந்தும் கால்ச்சிலம்பெ
இங்குவிக்க வந்தவெறெ
கணவனெ நான் தேடிவந்தேன்
காலிகள் மேய்த்திருப்பவெரெ (எ)ன்றாள்
அந்தமொழி கேட்டபோதே ஆங்காரம் பேசிடுவார்
ஆயிழெயாள் தன்னோடே மணவாளனென்றும் அறியமாட்டோம்
வேறொரு பேரென்றும் அறியமாட்டோம் மேய்த்துகெட்டிவந்தோமொ
காரிழெயெ போமோயென்றார் கண்ணகய்யாள் போம்பொழுது
நகைத்திடுவார் சிரித்திடுவார்

2402 பிள்ளகரெ—பிள்ளைகளெ
2408 சிறு > செறு (பே.வ.மா)
2409 பற்த்தா—கணவன்
2412 களைந்தாயோ—விட்டுவிட்டாயோ
2414 உணர்வு> உணறு (பே.வ.மா)
2419 காலிகள்—ஆடுமாடுகள்
2420 அகங்காரம் > ஆங்காரம்(பே.வ.மா) – இறுமாப்பு
2430 காலத்தால் —காலையில், பட்டை> பட்டெ (பே. வ. மா) —பனை ஓலையால் செய்யப்படுவது

இவளுக்கு தாயில்லெயொ தமரில்லெயொ
தனித்து வெளி போருளெ
பின்திரும்பி அம்ம கண்ணகய்யும்
வாணுதலாள் சாபமிட்டாள்
மாடுமெய்க்கும் தம்பியர்க்கு
காலத்தாலெ பட்டெடக் கஞ்சி
உச்செக்கு குடியில்லாம்மல்
வய்யும் நேரம் ஆனபோதெ
வாலுளக்கு நெல்லும் பற்றி
வளிதனிலெ இரியுமென்று
மாட்டிருப்பற்றி போக சாமமிட்டாள்
அன்று அம்மெயிட்டசாபம்
இன்றளகும் மங்கவில்லெ

கர்ண்ணகைக்கு பள்ளிப்பிள்ளைகள்
கோவலனைக் காட்டல்

அடுத்த நல்ல தெருவதிலெ
ஆயிழெயாள் வர்ற நேரம்
பள்ளிக்கூடத்தில் நின்று
பள்ளிப்பிள்ளாகள் தான் போகக்கண்டு
அம்ம வாணுதலாள் யேது சொல்வாள்
பள்ளிக்குப் போகும் தம்பிமாரெ
பளம் சோறு உண்ணும் தம்பி பத்தரமாற்று தங்கம்போலெ
எந்தன் பற்த்தாவெ கண்டீரோ நிறமாறி ... மறிவோம்
யேந்திழெயெ மாதாவெ பக்க பழுத்திருப்பார்
பால்பாண்டியனெ போலிருப்பார் சுத்த சிகப்பிருப்பார்
சூரியனெ போலிருப்பார் ஒற்றெசிலம்பு கொண்டு
ஒருவர்வரக் கண்டீரோ
அந்த மொழி கேட்டபோதெ
பள்ளிப் பிள்ளாகள் தானேதொ சொல்வார்
அய்யொ நீ தனியவந்தாயி
அறிந்தில்லெயொ வந்தகொள்ளெ

2431 குடியில்லாமல் — குடிப்பதற்கு ஒன்றுமில்லாமல்
2432 வய்யும் நேரம் — மாலைக்காலம்
2435 மாட்டீர் — மாடுகளைப்பற்றும் பேன்போன்ற ஒன்று
2437 மங்க — மறைய
2444 பளம் சோறு — பழைய சோறு
2453 கொள்ள் — கேடு

கய்யொடெ சிலம்பு கண்டு
கண்ணுளன் கொண்டு வந்து
செப்பமுள்ள பாண்டியன்தன்
தேவியார்கால் சிலம்பினவெ
தயிதலரெ உன் கணவன்
தாமதித்தார் யிப்படிதான்
நல்லகுல பத்தினியெ
நாவெழும்பிடுமெ சொல்வதுக்கு
கொல்லுவித்தார் மன்னவனுர்
கோவலரெ கொண்டு வந்து
வல்லவம்ஞ் சேர்தட்டானும்
மன்னவரும் நடுவில்லெக்காண்
இல்லிருக்தும் படியாலெ
இனித் தனித்தெ யிருக்கின்ருயி
கொல்லுவித்தாரென்ருகில்
கொடுங்கனல்போல் நெஞ்சுளந்து அல்லிருக்தம் பூங்குழலாள்
அவனிதனில் விழுந்தழுதாள் சொல்லும்மதி அறியாமல்
சோர்ந்துடலும் தள்ளாடி நல்லுயிர்போயி நாவுலைந்து
தடுநடுங்கி நின்றனளெ விளுந்தழுத பெண்கொடியெ
மெல்லவந்து பிள்ளாகளும் அளிந்துமனம்தள்ளாடி
அஞ்சாதேயென்றுரெத்தாரெ
அஞ்சாதெ யென்றதொருவார்த்தை கேட்டு
அறிவுடெய செறுபிள்ளாகளும
தஞ்சமென்று யென்கணவனை
தனிச்சியென்று யினப்பேர் வயித்தார்
இங்கிவரெ கொன்றவிடம்
இனக்கறிய சொல்லுமென்ருள்
பிள்ளாகளும் தாங்கிமெள்ள
பெண்ணரசெ வாருமென்ன
உள்ளபடி சொல்லுகிருேம்
உயிதமெல்லாம் உங்களுக்கு
கொள்ளெசெய்த கோவலரெ
கொன்றவிடம் காட்டுமென்ருள்

2464 வல்லவம் — வல்லமை
2484 உசிதம் > உயிதம் (பே. வ. மா) = மேன்மை

கொன்றவிடம் காட்டுகைக்கு
ஒன்றுபட பிள்ளாகளும்
ஒக்கவந்து முன்னடக்க
வண்டரசெ வாருமென்று
வழிகாட்டி கொடுபோனர்
மன்றுதன்னெ விட்டகன்று
மங்கெயரெ தாங்கிமெள்ள
கொன்றவிடம் சாயிந்தவிடம் கொடியிடெக்கு காட்டினர்காண்
கார்கொண்ட பெண்திருவெகரும்பெ கண்ணல் மீருதெ
தார் கொண்டமார்பனிவன் தனிக்கிடந்ததலம் யிவிடம்
சோர்கொண்ட விளிதுறந்து கொடியிடெயெ பாருமென்றனெரெ
உரெத்தனவில்க் கண்முளித்து ஒன்று . . . லளும் பார்ப்பளகில்
யெரியிதுகாண் இவள் வயிற்றில்
இட்றுற்றக்கனலிழாவெ
நாயித்திரளும் நரித்திரளும்
நல்ல பருந்தும் கழுவும்
கருத்துடனெ காகினவும்
கலந்திருக்(க) கண்டளவெ
கண்டதற்ப்பின் கண்ணகய்யும்
கணவன் முன்னெ சென்றுநின்று
கொண்டுவந்து கணவனுடையா
குலக்களத்தெ காண்டி வையித்தாள்
ஆண்டவனர் யிதம் பெறுவீர்
எல்லோரும் வாருமென்ன
கண்டாள் மணி ஆவற்ணவும்
தான்களத்தி கொடுத்தனெளெ
ஆரமுடன் கையிவளெயும்
அங்கவற்குத் தான் கொடுத்தாள்
ஊரெபோஙகெ மக்களென்று

2497 உரைத்தளவில் என்பது உரெத்தனவில் என்று எழுதப் பட்டுள்ளது.
2500 கனலிழவெ — தீயெழவெ
2508 காண்டி—காட்டி
2509 யிதம் – அருள்
2511 ஆபரணம் > ஆவற்ணம் (பே.வ.மா)
2513 வளெ—வளையல்

உபசரித்து தானனுப்பி

கர்ண்ணகை பறவைகளை அகன்றிருக்க வேண்டல்

காரேந்தும் பூங்குழலாள்
காகனுக்கும் கழுகனுக்கும்
சிரிரிக்கும் நாயிநரிக்கும் செப்பினளெ ஒருவாற்த்தெ
நானும்யிங்கெ வருந்தனேயும் என் நாசகனெ காற்த்திருந்தீர்
உண்ணும்படி தருவேன் உங்களுடன் சொல்லுகிறேன்
தேன்மொழியாள் கண்ணகய்யிக்கு தெளிந்திருந்து தனிமெ சொல்ல
வாங்கி நீங்கள் யிருப்பீராகில் வா(ழ்)ந்திருப்பீர் நீங்களென்ருள்
கணவனுடெ தனிமெ சொல்லு
காரிழெயெ நீயுமென்ன
இனம் திரண்டு பறவெயினம்
எழுந்தோடியெ பறக்க
கணம் பொருந்தவிளியாரும்
காற்த்திருந்த கழுகினங்கள்
அழிந்தபசி தீற்த்தொழிய
ஆணெயுண்டு போகிலென்ருள்
நற்க்கமிழும் பூங்குழலாள்
நாசகியாள் ஆணெயிட்டாள்
ஆணையிட்ட வேளெயிலெ
பறெவெயினம் போயி மீண்டு
பாற்த்தகலவே யிரிக்க

கர்ண்ணகை புலம்பல்

அறக்குலயால் உயிரிளந்த
அருள் வணிகப் பெருமாளெ
தறயுமக்கு பஞ்சணேயோ
தனித்திரோ யென்கணவா
என்கணவா இப்படியெ

2522 தனிமெ சொல்ல - தனியாகப் பேச
2531 ஆணெயுண்டு - சத்திய முண்டு
2536 அகலவே - அகன்று, நீங்கி
2539 தரை > தற (பே. வ. மா)

ஈடுபட ஞாயமென்ன
மண்ம்படவும் விதித்தாரே
பொன்னெரிய திருமேனி
மண்பொருந்த சரிந்தீரோ மறந்தீரோ யென்னேயும் நீர்
ஊரறிய வந்தேன்காண் உம்மாணெயென்கணவ
அரவமணி சிலம்புவிக்கா வந்தீரேயென்கணவ
உயிரழகும் விற்றீரோ யென்கணவ கோவலரெ யென்றுரெத்தாள்
தவிராத நித்திரெயும் என்தனிமெ கண்டு மூளித்தில்லெயெ
பொன்னரிய திருமேனி
புழுதிபட சரிந்தீரொ
என்னெயிந்த தனிமெ செய்தீர்
யேனென்ருல் ஆகாதொ
அய்யொ நான் யென்ன செய்வேன்
யென்கணவ கோவலரே
ஒருநாழிகெ பிறிந்தாக்கால்
உயிரிளந்து போயிவிடுமெ
உள்ளமட்டும் பிரிந்திருக்க
கொள்ள வந்ததோ நமக்கு
பெருவழியோ துணெயினக்கு
இனமறந்தீர் என்கணவ
எரியுதுகாண் வயி(ெ)றனக்கு
யெழுந்திரியும் யென்கணவா
எங்களப்பச்சிர்கள்
இனியினக்கு வேறுமுண்டோ
உங்களென்னெ கயிபிடித்தீர்
ஒன்றுமறியா பருவம்
கொங்கெவந்துதில்லெயென்று
கோதளெ மதளெப் பருவமல்லொ
இங்கிறந்த கோவலரெ
இனக் கெழுந்திரியும் யென்கணவா
சென்றுபொழுதில் கயிபிடித்திர் சிறந்துடனெ நாம்வ(ள)ர்ந்தோம்
வெறுத்திருக்க வேண்டாம்காண் விளித்திறந்தாலாகாதெ
மறுத்துரெக்க நானறியேன் மதியறியேன் தனிச்சிருக்கா

2551 புழுதி—தூசி
2566 நீங்கள் என்னும் வடிவம் உங்கள் என்று எழுதப்பட்டுள்ளது.
2569 குதலே என்பது கோதளெ என்றும் மதலே என்பது மதளெ என்றும் எழுதப்பட்டுள்ளன.

நற்கமலம் விளித்திறகும் யென்நாசகனே யென்றழுதாள்
கொங்குமலறடமார்புவும்
கோவலரெ யென்கணவா
மண்ம்புணரச் சரிந்தீரொ
வணிவர்குல பெருமாளே
பங்கயம் சேர்திருமுகவும்
பகழமணி திருநகெயும்
எங்கெபோயி காண்பேனே
என்று முகத்தறைந்தழுதாள்
அழுதிரங்கு நானழுதால்
யேனென்ருலாகாதொ
பழிசெய்தனனல்லவெ
பாற்த்திடுங்கொ விளிதுறந்து
செய்தியெல்லாம் நானறிய
செப்பிடுங்கோ விளிதுறந்து
வழியறியேன் தனிப்போக
வணிவர்குல பெருமாளெ
வாய்திறந்தால் முத்தமற்தம்
மதுந்திலங்கி சிந்திடுமொ
பேசினுக்கால் உங்களுடா
பெருமெயெல்லாங் குறந்திடுமொ
தாயிளந்த பிள்ளெயெப்போல்
தனித்தேனெ யென்கணவ
நீரொன்றும் சொல்லாமல் நித்திரெயும் கொண்டீரெ

கர்ண்ணகை சிவன் உமையை வேண்டல்

செங்கனக வேர்வெ அம்பில் சிலெயாரம் பூண்டவெரெ
அங்கவர்தான் கழலழிவெ அன்றெரித்த அற்புதமெ
கொங்கெயாகாமயிலெ கொள்ளெயிலெ கூறிநின்றீர்
சங்கரரெ நீருமுன்னுள் காலனெ காலாலுகந்தீர்

2576 கொங்கு — தேன்
2580 பங்கயம் — தாமரை
2602 சங்கரர் — சிவன்
2602 உகுந்தீர் என்பது உகந்தீர் என்று எழுதப்பட்டுள்ளது (உகுந்து – தேய்த்து)

நான் பிரிந்தாலருள் புரியும்
என் நாசகனெ யென்றழுதா[ழுதா]ள்
மங்கெயரும்நீருமாக
மகிழ்ந்திருந்து தனிமெ சொல்லா
என்கணவன் யெழுந்திருக்கா
எனக்குவரம் தந்தீரொ
வேங்கயுடன் பதஞ்சலியும்
வேறெ நட்டுவங்கள் காட்டுவதும்
அங்கவரெ அடிமெ கொண்ட
அரெனெ அம்பலத்தாடி யென்றுள்
பாங்கறியேன் குலக்க(ள)த்தில்
பயப்படுவேன் தனிச்சிருக்க
இங்கவர் தான் யெழுந்திருக்க
இனக்கு வரம் தந்தீரோ
மாற்க்கண்டனுக்காகவல்லொ
காலனெக் காலாலுகந்தீர்
நாகமணி சேர்மார்வன்
நளினடங்கவெ நடந்தீர்
சிகமணியெ சிறெயில் வைமித்தீர்
திருமனசு(க்)கோராதொ
அருள் வணிகன் யெழுந்திருக்க அரனெவரம் அருளுவீரெ
அரயும் பொன் பெற்றெடுத்த அரிய வஞ்சி கொடியாரெ
அரனுடையதத்திருக்கும் அம்மெ ஆறவனத்தீர்
விரெ சிறந்த பூங்குழலெ மிதினவெனுரெ கை கொடுத்தார்
அரசிறைந்த கிளெ நாங்கள்
வரமருள்வாயி யெழுந்திரிக்க
கொங்கெகரமயிலெ
கொள்ளயிலெ கூறிநின்றீர்
சங்கரனெ நானுமினி
தனிச்சிரிக்க மாட்டேனென்றுள்

திங்களணிச் சடமுடியிர்
திருவிளமெ அருள் புரிவீர்

2610 நட்டுவம்—நாட்டியம்
2709-2621 இவ்வரிகளில் சில புராணச் செய்திகள் கூறப்பட்டுள்ளன
2622 ஓராதோ—ஏற்காதோ
2625 தத்திருக்கும் - பக்கத்திருக்கும்
2625 அரவணைத்தீர் என்பது ஆறவனத்தீர்என்று எழுதப்பட்டுள்ளது

என்கணவன் யெழுந்திரிக்க
இளமயிலெ வரமருள்வீர்
மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும்
வகெ நாங்தும் திசெநாங்கும்
யெண்ணரிய பருவங்கள்
யெல்லாம் நீர் தனிமெயெல்லவொ
கண்ணெ யென் கோவலரெ
காற்த்திருக்க மாட்டெனென்ருள்
வீணெபோயி யிறந்தயுயிர்
மீண்டு வர வரமருள்வீர்
கண்ணகய்யாள் அஞ்சிரங்க

உமை சிவனை வரமருளச் சொல்லல்

கற்புடையார்யிவளினவெ
அம்மெ உம திருவுமாக
ஈசரடி தான் பணிந்து
நிந்நுபுகள் செஞ்சடெயில்
நாயகெனே கோவலனுர்
கண்முளித்து யெழுந்திருக்க காவடனெ வரமருளுவாயி
வரமருள்வாயி யென்றுரைத்த மாதுமயெப்பார்த்தரனுர்
வரமிவர்க்கு செட்டிகுலம் மா(ெ)னதிகெம் வைத்திருந்தான்
காமரெப்போல் கொடுத்தலைந்தான் காதலியெ சிறெயில் வைமித்தான்
வரமாக சாமமிட்டாள் வந்தகொள்ளெ வேறில்(ெ)லக்காண்
நம்மடியார் தனிவும்
நாள்தோறும் பொன் கொடுத்தான்
தென்ம்மக்கேடாயி நின்ருன்
தோற்ருனெ இந்திரனும் தன்மெயறியாதவென் காண்
தயிதல் தன்னெ சிறெயில் வயித்தான்
இனம் மயிலெ பழிபோனுன்
ஏந்திழெயெ யென் செயலும்
அரியபுகள் மிகவுந்தான்
அறம் செய்தனுலும்
திரிவேன் நான் தனிச்சிரிக்க

2638 நான்கும் > நாங்தும் (பே. வ. மா)
2647 உமை > உம (பே.வ.மா)
2649 நண்ணு > நந்நு (பே.வ.மா)
2654 காமர்—காம உணர்வு மிக்குடையோர்
2658 தென்ம்மக்கேடு—தர்மக்கேடு

என் தனிமெ கண்ட சங்கரரெ
வரிசெயுள்ள பத்தினி நான்
மலங்காமல் அருள்புரிவீர்
அரியதொரு நல்ல திருமாலும்
ஒன்றுபட நின்றதவும்
மானிடர்க்கு அறிவுமுண்டொ
மஞ்சாடி மதுசூடி
ஊனிரக்க போனதொரு
உயிர்வந்து எழுந்திருக்க
நான் பணிந்தால் நல்மீளவே நாயகனெ யினெமொழிந்தாள்
இனிமெயுடன் தான் வளர்த்த ஈசரடிதான் பணிந்தாள்
அறவளத்தாரென்றளவில் அரனுரு மிகயிரங்கி
அறம்செய்த மன்னவேரும் மதியமால் இவனினவெ
துரங்கெடாயி உயிரிளந்தா
செட்டி யெழுந்திக்கவென்று
சீர்ந்த உயிர்வருகயென்று
ஈசனருள் செய்தனுராம்

கோவலன் எழுந்திருத்தல்

ஈசனருள் செய்திடவே
இமயோர்க்கென் அருகில் நின்று
மாயபொன் மொந்தயில் நீர்வாங்கி
வடிவுடனெ தான்ந்ததுவெ
வந்ததொரு தூசிதன்னெ
வாங்கியதில் நூல்கோர்த்து
அந்தமற்ம மழுவெறிந்த
ஆகமெல்லாம் தையித்து கெட்டி
சிந்தெதன்னில் திகெயழும்பா
சேற்த்திறுக கெட்டி ஒன்ருயி
என் தனிமெ தீற்ப்பதுக்கு
யெழுந்தியும் யென்கணவா

2681 எழுந்திருக்க —யெழுந்திக்க (பே. வ. மா)
2682 சீர்ந்த—அழிந்த
2686 மொந்த – ஒரு பாத்திரம்
2692 திகெ— மூச்சு
2695 எழுந்திரியும் —யெழுந்தியும் (பே. வ. மா)

கரபுரண்ட கண்ணீர் சொரிய
கமலமுகம் வேர்வெயோட
அருள்வகெயால் வந்த கண்ணீர்
ஆகமெல்லாம் தான்தெளிந்து
இருள் நீங்கி யெழுந்திரியும்
யென்கணவ யென்றழுதாள்
சிறந்த புகள் கோவலனர் செத்திறந்துபோன உயிர்
கறந்தபால் அமறந்ததுபோல் கலந்துடலெங்கும் தெளிந்து
உறங்கினவர் முளித்தாப்போல் ஒந்நுதலே பாற்த்தாங்காண்
உறக்கமது முளித்ததுபோல் உலகிளந்த வணிகேசன்
கண்முளித்துப் பாற்த்திடவே கடக்கெநின்ற கண்ணகய்யும்
நிறந்தகண்ணில் நீர் வடிய
நின்றுளெ கண்ணகய்யும்
மாட்டாரும் பூங்குழலாள்
மடந்தெ நல்லாள் கண்ணகய்யும்
திட்(ெ)டனவெ யெழுந்திருக்க
சேயிழெயும் கடக்கனின்றுள்

கர்ண்ணகை கோவலனிடத்தில் நடந்த செய்தீயை கூற வேண்டல்

மறக்கஒண்ணு மருந்தெயிட்டா
மாதேவி வந்தாளொ
அடக்கமாயி வையித்திருந்த
கண்ணகையாள் வந்தாளொ
மாதேவியொ கண்ணகையோ
மறைந்து நின்று பாற்ப்பதுவும்
உள்ளபொன்னும் உடன்தோற்று
உயிரிழகும் வந்தாப்பிரெ
மறெந்தில்லெயொ கே(ா)வலரெ
கண்ணகையாள் தன்னுசெ

2706 கடக்கெ – தூரத்தில், சற்றுநீங்கி
2713 மறக்கஒண்ணு – மறக்கமுடியாத
2713 மருந்து – ஆண் ஒரு பெண்ணை மறக்காமல் இருப்பதற்கும் நாட்டுப்புற மருத்துவத்தில் மருந்துகள் செய்வதுண்டு. கணவன் மனைவியர்க்குள் மனப்பிடித்தம் இல்லாமல் போனால் இவ்வாறு மருந்து கொடுத்து மனமாற்றம் செய்யும் முறை இன்றும் நாட்டுப்புறங்களில் உள்ளது. இந்நூலில் மாதேவி கோவலனை மருந்து மூலம் மயக்கி விட்டாள் என்ற செய்தி முன்னரே கூறப்பட்டுள்ளது. [வரி-556]

கடக்கண்ணிலேயும்காண்ங்கில்லெஙியொ
கண்ணகையாள் நானும் வந்தேன்
காலனல்லொ நானுமக்கு
பட்டணமொருவிடமென்னெ பைந்தொடியொ யிவளினவெ
வெட்டுண்டது மெய்யோபொய்யோ விசாரித்து வைத்தாள்காண்
போனஉயிர் இருள்பிரிந்து பொன்னிறமாயி யெழுந்திருந்து
கானமயில் கண்ணகைய்யெ கண்முளித்து பாத்திரிந்து
மானீன்ற விழியாரும் வாற்த்தெ சொல்ல மாட்டாமல்
தேனிரிக்கும் மொழிபதறி
சீரளிந்து நின்றனளெ
மொழிபதறி விளிசிவந்து
மும்பெ நகர்வாயில்
யெழுதினவன் விதிவசமொ
யென்னநான் செய்வேனென்ஞு
ஒழுகினகண் நீர்வடிய
ஒன்ம்மெ தின்ந்தழுதாள்
பழிசுமந்த கோவலரெ
பார்த்திரங்கி யிருந்தாள்
பாற்த்திருந்தா யென்கணவா
பாவம்யிதெ போலுமுண்டொ
ஆத்தாளும் அப்பச்சீரும்
அடித்தறியா திருமேனி
கொறத்தமிவனும் ஊட்டார்
கொண்டாரெ யென்கணவா
வாயித்தபுகள் கோவலரெ
வந்தயென்னெ அறுவீரோ
அறிவீரோ யென்ங்கணவா
அருள்வணிக பெருமாளெ
நெறியாக கயிப்பிடித்த நேரிமெகாண் கோவலரெ
சீறியான் சிலம்பு விற்ரு செயிதி கேளும் அவ்வுலகில்
மாறுமாயம் அத்தனெயும் மலங்காமல் சொல்லுமென்ருள்
வடிவுடைய கோவலரெ மதியறியேன் தனிச்சிரிக்க

2735 முன்பே > மும்பெ (பே. வ. மா)
2744 ஆத்தாள்—தாய்
2749 அறிவீரோ என்பது அறுவீரோ என்று எழுதப்பட்டுள்ளது.
2755 தனித்திருக்க > தனிச்சிரிக்க (பே. வ. மா)

படிகடவா பத்தினி நான் படும்பாடும் அறிந்தில்லெயொ
நடுவில்லெக்காண ஸ்ஷரவும்
நம்மெயிந்த கொள்ளெ செய்தார்
அடிபணிந்தென் உம்மெ வந்து
அருள் வணிக பெருமாளெ

கோவலன் நடந்த செய்தி அனைத்தும் கூறல்

பொற்ச்சிலம்பால் உயிரிளந்த
பொன்வணிக பெருமாளும்
நச்சிவிளி தான் திறந்து
நாசகியெ முகம்பாற்த்து
கச்சிறயும் குழலாரெ
என்கண்ணகைய்யெ அறிவேனெ
அதுவெல்லாம் வந்தாலும்
என் ஆயிழெயெ அறியெனெ
தற்கமுத்து நகையாரெ
தனமிரண்டு முலையாரெ
குவலையொத்த விளியாரெ
குயிலொத்த மொழியாரெ
இருளொத்த குழலாரெ
இனவளத்த நகையாரெ
கனகமொத்த அழகாரெ
கண்ணகைய்யெ அறியேனெ
தேனென்ற மொழியாரெ சிவலெயென்ற விளியாரெ
நானுமினி யென்ன செய்வேன் நடுக்கேளான் தட்டானும்
இன்னெந்தும் பாண்டியனும் குடிகெடுத்தான் அருகிருந்தான்
கானல்நிறம் பூங்குழலாள் காரிழெயாள் நடுவுசொன்னாள்
தானிரிக்கும் குழலாரெ தமிழ்மதிரெ கூடலிலே
பாரிரிக்கும் முலெ மீதெ
பாறவழி நீராடுருடா
சீரிரிக்கும் குலக்களத்தில்
சிறெயிரிக்தும்படி யிருந்தாயி
காரிரிக்கும் குழலாரெ

2757 ஸ்ஷரவும்—துன்பமும்
2763 நச்சி—விரும்பி
2765 கச்சு—மார்புக் கச்சு
2771 குவளை என்பது குவலை என்று எழுதப்பட்டுள்ளது.

கண்ணகைய்யெ அறியெனெ
என்மதன் கண்ணுரெ
ஈசன் படைத்த நங்கையாரெ
தோள்பிடித்து அருகிருத்தி
துசரமெல்லாம் தீற்த்து விட்டாயி
வாள்வலுகல் உடலிளந்து
வானுலகம்போயி மாண்டென்
தாளுவந்த குலக்களத்தெ
தயிதநல்லீர் சொன்னவேர் ஆர்
கோவலரெ முகம் பாற்த்து
கொடியிடெயும் யேதொ சொல்வாள்
மேவலரெ சென்று கண்டு
வேக மெல்லாம் அவர்க்குரைத்து
தாகமுடன் விம்பி விட்டேன்
தணலாலெ யெரிமூட்டி
நாவலர்கள் கொண்டாட நான் வருவேன் அஞ்சாதெ
பாவெயர் கையிப்பிடித்ததெல்லாம் பாண்டியனுர் அறிந்தில்லெயெர
காவலாயி உள்ள பேர்கள் கள்ளனென்று கொன்ருரெ
தேசியெரெ நான் போந்தால் தேசமினி நன்ரெுதான்
கோவலரெ உமக்கு வந்த கொள்ளெயெல்லாம் சொல்லுமென்ருள்
கொஞ்சும் பரிபுரமாற
கொண்டுவந்தன் மதிரயிலெ
தஞ்ச மென்று ஆச்சி அம்மெ
தன்ம்மனெயில் யென்னெ வயித்து
அஞ்சுதலெ ஆடரகம்
அரனுர்தான் தந்தமணி
செஞ்சிலம்பெ விக்கவந்து
சீரழிந்தீர் யென் கணவா
பொன்ஞ் செய்வான் கொடுத்தாங்காண்
பூவெயெரெ உன்னுணெ

2791 துயரம் > துசரம் (பே. வ. மா)
2795 சொன்னவர் > சொன்னவேர் (பே. வ. மா)
2798 மேவலர் - மன்னர்
2800 வெம்பி > விம்பி (பே. வ. மா) - சினத்து
2801 தழல் > தணல் (பே. வ. மா) - தீ
2808 வந்தன் - தன்மையொருமை வினைமுற்று

வினே செய்யும் பொன்னரசெர்
விசேஷமெல்லாம் யிப்படிதான்
யென்ன செயிவேன் நானுமினி
யேந்திழையெ யினெயுரைத்தார்
அரியவிதி படியாலெ
அரகமணி தரியடைத்தா
பரிபுரவும் ஒன்றேந்தி
பாரறிய விக்கவந்தென்
வரிசெயுள்ள மதிரயிலெ
வந்துவிலெ கூறிடவெ
பெரியகுல மாமறெயோன் பேசாமல் போயிவிடென்ருன்
பணியாக மணிச்சிலம்பெ பத்தினிமாற் யுள்ளவிடம்
வணிகர் தெருவோடெ மணிச்சிலம்பெ விலெகூறி
கெணியாமல் வரியிறுக்க கேட்டேன்காண் நான் நடந்து
தனியாமல் வெள்ளாளர் தன் தெருவே போனேன்காண்
வெள்ளாளர் தெருவோடெ
மெள்ளவந்து விலெ கூரு
கொள்வார் மணிச்சிலம்பெ
கொள்வாருண்டெ யினெ கேட்டேன்
வாளனய விளி மடவார்
வந்தெடுத்து கண்டவர்கள்
தொக்கெல்லெகாண்யிச்சிலம்பு
தொட்டபேர்கள் யெரிந்திடுவார்
தொளாக பத்தி(னி)மார்
தன்தெருவெ வந்தென்ங்காண்
படிகடவா பத்தினிமார்
பரிபுரங்கள் யிதுமினவெ
வடிவேலர் மொழிமடவாள்
வந்தெடுத்து கண்டவெர்கள்
தேடுவாற்கள் யிச்சிலம்பெ
தொட்டவர்கள் யெரிந்திடுவார்
அக்கினியும் அரனர்தான்
அஞ்செழுத்தெ மறவாதா
கொடுத்தான் சிலம்பிதுகாண்

2840 திரள் > தெரள் (பே. வ. மா) - கூட்டம்
2849 ஐந்தெழுத்து > அஞ்செழுத்து (பே. வ. மா) -நமசிவாய

கொள்ள வொண்ணுதென்ற பேறக்கு
கயிக்(டே)காளர் தெருவோடே கால்ச்சிலம்பெ விலெ கூறு
மெயிக்கான பணியிதுவெ மெல்லியர்கள் வந்துகண்டு
தொக்கெல்லெக்காண் இச்சிலம்பு தொட்டபேர்கள் யெரிந்திடுவார்
தனியாளர் தெருவோடெ தான் நடந்து விலெ கூறு
கிளியாரும் மொழிமடவார் கண்டவர்கள் ஓடிவந்து
தெளியானச் சிலம்பிதுவெ
தீண்ட வொண்ணு தென்றார்கள்
இப்படியெ விலை கூறி
எங்கும்யெங்கும் நடந்திடவெ
மயிவிளியும் கண்மடவாள்
வந்தெடுத்துக் கண்டவர்கள்
யெப்படிநாம் கொண்டணிவோம்
இந்த நல்லமணிச் சிலம்பெ
கற்ப்புடை பத்தினிமார்
கால்க் கணிந்த பரிபுரமெ
பத்தினி கால் சிலம்பிதுமாயி
பதறி நடந்தேன் தனிவழியே
செத்திடுவார் உம்மாணெ
தேசமிது பொல்லாது
அத்தினெ பேரும் விலக்க
அதிசயமாயி தான் நட்ந்து
அத்தியடி மூடதிலெ
அமற்ந்திருந்தேன் ஆயிழெயெ
புகள் பெரிய பாண்டியென்தான்
பொன்ம்மகுட தட்டானும்
அழகுடனெ தண்டியெல்மேல் ஆயிரம் பேர் பிடெசூழ
வெடிதிமிலும் பரிசெயுமாயி வீரமுரசறய யிருத்திடவெ
குடிபிடிக்க பக்கமெங்கும் குழலூதி நின்றனேரே
வடிவுடெய பிறவெழுதி மன்னவனார் தம்முடைய

2866 பரிபுரமை > பரிபுரமெ (பே. வ. மா)
2871 விலக்க - தடுக்க
2877 புடை > பிடெ (பே. வ. மா)
2879 குடை என்பது குடி என்று எழுதப்பட்டுள்ளது.
2880 பிறை > பிற (பே. வ. மா), வழுதி > வெழுதி (பே.வ.மா)
- பாண்டியன்

படிதனிலெ மேயிப்பாகா
பனிமகுட தட்டானும்
ஆடலெரெ ஒடிவெல்லும்
மாயனுட அமச்சர்போல்
தடதடனெ ஓடி வந்து
தட்டானென்னெ கண்டானெ
கண்டதெற்பின் உடல்தெளிந்தேன்
கால்ச்சிலம்பெ விலெகாட்ட
கொண்டுசென்று கையிக்கொடுத்தேன்
கொற்றவரெபோலவரங்கி
தண்டியெலெத்தான் நெறுத்தி
தாள்ச்சிலம்பெப் பணிபாற்த்தான்
கொண்டுவந்தேன் யிவனினவெ
கோவித்துப் பாற்த்தான் காண்
கொண்டு வந்தேன் யிச்சிலம்பு
கூறும்விலெ நானறியேன்
தெண்டமிட்டு செம்பியேனார்
செட்டிவரி பூண்டதெற்ப்பின்
கொண்டுவந்தேன் யிச்சிலம்பு
கொள்வார்க்கு நான்கொடுப்பேன்
கண்டுதந்தீர் தாமாகில்
கல்லியாளனாயிருப்பீர்
நாடாளும் பாண்டியனார் நன்மெயுள்ள தேவியர்தான்
கொடாத தறணமணி கொஞ்சும்பரி தாள்ச்சிலம்பூ
ஓடாமல் பிடியுமென்றார் உடைகூட கட்டவனார்
தேடி நடந்தலெந்தேன் தெளிந்தகள்ளன் யிவனெயென்றான்
நின்றவர்கள் இனப்பிடிக்க
நெடுவெறியால் உடல்விறைக்க
ஒன்றும் அறியாதவர்போல்
உருகி உடல்தான் மலங்கி
நன்றல்லவெ தட்டானெ
நானுனக்கு ஆளல்லவெ
ஒருசிலம்பு களவாணா
உங்குளுட ராச்சியத்தில்

2897 தெண்டம் – ஒறுப்புக்கட்டணம்
2904 தரள > தறண (பே.வ.மா) – முத்து
2908 விறைக்க — நடுங்க
2914 உங்களுடய என்பது உங்குளுட என்று எழுதப்பட்டுள்ளது.

பெருவழியும் நடந்தறியேன்
பேடிப்பேன் தனிநடக்க
உருமெயுட மாதேவிக்கு
உலகறிய நான்கொடுத்த
ஒருநாள்ப் பொன்னுக்குண்டொ
உயிரவிடவேண்டாமொ
கொடும்பாவி தட்டானும்
கூற்றுவெனப் போலிருந்து
விரவாலெமுன் பிடித்து
மின்ங்கய்யால் அருகளைத்து
படும்பாடு சற்றல்லக்காண்
பத்தினியெ உன்னுணெ
கடும்பாரமாயிபிடித்து கட்டிவயித்து அடித்தானிங்காண்
பெரியகதிரோன் காணுதா என்புசங்கள் தோலடர
பொருவிழிகள் கண்ணீர் சொரிய புண்படவெ (ரி) யனயடித்து
கருதினபொன் தனேக் களந்து கள்ளனென்று பேருமிட்டு
பரிசளிந்தேன் நானுமெத்தெ வருத்த படபாடும் பட்டேன்
கட்ட சிலம்பல்லயிது
கண்ணகையாள் கால்ச்சிலம்பிதென்ருன்
வெட்டியென்னெ கொல்லாதெ
விட்டுவிடு தட்டானெ
எட்டும் ரண்டும் அறியேனெ
ஏழஉடலாயி இருந்தேன்
திட்டெனவெ விட்டிடுகில்
சிலம்புனக்கு தருவேனென்றண்
வல்லாமாயென்றறியேனுன்
அன்னியாயம் செய்யாதெ
பொல்லாத நான் கொண்டு என் பொற்கொடியெ கூட்டிவந்து
நல்லகுல பத்தினியெ நடுவழியில் தள்ளிவந்தேன்
கொல்லவென்று நீர் துணிந்தால் யென் கொடியிடக்கங்காருமில்லெ
செம்பியர் கோன்முறை நடக்க சிறந்த பெரும்ங்காவேரி
நம்பியற்குத் தேனு நாடறிந்த கோவலனுர்

2916 பேடிப்பேன் (மலையாள வழக்கு)—பயப்படுவேன்
2937 ஏழை > ஏழ (பே. வ. மா)

அன்புகிலும் கண்ணகய்யாள் அடிச்சிலம்பு கொண்டுவந்தேனி
இன்பமுள்ள தட்டானெ யென்னெவிடு கொல்லாதெ
பகெயுண்டொ நானுனக்கு பணிசமையித்தாயோ நீயும்
வகையறியாமல் சொன்னல் மணிச்சிலம்பு தெரியாதெ
திகையறியேன் நானுமிந்த தீவினெகள் செய்யாதெ
சிவனறிய விதிவிதென்ன
திகைந்திருந்து அழுதேன்ங்காண்
அம்மெ பெற்றுர் பலநூமுண்டு
அழகுபெற்றுர் யென்தாயார்
பொருமியிருந்து அழுதேன்ங்காண்
குரங்கிளந்த பசியேபோல்
பெப்பெரிய பாண்டியர்க்கு
பாகுடமாயி யிச்சிலப்பூ
நடெயுடா நீயுமென்று
நடுத்தெருவே அடித்தேன்ங்காண்
அடிபட நான் நடந்திட்வே அவனருகெ தெண்டெறி
வழிவிடெய பிறவெழுதி வாசல் நோக்கியெ நடந்தான்
நடந்து சென்று பாண்டியன் தன் நல்மதிரெ கூடலிலெ
இடந்து தோன் தோள் விளியெ இனப்பிடித்து தட்டானும்
கடுந்திடுவேண் யிவனினவே சீர்நடுவெ கொட்டி வைபித்தான்
படிதனிலெ சிலம்பெ வைபித்து பாண்டியென்னெ நமஸ்கரித்து
யெட்டுதிக்கும் புகழ் யுடைத்த இசல்பெரிய பாண்டியன் முன்னெ
திட்(டெ)டனவெதட்டானும் சிலம்பு வைத்து நமஸ்கரித்தான்
கட்டுமுன்னல் கொடுமையான் கால்ச்சிலம்பும் கள்ளனேயும்
ஓட்டமாயி ஓடிபிடித்து வந்தேன் உன் தேவியார் கால் சிலம்பிதுவெ
வடிவான தேவியற்கு வாகுடனெ நான் சமைத்து வபித்து
கடுதான தொளி(ல்) சிறந்த கால்ச்சிலப்பு கட்டிவெனெ
கடுதாக கொண்டு வந்தேன் குவலயத்தோர் தாமறிய
மடியாமல் கொன்று வையும் மன்னவெனெ இனதொழுதான்
மயிக்கான விழிமயிலாள் மன்னவனெ உன் தேவி
பொற்க் காலில் சிலம்புகட்டா பொன் வனிகன் யென்றறிவுனெ
சிக்கனவெ ஆளுவிட்டு செம்பியெந்தன் நாட்டழகும்

2947 அன்புவியில் என்பது அன்புகில் என்று எழுதப்பட்டுள்ளது.
2960 நடெயுடா - நடையுமடா
2966 கடிந்து > கடுந்து [பே: வ: மா]
2973 தொளில் சிறந்த—வேலைப்பாடுமிக்க

ஒக்கெயொரு நாழிகையில் உன்முன்பாக கொண்டுவந்தேன்
கயிக்கணியும் மூலமயிலாள் கால்ச்சிலம்பெ பணிமுகித்து
இச்செயுடன் வைத்திருந்தேன் ராகுவந்து கொடு போனன்
அச்சமறக்கன பாண்டியெயுனெ ஆளுவிட்டு கொண்டு வந்தேன்
நிச்சயமாயி கொடு வந்தேன் நீரெழுந்தருளும் வாசலிலே
நல்த்தமிழும் பாண்டியனர் நன்றுகண்டீர் தட்டானெ
குலந்து சிங்காசனவும்விட்டு கொற்றவெரும் யெழுந்தருளா
யென்னுடய தேவியர்கால் சிலம்புகட்ட கள்ளனெத்தான்
மன்னவெனும் மிகக்கோவித்து மந்திரியெ முகம்பாற்த்து
இன்னுமுண்டோ துணெவந்தவர் இவன்தானெ கட்டாதென்றூர்
அடியும் இவன் மார்தனிலும் அவயமிடும் வாயிதனிலும்
பிடியுமெடா நெருப்பெடுத்து பின்வாங்கி கெட்டுமென்றூர்
வடிவுடெயா கால்ச்சிலம்பெ வந்துகட்டதறியாயோ
சடுதியிலெ மழுவராசன் தனக்காளு விடுமெயென்றான்
தேவியர்கால்ச்சிலம்பு கட்டான் ராச்சியவும் மூடிப்பானினவெ
கோவமூற்று பாண்டியெனும் குலக்களத்தெ நடத்துமென்றான்
காவல்வைத்து பாற்த்துதாலும் கண்ம்மாயும் மெத்தெயென்று
வாசல்விட்டு கொடுபோனீர் மழுவரசன் கைகொடென்றான்
கோவமூற்ற மன்னவேனெ குளபிடித்து கும்பிடுவேன்
தேவியர் கால்ச்சிலம்பாறல் தின்றிவிட்டில்லெனடியனும்தான்
பாவமுற்றதட்டானெ பதறியுடல் யெரியுதுகாண்
ஓம்நமசிவ்ாயமென்று யென்ம்பாவினெயெ என்றழுதேன்
நன்றுநடு அறிவீரொ நற்சிலப்பு கட்டவெனெ
தின்றிவிட்டில் லெனடியன் தேவியர்தான் நடுவில்லெயொ
ஒன்றுபட ஒன்ம்மயென்று ஒழுத்திடுங்கொ மன்னவெனெ
பணிசமைக்க பொன்கொடுத்த பாண்டியனர் அறியாரொ
மணிச்சிலம்பெ கால்க்கணிந்த பைந்தொடியாள் அறியாளொ
இணெயில்லெயெ உங்கள் சிலம்பெ
ஒக்கவயித்து பாருமென்றேன்

2981 இரவு > ராகு (பே. வ. மா)
2985 சிங்காசனம்—அரியணை
2989 அவயம்—வெட்டிவேர்
2992 சடுதியிலெ—விரைவாக
2995 கண்ம்மாயும்—கண்சோர்வடையும்
3003 ஒழித்திடுங்கோ என்பது ஒழுத்திடுங்கொ என்று எழுதப்பட்டுள்ளது.

அன்னியாயப் செய்யாதெ அருகிருந்தார் நடுவில்லெயொ
பன்னிரண்டு வருஷமதால் பணிரண்ண குன்றமதும்
கண்ணகய்யாள் பிறந்தமுதல் கல்லியாணந் தினத்தழகும்
கண்ணகைய்யாள் பிறந்தமுதல்
யெண்ணரிய தட்டார்கள்
இச்சிலப்பெ சமெத்ததென்றேன்
பணித்திறத்தெ அறியாரொ பாண்டியனூர் நடுவில்லெயொ
அறிந்திடுங்கெ உண்மெகண்டு சோதித்தால் தெரியுமென்றேன்
இணெபொருந்தும் விளியர்க்கு யேற்றதாயி தகப்பனுமாயி
இணெபொருந்தும்சீதன்மால் யெங்களுக்கு தந்ததென்றேன்
துட்டடக்கமாயி இருந்தீரொ சொல்ப்படிக்கொ இருந்தீரொ
விட்டுவிடு செட்டிதன்னெ விளங்குமுடி மேதரித்து
கட்டவன்தான் முகம்பாற்த்தால் கல்ப்போல் தெளிந்திருக்தும்
விட்டுவிடாதிருந்தால் வேந்தருக்கும் நடுவில்லெயொ
பட்டணத்தில் செட்டியென்றும் பத்தினியென் பாரியென்றும்
பத்தினிகால்ச்சிலம்பதென்றும் பறைந்தமொழி தெரியாதொ
தீட்டுமுண்டு பேசினதும் தீனம்மொன்று தெரியாதோ
சொட்டப்பரிக்கண்ணுரெ சொல்ப்பெரிய தேவியாரெ
திட்டெனவெ வரவழைத்தான் திருவெளுதி மன்னவேனும்
அழயிக்க மெள்ள பாண்டியன்தன் ஆளவர்க்கு சென்றிடவெ
திகைத்து மெள்ள தேவியாரும் தென்னவன்முன் வந்தணுகி
பருத்தமன்னன் தின்ருட பருமலெபோல் கவலெவயித்தான்
அழைத்த பணிவிடையெனக்கு அருளுமென்ரூர் ஆண்டவெனெ
கவலழக்காரிகைய்யாள் க(ா)வலெனோடெ கேள்ப்பாள்
மழெமுகிலெ சிறெயில் வைய்த்த முடிவேந்தன் சொல்லுகிருன்
நப்பழிந்த மொழியாரெ பாவெயெரெ உன்ஞ்சிலம்பொ
வஞ்சியிலும் மெல்லடியாள் வாயிதாவடிவாரெ
கல்ப் பொருந்தும் விளியாரெ காரிழெயெ சொல்லுமென்ருன்

3010 பிறந்தமுதல்—பிறந்தது தொடங்கி
தினத்தழகும்—தினம்வரை
3033 பறைந்த (மலையாளவழக்கு) - சொன்ன
3024 தீனம் - கேடு
3025 சொட்ட - சித்திரம்
3027 அழைக்க என்பது அழயிக்க என்று எழுதப்பட்டுள்ளது.
3029 திண்டாட என்பது தின்ருட என்று எழுதப்பட்டுள்ளது.
3030 பணிவிடை - வேலை
3033 நப்பழிந்த—சிறுமையற்ற

நஞ்சனைய விளியாரெ நடுவாக சொல்லிடு நீ
கெஞ்சியிவன் கொஞ்சுகிருன் கேட்டால் நான் சொல்லுவெனெ
உன்ஞ்சி(ல)ம்பெ பெண்ணரசெ உள்ளது சொல்லென்ருனெ
நாமமுற்ற பாண்டியனர் நல்ச்சிலம்பெ கைகயிக்கொடுத்தார்
தேவியரும் வாங்கிமெள்ள திற்க்கண்ணிலெ சிலம்பெ வையித்து
கோர்வைபகழத்தணியும் குருந்தணியும் உள்ளுந்
தான் வயிர பணியழகும் தறளமணி கண்டான் காண்
இச்சிலம்பெ தொட்டாரெ இப்புகியில் மாந்தெயர்கள்
ஒப்பமிதுக்கார் சொல்லுவீர் உங்களுக்கு தெரியாதெ
சிலம்பு நகெ ரெஷ்ணங்கள் சி[றை]றந்தி(ரு)க்கக் கண்டில்லெயொ
இப்பணிவகைகள் சமைத்தாயொ நீயோடா தட்டானெ
மதிர நகர் முடிவதுக்கொ மன்னவனெ நீர் துணிந்தீர்
ஒருவேர்க்கும் தெரியாதெ உன்பணியொ தட்டானெ
பெருவழிவரும் நடப்பார்களை பித்தராயி நீருருந்தீர்
திருவெழுதி மன்னவனெ தெய்வப்பெண் சிலம்பிதென்ருள்
அரிசிறெந்த மதிரநகர் அழிவதுக்கொ நீர்துணிந்தீர்
உரம்பறைந்த தட்டானெ உன் கிளையும் முடியாதெ
தர்மதிக்கு இணையு முண்டொ தட்டானெ சொல்லுமென்ருள்
என்றெண்ணிநீர் இச்சிலம்பு என்ஞ்சிலம்பூ யிதெல்லவெ
நன்றல்லவெ தட்டானெ நடுக்கேடு செய்யாதே
நன்றல்லவெ மன்னவெ நீரும் நடுக்கேடு செய்யாதியும்
இன்றளவும் களவறியான் என்ஞ்சிலம்பூ இதெல்லவெ
நன்றறியா ஊரியிதுவொ நடுக்கேடு விளையுமென்ருன்
தேவியர்தான் சொன்னதுக்கு திகைமுடிந்த தட்டானும்
வாயிபொத்தியெ நகைத்து மன்னரோடெ யேதோ சொல்வான்
நாமெதோ வாற்த்தெ சொல்வோம் நல்லறிவு தெரியாதெ
தாமசமென்றெ பாற்க்கில் தலிப்பிளப்பீர் மன்னவெனெ
எட்டுதிக்கும் புகள் படைத்த இசல் மதிரெ பாண்டியனெ
செட்டிதன்னுல் ஈடழிந்தாள் தேவியர் தான் யுன்னுனெ,
வெட்டயிலெ பதுங்கிடுவாள் விளிநறுக்க கண்டேனே
ஒட்டிமனம் ஈடழிந்து உணறு கெட்டாள் தேவியரும்

3039 நாமமுற்ற—பெயர்பெற்ற
3044 ஒப்பம்—இணை, ஒத்ததன்மை
3045 ரெஷ்ணங்கள்—அமைப்பழகு, ரெத்தினங்கள்
3049 நீரிருந்தீர் என்பது நீருருந்தீர் என்று எழுதப்பட்டுள்ளது.
3062 தாமதம் > தாமசம் (பே.வ.மா.)

வித்தெயுள்ள கள்ளெனிவன் வேஷம் மாறி போயிடுவான்
வைவீத்து செல்வம் பாராதேயும் மழுவரசனென் தனெ அழெத்து
அழத்தபடி கொல்வீதுக்த் அரசனுக்கு முறமெயென்றான்
முறமெயெல்லாம் பாண்டியெனெ ஸ்மயிக்குழலாள் செயிதபிழெ
பறயவொண்ணாதடியனுக்கும் பழுது சொன்னால் தேவியநம்
அழுத கண்ணீர்க்கதுனையன் அவளெங்கி யேதோசொல்வாள்
பாண்டியர்க்கும் தேவியாரால் வைத்திருக்க ரீதியில்லாமல்
கோவித்து பாண்டியனார் கொடியிடெக்கு விடெகொடுத்தார்
பாவித் தட்டான்செசல் புழுதல்லவெ மெயிதென்று
தீயிட்டு நெஞ்செரிய தின்றுடிதானிரிக்கா
வேகித்து கொல்லவென்று விடெயேகிவிட்டானிங்காண்
கூப்பிடுவேன் வாயிபெருகி உம்பிடுவேன் உன்னாலெ
வாயிதிறய மண்ம்போட்டு வாறிருக பூட்டுமென்றான்
கொம்பனெயாள் சிலம்பு கட்டேன் குடிகெடுப்பான்
[இவனினெவெ
கண்பறித்து யெறியுமென்னா களுஞ்சுமக்க போடுமென்றான்
யெட்டாறும் ஒன்றுமுதல் சங்கயத்தார் தாமறிய
கட்டாமல் கோபமுள்ள கடகரிமுன் போடுமென்றான்
இசல் பெரிய கோவலனுன் இதுவொ உன்மெபி என நினைந்து
பகல் யெவறவெயில் தனிலெ பட்டவனைந்த வெளிதனிலெ
கசல் பொருந்தும் விளியார்கள் கண்டவர்கள் கொண்டாடா
மதகரிக்கு மதுகொடுத்து மன்னவனுர் வரவழைத்தீர்
சீறிய மதயானை சிங்களவர் தெருவோடெ
கண்டவரெ தான்விரட்டி கால்விலங்கும் தான்முறித்து
நின்றுபடவெ விரட்டி
நடுத்தெருவெதாறெடி
கொல்லவந்த மதயானெ கொம்பொதுக்கி கும்பிடவெ
கொல்லவென்றும் அல்லவென்றும் கொடியளாகும் இல்லெலன்றும்
வல்(ல)வன்ஞ்சேர் தட்டானும் மன்னவரெ கையிதொழுது
சொல்லுகிறேன் நானுமினி இவன் தொழிலெகண்டீரோ
வானமொக்க மறைத்திடுவான் ராகுபகல் ஆக்கிடுவான்

3073 ரீதி - அடிப்படை
3075 புழுது - பொய்
3082 சங்கயம் - சந்தேகம், கூட்டம்
3086 கயல் > கசல் (பே. வ. மா) - ஒரு மீன்
3094 வல்லவம் - வன்மை

நானிதுக்கு யென்னசெய்வேன் நாடாள போகாதெ
ஆனெபோக தெளிந்ததலெ அறுத்துகல்லொடெ யெறியுமென்ருன்
வாடிமெள்ள நானிருக்க வந்துகண்ட அனெவேரும்
இடியிது போலுமுண்டாமொ பட்டணத்தில் பிறந்தவற்க்கு
பாடிதுபோலுண்டாமொ பட்டணத்தில் பிறந்தவுற்க்கு
ஆடரவெ பிடித்துவந்து அரெதனிலெ வளையவைவிட்டு
பாடுசெய்யும் சீறியென்னெ பரபரனெ அடித்தான்ங்காண்
சீறியந்த மாநாகம் தீண்டமெல்ல படமொதுக்கி
ஓடிமெள்ள நடந்திதுகாண் உன்றனெ கண்ணகய்யெ
நீறுதுகாண் யென்னுடலும் நெட்டூரன் யென்ஞ்சொல்லுவான்
காரியமாயி இனெப்பாற்த்து கையிதட்டிசிரிந்தான்ங்காண்
நாளிதில்மூன் கண்டனென்று நாலஞ்சு பேர்கள் சொன்னர்
ஆடராவெபிடித்தாட்டா இப்படி ஆளுண்டாமொ
ஆனபோக தெளிந்த(வ)னிந்த வித்தையும் அரகம்
[கெட்டமாட்டானெ
நாமமுள்ள பாண்டியனெ நாடாள போகாது
வாயமுள்ள பாண்டியனர் மழுவரசனெ வரவழைத்து
கண்ங்களிலே தூசிநாட்டி கடத்தெருவெ நடத்துமென்ருன்
வெங்கலிட்டதுபோல் மேனியெல்லாம் தள்ளாடி
அந்தமொழி கேட்டதிற்ப்பின் அறிவழிந்தேன் ஆயிழெயெ
பாருலகில் முகம்வாடி பத்தினியெ அழுதேன்ங்காண்
வரிசெயுள்ள மன்னவன்தன் மர்தாமனம் அழித்தவெனெ
ஒருவருஷம் நீரிருக்கில் உயிர்கழுவில் யேற்றிடுகில்
பருகலத்தோர் தாமறிய பட்டணமும் கெட்டிவையிப்பென்
அன்பில்லாத பாண்டியனர் அரும்பாவி விடெயேக
தம்பியரெ வாருமென்று நாமமுள்ள மழுவராசன்
கொப்பெனெயாள் சிலம்புகட்டோன் குலக்களத்தெ வாருமென்ருன்
வன்புசெய்தாயோநீயும் மதிமுகத்தாள் அழகில்லெயோ
நின்றகட் தெருவோடே நெட்டூரமாயிப்பிடித்து
கூன்றபலர்தான்இரங்க கொடுமெயிதும் மெத்தெயென்ற
ஆண்டவெனர்தன்னெ அஞ்சி அறமனதுக்கல்லாமொ
இங்கிவரெ கொல்லாரொ இப்படிஆள் உண்டாமொ
உங்களுக்கு தெரியாதொ ஊராரெ மந்திரியெ

3099 அனெவரும் > அனெவேரும் (பே. வ. மா)
3101 பாடு - துன்பம்
3107 சிரித்தான் என்பது சிரிந்தான் என்று எழுதப்பட்டுள்ளது.
3123 வன்பு - நிலையற்றசெயல்

கோள்நிறைந்த மதிரயிலெ கூறிவந்தேன் பாண்டியெனெ
ஆள்நிறைந்தால் பலனுமுண்டொ அறிந்தமுகம் ஒருபேரில்லெ
நாளெவருமெ யென்றிருந்தேன் நளினமலர்காக்க ஆருமில்லெ
ஆழவேண்டாம் நம்பியரெ அஞ்சாதெ யென்றுரைத்தான்
துணையான மழுவராசன் தோள்பிடித்து கெட்டழித்து
இணெபொன் காலெயானேன் இலங்கும் திருமுகம்வாடி
நலமான மழுவரசன் நடவுமினி முகமெயென்றான்
கோயிக்கல் வாசல்விட்டு தெக்கு வாசலுக்கு மயிக்காகொ
ஆவிமிகத்தளந்து அறிவுடெயா மழுவரசன்
தாள்விரிக்க உண்டாக சாதித்தானெ தட்டானும்
சீர்மையுள்ள மழுவரர்சன் திகெத்திருந்தழுதான்காண்
கோவலனர் வடிவுகண்டு கொல்லவும் கையி ஆடாமல்
வெட்டவும் கையி ஆடாமல் வேந்தருட வடிவுகண்டு
களவறிய நம்பியர்க்கு கண்ணுளன் பொருட்டால்லெ
உலெவாயில் மழுவெ வைத்தா உன் நெஞ்சப் பாருமென்றான்
நலமான நம்பியரெ நான் சொல்லக் கேளுமென்றான்
சிலெவாயித்தா வடிஉடையீர் செட்டியெரெ போயிப்பிழையும்
உன்னெ வெட்ட மாட்டேனான் ஓங்கவும் கையி யெழும்புதில்லெ
அம்மெ பெற்றார் பலருமுண்டு அழகு பெற்றார் உன்தாயார்
பேறுபெற்றார் பலருமுண்டு பேருபெற்றார் உன்ந்தாயார்
இ(ம்)மையிலெ யெழுபிறப்பும் யெழுதினவன் உடலாகும்
உன்னெக்கண்டென் உன் முகத்தில் ஓடிநீர்பிழையுமென்றான்
சீருடைய வணிவர்குலம் செட்டியினால் பிறந்தேனான்
பாரறிந்த கோவலன் நான் பரிசழிந்தேன் மழுவராச
சீருனக்கு சொல்லுகிறேன் திட்(டெ)டனவெ வெட்டியென்னெ
ஊரறிய கொன்றுவையும் உப்மெ மன்னவர் நகெயாரொ
சீருனக்கு மழுவரசெ செய்தியெல்லாம் இப்படிகாண்
கள்ளர்குலக் களத்திருந்த காவினங்கள் கழுவினங்கள்
மெள்ளயென்ன காத்திருங்கொ மெல்லி நல்லாள் வருமளகும்
எள்ளளவும் யென்னெ பிரியாமல் இனெப்பிறிந்தங்கிருப்பாரொ
உள்ளமொழி சொல்லி வையித்து உடன்பிளக்கச்சரிந்தேனான்
களவறிவ நம்பியாரெ கல்பனெதான் உந்தெனக்கு
உள்ளம்தளந்து மழுவராசன் ஓங்கி மழுவெறிந்தான்காண்
இளமதிசேர் பெண்கொடியே யேந்திழெயெ உந்தனெக்கு

3145 வடிஉடையீர்—வடிவினெ உடையீர்
3152 பரிசு—சிறப்பு

வளமெயுள்ள பெண்ங்கொடியெ வந்ததுதான் உன்ஞெணெ
கடுதான குலக்களத்தில் காத்திருந்த கழுகினங்கள்
தீண்டாமல் இருந்ததுதான் பெண்ணரசெ கண்டில்லயோ
கொடும்பாவி பாண்டியஞர் கொண்டுவந்த தட்டான் தனைக்கு
நடுங்காமல் உடல்பிரிந்து நடந்தர்னே மழவரசன்
யெண்ணரியா வண்ணமுலா பெண்ணரசெ கண்ணகய்யெ
நாகமணிச்சிலம்புவிக்க நான்வந்த நாள்துடங்கி
வேதியெனெ காள்பட்டதெல்லா தார்குழலெசொன்னேன்ங்காண்

கோவலன் இறந்துபடல்

தான்நீலக்குழலாரெ தனிநடந்தோம் தேடிவந்தாயி
கொவ்வை(யி)தல் நகையாரெ குலக்களத்தெ சொன்னவேரார்
செந்தவளெ மலரெடுத்து தேவியாரே யென்ருகில்
மங்காபல் வையித்த மாலெ மாண்டிதுதான் நானறியேன்
தங்கும்புகள் மதிரயிலெ தனிநடந்து தேடிவந்தேன்
இங்கிருந்தாரிவிடமென்ஞ இளம்பிள்ளாகள்சொன்ஞர்காண்
கண்டீரயொ நீயும்யென்னெ கழுகிருந்தகளந்தனிலெ
பண்டிருந்த புடிநினைந்தால் பாவெயெரெ நம்புவீரொ
பூண்டெரிய மாதினவெ பொர்க்கொடியே சொல்லுமென்ருன்
மாபாவி தட்டானும் மண்ஞளும் பாண்டியனும்
நீதி அறியாதவர்கள்போல் அவர்நெட்டூர மெத்தெயென்ஞ
போதமறியாதவர்கள் புத்திசொல்லும் மந்திரிமார்
யெத்தினித்தாஞலும் இவரிருக்கில் பதிஅழியும்
நாம்செய்த தவம்நிறைக்கு நாடாளும்பாண்டியெனும்
மணம்செய்யும் கண்ஞரும் வதசெய்த தட்டானும்
தான் செய்தார் ஆர்செய்தார் தலயெழுத்தெநோக்காமல்
யெஞ்செய்வோம் அம்மாநான் யெல்லோற்கும் இப்படிதான்
தன்பமதால் இனமதிரெ நானழிய இருந்ததெல்லாம்
இன்பமுள்ள பாண்டியனும் ஈடுசெய்த தட்டானும்
சிலம்புமொருகெடுபாவி சியலாகும் யென்ருர்காண்

3172 கொவ்வையிதழ் என்பது கொவ்வைதல் என்று எழுதப்பட்டுள்ளது
3174 மாலெ - வாடாப்பூமாலெ
3179 புண்டரிக என்பது பூண்டெரிய என்று எழுதப்பட்டுள்ளது.
3185 வதை > வத (பே. வ. மா)
3188 தன்பம் – அறம், நீதி
3190 செயல் > சியல் (பே. வ. மா)

வேந்தனுமெ செய்ததெல்லாம் மேதினியோர் தாமறிவார்
பட்டணத்தில் இருந்து வந்தீர் பாரமுடிமன்னவெரெ
வாழ்ந்திருக்கும்படி நினெந்து கோவலனுர் யேதோசொல்வார்
யேந்துகொங்கெ நகெயாரெ யென்னுயிரெ மீண்டவளெ
வாழ்ந்திரிக்கும் பட்டணத்தில் வாணுதலெ பெய்யமோதான்
சூழ்ந்தவினெயால் மறந்தீர் சொல்லுமறந்தீர் இனமறந்தீர்
வா(ழ்)ந்திரிக்கும் யூர்நமக்கும் விளங்காது வஞ்சியெரெ
வாழ்ந்திரிக்கும் படிநினெந்தீர் வந்தகொள்ளெ மறந்தீர்
தென்மதிரெ பாண்டியனுர் செட்டிதன்னெவெட்டி வையித்தான்
ஆயிந்தகடல் புவியேழும் அறிந்திதுகாண் யென்கணவ
நாடறிய போந்தொமொ நாமளிருபேருமாக
ஒருதாலிபூண்டதினுல் உலகமெங்கும் பெருவாற்த்தெ
இருதாலி பூண்டிருக்க யெனக்கிசலொ உமக்கழகொ
உருவத்துக்காகயென்னெ உலகறிய கையிப்பிடித்தீர்
இருபத்தோருமாப்பொன் யென் கழுத்திலெ தரித்தீரெ
பருவத்துக்காகாமல் பட்டணத்தெ நாமிளந்தோம்
திருவெங்கும் படியுடயீர் செய்தியெல்லாம் யிப்படிகாண்
காராயிந்த நூல்புரத்தெ களவாண்டா கள்ளவென்று
பேர்ப்பட்டு சீரளிந்து பின்பிறந்தீர் மறுபிறப்பும்
சீர்பட்டுச்சில வாழ்க்கெ செல்வமுண்டொ இனி நமக்கு
நால்ப்பத்திருமாப்பொன் நான் சுமக்க ஆளல்லவெ
வாழ்ந்திருக்கும் படிநினெந்து வந்தகொள்ளெ மறந்தீரொ
யேந்துமுலெ தனெத்திரிக்கும் இசலறியேனே பாண்டியேனெ
தீந்திதுகாண் சிலவாழ்க்கெ செல்வமுண்டொ இனிநமக்கு
வேந்தனுமெ செய்ததெல்லாம் விசாரித்துப் பாருமென்ருன்
ஒப்பமுள்ள பாண்டியெனெ உயிரவும் வருவெனெ
சொல்ப்பெரிய மதிரநகர் தீயெரிக்க வல்லவகெனெ
நல்ப் பகழ செங்கனிவாயி நாயகனெயென் சொல்லக்கேளும்
நீர்யிப்பொழுதெ யெழுந்திரியும் ஈசரடிசேர்வதுக்கு
வாகுடனெயெழுந்திரிளும் வஞ்சியெரெநீருப்யினி

3195 பெய்யுமோதான் என்பது பெய்யமோ என்று எழுதப்பட்டுள்ளது
3203 இசலோ - புகழோ
3205 கர்ண்ணகைக்கு கோவலன் இருபத்தொரு மாப்பொன்னுல் ஆன தாலி கட்டினுன் என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது.
3205 மா - ஒரு அளவைப்பெயர்
3220 வாகு - அழகு

மாயெ பெறும் பாண்டியனுர் மதிரெ கண்டு நான் வருவேன்
கோவலரெ நான்வருவேன் குமரிவேலர்தன்ணெ
நான் பிரிந்தங் கிருப்பேனெ நன்ரெயென் கோவலரெ
மான் பிரிந்த கலெபோலெ மலங்காதெயும் யென்கணவா
உணம்பிரிந்த உயிரானீர் உமக்காக சொல்லுகிறேன்
வனஞ்சிறந்த தேவருடன் வாழ்ந்திருக்கப் போமொயென்ருள்
வாழ்ந்திருக்க போவோமொ வானுலகில் போவோமொ
ஊன மெல்லாம் வந்தவற்க்கு உன்ம்மை முறை செய்யுமென்ருள்
தேனெனெயாள் கண்ணகய்யாள் சென்றிடுவாயி மொழிமயிலாள்
கானல் நிறம் பூங்குழலாள் நாமிரிக்கும் படிவாரி
குறமெயுள்ள கோவலரெ முகம் நோக்கி அழுதழுது
தறதனிலெ தான் கிடத்தி தயிதல்நூல் வாங்கிடவெ
மறவேசன் விதிவசமால் மளுப்பட்ட வணிகேசன்
இறந்தாரெ கோவலரும் இவளும் இன அருகெ சென்ருள்
செங்கமலர்வாயி முகவும் செய்யிழெயாள கிஞ்சுகெவும்
கொங்கெபாரும் பூங்குழலின் கொந்தளர் குளகுழலும்
யேங்கெபோயிகா(ண்)ம்பெனென்றுயெங்கிமுகத்மூத[தழு]றெந்தழூதாள்
மறெந்தேனெ உப்மெயும் நான் மறந்தேநான்யின்ருகி
கறைந்தபால் முலபுகிரா களப்பதித்தேன் யென்ங்கணவ
இறந்தவிடம் பாற்த்திருந்தீர் யெல்லோரும் வாருமென்ன
தேன் பொருந்த மொழிமயிலார் சென்றிடுவாயி கண்ணகய்யும்
வான்ம் பொருந்தும் கழுகினங்கள் வளைந்தெ[ன]ன்னரிகிருக்கா
நானுமிங்கெ வருந்தனையும் யென் நாசகனெக(ா)ற்த்திருந்தீர்
ஊண்தின்னு நிறையுமென்று நந்நுந்தலாள் நடந்தனெளெ

கர்ண்ணகை பாண்டியன் அரண்மனைக்கு வழி கேட்டுவரல்

நடெயிலும் கால்ச்சிலம்பால் நாகமணி தரிபுரள
காவினில் நீர்புரண்டா கனதனத்தெ குளிப்பாட்டி
மணிப்பிடெவெயும் பூந்துயிலெ வருந்திறுகவெதான்யுடுத்தாள்
ஓர்சிறெந்த பூந்துயிலெ ஒருதோளில் தொங்கவிட்டு

3225 குமரிவேலர் - குமரி மாவட்டத்தில் தக்கலை என்னும் ஊருக்குப் பக்கத்தில் உள்ள குன்றில் உறைந்துள்ள குமார கோயில் வேலர்.
3228 ஊனம் - குறைபாடு
3239 கறந்த என்பது கறைந்த என்று எழுதப்பட்டுள்ளது.
3242 அரு > அரி (பே. வ. மா)
3244 ஊன் என்பது ஊண் என்று எழுதப்பட்டுள்ளது.
3246 வருந்திறகவெ— உடலினைச் சுற்றி இறுக்கமாக

நடந்துதலக் களம்கடந்து நாயகனெ அடிதொழுது
நடந்து யெத்தினெ ஆகிலும் நானெ பத்தினியென்ருள்
மதிரெகண்ட காதல் முற்றும் வாணுதலாள் நடந்தனெளெ
நட்டான வெயிலதிலெ நடந்து சென்றுகண்ணகய்யும்
தட்டான் கிளெ தனெமுடிப்பேன் தமிள்மதிரெதான் சுடுவேன்
மட்டாரும் பூங்குழலாள் மங்கெயர் பொன்கண்ணகய்யும்
சொடெபெரிய இளவளெயெ உமக்கடிம பொற்ப்பணியெ
சொக்கனுரெ அங்கயக்கண்
உமக்காக சொல்கிறேன்
கொன்று வையித்தால் சேதமில்லெ சொக்கனுரிங்கில்லெயோதான்
யெங்கும் ஒக்க வளத்தாயெ இங்கு விலெ கூறிவந்தா
வன்கண்ணனுர் செய்தபிழை பிட்டுக்கு மண்ஞ்சுமந்தீர்
யென்ஞ் சிலம்பல்லொதாயே யென்கணவனெ யென்னசெய்தார்
ஒட்டும் நெறிசேரும் தட்டான் அன்யாயம் செய்திருக்க
நான்ஞ்செய்வதுக்கு நீர் அறிய முடத்திரெ
பிட்டுக்கு மண்ஞ்சுமந்திருமறை யணிந்தீர்
பேணிரண்டாக வைத்திருபுரமெருத்தீர்
ஒட்டுமதி இல்லாத மனம் ஊடுருக நின்றீர்
உம்மெநடுவென்று நானிருந்தேனெ
திருவிரிக்கும் முகத்தாள் செட்டியபெண்
தெளிந்த மனம்மொடுபக்குபமாக நடெகொண்டாள்
ஒரு சிலம்பவும் உள்க்கண்கள் சிந்தவும்
ஊர்மதிரெ தெருவோடெ நடந்தாள்
தெருவிலுள்ள மடவயர்கள் மருவலர்கள்காண
தேன்மொழியாளும் தனிய(ா) நடந்தாள்
உருவழிந்தாயி மகளெ
உள்ளது சொல்லென்னு
உன்வடிவு போலொருவேர்
வான் மதிரயிலுண்டொ
குருமணி சிலம்பொன்று உள்ளுநிமாகவெ
கூறிவந்தவனுக்கு நீ மனவியாகுமொ

3252 நட்டான வெயில் - நடுவெயில்
3260-3265. இவ்வரிகளில் சில புராணச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.
3265 திரிபுரமெரித்தீர் என்பது திருபுரமெருத்தீர் என்று எழுதப்பட்டுள்ளது.

பரிசளிந்துநீயும்பசி பெருகினுயெ
வஞ்சிடயெமயிலெ நடக்குமொ அம்ம
வண்ணமுலெயாரவும் வஞ்சியிடெகொஞ்சுகவும்
வாறபேர்களொடு வழிகேட்டு நடந்தாள்
மன்னவன் தென்மதிரெப் பதிவாசல்தானும்
வாச(ல்ச)ற்றும் தூரமொ கிட்டவொ யென்ற
என்னெ அறியாமல் யென்கணவனெ கொன்ருன்
என்கணவனிங்கு களவாண வந்தாரொ
யெண்ணரிய வண்ணமுல பெண்ணுயாள் கண்ணகய்யும்
மன்னவன் தென்மதிரெ தெருவோடெநடந்தாள்
கொஞ்சுகிளி மொழிமயிலெ வஞ்சியெரெ உன்னேடு
கூடிவந்தவர் ஆர்சொல்லுமினவே
கோபமொடு நீயும் இப்போள் கூறவிளிநீ(ர்)சொரிந்தாயி
அஞ்சிஅஞ்சி கொஞ்சிநின்று பின்ஞ்சொல்வாள் அவரோடெ
அவர்தானிந்த மொழிவளம்மகள் தானுரைக்க
வன்மெயுள்ள சொக்கனுரெ தம்மாணெ உம்மாணெ
ஒரு கால்சிலம்பு கொண்டு வந்தாரெ யென்கணவன்
நன் மெய் . . . .
விலெ கூ . . . , ...
நான் கொடுத்தச் சிலம்பாலெ
என்ங்கணவெனிங்கு வந்தார்
வஞ்சியரெ இப்பொது
சிலம்புகட்டா ரென்றுசொல்லி அவரெகொன்றுவையித்தா(ர்)கள்
இன்னுமொரு கால்ச்சிலம்பு யென் கயிலிருப்பதுண்டெ
யென்னெயும் கள்ளியென்று கொல்லுவாரொ மதிரயிலெ
மன்னவரெ சென்று கண்டென் தனிமைகளுரைக்க வந்தேன்
வழியறியேன் நான் நடந்துவந்தேன் தனிவழியெ
மன்னவெனெ பொன்னுசெ கோண்டிருந்தாக்கால்
மழைபெய்யுமொ உங்களுட நாடு தனிலே
அன்னியாயம் அறியாத மன்னவேர்களானல்
ஆண்டபடெ வீடழியும் ஆரறிய போருமென்ருள்
யென்னுணெ ஒக்க அறிந்திரிங்கொ

3280 வாறபேர்கள் - வழியிடை வருகிறவர்கள்.
3285 கிட்ட - பக்கம்
3292 இப்போள் (மலேயாள வழக்கு) - இப்பொழுது
3307 கொண்டு என்பது கோண்டி என்று எழுதப்பட்டுள்ளது

இசல் வெழுதி வாசலது கேட்டுநடந்தாள்
கொடியிடெயாளும் பரிசமோடணுகா
கொஞ்சும் பரிசமோடணுகா
கொஞ்சும்பரி ஆனைத்திரள் அஞ்சு நூறயிரம்
வாடிமனம் உள் கொண்டு வாகுடனுகியெ
வாசல் நெருங்கிவரும் வன்னியர்கள் ஆயிரம்
வேகமோடு மேகத்தெ விலங்கிலிட்ட வேந்தன்
வேள்முடித்த ஆரமணி பூண்டவன்
வாசனைகள் அவரவர்கள் சென்ருல் தரித்தவன்
வாரிதென அடியாமல் நின்ருனெ வேந்தன்
வாகுடனெ இந்த மந்திரிகள் காணவெ
வாசல் சற்றும் தூரமோ கிட்டவோ யென்ருள்
வாகுடனே கூடல் நகர் ஆளுமிசல்மன்னவன்
வன்னவர்களிந்திரன் இப்படி இருந்தார்

கர்ண்ணகை அரண்மனை யடைந்து காவலனிடம் வாயில் திறக்கச் சொலல்

இசல் வெழுத்து மன்னருட வாசல் இதுதானோ யென்னு
இசல்புசத்தாளும் குழலெ விரித்திடவெ
யேந்திழெ கண்ணிர் சொரிய அகமது மகிழ
காகொம்புகுழலினையாள் வெல்லவெ சென்று
காவலாளவாசல் துறெயுமென்ருள்
தன்ம்புமுலயரெ வும்கண்ஞ்சிவந்தாயெ
காரியம் சொல்லொழிய வாசல் துற(க்)கெனுன்
பொன்னெரிய யென்ஞ்சிலம்பொன்று கொடுவந்தார்
புகள் வெழுதி யெண்கணவனெ கொன்று வையித்தாராம்
நன்ம்மெ வருமொ உங்கள் நாச(க)னுக் கென்னு
நானுமொரு கள்ளிவந்தேன் சிலம்பொன்றிரிக்கிது
கன்னல் நெடுங்குழலள் விரித்தெ பிடித்து

3317 வன்னியர் - ஒரு சாதிப்பெயர்

3318 பாண்டியர்கள் ''மேகத்தை விலங்கிலிட்டதாக'' ஒரு மரபுச் செய்தி நாட்டுப்புறக்கதைப்பாடல்களான ஐவர்ராசாக்கள் கதை, உலகுடையபெருமாள்கதை. கன்னடியன் படைப் போர் போன்ற பல நூல்களிலும் குறிக்கப்பட்டுள்ளது.

3330 திற> துற (பே. வ. மா)

3332 துறக்கெனுன்—திறக்கமாட்டேன் ; நான்

3332 சொல்லொழிய—சொன்னல் அன்றி

காவலாளவாசல்துறகுமென்றுளெ
துறயுமின்னி வாசல்தன்(னெ)சொல்லுமின்னி வாசலாளன்

காவலன் கர்ண்ணகை வரவினெ
பாண்டியனுக்கு அறிவித்தல்

முறயிடவெ வாசலாளன் முடியுமின்னி மதிரநகர்
மாயவன்தன் அருள்படியொ மற்றும்நாம் சொல்லறியேன்
தற்க்கமிழும் குழலாற்க்கு நடதுறகெனென்ன்றுசொல்லி
பொற்கொடியாள் நின்றிடவெ புரவியேறி சென்றிடவெ
படெபெரிய பாண்டியன்ந் தன் பவனிக்குள்ளெ சென்றுநின்று
தற்கோலவிளி மயிலாள் நல்ப்பெரிய முகம்பாற்த்தாள்
வடிவுடெயா பிறவெழுதி பாதக சிங்ஙாஸ்தனத்தில்
படிமுழுத்தம் ஆண்டிருக்கா பலகாலம் நமஸ்கரித்தான்
வாள்மயுள்ள வாசலாளன் வாற்த்தெசொல்ல மாட்டாமல்
படிமுழுத்தம் ஆண்டிருக்கா பலகாலம் நமஸ்கரித்தான்
வாள்மயுள்ள வாசலாளன் வாற்த்தெ சொல்லமாட்டமல்
சூழநின்று கையி தெரித்து தொழுதான்ங்காண் பாண்டியெனெ
யென்றிசையும் தமிள் கூடல் இன்றுபுகி ஆண்டவெனெ
நாழிகைக்குள் தன்றல்லக்காண்
யென்றிசய்யும்புகள் படெத்த இசல்வெழுதி மன்னவெனும்
காத்திரிந்து தான்துறந்து கண்ங்கலங்கி ஓடிவந்தாயி
மாத்திரைக்குள் ஊரழியும் மன்னவெனெ இன்றுமினி
சாத்திரங்கள் யெண்ணமெத்தெ சமற்த்தனெ சொல்லுமென்றான்
அலகடலில் உருமுறிந்து அணைந்ததுண்டெ இவிடமதில்
பலதிசெயில் இருந்து மன்னர் பாகுடங்கள் வந்ததுண்டொ
குலவேசன்தங்களிலெ கூறளிக்க வந்ததுண்டொ
காலனவெ ஓடிவந்தாயி காரியத்தெ சொல்லுமென்றான்
காரியத்தெ சொல்லுகிறேன் கண்டறியேன் இப்படி நான்
காரிரிள்போல் கொண்டளிந்த கொங்கெமலர் போலொருத்தி
நீரிருந்து கோவிக்கலில் நெறிமதிரெ கூடலிலெ
காரிழெயாள் வாசல் தன்னெ கடுக அவர் துறயுமென்றுள்
அய்யாவின் திருவாணெ அழகுடெயாள் பெண்ங்கொடியாள்
பய்ய ஒரு குளத்தாள் படெவீட்டை முடிப்பதற்க்கு
மெய்விளிநீர் சொரிய மெள்ள வந்தாள் வாசலிலெ

3339 வாசலாளன் – வாயிற்காவலன்
3342 நடை > நட (பே.வ.மா) – வாயில்
3358 அலை > அல (பே. வ. மா), உரு - தோணி, கப்பல்

வைய்யக்கரயாளிவளோ மாதேங்கியோ அறியேன்
அட்டதிக்கும் புகள்படைத்த அருள்வெழுதி மன்னவேறும்
செட்டிதன்னால் உயிரிளந்தீர் சிறந்ததட்டான் சோல்கேட்டு
விட்டுவிடீர்தாமாகில் மெல்லியரிங்கு வருவாளோ
மூட்டிவிட்டும் குனிங்குளிவர்களொமுன்னறிய வேண்டாமோ
நாலுமூன்றும்ங்குலத்தில் நல்வணிகப் பெருமாளும்
மாலையிட்டா பெண்ங்கொடியாள் மனவியென்றுயர்தபித்து
ஞாயத்தில் முழுதாண்டவனே நகரி இன்று அழுந்திடுமே
வேலெயென்ற தோள் மயிலே மினவிடப்பாண்டியனே

பாண்டியன் கர்ண்ணகையை காவலனிடம் அழைத்து வரச் சொலல்

கருத்தழிய சொன்னயே காவலாளன் யென்முன்னெதான்
ஒருத்தி வெல்ல படயுமுண்டோ உதகிவந்த மன்னவர்ஆர்
சிரித்திருந்து பாண்டியெனும் தென்னவனே வரச்சொல்லென்றான்.
கருத்துடயர் காவலாளன் கையிதொழுது நடந்தனனே
பாண்டியனார் விடைகொடுக்க பத்தியுள்ள வாசலாளன்
மீண்டு சென்று தான்துறந்து
மெல்லியெரே முகம் நோக்கி
நின்றதளே போட்டு வையித்து நீயும் உள்ளே வாருமம்மா
ஆண்டவனார்கல்ப்பனையாயி ஆயிழையே வாருமென்ன
விரித்திரிக்கும் குழலாரே விளிவாயிகண் துடித்திருக்கும்
பிரித்திரிக்கும் குழலாரே கண்ணரே அகலவந்தேன்
அப்பிரிக்கும் கொன்றிளந்த அழகொத்த அழதுடயீர்

3369 வைய்யக்கரயாள் - பகவதி. வைய்யக்கர என்பது வைகைக் கரை என்பதன் திரிபு. மதுரை மாவட்டத்தில் வைகைக் கரை என்று குறிப்பிடப்படுவது 'சோழவந்தான்' என்னும் ஊரினைச் சுற்றியுள்ள இடமாம். வைகையாறு இவ்வழியாகத்தான் செல்கிறது. வைகைக் கரை பகவதி பற்றிய செய்தி 'உலகுடைய பெருமாள்' கதையிலும் காணப்படுகிறது. இன்றும் சோழவந்தானில் 'பகவதி' என்ற பெயரில் கோயிலில்லாமல் 'காளி' என்ற பெயரில் ஒரு சில கோயில்கள் உள்ளன.

3369 மாதங்கி > மாதேங்கி (பே. வ. மா) - காளி, துர்க்கை

3371 சொல் என்பது சேரல் என்று எழுதப்பட்டுள்ளது.

3378 உதகி — உதவி

3386 ஆயி — ஆயிற்று

அமக்கலிதன் உந்தனெக்கு அருளி நடகொண்டனளெ
சிலம்பெ ஒருகால்க்கணிந்தாள் செய்யிழெயாள் கண்ணகையும்
மலங்காதெ நானுனக்கு மாதுலங்காண் மயிலாளெ
தலங்காணக்கவலெ வையித்தாயி தமிள்மதிரெ ஆண்டிருந்து
மலங்கள்மிகச் செய்ததெல்லாம் வெற்றிகொண்டு இருந்ததினல்
குலங்கள்மிக பிலம்பறைந்தால் கொடியிடெயெ இனஞ்சொல்லக்
[கேளும்
மலங்காதெ மன்னவெனர் வரவழைத்தார் உன்னெயென்றுன்
மலங்கிவித்தான் யெந்நாளும் மன்ருகில் இப்புகியில்
இலங்கெயெட்டும் ஈடுசெய்வான் யெனப்பழியெ நான்கொள்ளுவேன்
மனம் பொருந்தும் கண்ணர்க்கு மணிவாசலும்ந்துறந்து
தான்வணங்கி முன்நடத்தி தயிதநல்லாள் வருவதுமுதல்

பாண்டியன்தேவி தான்கண்ட கனவினைக் கூறல்

யேங்கிமன்னர் தேவியார்தான் ராத்திரிதான் கண்டகினவு
நன்றல்லகாண் மன்னவெரெ நகரிஇன்று அழிந்திடுமெ
வென்றியுள்ள மன்னவெரெ வெதினமுண்டாம்உமக்கு
இன்றுநகர் அழிந்திடுங்காண் இல்லெயென்றல்உயிரிளப்பீர்
கொன்றவிடம்ங் கிடந்தவிடவும் கோவுரங்கள் நகண்டிடவும்
ஒன்றுபட நீர்பிடித்த உடவாளு முறிந்திடவும்
பன்றி வெட்டி அறுத்திடவும் படவந்து சூழ்ந்திடவும்
மற்றுமுள்ளோர் தம்மாணெ திருமாலாணெகண்டெனெ
கொன்றபழிதாருமென்று கோவுரம்போல் ஒருத்திவந்து
நின்றபேர்கள் இனெப்பிடித்து நிணல்சோரெஅறுத்திடவும்
வென்றிபுனல் படவீட்டெ வேற்றரசர் ஆண்டிடவும்
ஒன்றுபட கண்டேனன் உம்மாணெ மன்னவெனெ
மருவலர்கள் முறிந்திடவும் வாணுலோகம் மறெந்திடவும்
இருள்வந்து சூழ்ந்திடவும் இசல்மதிரெ கூடலெல்லாம்
சூர்ப்பணிகதன் மூக்காலும் துர்வத்தன்துயிலாலும்

3390 அமங்கலி > அமக்கலி (பே. வ. மா) - விதவை
3392 மாதுலன் - மாமனர்
3394 மலம்—பாவம்
3395 இனம்—இன்னும்
3403 வெதினம்—வேதனை
3405 கோபுரம் > கோவுரம் (பே. வ. மா) நகண்டிட—அசைந்திட
3413 வானுலகம் என்பது வாணுலோகம் என்று எழுதப்பட்டுள்ளது
3415 சூர்ப்பனகை என்பது சூர்ப்பணிக என்று எழுதப்பட்டுள்ளது.
3415—3416 இவ்வரிகளில் சில புராணச்செய்திகள் கூறப்பட்டுள்ளன.

பாப்பினிப்பெண் நாக்காலும் பத்தினிக்கால்ச்சிலம்பாலும்
கோள்கொண்டு வந்தகொள்ளெ கூறினல் போமோதான்
வெசினமுண்டு மன்னவெனெ தென்மதிரெ அழியுமென்ருள்

பாண்டியன் தன்தேவியைத் தேற்றுதல்

கண்டகிஞ மெய்யாமோ காரிருளும் குழலாரெ
பூண்டிரிக்க செம்மமுதல் புகள்ந்து வையித்தார் சிவஞரும்
என்றிசெயும் அழிந்தாலும் யென்மதிரெ அழிந்திடுமொ
வண்டிரிக்கும் குழலாரெ மலங்காமல் இருநீயென்ருர்
கொண்டெபோதன்னெவிலங்களிந்தோன்குவலயத்தெஆண்டிருந்தேன்
யெத்திகையும் வினவொழ்த்தேன் எதிற்த்தவரெ ஒ(ட்)டிவிட்டேன்
வண்டிரிக்கும் குழலாரெ மலங்காமல் இருநீயென்ருர்
கண்டுயென் சிலம்பெடுத்தால் கள்ளனேயும் கொல்லாரெர
உன்ஞ்சிலம்புக்கிணெயாக ஒருவர்கொடுவருவாரெர
உன்கண்ணுர் சிலம்புகட்ட மறவனுட மறத்தியிவள்

கர்ண்ணகை பாண்டியனே வந்து காணல்

உள்ளில் வைத்த சினமுடனெ ஒருவர்முகம் பாராமல்
கள்ளியெப்போல் முன்தலேயாள் கனதனத்தின் ஒளிமுகத்தாள்
பள்ளிவட்டம் அகத்திரிக்கும் பாண்டியெனெ நடந்துகண்டாரெர
தென்ன நல்ல சேகுவேரும் சிறுவில்லாம் செறுக்ககளாம்
பூண்டயினம் மானெனயாள் பொர்க்கொடிமார் சூழ்ந்து நிக்க
அண்டெமெத்த குழப்பிடித்து அவன் வாசலும்ந்தான்ங்கடந்து
உள்ளில் வையித்த சினமுடனெ ஒதுங்கி நின்ருள் ஒந்நுதலாள்
மெயிப்புடைய பாண்டியஞர் வீத்திரிக்கும் சிறதனிலெ
கற்ப்புடயா கண்ணகய்யெ கட்டிவைத்த காவலாளன்
சொல்ப்பேற்றம் பேசாதெ சொல்ப்பெரிய மன்னவர் முன்னெ
அற்ப்புதமெ உன்னுட முன்கருத்தறிந்து பேருமென்ருன்
ஆடவர்நெஞ்சமுருகும் அப்பழி நீ கண்ணகய்யே
நாடறியா காவலாளன் நன்ருகக் கூட்[ட]டிவந்து
கூடல்நகர் ஆண்டிரிக்கும் கொற்றவஞர் தன்வடிவெ
ஈடழிய பாண்டியெனெ யேந்திழெக்கு காட்டிஞனே

3418 வெதினம் > வெசினம் (பே. வ. மா)
3420 செம்ம - சேம
3430 கள்ளி - திருடி
3431 பள்ளிவட்டம் - அரசன் உறைவிடம்
3432 சேகுவேர் — திறமையானவா

கோபமுற்ற பாண்டியெனெ தேடிவந்த கொடியிடெயெ
தாபமுற்று காவலாளான் தான்க் கூட்டி கொண்டுவந்து
அவருடனெ பெண்ங் கொடியெ உன் அன்யாயம் சொல்லுமென்ருன்

பாண்டியன் கர்ண்ணகையிடம் வரவின் காரணம் கேட்டல்

கண்டதிற்ப்பின் பாண்டியெனர் களிபுகிந்து நகெயாகி
யென்றிகையும் நடந்தாலும் இப்படிபெண்ணுண்டாமொ
வண்டிரிக்கும் குழலாரெ வந்தவகெ சொல்லுமென்ருன்
குலம் சிறெந்த வேல்விழியாள் கொந்தளற்வாயி குழலாளும்
குலம் சிறெந்த நல்லழகும் செங்கனிவாயிகிஞ்சுகவும்
மலர் சிறெந்த கலமுலயாள் வஞ்சியெற்க்கு இடையழகும்
மால்வழுந்தப் போல் வழுதி வழுதிமய்யல் கொண்டானெ
யேஜெ நீ தனிய நடந்தாயி யெந்தவூர் யேந்திழெயெ
வாயிநீரும் பெருகிஜுயி வாயிமுத்துக்காசை கொண்டேன்
தேனனய மொழியாரே செங்களனிவாயிகிஞ்சுகவும்
மானினமெ கொண்ட கண்ணுள் வந்த உன்மெ சொல்லுமென்ருன்
விலம்புருக சிலெவளைத்து வேள் மதனக்கணயை எயிதான்
நலம்புருக படியெ எயிதான் நான் விலக்க மாட்டேன்
பொன் ஊளிப் பட்டுருகும் பூவாளித் தொட்டவெனெ
அற்ப்புதமெ கொண்டு வந்த அனியாயம்சொல்லுமென்ருன்

கர்ண்ணகை தன் வரவின் காரணம் கூறல்

மன்னவேனும் இவனினவெ மங்கெயேரும் கண்டறிந்து
யென்னெக் கெடுத்ததும் இவன் தானெ யென்றேங்கி
வன்னக்கல் முடிவாயி வாயி புதைத்து சாவேனென்னு
மன்னவன் முன்னெ நான் வாற்த்தெ சொல்லமாட்டேனென்ருள்
மருவிளிநீர் பெருகிடவே மதிரெநகர் ஆண்ட மன்ன
ஒருக்காலில் சிலம்பு கொண்டு உங்களுடராக்ஷியத்தில்
திரிவாரெ தேடிவந்தேன் செட்டியப்பெண் யென்ருள்காண்
தென்னவஞர் மதிரயிலெ சிலம்புவிக்கப் போனவெரெ
பின்னெவர காணுமல் பிறப்பட்டுத் தேடிவந்தேன்
என்னெயும் கெடுத்தாரொ யெங்கெ ஒளித்தாரொ அறியேன்
பின்னவரெக் காணுமல் பிறப்பட்டுத் தேடிவந்தேன்
மன்னபேர்க் கங்கன்னியாம் மற்றுநான் சொல்லறியேன்
வணிகனிங்கெ வந்ததுண்டொ மந்திரியெ சொல்லுமென்ருள்

3447 களி - மகிழ்ச்சி

கண்டாக்கால் தெரியுமென்று கண் நறுக்கியே சிரித்தார்
பணிகள் விக்கும் கடயிதுவெர பாடுடெயா ஊரிதுவெ
கெணியாமல் இடபாற்த்தேன் கேட்டுப் பார் ஊரெயென்ருர்
நளியிருக்கும் மன்னவெனெ நன்றுநடு அறிவீரொ
எளியவெரெக்கண்டாக்கால் இப்படியோ உங்கள் குணம்
வெளிதனிலெ பதுங்குவாரொ விளுங்குவாரோ பூசணிக்காயி
அறியாதெ சொல்லிடுங்கோ உங்களுக்கு தெரியாதொ

காவலன் கர்ண்ணகையை கடுமொழி பேசாதே எனல்

கொண்டு வந்த வாசலாளன் கொடியிடெக்கு யேதோ சொல்வான்
சொல்ப்பேற்றம் பேசாதே சொல்ப்பெரிய மன்னவன்முன்
கண்டுதட்டான் கொண்டுவந்தான் கன்ம்மெலெ கொன்றுவையித்தான்
வெண்டற (ள)மயிலானெ வேண்டாத துரையாதெ
உள்ளபடி சொன்ன தென்னு ஊளியென்னும் சொல்லிடுவான்
கள்ளனென்ருல் கொல்லாரோ கய்யொடெ சிலம்பு கட்டான்
பொன்ஞ்சிலம்பெ விக்கவந்து புகள்வணிகன் கட்டெடுத்தான்
செஞ்சிலம்பெ கால்க்கணிந்தா தேவியாற்க்கு தெரியாதொ
அஞ்சுகிறேன் நானுமினி ஆள்க்கடிய வேங்கையென்ருன்

கர்ண்ணகை பாண்டியனிடம் கோவலனைக்
கொன்ற காரணம் கேட்டல்

வஞ்சி மன்னர் நகெயாரொ வாள்வீரப் பாண்டியெனெ
வல்லாண்மெ செய்தீரெ வணிவர்குலப் பெருமாளெ
கொல்லாமல் இருந்தில்லெயெ குடிகெடுத்தான் அருகிருந்தான்
இல்லானேன் ஆளுக்கால் இரந்தால் பொன்கிடெயாதொ
கல்லாகி இருந்தவெனெ காலன் வந்ததறிந்தில்லயொ
பொல்லாத மனுதனுல் புத்திசொல்லும் மறம்திற்களெ
வல்லாள்ம்ம செய்திடிலும் மறுப்பில் வைத்து பாராமல்
கொல்ல மெத்தெ சல்லியமோ என் கோவலனர் என்ன செய்தார்
ஆட்டெகண்ட வேங்கெயெபோல் உன்அரண்மனைக்குபுகுந்தீரொ
மாதேவிபொருட்டாலெ மன்னன இருக்கசொல்லி

3475 நறுக்கி—வெட்டி
3478 நளி—கிண்டல், கேலி
3491 வஞ்சி - சேரநாட்டின் தலைநகரம்
3496 மறந்தீர்களே என்பது மறம்திற்களெ என்று எழுதப் பட்டுள்ளது
3498 சல்லியம்—சச்சரவு, குழப்பம்

போதம் இவர் தமக்குரைத்து புத்தியெல்லாம்கேளாமல்
பாதகம் செய்தானினவெ பரபரனெ வாசல்தனிலே
சேதமுடன் அடக்கி வையித்து இசம்பி அவன்வீத்தீருந்தான்
திருக்கடை ஊரதிலெ செட்டிகுலப்பெருமாளெ
மருக்கமிரும் குழலாளெ வையித்து வந்தநாள்முதலால்
கருத்துடனெ கணக்கெ சொல்லும் படியாக பொன்கொடுத்து
நிறுத்துப்பொன் கொடுப்பதுக்கு இதமில்லாதிருந்ததுகும்
கருத்துமனம்தள்ளாடி யென்கால்ச்சிலம்பெ தான்கொடுத்தேன்
மிடுக்குடெயா மதிரயிலெ விக்கவந்தான்விலயாக
நடுக்கமுள்ள தட்டானும் நல்லகள்ளனெ தான்பிடித்தான்
ஒன்ம்மெயொன்றும் அறியாமல் ஒருசிலப்புகட்டதென்றும்
தின்ம்மபட கொல்லுவித்தார் செட்டிகுல பெருமாளே
வன்னமொடு மன்னவன்நன் வடிவுபிறகாசமதால்
பொன்னுபத்திரட்டிரண்ட பொன்ஞ்சிலம்பு அழவில்லேக்காண்

பாண்டியன் சீற்றமடைதல்

காலனோடு நீ கெடுவாயி கள்ளனுடகள்ளியோநீ
கள்ளனுட கள்ளி வந்தாள் கள்ளிவெட்டி அடியுமென்றார்
மாலெயொத்த பொன்ஞ்சிலம்பெ மடியாமல் கட்டவெனே
ஆளுவிட்டு கொல்லுவித்தேன் அவன்கூடகட்டகள்ளி
கோளினக்கு வந்ததுகாண் கொல்லுவிப்பேன் உன்னெயென்றான்

கர்ண்ணகை இணைச்சிலம்பினைக் காட்டல்

கள்ளியென்ற பாண்டியெனெ காணுமெந்தன் கால்ச்சிலம்பெ
ஒள்ளியாககால்ச் சிலம்பதிலெ ஒன்றல்லவொ கொண்டுவந்தார்
அன்றுவிலெ கூறவந்த அச்சிலம்பிணெயாகும்
இன்று பொயி சொன்னதுகும் இச்சிலம்பெ பாருமென்றாள்

பாண்டியன் தான்செய்த பிழையுணர்தல்

நன்று கண்டீர் ஞானொருவன் நாடறிய பிழைத்தெனோ
கொன்றுவிட்டேன் நானவனெ கொடியிடெயெ கேளுமென்றான்
வெளியாகபறயவந்த மெல்லியெரெ நீ கேளாய்
அறியாமல் செய்தேனான் அவன்பிழெயெ பொறுத்தருள்வாயி
கருவாக பறயவந்த காரிமெயெ சொல்லுகிறேன்

3501 போதம்—புத்தி
3509 மிடுக்கு - வலிமை
3526 வெளியாக—வெளிப்படையாக

கர்ண்ணகை பாண்டியன் விவாதம்

அறியாமல் நீரிருந்தோ அன்று பூதலமாண்டீர்
வெறியாக நீரிருந்தொ மேகத்தே விலங்கிலிட்டீர்
நெறியாரும் கனவறயில் நீரல்லவோ காவல்வைத்தீர்
மறுமாயம் பேசுவதும் மன்னவற்க்கு முறமெ அல்ல
கணவனுக்கு துணைபோயி யென் கண்ணெதிரெ சினம்பறந்தால்
படைகள் கொண்டு வருவாயொ பன்ந்தொடியெ நீ ஒருத்தி
இணைபிறிந்தால் பலனுமுண்டொ இனி உன்னுயிருங்களெயானெ
குணம் உனக்கு சொல்லுகிறேன் கோவியாதிருந்திடுநீ
கோவித்தால் நீயென்ன செப்வாயி கூப்பிட்டால் நீயென்ன செய்வாயி
பாவித்து நீயென்ன செய்வாயி பன்ந்தொடியெ நீ ஒருதாதி
தாயி இளந்த கந்நது போல் தள்ளாடி நீயிருந்து
மன்னவெணுயி நீயிருந்து மறவேர் செய்யும் தொழிலெடுத்தீர்
அனியாயம் அறியாமல் அறக் கொடிமெசெய்தீர்
மனிதராயி இந்நகரில் மந்திரிகள் உமக்கில்லயொ
சதிவாக கொன்றதுவும் சமற்த்தல்லக் காண்பாண்டியெனெ
சமற்த்தல்லக்காண் உன்கணவன் கால்ச்சிலம்பெ கட்டெடுத்தான்
கதற்த்தவனெ பிடித்தடித்து கண்ணாளன் கொண்டுவந்தான்
பகைத்து மொழி சொன்னாலும் பலியாது யென்னேடெ
விதித்த விதிபடியெ அல்லவொ மெல்லியெரெ உன்னுணெ
கட்டெடுத்தச் சிலம்போடெ கள்ளனென்று கொண்டுவந்தான்
திட்(டெ)டனவெ கொல்வதுக்கு தேசத்தில் முறமெயெல்லொ
கட்டிவையித்து அடித்திடவும் கையிபிறகெ உதைத்திடவும்
ஓட்டம் ஓடி இருந்து கொண்டு ஒன்ம்மெ சொன்னுனில்லெயவன்
பட்டணத்தில் செட்டியென்றும் பத்தினியென் பாரியென்றும்
கட்டசிலம்பல்லா வென்றும் களவறிய மாட்டெனென்றும்
வெட்டுப் படுந்தனெயும் மெயிசொன்னுனில்லெயவன்
உன்னிஷ்டம் படியெல்லாம் செய் நீ உன்னுணெ நீயுமென்ன
மயிலெவாள் குழலாரெ வாகுடய பெண்ணாரெ
குருவிரிக்கும் முகத்தாளெ செட்டியென்ருனில்லெ இவன்
உருவிருக்கும் பொற்ப்புதமெ ஒருவரால் யென்ஞ்செயலாம்
செய்யும்மதி அறிவீரொ தென்னவனெ யென்னமிகில்

3534 பைய்ந்தொடி என்பது பன்ந்தொடி என்று எழுதப்பட்டுள்ளது
3543 சமற்த்து - ஆற்றல்
3544 சதி - வஞ்சனை
3546 பலியாது - நேராது

உன்னிடத்தில் களவாண்டால் என்வஞ்சியெரெ மறுப்பில் வையித்து
பகல்முழுதும் வெயிலதிலெ விலங்கிலிட்டுகாற்த்தில்லெயெ
அய்யோ நீர் அரசிருயிந்தீர் அமச்சர்களும் உமக்கில்லெயொ
மந்திரியெ பறெந்தாளெ மறத்தி இவள் மன்னவெனெ
இந்திரனோடெதிற்த்திருந்தேன் இசல்பெரியதிருமுன்பிலெ
வந்திவள்தான் உரம்பேசி வாற்த்தயிசல் திருமுன்பிலெ
சந்தயங்கள் நினையாமல் தள்ளிவாசல் அடெயுமென்றான்
மன்ன இவர்தானொ மந்திரியுண்டொஇவர்தனைக்கு
பின்னெயிவர் நாடாள பிரமாவிதித்ததெல்லாம்
தன்னிலமெஉள்ளமன்னர் தங்களுக்கும் இழுக்காகும்
மன்னவர்தந் தென்நகரி மந்திரியாயிங்கிருந்து
மாடேறி நீறணிந்தா மகதேவர் தம்மாணெ
நாடறிய சொல்லுகிறேன் நல்த்தமிள்சேர்மதிரயிலெ
தேடிவைத்த பொன்ம்போலெ செட்டிபோருட்டப்படியே
ஈடழிந்தன் குலயாள் இவர்கள் மந்திரிகளானார்
நன்று கண்டீர் மந்திரிக்கும் நடுவிருந்தபடியாளீர்
வென்றபுகி ஆண்டிருந்தா விறல்வெழுதிஉன்னாட்டில்
செம்பகள வாயாளெ சேய்யிழெயெ உன்ங்கணவன்
கொம்பனையாள் சிலம்புகட்டான் கொல்லுவித்தேன்னனவனெ
வெம்பிமொழி சொன்னாலும் வெல்லவொண்ணாதென் னோடெ
தன்ம்பம் இனி நானு(ன)க்கு தையிதலரெ யென்றுசொன்னான்
ஆடரகம் சிலம்புவிக்க அறியாமல் வந்தவரெ
ஈடழிய கொன்றுவையித்து இன்றல்லவொதன்பமென்றீர்
ஆடுகட்டாகள்ளெனெபோல் ஆச்சுதுகாண்உன்வாற்த்தெ
பாடகம் செய்வாயிரிக்கும் பாண்டியெனெ இனெ உரைத்தாள்
களிசிறைந்த தேவர்களானால் அன்னமெஉன்ங்கணவன்
நளியிருக்கும் சிலம்புகட்டான் நானவனெ கொல்லுவித்தேன்
தெளிவாகும் அவனெவிட்டு சிந்தமலத்தென்னோடெ
குளிர்ப்போனால் குப்பாயம் கொண்டென்ன காரியமேன்

3565 உரம் - தைரியம்
3566 சந்தயம் - ஐயப்பாடு
3586 நளி - செறிவு, பெருமை
3587 சிந்தை > சிந்த (பே. வ. மா)
3587 மலைத்து > மலத்து (பே. வ. மா)
3588 குப்பாயம் - மேற்சட்டை
3588 இவ்வரி ஒரு பழமொழியாம்

பெருவடிவெ ஆசெகொண்ட வேசெயென்ரெு நீயிருந்தாயி
உருவிருந்த கோவலரும் நீயும் ஒன்று தான்ஞ்சரியொ
ஒரு படிக்கு நீர் நினைந்தால் ஒத்து வராது உம்மாணெ
கண்ணாலும் பெண்ணுருகள் கண்டறியவுணர்களெ
பெண்ணாளும் நாடாச்செபிடித்திவளெ கெட்டுமென்ருன்
பிண்ணுக்குத் தாஞெழியா பெரிஞ்சிரங்கு தீராது
உன்னெ வயித்த பிரம்மாவும் ஒன்றும் அறியா(த)வரொ
தென்னவெர்தான் கோவலரெ கொன்ற சினம் தீற்ந்தில்லெயொ
என்னெயும் நீர்கொல்லுமினி இணச்சிலம்பு இருக்குதென்ருள்
இரிக்கிது காண் சிலம்பினவெ யேந்திழெயாள் கண்ணகையும்
சிரித்துமனம் களிகூற்ந்து தென்னவெனெ பாற்த்திருந்து
நெரிபெருமெ காண் மதிரெ நீரிரிக்கில் பாண்டியெனெ
கண்ணகய்யாள் சிரித்திடவெ காமதேவன் பாண்டியெனும்
உள்ளுருகி மய்யல் யெழும்பி ஒட்டல்ப்பட்டு உருகினனெ
யேந்திழெயாள் திருமுகவும் இலங்குமுத்து வாயழகும்
வன்னமார்பின் அழகு கண்டு வழுதி மய்யல் கொண்டனனெ
ஆண்டாரும் நாயதுபோல் ஆமெ நாமிரு பேர்
வேண்டாங்காண் பாண்டியெனெ வினெகேடொ உங்களுக்கு
பாண்டவர்தான் பாருதியில் பாவி திரிசோதினனும்
மாண்ட உதிரத்தில் நின்று வான்குளமலெ முடித்தான் காண்
கல்ப்பிரிக்கும் பெண்ங்கொடியெ கவலிரிக்கும்ங்குழலாரெ
பொன்ஞ்சிலம்பெ கேட்டறிந்தா புகழ் வணிகன்தனெமறந்து
கலப்புருகும் மயிலாளெ நால்முகத்தோன் கல்ப்பனயால்
விலம்புருகும் நுதலாளெ வேண்டாத்தது உரையாதெ
காகுலன் தேவியாரெ களவாண்ட ராவணனும்
செம்மத்தில் வையித்திருந்தான் சேற்ந்தறியான் பாண்டியெனெ
கொல்வித்தேன் கோவலரெ கொன்றுவைத்தது மறந்து
காமத்து காம வடிவெ கருத்திரிக்கும்படியென்னெவையித்தீர்
யெதற்த்தவெ ஓடவிட்டு இன்றழகும் நாடாண்டேன்
கதற்த்தமொழி சொன்னாலும் காரிழெயெ நீயிருந்து

3600 நெதி > நெரி (பே. வ. மா)
3602 ஒட்டல்ப்பட்டு - உள்ளம் ஒடுங்கி
3607 துரியோதனன் > திரிசோதினன் (பே. வ. மா)
3611 கல்ப்பு - கற்பு
3613 காகுலன் – இராமன்
3618 கதற்த்த - திடுக்கிடச் செய்கின்ற

புதைத்த பிள்ளையெழுந்தழுமொ போனஉயிர்வந்திடுமோ
விதித்த விதிஒருபேற்க்கும் வெல்லலாமொ மெல்லியெரெ
மயிலாளும் தனமசெய வஞ்சியிடெ தள்ளாடி
காராரும் குழலாற்க்கு கமலமுகம் விசற்த்தொழுகா
தாராரும் செங்கமலர் தாணுதற்ம்ம குழலாரெ
ஓராமல் ஒன்னூரும் ஒன்ம்மெயெ நீ சொல்லுமென்ருன்

கர்ண்ணகை காவெரிப்பூம்பட்டணச் சிறப்புரைத்தல்

ஒன்ம்மெ சொல்ல நீயுரைத்தாயி அன்றும் அறியாதவெனெ
தன்ம்மெயுள்ள ஊர்காணும் தகம்பெருத்த தலங்காணும்
வன்ம்மெயுள்ள காவேரி வணிகர்புகள் யென்னூரெ
கனமணமாயி இருக்குமந்த காவெரிப்பு பட்டணமெ
பொன்னுசெப் பட்டவெனெ பூழியெனெ கேட்டருள்வாயி
பன்னுதமிள் பால்கலரும் பாருதவும் நல்முறெயும்
யெண்ணுமுல்ல அஞ்செழுத்தும் இலங்கிஞல் யெட்டெழுத்தும்
வன்ம்மெயுடன் நெறிவளரும் வணிகர்புகள் யென்னூரெ
ஊளியெனெ கேட்டருள்வாயி பொன்னு கண்டால் அழகில்லெக்காண்
ஆளும்படிஞனிருந்தேன் அறம்செய்தமன்னவெனெ
யெத்திகையும் வாழ்ந்திருக்கா இசல்மதிரப் பட்டணத்தில்
பாரழகும் மண்டலத்தில் வணிகர்புகள் யென்னூரெ
ஒருசிலம்பு கட்டதுக்கு உலகறியகொன்றவனெ
வருவாரெப்போல் பொன்னும் விற்று பகழமுத்து மணிக்கே(ா)ர்வை
சேஷ்டத்தியெ வையித்திருந்தால் சோளனந்தை வாங்கறியான்
தற்மம்மறியாதவெனெ தகமயுள்ள ஊர்யென்னூரெ
அறக்கொடிமெ செய்தீரெ ஆளஇளந்து பாராமல்
குறத்தனெக்கு பொன்கொடுத்து குட்டதனில் தான்சூட
மறுப்படாமல் அடிவணங்கும் வணிகர்புகள் யென்னூரெ
கல்ப்பு நெறியாயிரிக்கும் காவெரிப்பு பட்டணமெ
புனல் நடுவெ மணல் குமித்து புத்தியுடன் பாவசெய்து
குணமிருந்த பேர்களெல்லாம் இவள் கணவனென்றுரைக்க
பூதலபெரு குலந்திடவெ பூரணமால் பாவஞ்செய்து
மணமுடனெ சேர்த்து கொண்ட வணிகர்புகள் யென்னூரெ
காரிருளும் காரிழெயெ கல்லியாணம் செய்ததிற்ப்பின்

3626 தகம் - தவம்
3630 பண்ணு என்பது பன்னு என்று எழுதப்பட்டுள்ளது
3631 என்றுமுள்ள என்பது யெண்ணுமுல்ல என்று எழுதப்பட்டுள்ளது
3641 இளந்து – ஏளனமாக

பிரியமுடன் கடலோடி பின்போனார் வணிகேசன்
அரிபொருள் மிகக்கொடுத்து அன்றுகூட்டிபோனார்காண்
மன்னும்யெங்கள் மன்னவெனெ பிறஊரில் மீண்டுவந்து
கன்னல் மொழி மாதுதன்னெ தேடினபின் காணமால்
போன செட்டி தன்னெ அன்று பொறுப்புடனெ நிறுத்துவையித்து
வன்னமுடன் கூட்டிவந்தா வணிகர்புகள் யென்னூரெ
துணியாகச் சுடுதுதென்று தெக்கெயவன் தான்போனான்
தணியாமல் புகளெவெ தான்வந்தார் காணவென்று
அன்பில்லாத செறுவெனென்று ஆண்டவெனெ சுடுகுதென்ருள்
அல்லவென்று குழலாரெ அருள்வணிகன் மாலெயிட்டு
சல்லியமாயி வயத்துள் வயித்து சஞ்சலிப்பு வந்ததிற்ப்பின்
தில்லுமென்ருள் அலசமென்ருள் நெடுநாளாயி மீண்டுவந்தான்
நல்லதுதான் வாருமென்ருன் நடந்துமனெ புகிந்தான்காண்
சேரகுல மன்னவெனர் சொல்ப்பெரியபட்டணத்தெ
வாழுமந்த பத்தினிமாரெ மன்னவெனெ அறுவீரொ
சூழ்வினயால் யென்கணவன் தோகெபிரசட்டாமல் மறித்தார்
வாகுடய பத்தினிமார் மன்னவெனெ கொடியவர்காண்
வாகுடய வனிகேசனுக்கு வைத்த அமிற்துதான் கொடுக்க
கையிக்கு யிருத்தி கொங்குவியெ குழல்மாதும் அமிற்துசெய்ய
மிக்கவளும் காணமல் மெல்லியெரும் முகமதஞ்சி
கொச்செயென்றதறிந்தீரொ கொங்கிலியார் நீருமென்ருன்
அவ்வூரில் இருந்ததுவெ அடல் வேந்தன் திருநாடும்
ஆறிலொரு கடமைதண்டி அறிவழிய சோழரா[ச்]சன்
மாறிமுகம் பாராத வணிகர்புகள் யென்னூரெ
இரும்பனெய்யெ நஞ்சாக்கி இருந்தரசு ஆண்டமன்னு
துரும்பதுகும் உணம்புமென்று தொட்டறிய பட்டணத்தார்
குரும்பு முல இட்ச்சியெர்கள் குரவெயிட்டுவயல் நடுவார்
கொடியமன்னன்கிட நிணலில் குடியிருக்கும் படியவர்கள்
அடிப்பார்கள் குடிதழைக்க அறநீதிதனில் நெறுத்தி
கோடித்தகம் செய்ததெல்லாம் கொற்றவனெ கேளுமினி
படியளந்த செம்பியனர் பட்டணங்காண் யென்னூரெ
தலங்காக்கும் மன்னவெனர் தக்கநெறிமுற கேளீர்

3661 அலசம் மந்தம்
3662 புகுந்து என்பது புகிந்து என்று எழுதப்பட்டுள்ளது
3672 கடமை — வரி
3677 கிட — ஆட்டுக்கிடை

குலநாங்கும் இணநாங்கும் குற்றமன்றி நில நெறுத்தி
பிலங்காட்டி அடிப்பாரொ பிடித்தடித்து கொல்லாத
கலங்காதெ செம்பியனூர் காவெரிப்பு பட்டணமெ
தென்னன்பழம் பிழமுதிற்ந்து சிவ்ரிமான் கனிசிதறி
வன்னப் பலாவெ்ருக்கெ வாழப் பழமுதிற்ந்து
கன்னி கமுகில் அடக்காயும் காயிபழவும் தான் சிதறி
கன்னல் வளம்ஞ் சுழிஞ்சி கட்டழியும்யென்னூரெ
செம்பகழ அமற்துவாயான் செய்யிழெயாள் கைக்குடத்தில்
சங்குவந்து தான் புகிந்து தா்ளமிடும் தலங்காணும்
நன்ங்குலத்தார் வணிகேசரி நால்ப்பத்தெண்ணாயிரம் பேர்கள்
மலங்காமல் குடியிரிக்கு வணிகர்புகள் யென்னூரெ
அமற்தனெக்கும் செம்பியனூர் அருமாமகன் தேருநம்
சிறைந்த புகள் தழைக்குமந்த செம்பியென்னூரெ யென்னூரெ

மீண்டும் கர்ண்ணகை பாண்டியன் விவாதம்

அத்தனருள் மறவாதா அனெபேரும் கூன்றிருந்து
மூத்தூரு சந்தெயிலெ மூழுநெதியம் போட்டிருந்தால்
கொற்ற வெற்க்கும் பாண்டியெற்கும் அரிய அவர்க்கு கோனில்லெக்
[காண
இந்தநெதி களவாண் இங்கு வருவாரொதான்
அவ்வூரில் அந்த உன்ம்மை அறியாத பாண்டியெனெ
ஒவ்வாத காரியங்கள் ஒருபேரும் ஊரறிவரள்
அவ்வாறெல்லாம் உரைத்தாள் அறிவுடெகண்ணகய்யும்
மய்யல் கொண்ட பாண்டியெனும் மனம்தளர்ந்தங்கிருந்தான்ங்காண்
அற்ப்புதமெ உடெய ம்ன்னன் அரயாண்ட பட்டணங்காண்
தப்பாத வணிகேசன் தங்கள்பதி அத்தனேயும்
மெப்புடெய வணிகேசன் விக்க வந்தார் விலெயாக
பொற்ப்புடயசெட்டியெத்தான்பொன்னெநம்பிகொல்லுவித்தாயி

3683 பலம் > பிலம் (பே. வ. மா)
3686 வருக்கை> வெருக்கெ (பே.வ.மா)-பலாப்பழவகைகளுள் ஒன்று
3687 அடக்காய் — பாக்கு
3693 இவ்வரியில் மனுநீதிச் சோழன் தேரூர்ந்த செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.
3695 அனெபேரும் - அனைவரும்.
3703 அரசாண்ட > அரயாண்ட (பே. வ. மா)
3705 மெய்ப்பு > மெப்பு (பே. வ. மா)

செம்பியேனெ நன்றே வென்றாள் சிறப்புடைய தேசமென்றான்
அன்பிரியப் பதியாரெ ஆருகொன்றாராயிழயெ
வம்பளக்க வந்தாயெ வாள்மயிலெ நீயும் இப்போள்
செம்பியன் மேல்க்கவலெ வயித்தாயி சேயிழயெ யேதுசெயிவாயி
திசெமுழுதும் ஆண்டவெனெ தென்னவெனெ கேட்டருள்வாயி
பத்தியுள்ள பட்டணத்தில் பலகாலம் கட்டதிற்ப்பின்
ஒந்நிலவர் களவாண உலகறிந்த களவானால்
அறமுனக்கு ஈவாற்த்தெ தகம் முடித்த பாண்டியெனெ
பிரு(வு)க்கு சதை நெறுத்த பேர்கள் காண் சோழராசன்
சதெமுடுக்கம் பறயாதெ சடத்தல கையிலெந்தி
சடைபூந்தி யெதிர் புகிந்த சமற்த்த னென்றாயி நீயும்மெத்தெ
படெயோடெ பொருவாவெ பழிதருவேன் சிவனெனெ
வீறுடனெ யெழுந்தருளி வேகித்து பாண்டியெனும்
நடமாடி வீத்திரிக்கும் நல்மதிரெ அறிவாயொ
அரிய பிஞ்சால் முனியும் ஆடல் வேங்கொசல்மனியும்
பெரிய தகஞ் செய்வதுக்கு பிறகூடி மன்றாடி
அரிய பொன்னம்பலவும்
இன்றாடும் இன்ன . . . .
அருள்வணிகன் குலமார்வும் அம்பலவும் யெங்கெயென்றார்
திருவம்பலங்கள் கண்ட செம்பியெனெ இரணியெனெ
ஒருத்தமுகம் கண்டதுவும் உன்[ன்]னைசெனெ நானெதான்
ஒருவம்பில் வீணளக்கா உன்னெ இங்கெவிட்டவர் ஆர்
பொருவெனென்றாயி கண்ணாளெ போரழகு நானெயென்றார்
வழுதியென்று சொன்னதுக்கும் மதிரநகர் ஆண்டமன்னன்
அழிவு வரும் காலமீதொ அறிவு கூடாமலிருப்பீர்களொ
பழிசுமந்த நீஇருந்தால் பயப்பட்டால் பழி வருமொ
கழுத குதிர ரண்டும் கண்டாக்கால் தெரியாதொ
வழுதிவன்ன அறியாமல் மதிகெட்டு இருந்தீரொ
அப்பெரிய கற்ப்புடையாள் அடல் வேந்தன் முகம் நோக்கி
இப்படியெ நானுரைக்க இசல் வேந்தனேது சொல்வான்
ஒல்ப்பெரிய பெண்ங்கொடியெ ஒருவருண்டொ இனத்திறநகர்
மன்னவெரெ அறியேனெ மதிரெ மண்ணில் வந்திருந்து
தென்னவெர்தன் புரமராசன் சேற்த்துவந்த ந[க]ரிகளெல்லாம்

3714 ஈ(மலையாள வழக்கு)—இந்த
3715 டரு—பிரு (பே.வ.மா)
3716 சதெ – தசை
3739 பிரம்மராயன் > புரமராசன் (பே.வ.மா)

வன்னமுள்ள புரவியென்று மகுந்து தடுமாறி
பின்னெ விலெ கொடுத்துவிட்ட பெருமாளெ அறியேனெ
மன்ருடி நீறணிந்தா மாடேறி கொண்டுவந்தான்
நன்ருயி அறிந்து கொண்டன் நரியென்றறிந்ததிற்ப்பின்
நன்றெ ஆவன் நானல்லவொ நல்க்தருவெ அழிவுரைத்தாயி
யென்றிகையும் நின்ருளித்தாயி யெருகுநின்ற நீயல்லவொ
யென்றிகையும் நின்ருளித்தாயி சேயங்கி நின்ற நீயல்லவொ
தெண்டமிட்டுப்பூசினவன் தென்னவெனெ உன்குருக்கள்
யென்றிகேயும் தானறிய யேறினது கழுதெயவரி
ஊர்சிறப்பும் ஊர்நெறியும் ஒன்னுதலாள் உரைத்திடவெ
சீர்சிறக்கும் பாண்டியெனுந் திருச் செவியில் கேட்டிருந்து
கார்சிறக்கும் பூங்குழலாள் கஞ்சமலர் நான் முகத்தோன்
ஆண்டவெனர் திருவாணெ ஆசெகொண்டபாண்டியெனெ
வண்டிருந்தால் அமிற்துண்ணுமொ மலர்ந்தாலும் செம்பகப்பூ
கொண்டவெனேடு உயிரிளக்தும் குலத்தெ உண்ணும் வகநாங்கள்
பண்டுமுண்டொ நண்டுக்கு வால் பத்தினியெ அறியாயொ
செம்பத்திருவணயீர் செய்யிழயெ உன்னழகில்
காமக்குரல் விருதும் கருப்புவில்லும் உன்வசமொ
நாமக்குழலாளெ நாணுலெக்கம்மானேன்
செம்மந்தனிலிருத்தி செழுந்நெதியும் தருவேனுன்
செழுநெதிக்கும் ஆசெயுண்டொ தென்னவெனெ உன்னெப்போலெ
விளி நகெயாள் உன்தேவி விலக்கிட நீ கொன்ருயே
பழிசுமந்து நீரிருந்தால் பசப்பட்டால் விடுவெனெ
வழுதிமன்ன தின்னவொண்ணு வலுமிறுகம் கொல்வார்கெளொ
சந்தணத்தின் கழுவானல் சலியாமலேறுவாரொ
தவனிக்கத் தீமையழவால் தலநீட்டி கொடுப்பாரொ
யெந்தவகெயானுலும் இனி உனக்குப் பலியாது யென்ருள்
சந்தெயங்கள் நினெயாதெ தார்வெழுதி மன்னவெனெ
யெட்டுதிக்கும் புகள் படைத்தா இந்திரரோடெதிற்த்திருந்தேன்

8739-3740 இவ்வரிகளில் நரியைப் பரியாக்கிய புராணச் செய்தி கூறப்பட்டுள்ளது.
3747 தெண்டமிட்டு - வணங்கி
3754 இவ்வரியில் கணவன் இறந்தவுடன் மனைவி அவனோடு உயிரிழக்கும் (உடன் கட்டையேறுதல்) செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.
3763 வலு - வன்மை

பாண்டியன் கர்ண்ணகையைத் தனக்கு மனைவியாகிவிடு என்றலும் கர்ண்ணகையின் சம்மதமும்

வெட்டவறித்திடும்படியெ மேகத்தெ விலங்கிலிட்டென்
கட்டவெனெ நினையாதெ கணவனென்றுயென்னெநினெ
உள்ளில் வையித்த சினமடக்கி ஊழியெனெமுகம்நோக்கி
மெள்ள ஒருநகெ சிரித்து பிறல்லிவழுதிக்கேளுமென்ருள்
கள்ளரும் சற்றுமுண்டொ கல்ப்பித்த படியினவெ
உள்ளபடி சொல்லுகிறேன் உம்மோடெபெண்டிருப்பேன்
பார்சிறந்த மார்புசத்தெ முந்தெழுத்தின் படியாகி
அலசிறந்த ஆயிரம் பொன் ஆமென்று சமைத்திடுகில்
உலகறியக் காவலனல் ஊழியனெ நானிருப்பேன்
தரமறிந்து பொன் சமைக்க தட்டானெ அழையுமென்ருள்

பாண்டியன் தட்டானை வரவழைத்தல்

தலமிருக்கும் தேவியரில் தலவானதேவியரால்
நலமாக உனயெிருத்தி நாடாளவல்லெனெ
சினமானது மடக்கி செட்டியேயும் நீ மறந்தால்
யென்ந்தனமானதும் உனக்காக தருவேனுன் உன்னுனெ
சினமானது மடக்கி சிரித்திருந்தாள் கண்ணகய்யும்
குணமானது உன்னெப் போலெ கொற்றவரில் கண்டறியோம்
இனிநானும் ஊரறியா இருப்பேன் பெண்டிருப்பேனென்று
மங்கயெரும் சொன்ன பின்ம்பு மனமகிள்ந்து மன்னவெனும்
அளிமெயெல்லாம் களிகூற்ந்து ஆகமெல்லம் தெளிந்திருந்து
கூப்பி(ட்)டு வாருமென்று கொற்றவெனும் மனம் மகிள்ந்து
தங்குபுகள் தட்டான்தனெக்கு சடுதியிலெ ஆளுவிட்டான்
கடந்து சென்று போயி நடந்து கண்ணுளன் தெருப்புகிந்து
நடந்துமெள்ள தூதுபேர்கள் நல்மதிரெ வடகரைக்கு
படந்ததலவாசல்விட்டு பணிகூடம்ந்தனிலெவந்து
படந்தபுகள் தட்டானெ அருளிப்பாருமெய்யெயென்ருர்
மன்னவெனேகும்படியெ வந்தான் வடக்குவாசல்விட்டு
வன்னமுடனேடி வந்தீர் வாற்த்தெ சொல்லவொண்ணுதொ
பொன்னின் பணிவிடெயொ பூவயர்க்கு தீங்குமுண்டொ

3772 நகெ - சிரிப்பு
3774 பெண்டிருப்பேன் - மனைவியாகயிருப்பேன்
3789 சடுதியிலெ - விரைவாக
3792 பணிகூடம் - வேலை செய்யுமிடம்

சொன்னபடி சொல்லுமென்று சோதித்தான் தட்டானும்
மின்னிலங்கும் முடிவேந்தர் மேதினியில் ஆண்டிரிக்க
இன்னுமொரு முடிசமெத்து ரெஷ்ணங்கள் அளித்திடவொ
யெவ்ன பணிவிடைக்கொ இனெயழைத்தாரென்ம்பெருமான்
பொன்சமைக்க அழைத்தாரொ புத்தி கேள்க்க அழைத்தாரொ
மன்னவெர்க்கு தேவியரால் வந்தாவொ இன்னொருத்தி
கன்னல் நெடுங்குழலாரும் கள்ளனுட பெண்ணிகொடியாம்
பன்னுத்தமின் பாண்டியெனும் பருவட்டம் கொடுப்பதுக்கு
முன்னவெனர் வரவழைத்தாரி மடியாமல் வாருமென்றான்
சொன்னலுமொ துலயாது தோகெயர்தன் வடிவுதனெ
இ[ன்]னிவரும் கொடிமதன்னெ தானொன்றும் அறியாமல்
பொன்னாரம் தனெயடித்து புகழ்ந்தாரம் பூட்டுதற்கு
மின்னேர்க்கும் பொன்சமைக்க விரவாலினினிவாருமென்றார்
உம்மாணெதட்டானெ உலகுதனில் கண்டறியோம்
அம்மயிலெ பார்த்திருக்க ஆயிரம்கண் போதாது
கோத மயிலாரும் கொற்றவற்க்கு தக்கவள்தான்
தம்மாணெ மன்னவெனெ தட்டுமென்றான் தூதுவனும்

தட்டான் புறப்படல்

வழுதியெற்க்கும் தேவியரால் வயிக்க மதி சொன்னவெரார்
அழகிருந்தால் பலனுமுண்டொ அவன்கூடகட்டகள்ளி
தடிவளக்கெத் தானுரைத்தான் தாண்டியெலெ பூட்டுமென்றான்
தொழுதுகொண்டு திரவியங்கள் தொங்கலெ பூட்டுவாராம்

தட்டானின் மனைவி விலக்கல்

தக்கபுகள் வேந்தர் முன்னெ தாழ்வுவரும் போகவென்று
சவநடுவெ உயிரிளப்பீர் ராவு கண்டதெரிசனங்கள்
வாள்மதிரெ அழியுமென்று மனயாட்டி விலக்கிடுவாள்
சற்றல்லக் காண் உம்மாணெ தாழ்வுவரக் கண்டதுதான்
அன்புராதி வேஷம் பூண்டா ஆலவாயம் சொக்கருட
செம்பகப்பூம்காவழிந்து செழும்கதளிகுலெசிதறி
செம்பியெந்தன் நாட்டிலுள்ள சேயிழெயாள் ஒருத்திவந்து

3804 பருவட்டம் - திருமணத்தின் பொருட்டு கொடுக்கும் துண்டுச்சீலை
3816 தடிவளக்கு - முரண்பட்ட வழக்கு
3819 சபை > சவ (பே. வ. மா) - கூடுமிடம்
3819 தெரிசனம் - காட்சி (கனவு)
3823 கதலி என்பது கதளி என்று எழுதப்பட்டுள்ளது. கதலி—வாழை வகைகளுள் ஒன்று.

கம்பமதவானெ தின்னெ கழுத்தறுக்கக் கண்டேனே
பூண்டெரிய குளெமுறிந்து பூமரங்கள் நிகண்டிடவும்
கண்டவர்கள் மீன்பிடித்து கறிசமைக்க அறுப்பதுவும்
தண்டியெலும் முறிந்திடவும் தாற் வெழுதி யிறந்திடவும்
கண்டெனுன் தெரிசனங்கள் யென்னுணெ உம்மாணெ
படித்துறயில் நின்ரு மரம் பாதிராவிலெநெரிந்து
அடித்தமரம் தலெசிதறி அமிளியாயி மதிரெயெங்கும்
அடுப்புக்கல்லு நகண்டிடவும் அடுக்தசட்டி நகண்டிடவும்
பிடித்து நீரணிந்ததாலி ஒருபெண்ம்பறித்து யெறியக்கண்டெனே
வித்தகப்ஞ்சேர் சிலம்பதுமாயி விலகூறி வந்தவெனெ
பத்தினிக்கால்ச்சிலம்பெதென்றும் பாராமல் கொன்றதுக்கு
பத்தினியாள் பற்றின தீ படெவீட்டெயெரியாளெ
சடுதிலெயென்மகளும் சரமற்த்தியம் ஆகவல்லோ
படெயோடெ இவளொருத்தி பளிகொள்ள வந்தாளே
கடவழியெனுனடிப்பேன் காரிழெயெ உன்னுணெ
கொங்குமலரழகுடனெ கூன்றிருந்த மனயாள்க்கு
பெண்கண்ட தெரிசனங்கள் பேசுவணி முருஷர்முன்னெ
புங்கமெல்லாம் சொன்னுபொ பாண்டியனுர்உள்ளமட்டும்
மங்காமல் இருப்பெனுன் மலங்காதெ யிருநீயென்ருன்

தட்டான் புறப்பட்டுவரல்

சிங்காரதண்டெறி செறுதட்டாரெ விடெசூழா
மங்காமல்மனவியேயும் மலங்காமலெயிருத்தியி
ஓங்காணும் உம்மாணெ ஓடிவருவேனினென்வெ
வாங்கிவிட்டான் மனவியெவிட்டு வாருமின நடந்தான்
கூன்றதட்டான் ஆயிரம்பேர் கொலுவில்வரும்தட்டானும்
நின்றகட தெருவோடெ நெட்டுரமாயிநடந்து
பாண்டியெற்க்கும் பரியேறும் பரியாளர் தெருக்கடந்து
பாண்டியெனுர் அருள்மனக்கெ ஆக்கினுன்ங்காண்
வந்தணுகி மன்னவன்தன் வாசலேயுப்தான்கடந்து
சந்தணப்பூங்காவதிலெ தாண்டியெலும் சாற்றிவையித்து
இந்திரனுர் இவரினவெ இருந்தருளும்பாண்டியெனெ
வந்துநின்று அடிபணிந்து மலரடியே போற்றினுன்ங்காண்

3825 கம்பமதவானெ - கம்பத்தில் கட்டப்பட்ட யானை
3831 அமளி > அமிளி (பே. வ. மா) - ஆரவாரம்
3838 பழி என்பது பளி என்று எழுதப்பட்டுள்ளது.

பாண்டியன் தட்டானிடம் உண்மை கூறச் சொலல்

முகங்காட்டி அடிதொழுது முன்நின்றதட்டானும்
தலம்காக்கும் தென்கூடல் தார்வெழுதிமன்னவெனர்
அயன்காத்த புலியானேன் ஆயிழெயாள் ஒருத்திவந்து
சிவன்ங்காணபடியொழியா சியலறியேன் தட்டானெ
காரிழெயாள் சிலம்புகட்டு கய்யோடெ கொண்டுவந்தேன்
ஊரறிய கொன்றுவயித்தேன் ஒன்உன்ம்மகண்டு நாளொருவன்
தார்விளி சேர்பூங்குழலாள் தன்ஞ்சிலம்பதென்று சொல்லி
ஊரறியவந்துநிள்ருள் ஒன்ம்ம சொல்லு தட்டானெ

தட்டான் பதிலுரைத்தல்

களவிருந்தபடியானெ கையிதட்டியெ சிரித்து
இவளிருக்க மழபெய்யுமொ பிடியாதொர்மழமாரி
குழல்விரித்து குளபிடித்து கூற்றுவெனெ போலெநின்ருள்
பயந்தான் உனக்கில்லயெர் பத்தினியொ நீயென்ருனெ
அயன்விதித்தான் உங்களேயும் அறக்குலயால்சாகவென்று
இந்திரர்க்கும் தேவியரால் இவளெவயிக்க நீதியுண்டொ
சிவந்ததனம் வாள்மயிலெ தோலடர அடியுமென்ருன்
காதவழி பணிமாரு கடைந்தெடுத்துத் தரியடைத்து
பாதகம் சேர் நூல்புரத்தெ பணி செய்து வைய்யித்திருக்க
தந்தவையித்த மூதல் போலே தங்களிரு பேருமாக
வார்ச்ல்புக்கு கட்டகள்ளி வந்தது நன்றினயுரைத்தான்

கர்ண்ணகை தட்டான் விவாதம்

யென்ங்கணவன் உயிரிறக்க இத்தினயும் முடித்தவனெ
இலங்குபுகள் தட்டானெ இவன் தலெயும் அறுப்பேனென்ன
செங்கவிளி சிவந்திடவும் செஞ்சிலம்பு புலம்பிடவும்
நெஞ்சதிலே நினைந்து கொண்டு நேர்போலெஇருந்தனளெ
கிஞ்சுகத்தின் வாயி துறந்து கேட்டருள்வாயி பாண்டியெனெ
பஞ்சவர்தன் பாரி துயில் பறித்தெறிந்த பாதகன் போல்
யென்ஞ்சிலம்பெயும் பறித்து ஈடழிக்க இருந்தீரொ
உன்ஞ்சிலம்பின் உள்ளீடு ஒன்ம்மெசொல்லு தட்டானெ
கள்ளியவள் இனெயுரைத்த காவலனெ கேட்டருள்வாயி

3870 தோலடர—தோல் கிழிய

3873 தந்து என்பது தந்த என்று எழுதப்பட்டுள்ளது.

3880 இவ்வரியில் திரௌபதையின் துகிலே துரியோதனன் உரிந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ள் மொழி சொல்லுகிறேன் உம்முடனெ பாண்டியெனெ
கள்ளன் கொண்டுவந்ததுகும் யென்கையிலிருந்த சிலம்பதுவும்
உள்ளபடி கண்டொழிய ஊழியெனெ நான் போறேன்
வரிசெயுள்ள காவேரி வணிகேசன்யிங்குவந்து
பரியளிய அழகுகண்டு பணிச்சிலம்பு சமெத்தவெனெ
ஆரும் அறியாதவனெ அன்றுநீ இச்சிலம்பில்
தரியடைத்தபடியெ செல்வாயி தட்டானெ இனயுரைத்தாள்
உண்மையெல்லாம் பறைந்தேனெ உன்னெகெண்டொளித்தேனெ
நன்ம்மலராயி தேவியற்க்கு நான் சமைத்த சிலம்பதிலெ
பெண்ம்மெயெல்லாம் தனெ மறந்து பேயாகி வந்தவளெ
பொன்வணிகன் கண்டதிலெ புதுமுத்து கிடக்குதுகாண்
உன்ம்மெசொன்னு தட்டானெ உன்மக்கு முன்னெ நகைத்தவளும்
நன்ம்மெயில்லா பாண்டியெனெ நடுவல்லவொ நீரிருந்தால்
தின்ம்மெயினி வந்திடுங்காண் செழுமதிரெ கூடலுக்கெ
வன்ம்மெயுள்ள பாண்டியெனெ வரக்காட்டும் சிலம்பெயென்றுள்

பாண்டியன் இணைச் சிலம்பிலைக் கொண்டுவரச் சொலல்

ஜானகியெ சிறயில் வைத்த சண்டாளன் தனைப்போலெ
கானவர்தன் கணமாகி கண்சிவந்து பாண்டியெனும்
மானினம்சேர் கருவெலத்தில் வயித்திருந்த சிலம்பதிலெ
நீனவேன் தன் யேவலினல் வேறெயொன்றெ வாங்கிவந்தான்
வாங்கிவந்தசிலம்புதன்னெ மன்னவெனர் கையிகொடுத்தான்
இங்கிதுகாண் உன்ஞ்சிலம்பொ இப்படியொபொயிபறவாயி
ஆண்ங்கிளெதானுனக்கில்லவியா ஆருனக்கு நாயனேன்னு
தேன்ங்கமிளும் பட்டணத்தில் செட்டிவெள்ளாட்டி யென்றுள்
நஞ்செனெயாள் வேல்விளியால் நாடறிந்த கற்ப்புடையாள்
தன்ம்பிள்ளெயெ அறிவாரோ தான்சுமந்து பெற்றவர்கள்
யென்னசெய்வேன் நானிதுக்கு யென்ஞ்சிலம்பு இதல்லவெ
தன்ஞ்சிலம்பெ அறியாரொ கால்நிறய பூண்டவர்கள்
மண்ம்பிள்ளெயாயி யிருந்தாயெ வலுவானவாற்த்தைசொன்னுயி
என்ம்மனம்கலங்கச் சொன்னுயெ யென்ஞ்சிலம்புயிதல்லவெ
செட்டிகட்டா சிலம்பெடுத்து திட்(டெ)டனவெ வாருமென்று
அட்டதிற்க்கும் ஆண்டமன்னன் ஆனவான் தனெ அனுப்ப
நட்டமிட்டு தென்கூடல் நாடழிக்க வந்ததொரு

3899 இவ்வரியில் இராவணன் சீதையைச் சிறையில் வைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டணத்தில் பெண்ஞ்சிலம்பெ பாற்த்தெடுத்துக்கொண்டுவந்தார்
பண்டெநான் பொன்கொடுத்தேன் பணிந்ததட்டான் சமைத்ததும்
மீண்டுபேசி வந்தாயிநீயி மானக்கேடாயி இருந்தாயொ
கண்டாயொ உன்ஞ்சிலம்பெ கற்றுமொக்க காண்பதுக்கு
தண்டளித்த பயில்போலெ நடுங்காதெ பெண்ங்கொடியெ

கர்ண்ணகை சிலம்பினைப் பாண்டியனிடத்தில் சோதிக்கச் சொலல்

தக்கமற அரயாண்ட தார்வெழுதி மன்னவெனெ
அனியாயம் அறியாரொ மறவெரொ உன்மந்திரிமார்
மதிகேடாயி இருந்தீரெ மறயவன் அயல்விதியால்
மணிச்சிலம்பாலெ யென்ங்கணவன் போனவழியால் அவரிறந்தார்
வாயிக்குரம்தான்பறைந்து மணிதட்டான் சொல்லக்கேட்டு
சிக்கனவே மன்னவெர்க்கறியா செய்தியெல்லாம் மந்திரிமார்
ஒக்கயிவர் மந்திரிமார் உறுதியுண்டொ வேந்தருக்குமோ
அறக்கசாலெ தட்டானெ ஆள்ப்படும் பலங்காணும்
பொன்ங்கண்ட தட்டார்கள் ஊழியனெ கேட்டருள்வாயி
யென்னமட்டும் விடுவார்களெ ஆயிளயாள்கால்ச்சிலம்புகட்டால்
அன்பில்லாதவனெ வணிகேசன் பொருட்டாலெ
நேராகவெ நடத்தி நெறிஅரசெ நீரிரிக்கில்
ஆர்கொண்டு வில்லார்கள் அடல்வேந்தா உன்னுட்டில்
போர்கொண்டு வம்புசெய்து பொயியுரைகள் தான்கேட்டு
ஆர்கொண்டு வில்லார்கள் அறியாமல் இருப்பார்களொ
பொன்கொண்டு கொடுத்திடவெ பொன் சிலப்பு சமைத்ததிவன்
தென்னவெனெ யுன்தேவி சிலம்பணிந்த ஒருகாலெ
இன்னுமொரு காலில்லெயொ இணசிலம்பு தானில்லெயொ
வன்னமிகம் தன்னதிக்கு வயிரவியிவன்தானெ
நீ சமெத்த சிலம்பிதுவொ நீதளைத்தாரெ கேளுமென்னு
பாதக கடத்தெருவெ பச்ச மரதகவைவயிரமொ
மகாதேவர்சீற்பாதம் மாற்று நூற்றெட்டெயென்றுன்
மாற்றேற்றம் சொன்னுயெ வண்ணுனெ உன்தகப்பன்
ஆற்றெநான் செய்த பணி அல்லவென்றுல் கண்ங்கெடுங்காண்
கூற்றுவனும் குறவானுல் கொடியிடெயெ உன்னுணெ
மாற்றமொழி சொல்வதுக்கு மன்னவென அறிவாயொ
மன்னவெனெ அறியேனே மறப்பேனெ கெடுத்தவனெ
உன்னைப்போல் நடுவு சொல்வார் உன்னுணெ நானறியேன்

3933 வில்லார்கள் — விற்கமாட்டார்கள்

வன்னமணி சிலம்பு தன்னெ வாங்கி நீரின்னெதன்று
தென்னவெனெ சோதிரியுங்காண் என்தேசியனுர் கேட்டதிலெ
முதூணி தோட்டதென்ருன் உள்ளிலங்தும் குலமதென்ருன்
பத்தினி பட வையிரமெனிருள் பவளத்தில் கோர்வெயென்ருன்
வித்தார பொன்சமைக்க வேறுண்டொ சமற்த்தனினி
சுத்தமெல்லொ சொல்லுகிருன் சோதித்துப் பாருமென்ருன்

பாண்டியன் சோதித்தல்

சினமாயி இருந்து தட்டானெ சிலம்பு தன்னெநிலத்தடிக்க
நலமான நாகமணி நாலுதிக்கும் சிந்திடவெ
கனமான பாண்டியெனும் கண்மலங்கி தான்நடுங்கி
மனம்மான தட்டானும் மன்னவேரொ(டு) யென்ஞ்சொல்லுவார்

தட்டான் கர்ண்ணகையைக் குற்றம்சாட்டல்

வாழ்ந்திருந்த கள்ளி(யி)வள் வானமொக்கெ மறெந்திடுவாள்
இந்தி(ர)மாஞ்ஞால வித்தெகளெ இவள்க்கேற்றம்தொழில்காணும்
யேந்துகொங்கெ மயிலணேக்கு யென்கையால் சமைத்தபணி
சூழ்ந்த தொனி சிலம்பதிலெ சொரிமுத்து போட்டெனுன்
கூன்றிருந்தார் கண்ம்பறித்து கொழுங்கனலுபோல் நிறமாகி
மீண்டுநாக மணியாக்கி வித்தியெ செய்தான் பாண்டியெனெ
ஆண்டவெனெ இவள் கணவன் ஆனெத்தான் ஒட்டுவித்தான்
பாண்டும் பரிகுழலாரெ சாமற்த்தியென்ருன் தட்டானும்
தனிவில்லெக்காண் யிவள் மனத்தில் சற்றல்லக்காண் கற்றவித்தெ
பணிசமைத்த கையறியும் பாத்திருந்தார் கண்ணறியும்
களிகாணு வையித்தயிவள் கள்ளியெல்லொ பாண்டியெனெ

கர்ண்ணகை சினந்துரைத்தல்

கள்ளியென்றும் சொன்னுயெ காவெரிப்பும் பட்டணத்தில்
தெள்ளியாயிரிடிரிக்கும் செட்டிகுல பத்தினிநான்
வெள்ளியும் பொன்னுமறியாயி வேந்தனெ நீ கெடுவாயி
பள்ளியேயும் பாப்பியேயும் பரியறியாதவெனுனல்
அந்தணர் கிளெபிறந்து அஞ்சு வயசில் அறிவறிந்து
அயிந்தும் ஒன்றும் தொழிலாளாயி அவர்பாதம் அருள்மறைய்யும்
வந்தவர்தான் கிளைபறைந்து வஞ்சியெரில் பத்தினியும்
அந்த மலெரான பேரும் அரசர்கிளை பன்னிரண்டும்

3959 மறைத்திடுவாள் என்பது மறெந்திடுவாள் என்று எழுதப் பட்டுள்ளது.

வந்தவகெ கிள நாங்கும் வழுவாது கண்டிடுநீ
வரவுநெறி அறியாமல் அரசாண்ட மன்னவெனெ
அரவுகடி விழம்போலெ ஆகுதுந்தன்கிளேதனெக்கு
ராவுபகல் அறியாமல்
ராச்சியத்தெ ஆண்டிருந்தாயி வரவுவந்து விளெந்ததெல்லாம்
மதிகெட்டுயிருந்தாயெ மலட்டுமதி தன்னெவிட்டு
ஆன நினைந்தெ பிரியும் மலட்டுமதி மந்திரிகள்
வாற்த்தெதன்னெ கேட்டிரொ மதிகெட்ட சொல்புலம்புதெ
பொன்னம்பல பெருமாளொடெ தலத்திலடியிணெசேரா
தார்வேந்தன் கரும்பெயென்ருள் கருமமதெ அறியாத
கசட்டு மந்திரிகள் நம்மை அருமெயிஞவிரவெயிது
அரசாண்டிருந்தீரொ திருவு மனம் பிரிவதுக்கு
சியலாயி இருந்தவெரெ பெருமெ உன்ஞ்சிலம்பாலெ
பேதலித்து இருந்தீரெ திருவிருந்து விளையாடும்
தென்மதிரெ கூடலிலெ நரியிருந்து கூப்பிடுங்காண்
நட்டுச்செ நேரமெல்லாம் பரிசளிய சொன்னயெ
பத்தினியெ கள்ளியென்று யெரிகதிரோன் நடுவாகில்
எரித்திடுவேன் உம்மெயென்ருள் கள்ளியிவள் பத்தினியோ

தட்டரன் மறுமொழி

காவலனெ கேட்டருள்வாயி வெள்ளாட்டி யிவள்போலெ
வேல்லுவிச்சிகாணும் யிவள் கள்ளாட்டம் ஆடுகிருள்
காதல்கொண்டார் மன்னவர்மேல் உள்ளாசெப்பட்டவெளெ
ஒருசிலப்பூ வாங்குமென்ருள் மளு வரசனம்கொண்டுவந்தேன்
மனவியென்று பரதேவித்து கழுதபாரம் சுமப்பதுபோலெ
கதெபோலெ அவளும் வந்தாள் பழிசுமந்தீர் யென்றுசொல்லி
பாண்டியன்மேல் ஆசெகொண்டாள் கழுவடிநாயிபோலிருந்து
கள்ளியெ நீர் கனப்பிடென்ருன் நீளரவின் தொனியடைத்தா
நெறிவையித்த தொனிச்சிலம்பெயி

கர்ண்ணகை உண்மை அறிவேனெனல்

ஊரறிய தோலடர உன்னுசிர் கொன்றில்லெயாகில்
தார்வணிக பெருமாள்தன் தலவியல்லா தட்டானெ
உன்வலகால்சிலம்பெடுத்தால் உள்ளிடுநாகமணி ஆகில்

3980 விழம் – விசம்
4000 பரிதவித்து என்பது பரதேவித்து என்று எழுதப்பட்டுள்ளது.
4003 கனப்பிடென்ருன் — அழுத்திவிடு என்ருன்

பொன்வணிகனேயும் பழிதருவோம் பொற்ச்சிலம்பும் தந்திடுவேன்
நீளரகம் தொனியடைத்த தெறிவைத்த தொனிச்சிலம்பு
பொன்வணிகனேயும் பழிதருவோம் பொற்ச்சிலம்பும் தந்திடுவோம்
வான்வாக்குள் தாள்தோன்றும் மறுத்துரைத்தாயி மதிகேடாயி
உன்ம்மெரண்டு கண்டொழிய ஊரெநான் போவதுண்டோ

தட்டான் கர்ண்ணகை கைச்சிலம்பினைக் கேட்டல்

இனம்மயிலெ படைத்தாயெ இளமயிலெ யீடழிவாயி
தக்கபுகள் பாண்டியெர்முன் தடிவழக்கு பேசுகிருயி
மிக்கபுகள் மன்னவேனும் விளிக்கஞ்சி மய்யலானல்
ஒக்கநின்ற மந்திரிமார் உரெசெய்யமாட்டார்கள்
உங்கள் சீஷர்தம்மாணெ இச்சிலம்பெ தாருமென்ருன்
காலெயிவள் தொட்டளப்பாள் கண்ணுளன் சண்டிமெத்தை
சிறந்தயொளித் தீயெனவெ செளிநவண்டன் இளநாடன்
கறந்தபால் முலெபுகிரா கல்ப்பித்த படியிதுவெயென்ன
மறந்துமணிதட்டான்சொல் மன்னவெர்கிளெயறுத்து
வீரமுடன் புவியாண்டா விறல்வெழுதிமன்னவேனும்
நரைத்தீட்டி வளந்ததென்ன நாவிலெக்காமணெத்து
உயிர்படவெமுறத்த தட்டான் ஓடமதி அறியாமல்
நின்ருன்ங்காண் கால்பதறி நெடுமுச்சும் தானெறிந்தான்

கர்ண்ணகை தன்சிலம்பினை உடைத்தல்

கண்ணகைய்யாள் தன்புதுமெ கள்ளியென்ற பாண்டியெனெ
வீணெ நீ தட்டான்சொல் மெயியினவெபாவித்தாயெ
வாளுலும் உன் வசமொ மதிகெட்ட பாண்டியெனெ
வால்பினல் வாகொள் மணிமுடி போல்வனெயெறிந்தாயி
கோலமுடன் இந்திரனுர் கொடுஞ்சாபத்துடன் கொடுத்து
ஆரமது கழுந்தணிந்தாயி ஒன்றுபூதம் வேலெ கொண்டாயி
மேகம்ந்தன்னில் கவலைவையித்தாயி மிக்கதமிள் பாண்டியெனெ
ஆறணியும் செஞ்சடெயோன் அறயரசெர்கூடமதில்
புரவிட வீத்திருந்து புரிசடமேல் துயிலெறிந்தாயி
புரவிவரும் நாயிவரியாயி மீண்டு நரி ஊளயிட்டு
அரனுடய திருநீறும் அஞ்செழுத்தும் மாற்றி வையித்தாயி
மெத்தெ நீற்தளந்தாயி வெறி கொண்டாயி பாண்டியெனெ
பித்தர்களெ உருவாக்கி புவனமெங்கும் நீறெளித்தாயி

4017 சீஷர்—தலைவர்
4031 கழுத்து என்பது கழுந்து என்று எழுதப்பட்டுள்ளது

அத்தனருள் திருவிள்ளமாயி அவணர்களெ ஓடுவித்தாயி
மற்றல்லக்காண் வந்த கொள்ள மன்னவெனெ கேளுமென்ருள்
மாறுசெய்தாயி மன்னவெனெ மாதுமையாள் பாற்வதிக்கு
நீறெளித்தாயி வெறுதெநீ நீ செய்யும் பாராசயங்கள்
ஆறுசெய்யும் செஞ்சடயோன் ஆகமெல்லாம் சேருடா
மாறுபட புணம்சுமந்து வையக்கரெகெட்டி வையித்தாயி
நரெத்துசாக நீயிருந்தாயி நமதுக்கு மூன்னெ வந்தாயி
விரித்தெதுரெ வாருதிசூழா வியனப்புவி ஆண்டவனெ
ஒருத்தியாயி நீ கெடுவாயி உனக்கு மதி நீஅறிவாயி
நூலரிய துள்ளிடையாள் நூல்புரத்தெ தான் களற்ற
கோலமிகும் நீலவேணி கொஞ்சும் கிளிநஞ்சுகம்போல்
சீலமதுங்களுகினவெ சிரித்து சிலம்பெவைத்திருந்தாள்
நன்ம்மெ உள்ளாள் உன்தேவி நானணிந்ததல்லவென்ருள்
மும்முலேயாள் உன்னே பெற்ற மூதேவி சிலம்பொவென்ருள்
தன்ம்மெ அறியாதெவனெ தட்டானெஉன்குருவும்
செம்மெ வருமெ உனக்கு என் செட்டியெப் போலிறப்பாயெ
மெத்தெயிவள் பித்தளந்தாள் வெறி பறைந்தானெ நோக்கி
வித்த(க)ப்ஞ்சேர் சிலம்பு கட்டா வீணனுக்கு துணெ போவாயி
தென் நோக்கி நடந்துமினி சிலம்புமிங்கெ வாங்குமென்ருள்
முத்தூளியிட்டதினுல் முறித்தெறிய மாட்டான்ங்காண்
மாட்டாமல் போவேனெ மன்மந் தெரிந்து காவல் வையித்தால்
தட்டாரும் மந்திரிமார் காவலர்கள் பாற்த்திருக்க
தட்டான்மார் யிவரானுல் தரிகள் ரண்டும் பாருமென்ன
தார்விளிசேர் நாகமணி தடங்கலொ மரதகமொ
காரிடைந்த மின்னிடயொ கறுத்த பஞ்சாக்ஷரமொ
வாரடைந்ததனம்ஞ்சாய இருவிளிகையா லெடுத்து
பாரளந்தேன் அறியவென்று பணிச்சிலம்பெ நிலத்தடித்தாள்

கர்ண்ணகை துர்க்கை உருவெடுத்தல்

தட்டழிய கற்ப்புடையாள் கண்ணகய்யாள் கால்ச்சிலம்பூ
வாட்டெறிய விண்ணேரும் வீதியெங்கும் மழெபொழிந்து
யெட்டுதிக்கும் விளையாடி இசல்புரிந்த மதிரெயெங்கும்
நட்டமிட்டு போகவென்று நாகமணிம(ை)றந்ததுவாம்
ஆகமெல்லாம் மிகதெளிந்து அரனர்தன்னருளாலெ
நாகமின்னும்பட்டணத்தில் நல்லவணிகர்குலத்துதித்து

4039 அவுணர் என்பது அவணர் என்று எழுதப்பட்டுள்ளது
4042 பாராசயம் - தோல்வி
4044 பிணம் > புணம் (பே. வ. மா)

மேகத்தெ விலங்கிலிட்டர் கதையின்று அறியுமென்ஞ
நாகமணி சிலம்பதிஞல் நட்டமிட்டுத்துடங்குவாளாம்
கண்ணகய்யாள் வழக்குரைதான் காதல்முற்றும் மணிகிணறுகாதல்
பிறந்தமணி அனலெழும்பா பிரம்மாவின் தலமழியும்
கறந்தபால் முலெபுகிரா கல்ப்பித்த படியினவெ
சிரித்தெடுத்துப் பருத்திகண்டீர் சிவனெ நீர் அறியவென்ருள்
வாரிமெள்ள குளெபிடித்தாள் வலித்திறுக்கவெயுடுத்தாள்
சூரியன்தன்ஞெளிவதாஞள் துக்கெயென்னும் வடிவதாஞள்

கர்ண்ணகை சிவனைவேண்டி வாள்பெறல்

தாருதெனெத்துணித்தெவெளெ சங்கரர்முன்வாதாடி
ஊரறிந்த பத்தினிநான் யென்ங்கையிவாள்தரவேணும்
வல்லரக்கன் உடல்துணிக்கா வாள்வீமன்தன்ங்கயிலெ
வெல்லவென்று வாள்கொடுக்க வேதாளவாள்முனியும்
அல்லொரும் பணிவாற்றும் பத்திரம் மாகாளியம்மா
நில்லாதெசினந்தீரா யென்ங்கையில்வாள்தரவேணும்
பங்கயத்தாள் வையிராவியும் பத்திரப்பெண்கண்ணகய்யும்
மங்கெகையில் வாள்கொடுத்திடவும் அவள்வாங்கி உறகளற்றி

கர்ண்ணகை தன் இடது மார்பினை அறுத்தல்

ஓங்கிவெவாள்உறபூட்டி ஊழியோனெமுகம் நோக்கி
வேங்கைநான் நீ ஆரடஆஞயி விளக்கவேண்டாம்பாண்டியெனெ
தாந்து கொங்கெவிம்மிடவும் தன்னூரெங்கள் வென்றிடவும்
சோற்ந்து கண்ங்கள் அனல்சொரிய சிவந்ததனம் தாந்திடவும்
வேந்தகிளெ அறுக்கவென்று வேர்தோண்டிசூண்டிஞர்
சாந்தணிந்த மாருனக்கு தந்திடுவேன் பாண்டியெனெ
கோர்வெயுடன் கொங்கரும்பும் குலயானெ நீ விரும்பும்
அரும்பனயாள் நனினமலயிர் அதிசயம்போல் மலந்திருக்தும்
கரும்பனெயாள் சிலம்பதினெ கணயிருக்கும் களஞ்சியத்தில்
தெருங்குவளெதன்கைய்யானெ நின்றுமுலெதானறுத்தான்
சிரித்தறுத்து முலெபிடித்து தென்னவெனெ முகம்பாற்த்து
நரிக்காப்பூசாத்தாதெ நாஞனக்கு தேவியல்லெ
பருத்தஉடல்பாண்டியன் மேல் பற்றவெதீ சேவித்துவிட்டான்
யெரிதீயும் யேகிவிட்டு இவள்தனவும் முகத்தெறிந்தாள்
அறப்பந்தி பாண்டியெனெ ஆசெகொண்டகொங்கெ உந்தஞெடெ
இடதுகொங்கெ தானறுத்து யெறிந்துவிட்டாள் அவன்முகத்தில்

4086 பத்தினிப்பெண் என்பது பத்திரப்பெண் என்று எழுதப்பட்டுள்ளது.

கர்ண்ணகை சாபமிடல்

கண்டு நின்று மோரிடச்சி மே(ர)ரு கொண்டு ஒப்பிடவெ
பண்டுபோலெ இருந்ததனவும் பணைத்திளகி வள[வ]ந்திடவெ
அப்பொழுதெ அம்ம கண்ணகய்யும் சற்றெ குறைந்திரிக்க
வாணுதலாள் சாபமிட்டாள் அன்று அம்மெயிட்டசாபம்
இன்றளவும் மங்கவில்லெ
கண்டுமனம் களி கூற்ந்து காரிழெயும் சாபமிட்டாள்
பற்றிடுதீ அனலெழும்பவெ பாண்டியன்தன் தேவியாற்க்கும்
எச்செகுடி ஈடெற்றும் இடச்சியற்க்கும் யேது சொல்வாள்
எச்சேரி வெந்தாலும் யிடச்சேரி வேகாதெ
அல்லி மலர் முலெயிடத்தி வெருகமுகம் வேர்வையோடா
தலெயெழுத்தில் படியொழிய தனிச் சிவனுமினக்கு
சிலகனக வேர்வைவைத்த சிவனிதுக்குத்துணயிதுவெ

கர்ண்ணகை தட்டானை அறுத்தெறிதல்

முலையிட்டால் அனல் பொருத்த வானுலகம் சென்றுகாண
நீறிட்டேன் கொண்டல் நெறி நெறிவிடவரைகூடல்
பேரிட்டு வந்தது போல் பேர் வெழுதி தானிறக்க
சீரிட்ட தட்டானெ சினேகம் முண்டொ இன்னுமென்ருள்
நற்க்கோல பொறிச் சிலம்பெ நான் சமைத்ததென்றவெனெ
விற்க் கோல மன்னவற்க்கு வினெசமெத்து பணி முகித்தாயி
திறக்கோலம் செய்தவெனெ திறமுடய பணி சமைத்தாயி
மறக்கோலம் செய்தவனெ மலங்காமல் நில்லுமென்ன
கொலுவில் வரும் தட்டானும் கூன்றதட்டான் ஆயிரம்பேர்
வாசலிலெ தான்ம் மடித்து வாள்தலயெ அவளரிய
வாசமூற்று மந்திரிகள் படை நடுங்கத்தேர் நடுங்க
நீசமுற்ற தட்டானெ நீ நினைத்தவெல்லாம் முடித்தாயெ
வழுவதியெர்கள் தேவியர்கள் வாசலிலெ சென்று நின்று
பழுதுபறயாதவெனெ பத்தினிபுதுமெ காண வென்று
மழுவரசனும் நீயும் வாசலோனும் வாழ்ந்திருப்பீர்
பழிகொள்வேன் தட்டானெ பாற்த்திரிக்க வேணுமென்ருள்
தேவியர்தான் சொன்னதுக்கு திசமுடித்த தட்டானும்
கோலமுடனெ பிடித்து கோவலரெ கொன்றவெனெ

4111 எச்செகுடி - இளைத்த குடி
4113 இடைச்சி என்பது யிடத்தி என்று எழுதப்பட்டுள்ளது.
4129 பழுது - குறை

ஆவதறியாதவனெ ஆசனெயும் முடித்தவெனெ
நாமமுள்ள பாண்டியெற்க்கு நாடாள இருந்தவெனெ
பாவமறியாதவனெ படைவீட்டெ முடித்தவெனே
தார்வெழுதி மன்னன் தேவியாரெ தாரவில்லாதுரைத்தவெனெ
கொல்லர்தான்கொடுந்தூசிகொற்றவெற்க்குகொடுத்தவெனெ
காவலனெ நாடிளக்க கல்ப்பித்ததும் நீயல்லவொ
வன்ங்கண்ணன் உன்னெப்போலெ மாந்தெயரில் மறவருண்டொ
என்ங்கணவன் உயிரிளக்க இப்படியொ செய்தாயென்ருள்
தங்குபுகள் தட்டானெ சதித்தாயோயென்னெயும் நீ
செங்குருதி ஒடுவித்தாள் தெளிந்தலெ அறுத்தெறிந்தாள்
வஞ்சியிலெ மாமயிலாள் வழுதான கற்புடெயாள்
தஞ்சமலர் செங்கரத்தின் காளி வாளுறைப்பூட்டி
நெஞ்சளவெதான்ம்பிடித்து நெட்டூரதட்டானெ
அஞ்சு அஞ்சு நாழிகையால் அவன்சதையெ அரிந்தெறிந்தாள்

கர்ண்ணகை மதுரையை எரிமூட்டி அழித்தல்

தஞ்சமென்ரே உம்மெயேற்றி தார்வெழுதி மன்னவெனெ
அஞ்சியொரு குளெபிடித்து அனியாயமாகவந்தாள்
பஞ்சறயில் காலனுனள் பாண்டியன்ந்தன் நாடதிலெ
கொஞ்சி அஞ்சி மதிரெயெங்கும் கேட்டுமுறெயிட்டிடுமாம்
ஆழிபெற புவியாண்டான் அரண்மனெயும் கோபுரவும்
கோளிறந்த மதிரெயெங்கும் கொடும்புகை கொண்டேற்றிடவெ
கோவலரெ கொன்றபழி யெழில்போக யெரியுமென்ருள்
குருட்டுத்தட்டான் சீர்மெயெங்கும் குட்டிகச்சேரி ஆகுமென்ருள்
பச்சேரி வெந்தாலும் பறச்சேரிவெந்தாலும்
யெச்சேரிவெந்தாலும் இடச்சேரி வேகாதெ
கோளெழுந்த மதிரயிலெ கொடுங்கனலெயேகிவிட்டாள்
பத்தினியாளம்மகண்ணகைய்யாளும் பய்யவே ஒந்நு சிரித்திடவேதான்
பாண்டியனுருட மதிரகள்தனிலெ பற்றியே சுற்றியெ தீகள்பிடிக்கவே
விரவோடுபடமரம் யெரிவதுபாராம் பத்தஞ்னூறு வீடுகள்வேக
அங்கெ சென்றல்லொ அக்கினிபகவான் அனலும் கொளுத்தியெ கொடுப்பதுபாராம்
அகரதெருவிலெதீகள்பிடிக்கவெ அங்கண தொட்டிகள் அறப்புரெயெரிய

4163 அகரதெரு—அந்தணர் வாழுந்தெரு

அறப்புரெ மறப்புரெ தொளுப்புரெ யெரியா
ஆலமரங்கள் அடியோடெ யெரியா
அழகொடு வெள்ளாப் பிள்ளைகள் வீடுகள்யெரியா
சூடுகளும் சில பட்டறவேக
தொழுத்திலகப்பெட்ட மாடுகள்வேக
மாடொடு சூடுகள் சேகரம்யெரிய
மறுபடி சிங்காசனமது வேக
சிங்காசனத்தில் தீகள்பிடிக்கவே
சிங்காசனமொடு தெருவுகள்வேக
தெருவும் தெருக்கணம் யெரிவது பாராம்
தேர்ப்பல வாசலும் யெரிவது பாராம்
கடயும் கடத்தெருவும் யெரிவது பாராம்
காவலர் பட்டணம் யெரிவதுபாராம்
பொன்னும் கொடிமரம் யெரிவதுபாராம்
பித்தளத்தூணுகள் யெரிவதுபாராம்
வெள்ளிக் கொடிமரம் யெரிவதுபாராம்
வெங்கலத்தூணுகள் யெரிவதுபாராம்
பட்டுக்கடையொடு பருத்திக்கடைகளும்
பாத்திரவெங்கலம் விக்கும் கடைகளும்
பற்றியெ சுற்றியெ அனல் கொண்டிளக
சேலக்கடையொடு சம்பக்கடகளும்
சேகரம் ஒருப்போல் யெரிவது பாராம்
முத்துக்கடையொடு முகில்க்கடைகளும்
முகப்பணிக்க(ா)றர்கள்யிரிக்கும் கடைகளும்
முந்தவெ ஒருப்போல அனல் கொண்டிளக
வறட்டுக் கடயிலெயிரிக்கும் சரக்குகள்
பட்டும் பருத்தியும் விட்டோடி போகவெ
தள்ளிவிழுந்த கிவழனேயும் போட்டு
சந்திமாரேயும் தூக்கிக் கொண்டோடினர்
சுட்டப்பணியாரம் சட்டியிலிருக்கவெ
துலுக்க ஸ்த்ரீகளும் அவயம்யிட்டோடினர்
பெட்டியெடுத்துக்கோ பேளெ யெடுத்துக்கோ

4164 தொளுப்புரெ கன்று காலிகள் கட்டுமிடம்
4191 கிழவனேயும் என்பது கிவழனேயும் என்று எழுதப்பட்டுள்ளது
4193 பலகாரம் > பணியாரம் (பே. வ. மா)
4196 பிறமெ - பின்னல்

பிறமெ வாறவெரெ கையெப் பிடித்திக்கொ
சாலுக்குள்ளெ நின்று தண்ணீர் யிறைப்போர்க்கும்
தற்க்கமிட்டு சிலரோடி ஒளிக்கவெ
கெஞ்சி அமுதாரெமதிரயிலுள்ள பேர்கள்
இடத்தெருவாற்க்கு அடக்கலம் யெண்ம்பாராம்

பாண்டியன் எரிந்து படல்

ஒருதலமதிலும் யிருக்க வொண்ணுமலெ
ஓடி யொளிக்கவெ பாண்டியனும்
தேவியர் சுந்தரி இரிக்கும் நல் மேடெயும்
சிறந்தன்ன மந்திரிகள் மூவருகள் இரிப்பும்
கொங்கை தணுப்பிச்ச இடச்சியர் தெருவும்
கூன்ற மழுவரசன் இரிக்கின்ற சாலெயும்
அக்கினிவர(ர)மல் விலக்கியெநெறுத்தி
அத்தினேயும் ஒழிய அடக்கலமெல்லாம்
ஆயிழெ(யவ)ளும் அனல் கொண்டு விளெயாடா
ஒருதலமதிலும் இருக்கவொண்ணுமல்
ஓடி ஒளிக்கவெ பாண்டியனும்
தெக்கெ கோட்ட வாசல் தனிலெ
ஓடியொளிக்கவெ பாண்டியனும்
அங்கே சென்றல்லொ அக்கினிபகவான்
அனலும் கொளுத்தியெ கொடுப்பதுபாராம்
வடக்கே கோட்டவாசல் தனிலெ
ஓடியொளிக்கவெ பாண்டியனும்
அங்கே சென்றல்லொ அக்கினிபகவான்
அனலும் கொளுத்தியெ கொடுப்பதுபாராம்
மேக்க கோட்டவாசல் தனிலெ
ஓடியொளிக்கவெ பாண்டியனும்
அங்கெ சென்றல்லொ அக்கினிபகவான்
அனலுங்கொளுத்தியெ கொடுப்பதுபாராம்
கிழக்கெ கோட்டவாசல் தனிலெ
ஓடியொளிக்கவெ பாண்டியனும்
அங்கெ சென்றல்லொ அக்கினிபகவான்
அனலுங் கொளுத்தியெ கொடுப்பதுபாராம்
நாலு கோட்டவாசலும் யெரிந்தனபொழுதெ
நவக்கார புரயிலெ ஓடியொளிக்கவெ
அங்கெ சென்றல்லொ அக்கினிபகவான்

அனலு கொளுத்தியெ கொடுப்பதுபாராம்
ஒருதலமதிலும் இருக்கவொண்ணுமலெ
ஓடி ஒளிக்கவெ பாண்டியனுரும்
கல்லறப்புரயிலெ ஓடியொளிக்கவெ
கண்டு நின்றம்மெ பத்தி(னி)யாளும்
நாகமணி நல்லசிலம்பதெடுத்து
நடக்கல்லோடெ மோதிடவேதான்
நாகமணி தரிதீகள் தெறிக்க
நாலு கயிலும் தீகொண்டிளக
நலமொடு கல்லறவாபுரயிலெவிழுமாம்
கல்லறக்கருவலம் யெரிவதுபாராம்
கட்டிப்பொன் கனகப்பொன்யெரிய
பாண்டியனுருட திருமுடி தனிலெ
பற்றியெ சுற்றியெ தீகள்பிடிக்கவெ
காலொடு கண்ணொடுகரமதுவேக
முட்டொடு முதுவுகள் யெரிவதுபாராம்
தோளொடு துதிகரம் யெரிவதுபாராம்
கல்லறவாபுரயிலெ பாண்டியனுரும்
கருவலமீதிலெ பட்டிறந்தாரெ

கர்ண்ணகை தெய்வமாதல்

பாண்டியன் மதிரகள் சேரவேயெரிந்து
பத்தினியாளம்மெ கண்ணகய்யாள்
மொலு மொலினெ குரவெகள்பொலியா
மஞ்சாடி மணிக்கயமதுதனிலெ
மங்கெ குழலாள் சாடியெவிட்டாள்
கல்லறவா நல்லபுரயிலெநின்று
மாயங்கொண்டா பூதம்பிறவிகள்
மஞ்சாடி மணிக்கயத்திலெநின்று
மாயச்சிலெயாண்டிளகிடவேதான்
ஆருண்டும் ஆருண்டும்
ஆண்டு பன்னிரண்டும் சொல்லவெ
பதினுறுமணிச் சூலத்தோடே
பயிந்தொடியாளம்மெ வந்துபிறந்தாள்
மாயப் பொன்னும் கயிலாய புரத்திலெ
வந்தடி தொழுதவள் வரமது கேட்டாள்

4252 பொலியா—ஒலிக்க
4261 சூலம்—சூலாயுதம்

ஆசிரியர் பதித்த நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

1 குருசாமி கதை

2 தம்பிமார் கதை

3 வன்னியடி மறவன் கதை

4 கட்டபொம்மு கும்மிப்பாடல்

5 ஞானசவுந்தரி அம்மானை